# சங்கத் தமிழ்ப் பாச்சரமே!

## என்.சீதாலெட்சுமி



முற்றிலும் மாறுபட்ட நாவல்

# சங்கத் தமிழ்ப் பாச்சரமே!

## என். சீதாலெட்சுமி

**அறிவாலயம்**

தபால்பெட்டி எண் : 667,
பழைய எண்: 107/7, புதிய எண்: 32/7
கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி : 044-2835 3520
அலைபேசி : 9444112808
Web : www.arivalayampublication.com
Email : arivalayamvenkat@yahoo.in

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூல் பெயர் | : சங்கத் தமிழ்ப் பாச்சரமே! |
| ஆசிரியர் பெயர் | : என். சீதாலெட்சுமி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : மே, 2015 |
| தாள் | : 11.6 Kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 X 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்துப் பக்கங்கள் | : 316 |
| நூல் கட்டுமானம் | : சாதா அட்டை |
| நூல் வெளியீடு | : அறிவாலயம்<br>ப.எண்: 107/7, பு.எண்: 32/7,<br>கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14<br>தொலைபேசி : 044-2835 3520<br>தொலைபேசி : 9444112808 |

**விலை : ₹.140.00**

| | |
|---|---|
| டைப் செட்டிங் | : குட்வில் கம்ப்யூட்டர்ஸ்,<br>செல் : 9940254493.<br>email : goodwilltngr@yahoo.co.in |
| அச்சிட்டோர் | : S.S. கிராபிக்ஸ், சென்னை-14. |




# சங்கத் தமிழ்ப் பாச்சரமே!

# சங்கத் தமிழ்ப் பாச்சரமே!



## அத்தியாயம் -1

"ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே!
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே!"

என்ற மந்திரத்தை உச்சரித்தபடியே, உணவு தயார் செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்தாள் குந்தவை.

இட்லிப் பாத்திரத்தை இடது கையால் திறந்த படியே, வலது கையில் லேசாய் தண்ணீர் தொட்டு... இட்லி அவிந்து விட்டதா எனப் பார்த்தவள், அடுப்பை அணைத்துவிட்டு, இட்லியைத் தள்ளி வைத்தாள்.

அவளுக்கும் மகளுக்கும் ஐந்து இட்லிகள் கொண்ட ஒரு ஈடு போதும் என்பதால், மீதமிருந்த

மாவைச் சின்னப் பாத்திரம் ஒன்றுக்கு மாற்றிவிட்டு, இட்லிப் பாத்திரத்துடன் சேர்த்து... மாவிருந்த பாத்திரத் தையும் சின்க்கில் போட்டாள்.

பாத்திரத்தைத் தேய்த்து விடலாமா என்ற எண்ணத்தை, இரண்டே கால் வயதான மகளின் பசி மாற்றிவிட, மகளுக்கு இட்லி ஊட்டவென வைத் திருக்கும் கிண்ணத்தில்... ஒரு இட்லி... ஒரு அவித்த முட்டை... சாம்பார் என்று அனைத்தையும் இட்டுப் பிசைந்தாள்.

அதை எடுத்துக் கொண்டு வரவேற்பறைக்குள் அவள் நுழைய, பில்டிங் ப்ளாக்ஸ்ஸை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தாள் அவளது செல்வமகள், ஸ்ரீதுளசி!

"பாப்பா... சாப்பிடலாமா?" என்றபடி ஒரு வாய் இட்லியை, மகளின் வாயருகே அவள் எடுத்துச் செல்ல,

"இய்யிம்மா... இய்யி..." என்று கையமர்த்திக் காட்டிவிட்டு, தொலைக்காட்சி வைத்திருக்கும் ஸ்டான்ட் அருகே ஓடினாள், சின்னவள்.

ஸ்டான்டின் கீழ் தட்டில் அடுக்கி வைக்கப்பட் டிருந்த கதைப் புத்தகங்களைத் தன் முயல் கண் கொண்டு வேகமாய் ஆராய்ந்த சிட்டுக்குருவி, அதி லிருந்து ஒன்றை எடுத்துக் கொண்டு பறந்து வந்தது.

"ம்மா... இது கத்தை..." என்று தாயின் முன்னே அப்புத்தகத்தைப் போட்டு விட்டுத் தாயை ஏவியது.

"ஓகே. இன்னைக்கு... இந்தக் கதையா? ஹ ம்ம்... என்ன கதை இது? ஹோ... நம்ம குட்டிக் கிருஷ்ணர் இந்திரனோட விளையாடின விளையாட்டா? சூப்பர்...



செல்லலாமா?" என்றபடி, மகளைத் தூக்கி, சோபாவில் அமர வைத்துவிட்டு, தானும் அருகே அமர்ந்தாள். புத்தகத்தை மகளின் மடியில் விரித்து வைத்தவள், உணவிருந்த தட்டைத் தன் கையில் பிடித்துக் கொண்டாள்.

"பிருந்தாவனம்ன்னு ஒரு குட்டியூண்டு ஊர் இருந்துச்சாம்டா..."

"ம்ம்..."

"அங்க தான், நம்ம குட்டிக் கிருஷ்ணர் பிறந்தார்!"

"ஹய்ய்யா...."

"ஒரு நாள்.... கிருஷ்ணர் சாமி இருக்காரில்ல... அவரு தூங்கிட்டு இருந்தார். வீதிலே ஒரே சத்தமாம்... எல்லாரும் சந்தோஷமா ஆடிப் பாடிட்டு இருந்தாங் களாம். அந்த சத்தத்தைக் கேட்டு... கிருஷ்ணர் sun god வரதுக்கு முந்தியே எழுந்துக்கிட்டாராம்"

"ஓஓஓஓஓஓஓ..."

செவிக்கு உணவிடும் அதே வேளையில், வயிற் றுக்கும் ஈயப்பட்டது.

"துளசி குட்டி... ஓடிப் போய், sun god நம்ம வீட் டுக்கு மேலே வந்துட்டாரா பார்த்துட்டு வரியா?" எனக் கேட்டாள் குந்தவை.

"ஹான்... ஹான்..." என மண்டையை ஆட்டியபடி, சோபாவில் இருந்து குதித்த ஸ்ரீதுளசி, தன் மடியி லிருந்து விழுந்த புத்தகத்தை எடுத்து, எதிரே இருந்த டீப்பாயின் மீது வைத்துவிட்டே, பால்கனி பக்கம் ஓடினாள்.

அவளது அச்செய்கையில் “சமத்து...” என்ற சொல் தானாக உதிர, மகள் மீண்டும் ஓடி வரக் காத்திருந்தாள் தாய்.

“சூ வந்துச்சு...” என்று கண்ணையும் கையையும் பெரிதாய் விரித்து அவள் விவரிக்க,

“சூப்பர்! இப்போ... வந்த Sun god... அப்போ கிருஷ்ணா குட்டித் தூங்கும்போது வரலையாம்...”

“ம்...” என்றபடி மீண்டும் சோபாவில் ஏறி அமர்ந்து கொண்டாள் ஸ்ரீதுளசி.

“என்னடா இது? இன்னும் விடியவே இல்ல. அதுக் குள்ளே எல்லாரும் ஏன் இப்படி ஓடியாடிட்டு இருக்காங் கன்னு கிருஷ்ணா எழுந்து உக்காந்தார்.”

“இப்பியாம்மா...” என்றபடி, அமர்ந்த நிலையி லேயே இடுப்பை நன்றாக ஆட்டிக் காட்டினாள் ஸ்ரீதுளசி.

“ஹான். இப்படித்தான்! அப்போ... அந்தப் பக்கமா அவங்கப்பா நந்தகோபர் வந்ததும் என்னப்பா... என்ன விசேஷம்... ஏன் எல்லாரும் இப்படி ஆடியோடிட்டு இருக்காங்க? யாருக்காச்சும் கல்யாணமான்னு கேட்டாராம்.”

தலையை இடப்பக்கமாய் வளைத்துக் கொண்டு, தாயை ஏறிட்டுப் பார்த்தாள் ஸ்ரீதுளசி. குந்தவையின் கைகள், இரண்டு வாய் இட்லிகளை மகளின் செப்பு வாய்க்குள் இட்டன லாவகமாய்.

“கிருஷ்ணர் அப்படிக் கேட்டதும், அவங்கப்பா சொன்னாராம்... கிருஷ்ணா, நம்ம கிராமம் செழிப்பா இருக்கிறதுக்கான காரணம்... இந்திர பகவான் தடை சொல்லாம கொடுக்கிற மழைதான். அதற்கு நன்றி செலுத்துறதுக்காக, கோபாலர்கள் எல்லாரும் இந்திர



விழாவிற்கு ஏற்பாடு பண்ணிட்டு இருக்காங்கன்னு சொன்னாராம்.”

இப்போது, இடப்பக்கமாய் ஒடித்திருந்த கழுத்து, வலப்பக்கமாய் மாறிக் கொண்டது.

“திரும்புடா... இப்படியிருந்தா அம்மா எப்படி ஊட்டுறது?” என்றபடி, பிள்ளையின் தலையை நேராய் வைத்த குந்தவை, ஒரு வாய் இட்லியை மகளுக்கு ஊட்டினாள்.

“ஹ்ஹ்ஹ்ஹு... சொவ்வும்மா...”

“சொல்றேன்... சொல்றேன். அவங்கப்பா அப்படிச் சொன்னதும், கிருஷ்ணருக்கு ஒரே கோபமாம்...”

“ம்ம்ம்” - ‘கோபம்’ என்ற சொல்லைக் கேட்டதும், துளசியின் கண்கள் அகல விரிந்தன.

“என்னப்பா நீங்க? நீங்கெல்லாரும் தப்பா புரிஞ் சுட்டு இருக்கீங்க... இந்திரா மழையைக் கொடுக்கலை... கோவர்த்தன் மலை தான் நம்மளோட நிஜமான நண்பன். மேலே இருக்க மேகங்களை விட... கோவர்த்தன் மலை தான் நம்ம கிராமத்துக்கு ஏகப்பட்ட உதவி செஞ்சிருக்கு. அதைத் தான் வழிபடணும்ன்னு, கிருஷ்ணர் அவங்கப்பாவோட சண்டை போட்டாராம்...”

“அச்சியோ...”

“ஹான். அவங்கப்பாவுக்கும் ஒரே வருத்தமாம்... என்ன கிருஷ்ணா நீ... புரியாம பேசுறேன்னு அவர் வருத்தப்பட்டதும்... கிருஷ்ணர் என்ன தெரியுமா சொன் னாரு?”

“ஹ்ஹ்ஹ்ம்”

“ஒரு வாய் வாங்கு... அம்மா சொல்றேன்...”

"ம்ம்ம்... போயும்..."

"இன்னும் ரெண்டே வாய் தான்..."

"கத்தை..."

"சொல்றேன்... சொல்றேன்... குட்டியா இருந் தாலும் கிருஷ்ணருக்கு... என்னோட துளசி குட்டி மாதிரியே நிறைய அறிவாம். அதனால அவரு என்ன தெரியுமா சொன்னாரு? அப்பா... கோவர்த்தன் மலை காத்து மூலமா தூதுவிட்டு... மழை மேகத்தை உரு வாக்கி... அதை நம்ம கிராமத்துப் பக்கமா திருப்பி... மழை உண்டாக்க வைக்குது. அப்படியிருக்கும்போது, வாழ்த்துறதும் வணங்குறதும் இந்திராவையா? கோவர்த்தன் மலையை வணங்குங்கன்னு... அவங்கப் பாட்ட சண்டை போட்டாராம், கிருஷ்ணா"

ஹப்பா, இட்லி காலியாகி இருந்தது.

ஆனால், அடுத்ததாய் துளசி கேட்ட கேள்வியில், தட்டில் குறைந்த பாரம் பன்மடங்காய் உருமாறி, மனதில் ஏறிக்கொண்டது.

"கிச்சா பா இக். ப்பாப்ஆ... பா எங்?" என்றாள் துளசி, தாயின் தாடையைப் பற்றி.

"கிருஷ்ணாவுக்கு அப்பா இருக்க மாதிரி, எனக்கு அப்பா எங்க?" எனக் கேட்கும் குழந்தையிடம் என்ன சொல்வது?

குந்தவை அதிர்ந்து விடவில்லை. வருத்தமாய் இருந்த போதும், திகைப்பாய் இல்லை அவளுக்கு.

இப்படியொரு கேள்வி வரும் என்று எதிர்பார்த்தது தானே!



என்ன... இன்னும் ஒரு வருடத்திலோ... இரண்டு வருடத்திலோ வரவேண்டிய கேள்வி. இப்போதே வந்து விட்டது. பரவாயில்லை!

வருத்தத்தையும் மீறி, பெண் சூடிக்கையாய் இருக்கிறாள் என்று பெருமை மனதை நிறைக்க,

"இங்க தான் இருக்கா..." என்றாள் குந்தவை, கண்ணில் சிறு மின்னலுடன்.

"இய்யா? எங்?" - கண்ணை உருட்டி, வீட்டை வலம் வந்தது அந்த முயல்குட்டி.

"இதோ... இங்கதான்..." என்ற குந்தவை, கையி லிருந்த தட்டை கீழே வைத்துவிட்டு, பெண்ணின் முன்னே குனிந்து, நெஞ்சில் கரம் வைத்து, 'நானே உன் தந்தை' என்பது போல் பாவனை காட்டினாள்.

"இய்யி... அம்மா..." என்றது கன்று.

"அப்பாவும் தான்டா..." என்று குந்தவை கொஞ்ச,

"அம்மா... தா... பா-வா?"

"ம்ம்ம்"

துளசி, கழுத்தைச் சாய்த்துக் கொண்டு யோசிக்கத் தொடங்க, "அச்சச்சோ... லேட் ஆகிடுச்சே! அம்முக்காக... நகுல்... அனுஷ்மீ... அக்ஷு எல்லாரும் வெயிட் பண் ணிட்டு இருப்பாங்களே... போக வேணாமா?" என்றபடி, மகளைக் கையில் ஏந்திக் கொண்டாள் குந்தவை.

"ஹா... நக்து... நக்து... இப்பா... அக்க்க்க்..." என்று தன் போக்கில் பேசத் தொடங்கிய குழந்தையின் வாயைத் துடைத்துவிட்டவள், அவளுக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடுத்தாள்.

கையில் சிப்பருடன், ஸ்ரீதுளசி வீட்டைச் சுற்றி ஊர்வலம் வர, குந்தவை வேகவேகமாய் உணவை அள்ளி வாயில் போட்டுக் கொண்டாள்.

இருவருக்குமான மதிய உணவை டப்பாக்களில் அடைத்து, பிள்ளை நடுவே உண்பதற்காக ஆப்பிள் கட் பண்ணி வைத்து... குடிக்க ஆரஞ்ச் ஜூஸ் பிழிந்து வைத்து என்று மகளின் உணவுக் கூடையைத் தயார் செய்தாள்.

அதற்குள், "அம்மா... உச்சா... ச்சே... ச்சே..." என்று தலையில் அடித்தபடி வந்து நின்றாள் துளசி.

"உச்சா வந்தா.. அம்மாகிட்ட சொல்லணும்டா. அப்படி... அப்படியே போகக்கூடாது. எங்க போன? எங்க உச்சா போன? அந்த உச்சா துண்டை எடுத்து.. அதில போடு... ஹ்ம்ம்... ஓடு..." என்று மகளைக் கடிந்து கொண்டதோடு நில்லாமல், துணியை எடுத்துச் செல்லும் பிள்ளை, துணியை எங்கே போடுகிறது என்பதையும் தலையை நீட்டிப்பார்த்துக் கொண்டாள்.

சில வினாடிகளில், "பொத்தே மா" எனக் கூறிய சின்னக் குரலில், தாய் கோபித்துக் கொண்டுவிட்டாளே என்ற வருத்தம் மேலோங்கி இருந்தது.

"குட் கேர்ள்!" என்று தாயின் பாராட்டைப் பெறவும் தான், துளசியின் முகம் மலரவே செய்தது.

"கூ...கே" என்று தன்னைத் தானே "குட் கேர்ள்" என்று தட்டிக் கொடுத்துக் கொண்டவள், "அம்மா... கத்து..." என்று தன் ஈரமான ஜட்டியைக் கட்டினாள்.

"வெயிட் பண்ணு... வெயிட் பண்ணு. அம்மா... கிச்சன் வேலை முடிச்சிட்டு வந்துடுறேன். நீ போய்...



பெட்ரூம்ல வெயிட் பண்ணு" என்றவள், சமையலறை வேலையை முடித்துக் கொண்டு, படுக்கையறைக்குள் திரும்புகையில், தன் உடைகள் முழுதையும் அலமாரி யில் இருந்து எடுத்து இறைத்து வைத்திருந்தாள் துளசி.

"ஹய்ய்ய்யோ... என்ன அம்மு இது? அச்சோ..." என்று தலையில் அடித்தபடி, பிள்ளையைப் பற்றி, தன் பக்கமாய் இழுத்துக் கொண்டவள், "துணியை கலைச்சுப் போடறதில... உனக்கு என்ன தான் குஷியோ?" என்றாள் கோப முகம் காட்டி.

செய்தது தப்பு என்று புரிந்து விட்டபடியால், முயல் முகத்தை எலி முகமாய் உருமாற்றி துளசி சுருங்கிப் போய் நிற்க,

"இப்போ... இதை எடுத்து வைக்க முடியாது! ப்ச்ச்" என்று சலித்துக் கொண்ட குந்தவை,

"சரி வா... லேட் ஆகிடுச்சு. டிரஸ் போட்டுட்டுக் கிளம்பலாம்" என்று மகளுக்கு உடை மாற்றிவிட்டாள்.

மகளைக் கிளப்பி விட்டதும், தானும் ஒரு சுடிதாரை எடுத்து அணிந்து கொண்டாள்.

இளம் மஞ்சள் வண்ண உடலில், பச்சை நிற நூலால் சில்க் வொர்க் செய்த குர்தாவும், பச்சை வண்ண சுடிதாரும் அவளது மேனிக்கு எடுப்பாய் தான் இருந்தது.

அதில் கவரப்பட்டோ... இல்லை அன்னையின் முந்தைய கோபத்தைச் சரி செய்ய எண்ணியோ, "ம்மா... தெஸ்... நன்னா இக்கா..." என்றாள் துளசி, தாயின் காலைக் கட்டிக்கொண்டு.

கோபமாவது? வேலையாவது? அனைத்தும் மறைந்து போக, "தேங்க்ஸ்டா... அம்மு" என்றவாறே பிள்ளையைத் தூக்கிய குந்தவை, "அம்முவோட ட்ரெஸ்ஸூம் சூப்பர்டா" என்றாள் பெண்ணின் பட்டுக் கன்னத்தில் முத்தம் வைத்து,

"கிக்கி..." என்று சிரித்தபடி, இருவரும் வீட்டை விட்டுக் கிளம்பினர்.

அவள் பணிபுரியும் பெங்களூர் DRDO அலுவலக வளாகத்தில் அமைந்திருக்கும் "Day Care" சென்ட்ரில் பெண்ணை விட்டவள், "குட்டி... டாட்டா. அம்மா மத்தியானம் வந்து...மம்மம் ஊட்டி விடுறேன். சமத்தா இருக்கணும் சரியா?" என்றாள் பெண்ணின் கன்னம் தட்டி.

"சய் மா... ஆச்ச்சீச் போய்த்தா" என்று தாய்க்கு விடை கொடுத்த மகள், தன் உணவுக் கூடையைத் தூக்க முடியாமல் இழுத்தபடி, உள்ளே நகர்ந்தாள்.

அதற்குள், அங்கு வேலை செய்யும் ஆயாம்மா ஒருவர், துளசி மற்றும் அவள் கையிலிருக்கும் கூடை ஆகியவற்றின் பொறுப்பைத் தனதாக்கிக் கொள்ள, பெண்ணிற்குக் கையசைத்துவிட்டு அலுவலகம் நோக்கி நடந்த குந்தவைக்கு, முப்பத்தியிரண்டு வயது என்றால் நம்புவது கடினமே.

DRDO ஆராய்ச்சி கூடத்தில் Grade E விஞ்ஞானியாகப் பணிபுரியும் அவளின் எண்ணங்கள், மகளை விட்டு நகர மறுத்தன.

இன்று என்றில்லை, டே கேரில் விட்ட அன்று தொட்டு, ஒரு நாள் கூட துளசி அழுததே இல்லை.



"டாட்டா" என்று அழகாய் கையசைத்து, வழியனுப்பி விடுவாள்.

ஒருவேளை, தன்னுடன் இருக்கும் நேரங்களை மகள் விரும்பவில்லையோ என்று குந்தவை குழம்ப அவசியமே இல்லை என்பது போல், மதிய உணவு நேரமானதும், டே கேர் வாசலிலேயே காத்துக் கொண்டிருப்பாள் துளசி.

"ம்மா... கானோ... ம்மா... கானோ..." என்று சொல்லிக் கொண்டே இருந்ததாக, ஆயாம்மா கூறுவார்கள்.

அதே போல், மாலையில் வேலை முடிந்து செல்லும் போது, சிறகு முளைத்த பட்டாம்பூச்சியாய் தாயிடம் ஓடி வருவாள் செல்வமகள்.

"Such an understanding lovable child!" என்று சிலாகித்தது மனம்! சந்தோஷமாய்!

அவள் வாழ்க்கையின் ஒரு கண், துளசி எனில், மறு கண், அவளது வேலை!

எவ்வளவுக்கு எவ்வளவு, அவள் துளசியை நேசித்தாளோ, அதற்கு நிகராய் தன் வேலையையும் மதித்தாள் குந்தவை.

Defence Bioengineering and Electromedical Laboratory என்ற பிரிவில் வேலைக்கு அமர்த்தப்பட்டவளுக்கு, அவள் வாங்கியிருந்த BE., M.S. in Nanotechnology, Ph.D. in Electromedicine என அனைத்துமே கை கொடுத்தன.

Protective Equipment and Flying Clothing என்ற துறையில் மும்முரமாய் வேலை செய்து கொண்டிருந்தவளுக்கு, மூச்சு விடவே நேரமில்லாமல், இருந்த போதும்,

மகளின் நினைவுகள் நெஞ்சின் ஓரம் ரீங்காரமிட்ட படியே இருந்தன. சுவாசத்தில் கலந்துவிட்டவள் அல்லவோ?

'இன்னைக்கு அம்முக்குப் பிடிச்ச கேரட் பீன்ஸ் கூட்டு... சீக்கிரம் போய் ஊட்டி விடணும்' என்று தாயாய் மகளின் மதிய உணவு நேரத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள்.

மணி, பன்னிரெண்டரை ஆனதும், கையிலிருந்த வேலையை அப்படியே விட்டுவிட்டு, அரக்கப் பறக்க ஓடினாள் குந்தவை.

எதிர்பார்த்தபடியே, கூடையை அருகே வைத்துக் கொண்டு, குந்தவையின் வருகைக்காக, டே கேரின் வெளியே போடப்பட்டிருக்கும் குட்டி நாற்காலியில் அமர்ந்திருந்தாள் துளசி.

தாயைக் கண்டதும், கயிற்றிலிருந்து விடுபட்ட பட்டமாய் ஓடி வந்து கட்டிக் கொண்ட மகளை அழைத்துக் கொண்டு உணவுக் கூடம் நோக்கிச் சென்றாள்.

அங்கே, மகளின் டே கேர் நண்பர்களும்... அவர் களது தாய்மார்களும் உணவுகளோடு சண்டையிட்டபடி ஐக்கியமாகி இருந்தனர்.

குந்தவை, DRDO வில் வேலைக்குச் சேர்ந்த இந்த ஆறு மாதத்தில், நண்பர்கள் என்று பலர் அமைந்துவிட வில்லை. பார்க்கும்போது ஒரு புன்முறுவல் புரியும் அளவில் மட்டுமே இருந்தது சிலரது நட்பு!

குந்தவைக்குமே, அது வசதியாக இருந்தது. நட்பு என்று நெருங்கிவிட்டு, அவளது கடந்த காலம் தெரிய வருகையில்... குறுகுறு பார்வை... பரிதாபப் பார்வை... ஏளனப் பார்வை என்ற விதவிதமான பார்வைகளுக்கு ஆளாக வேண்டாமே!



ஆனால், இன்று தானும் தன் மகளும் தனிமைப் படுத்தப்பட்டது போல் ஒரு பிரம்மை!

ஒரு கணம்! ஒரே ஒரு கணம், பாலாவை எண்ணி ஏங்கியது! சட்டெனத் தலையை உலுக்கித் தன்னைச் சரி செய்த குந்தவையின் கவனத்தை தன் பக்கம் திருப்பும் வண்ணம் "ம்மா... கத்தை... கிச்சி கத்தை..." என்று காலையில் சொன்ன கதையை நினைவூட்டினாள் துளசி.

கொஞ்சமாய் பயம் மேலெழும்பிய போதும், கதையைத் தொடர்ந்தாள் குந்தவை.

## அத்தியாயம் – 2

"பாலா... யோசிச்சுத் தான் இந்த முடிவெடுத்து இருக்கீங்களா?" - தன் மூக்குக் கண்ணாடியைச் சரி செய்தபடி கேட்டார், வேணுகோபால்.

"ஆமா சார்!" - திடமாய் வந்தது பாலாஜியின் பதில்.

"உங்களுக்கு இங்க ரொம்ப நல்ல பேரு, பாலா! எதுக்காக... இந்த ரெபுடேஷனை விட்டுட்டுப் போக ணும்னு நினைக்கிறீங்க?" - ஒரு திறமையான மருத்து வரை இழக்க, அந்த மருத்துவமனை மேலாளருக்கு விருப்பமில்லை.

"லைப்ல... ஒரொருத்தருக்கும் ஒவ்வொரு ப்ரியாரிட்டீஸ்" என்றான் பாலாஜி அழுத்தமாய். எனது

வாழ்வின் முன்னுரிமை குடும்பத்திற்கே என்று சொல்லாமல் சொல்லியது அக்குரல்.

"ஹாஸ்பிடலையும் தாண்டி... உங்களுக்குப் ப்ரைவேட் ப்ராக்டீஸ்லையும் நல்ல வருமானம் வருதே! லிவிங் சென்னைன்னு ஆன பின்னாடி... ஜஸ்ட் லைக் தட் எல்லாத்தையும் உதறிட்டு பெங்களூர் போறேன்னு சொல்றது, கொஞ்சம் முட்டாள்தனமா இருக்கு, பாலா"

"பணம் மட்டுமே லிவிங்கை முடிவு பண்றதில்லை சார். லிவிங்ல லைவிலிநஸ் சேர்க்கிறது ஃபாமிலி தான். அதைத் தேடித்தான்... நா பெங்களூர் போறேன்" என்றான் பாலாஜி பொறுமையாக.

"பட் பாலாஜி... ஃபாமிலிய இங்க மூவ் பண்ணிக்கலாமே"

"சார், இது... Uninformed Resignation கிடையாது. ஏற்கனவே ரெண்டு மாசம் நோட்டீஸ் கொடுத்துட்டேன். சோ... ப்ளீஸ்... கையெழுத்துப் போட்டீங்கன்னா..." என்றான் பாலாஜி, தான் அமர்ந்திருந்த இருக்கையை விட்டு எழுந்தபடி.

"வெல்! உங்களோட வாழ்க்கை... நா என்ன சொல்ல முடியும்!" என்றபடி, அவனது ராஜினாமா கடிதத்தில் தன் கையெழுத்தைப் போட்டு, அவனுக்கும் அந்த மருத்துவமனைக்குமான கடைசித் தொடர்பை அறுத்துக் கொண்டார்.

"தேங்க்ஸ் சார்! ஐ வில் டேக் லீவ்!" என்றபடி, அவரிடம் கை குலுக்கிவிட்டு வெளியே வந்த பாலாஜிக்கு, "ஊஃப்ப்!" என்று நிம்மதியாய் இருந்தது.



"என்னண்ணா!" ஃபைனல் சிக்னேச்சர் வாங்கிட்டீங்களா? எப்போ... பெங்களூர் பயணம்?" என்படி வந்தான் ரகு.

"வாங்கியாச்சுடா... இன்னைக்கு நைட் கிளம்புறேன்."

"கிளினிக்கை யாருக்குண்ணா கொடுத்திருக்கீங்க? விலைக்குக் கொடுத்துட்டீங்களா? இல்ல... லீசா?"

"இல்லடா... கம்ப்ளீட்டா வித்துட்டேன்."

"ஹோ! திரும்ப சென்னை வரதாவே ஐடியா இல்லையா?" - வருத்தமாய் வெளிவந்தது, பாலாஜியின் ஜூனியர் ரகுவின் குரல்.

"சென்னை வரதுக்கான வாய்ப்பு ரொம்பக் கம்மிடா. கடவுளோட புண்ணியத்தால எல்லாம் நல்லபடியா போச்சுன்னா... நாங்க எல்லாரும் பெங்களூர்லேயே செட்டில் ஆகிடுவோம். லெட்ஸ் ஸீ!"

"நீங்க நினைக்கிறதை விட சூப்பரா போகும்ண்ணா! கவலைப்படாதீங்க" என்று தைரியம் ஊட்டியவன்,

"எங்கண்ணா... ஜாயின் பண்றீங்க? ரெண்டு ஆஃபர் இருக்கிறதா சொன்னீங்களே? எங்க எங்க?" எனக் கேட்டான்.

பெங்களூரில் இருக்கும் இரண்டு பெரிய மருத்துவமனைகளின் பெயரை பாலாஜி சொல்லவும், "வாவ், செம ஹாஸ்பிடல்ஸ்! அதுவும்*** ஹாஸ்பிடல் செம கிளாஸ்ன்னு கேள்விப்பட்டேன். நல்லாவும் பண்ணுவாங்களாமே" என்றான் ரகு, ஒரு பிரபல மருத்துவமனையின் பெயரைக் குறிப்பிட்டு,

"யா... ஆனா... எனக்கு அங்க போக விருப்பமில்ல, ரகு.*** ஹாஸ்பிடல்லேயே ஜாயின் பண்ணலாம்ன்னு இருக்கேன்..." என்ற பாலாஜியை விநோதமாய் பார்த் தான் ரகு.

"ஏன்-ண்ணா? நீங்க சொல்ற ஹாஸ்பிடல்... சிட்டிக்குள்ள இருக்கில்ல. ஊருக்கு வரது... போறது எல்லாமே சிரமமா இருக்கும். Moreover ப்ரைவேட் ப்ராக்டீஸ் பண்றதும் கஷ்டமா இருக்கும் இல்லையா?" என்று புரியாமல் கேட்டவன்,

தான் கூறிய மருத்துவமனையின் பெயரைக் குறிப் பிட்டு, "இந்த ஹாஸ்பிடல்ன்னா... எலெக்ட்ரானிக் சிட்டி பக்கத்தில வரும். ஊருக்குப் போறதெல்லாம் ஈசியா இருக்கும்... அண்ட் ஆல்சோ... ப்ரைவேட் கிளினிக் போட்டாலும்... போட்டி நிறைய இருக்காதே!" என்றான்.

"நீ சொல்றது எல்லாம் சரிதான்! பட்... நா சொன்ன ஹாஸ்பிடல்... சிட்டிக்குள்ள... சி.வி. ராமன் நகர் பக்கத் தில இருக்கு ரகு! அவங்களுக்குப் பக்கத்தில இருந்தா தான்... கொஞ்ச கொஞ்சமா நெருங்க முடியும். அதான்..." என்றான் பாலாஜி, தன் திட்டங்களின் வரை படத்தை மனதில் கொண்டு வந்தபடி,

"ஹோ!" - ஒரே வார்த்தையில், பாலாஜியின் பேச்சை உள்வாங்கிய ரகு, மெல்ல இதழ் விரித்து, "வாழ்த்துக்கள்ண்ணா!" என்றான் உண்மையான அன்புடன்.

"தேங்க்ஸ்... ரகு!" அவனிடம் விடை பெற்ற பாலாஜி, "வார்டு நம்பர் 305ல இருக்க பேபிக்கு Premature Jaundice ன்னு ரிப்போர்ட் வந்திருக்கு.



ஃபோட்டோ திரப்பி போடச் சொல்லியிருக்கேன். நீ... ரவுண்ட்ஸ் போகும் போது... ஒரு வாட்டிச் செக் பண்ணிக்கோ" என்றான் மருத்துவனாய்.

"ஓகேண்ணா!" - பாலாஜியை அணைத்து விடை கொடுத்தான் ரகு.

நல்ல மருத்துவனை இழக்கிறோம் என்ற மருத்துவ மனையினர் வருத்தத்திற்கு சற்றும் குறையாமல், நல்ல வழிகாட்டியை இழக்கிறோம் என வருத்தம் கொண்டான் ரகு.

மருத்துவ வாழ்க்கையில் என்றில்லை... சொந்த வாழ்விலும்... ரகு தடுமாறி நிற்கையில், தோளில் கைபோட்டு தெளிவான பாதையில் வழி நடத்துபவன், பாலாஜியே!

குழந்தைகளின் முகத்தைப் பார்த்தே, என்ன வியாதி என்று கணிக்கக் கூடிய அளவிற்கு அவனது திறமை, அங்கே பிரசித்திப் பெற்றது.

அதற்கொரு உதாரணம் போல், மருத்துவமனை வாயில் நோக்கி நடந்த பாலாஜியை "சார்... சார்... அருந்ததி மேடம் உங்களை அர்ஜண்ட்டா பார்க்கணும் ணாங்க. டூ மினிட்ஸ் சார்... மேடமே வரேன்னாங்க" என்று மூச்சிரைக்க நிறுத்தினார் ஒரு பணிப்பெண்.

"அதுக்கேன்... இப்படி ஓடி வரீங்க?" என்னோட மொபைலுக்கு ஒரு கால் போட்டிருக்க வேண்டியது தானே" என்றபடி, நோயாளிகள் அமர்வதற்காக போடப் பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தான், பாலாஜி.

"ஆமால்ல... நீங்க கிளம்பிடுவீங்களோங்கிற பதட்டத்தில் ஒண்ணுமே புரியல... சார்" என்று அசடு

வழிந்த செவிலியப் பெண்ணைத் தள்ளிக்கொண்டு "பாலா... ஹே பாலா" என்று பாரபரத்தாள் அருந்ததி.

"இருக்கேன் இருக்கேன். ரிலாக்ஸ்... என்ன விஷயம்? ஏதாவது எமெர்ஜென்சியா? சிசேரியன்?" என்ற பாலா, பாண்ட் பாக்கெட்டில் கைவிட்டபடியே எழுந்து நின்றான்.

"யா பாலா! IVF பண்ணின பேஷன்ட். ட்வின்ஸ் வேற... ஏழாவது மாசமே கர்ப்பப்பை வாய் ரெண்டு சென்டிமீட்டர் திறந்துடுச்சு. ரொம்ப க்ரிடிக்கல்! பதி னைஞ்சு வருஷம் கழிச்சு கன்சீவ் ஆகியிருக்காங்க... Precious pregnancy! நீ இருந்து... பேபீஸை வெளிய எடுத்துட்டா பரவாயில்ல, பாலா! எனக்குக் கொஞ்சம் தெம்பா இருக்கும்! ப்ளீஸ் பாலா! முடியாதுன்னு சொல்லிடாத! இதுக்குத் தனியா பேமென்ட் வாங்கித் தந்துடுறேன். ப்ளீஸ் பாலா! ப்ளீஸ் டா!" என்று அவன் கையைப் பிடித்துக் கெஞ்சினாள் அருந்ததி.

"ஹே இட்ஸ் ஓகே, அருண்! நீ இவ்வளவு ப்ளீஸ் போட வேண்டிய அவசியமே இல்ல. எனக்கு... நைட் பத்து மணிக்கு தான் ட்ரைன். மணி... இப்போ பதி னொண்ணு தானே ஆச்சு... சீக்கிரம் அரேன்ஜ் பண்ணு... நா வரேன்" என்றான் பாலா, தன்னுடன் பயின்றவளின் தோளில் சிநேகமாய் தட்டி.

"ஹப்பா! இப்பத் தான்... எனக்கு நிம்மதியா இருக்கு! ஒரு மணிக்கு...ஆபரேஷன் ரெடி பண்ணிடு றேன். நீ... வந்துடு" என்றவள், "அப்புறம்... பேமென்ட் எப்படிடா?" என்றாள்.

"கொடுக்க முடியுற பேஷன்ட் தானே?!" எனக் கேட்டு, அவள் தலையாட்டியதும், "என்னோட நார்மல் சார்ஜஸ் வாங்கிடு... எப்பவும் போல ஹாஸ்பிடல் மூலமா அக்கௌன்ட்ல போட்டுடு" என்றான் பாலாஜி.

"ஓகே... ஒரு மணிக்குப் பாக்கலாம்" என்றவள், அறுவை சிகிச்சைக்கான ஏற்பாடுகளைச் செய்ய ஓடி னாள்.

ஒரு மணி... ஐந்து நிமிடங்கள்.

ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட பச்சை உடையை ரகு அவனுக்கு அணிவிக்க, கைகளில் உறை... வாயில் மாஸ்க்... தலையில் யெட் காப் என்று கிருமிகளற்ற உடையுடன் அறுவை சிகிச்சை அறைக்குள் நுழைந் தான், பாலாஜி.

"டாக்டர்... பயமா இருக்கே... என் குழந்தைங்க நல்லா இருக்காங்க தானே" என்ற பயந்த குரல் செவியை நிறைத்தது. இதே போன்ற ஒரு பயந்த குரல் தானே, அவளதும்!? ஆனால்... அவளால் எப்படி முடிந்தது?! எனப் பின்னோக்கி ஓடிய தன் சிந்தனையை இழுத்துப் பிடித்து நிறுத்தினான் பாலாஜி.

"பாலா... ரிலாக்ஸ்! நடந்ததையே நினைச்சிட்டு... கவனத்தைச் தொலைச்சுடாதே! உலகத்துக்கு வரப் போற... ரெண்டு குட்டி உயிருக்கும் உன்னோட கவ னிப்பு ரொம்பத் தேவை. அவங்களைப் பாரு... கம் ஆன்... மத்ததை மற... ஜஸ்ட் இவங்களை மட்டுமே நினை..." என்று தன்னை ஒருமுகப்படுத்தியவன், சுற்றியும் நடப்பதில் கவனமானான்.

அந்த மருத்துவமனையின் தலைமை மயக்க மருந்து மருத்துவர், "லாவண்யா... ரிலாக்ஸ்! பேபீஸ் நல்லா இருக்காங்க... ஹார்ட் பீட் எல்லாமே நார்மலா

இருக்கு. Dont get tensed" என அவளுக்குப் பதில் கூறிக்கொண்டே, அவளுக்கு முதுகு வடத்தில் ஊசி ஒன்றை ஏற்றிக் கொண்டிருந்தார்.

"டாக்டர்... இப்படிக் குனியுறதால... பாப்பாக்கு எதுவும் ஆகாது தானே" என்றாள் அப்பெண், தான் படுக்க வைக்கப்பட்டிருந்த நிலையை எண்ணிப் பயந்த வளாய்,

காலை நெஞ்சாங்கூடு வரை மடக்கி, தலை முட்டியில் படும்படி படுக்க வைத்தால் மட்டுமே, நடு முதுகு வடத்தில் மயக்க மருந்து ஊசியைப் போடமுடியும் என்பதால், அவளது பயத்தைப் புறந்தள்ளிவிட்டு, அவளை அந்த நிலையிலேயே பிடித்திருந்தனர் செவிலியப் பெண்கள்.

ஐந்தே வினாடிகளில் வேலை முடிந்துவிட, அவளை நேராகப் படுக்க வைத்தனர்.

அருந்ததி, தன் பச்சை நிற ஸ்டெரிலைஸ்ட் உடையில் உள்ளே வந்தாள்.

"லாவண்யா... பயமே வேணாம். இன்னம் கொஞ்ச நேரத்தில... உங்களோட குட்டீஸ் வெளிய வந்துடு வாங்க..."

"டாக்டர்... இன்னும் 28 வீக்ஸ் கூட முடியல... எல்லா உறுப்பும் நல்லா வளர்ந்திருக்கும் தானே..." - தாய்க்கே உரிய பயம். அதிலும், குறைப் பிரசவத்தில் பிறக்கப் போகும் பிள்ளையைப் பற்றி ஆயிரமாயிரம் பயம் இருந்தது அவளுக்கு.

"அதான்... ஸ்கேன்லேயே பார்த்தோமே! எல்லாமே பெர்பெக்ட்! ரிலாக்ஸ்... கண்ணை மூடுங்க.... எட்டிப் பார்க்கக் கூடாது" என்ற அருந்ததி, அவளது தோளை அழுத்திப் படுக்கச் செய்துவிட்டு, செவிலியப் பெண்ணுக்குக் கண் காட்டினாள்.



கர்ப்பிணியின் கண்ணில், உறை மாட்டப்பட்டது.

"சதக்! சதக்!"

அடி வயிற்றில் கவனமாய் இரு கீறல்கள்.

வயிறு திறந்து கொள்ள, ரத்தமும்... பிள்ளை உள்ளே குடியிருந்த தண்ணீர் குடத்திலிருந்த தண்ணீரும் ஒருங்கே பீறிட்டு வெளியே வந்தன.

சிறு உருவம் ஒன்றின் தலை... மெல்ல வெளியே தெரிந்தது.

கையை மெல்ல உள்ளே கொடுத்து, பிள்ளையின் தலையைப் பிடித்த அருந்ததி, "விமல்... புஷ்" என்றாள். கர்ப்பிணியின் தலைமாட்டில் நின்றிருந்த மயக்க மருந்து மருத்துவர், நோயாளியின் அடிவயிற்றில் கை வைத்துத் தள்ள, நொடிகளில் முதல் பிள்ளை வெளியே வந்தது. வீல் என்ற சத்தத்துடன். அந்த நேரம், கர்ப்பிணியின் தலைக்கு நேர் மேலே மாட்டப் பட்டிருந்த கடிகாரத்தைப் பார்த்து, "1:20" என்ற பாலாஜியின் கரங்கள், அப்பிள்ளையை வாங்கியது.

மிகச் மிகச் சிறிய குழந்தை.

பிள்ளை வெளியே வந்த வினாடி, கையிலிருந்த காற்றுப் பம்ப்பால்... மூக்கிலும் காதிலும் அடைத்துக் கொண்டிருக்கும் தண்ணீரை வெளியே அகற்றிய பாலா, தண்ணீரில் ஊறிப் போயிருந்த அப்பிஞ்சை, வேகமாய் ஆராய்ந்தான்.

நிறம், குழந்தைகளுக்கே உரிய பிங்க் வண்ணத்தில் இருந்தது.

அழுகைச் சத்தம் நார்மலாய் இருந்தது.

கை... கால்கள் நன்றாய் அசைந்தன.

உள்ளங்காலில் தட்டியதும், அழுகையின் வீரியம் கூடியது. முகம் சிவந்தது.

இதயத் துடிப்பும் சுவாசமும் சீராய் இருந்தன.

மொத்தத்தில், apgar scale எனப்படும் குழந்தைகளுக்கான முதல் நிமிடப் பரிசோதனையின் முடிவு, திருப்தியளித்தது.

என்ன எடை தான் மிகவும் கம்மியாய் இருந்தது.

இரட்டைப் பிள்ளைகள் என்றாலே, குழந்தைகளின் எடை அதிகம் இருக்காது என்றாலும் குறைப் பிரசவத்தில் பிறந்த இக்குழந்தையின் எடை ஒரு கிலோவும் முன்னூத்தி எண்பது கிராம்களும் மட்டுமே இருந்தது. அதுவும், இது பிறப்பு எடை. தாயின் கர்ப்பப்பை நீரில் ஊரிய குழந்தையின் எடை இது. சற்று நேரத்தில், இன்னமும் கம்மியாகக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இருந்தபோதும், குழந்தையின் உடல் நிலையில் பெரிய பிரச்சனைகள் இல்லையென்றதும் “பேபி ஃபைன்” என்ற பாலா, செவிலியப் பெண்ணிடம் கொடுத்து, அதன் தாயிடம் காட்டச் சொன்னான்.

“சீக்கிரம் இந்திரா... நெக்ஸ்ட் பேபி எடுக்கணும்” என்று உந்த, அடுத்த குழந்தையைக் கவனிக்கும் பணிகள் நடந்தேறின.

ஐந்தே நிமிடங்களில், அடுத்த குழந்தை உலகை எட்டிப் பார்க்க, நேரத்தைக் குறித்துச் சொல்லிய



கையோடு, பிள்ளையை வாங்கிய பாலா, தன் முதற் கட்ட ஆராய்ச்சியைத் துவக்கினான்.

சுவாசம்... ஹார்ட் பீட்... நிறம்... அசைவுகள் என்று வேகமாய் ஆராய்ந்த அவனது மருத்துவ மூளையில், முழுதாய் பிங்க் நிறமாக இல்லாமல்... ஆங்காங்கே வெள்ளைத் திட்டுக்களாய் தெரிந்த மேனி சிறு சுணக்கம் ஊட்டியது.

அந்த சுணக்கத்தை உறுதி செய்வது போல், குழந்தையின் அழுகையும் கணீர் என்றில்லை. வீல் என்று அடித் தொண்டையிலிருந்து வரவில்லை அச் சத்தம்.

“கீச்... கீச்” என்று கோழி கத்துவது போல் ஓர் சத்தம்.

சுவாசம் கொஞ்சம் தடைபடுவதை அவனால் கணிக்க முடிந்தது.

“அருண்... PDA 70% Closure தான். Color and cry are not normal. If not now, might turn critical in a few hours” என்ற பாலா, “மதர் டச் முடிந்ததும்... NICU எடுத்துட்டு வந்திடச் சொல்லு. லெட்ஸ் ஸ்டார்ட் ஆக்சிஜன் சூன்” என்றான், பிள்ளையின் எடையை அளந்தபடி,

இதற்குத்தான், இதற்குத்தான், பாலா வேண்டும் என்பது எனச் சிலாகித்தாள் அருந்ததி. இதுவே, வேறொரு மருத்துவராய் இருந்தால்... பிள்ளையின் அழுகையையும் நிறத்தையும் வைத்து, இன்ன பிரச்சனை என்று கணித்திருக்க மாட்டார்கள். கணித் திருப்பார்கள் தான் இல்லையென்று சொல்ல முடியாது. இப்படிப் பிறந்த ஒரு நிமிடத்திலேயே கணித்திருக்க

மாட்டார்கள். பிரச்சனை தீவிரம் பெற்று... குழந்தையின் மேனி நீல நிறம் கொண்ட பின்னரே இன்னதென்று கணித்திருப்பார்கள். அரக்கப் பறக்க ஓட வேண்டி யிருக்கும். ஆனால்... இப்போது, இன்னும் அரை மணி நேரத்தில் தீவிர சிகிச்சை கொடுக்கத் தொடங்கி விட்டால், குழந்தை இரவிற்குள் சரியாகிவிடும்.

அருந்ததிக்கு நிம்மதியாய் இருந்தது.

ஆனால்... பாலாவிற்கு!?

குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவில் குழந்தையைச் சேர்த்து, சுவாசம் சீராக வரவேண்டி ஆச்சிஜன் செலுத்திய பின்னரே நிமிர்ந்தவனுக்கு, மீண்டும் நினைவுகள் பின்னோக்கிச் சென்றன.

"நேஹா... எப்படி இருந்தா?"

"இவ்ளோ... குட்டியாவா இருந்தா?"

"எவ்வளவு வெயிட் இருந்தா?"

"நார்மல் டெலிவரி தான்... ஆனா... pre-mature பேபியா? இல்ல... fully grown பேபியா?"

"பிறந்தப்போ... அவளுக்கு எதுவும் பிரச்சனை இருந்துச்சா? ப்ச்... தெரியலையே!"

"ரொம்பக் கவனிச்சு அவளைப் பாக்கலா இல்ல. அதான்... நியாபகம் இல்லை" என்று நேஹாவைச் சுற்றியே வந்த எண்ணங்கள், அவனை நிம்மதியாய் இருக்க விடவில்லை.



# அத்தியாயம் – 3

சனிக்கிழமை மாலை மூன்று மணி.

"ம்ம்மா... பச்சு போவோம்..." என்று அடுக்களை யில் வேலையாய் இருந்த குந்தவையின் புடவையை இருத்தாள் ஸ்ரீதுளசி.

"போலாம்டா... டூ மினிட்ஸ் என்ன? அம்மா... இந்தக் கூழை டப்பால போட்டுட்டு வந்துடுறேன். குட்டி... ஷூஸ் எடுத்து வை. அம்மா வரேன்" என்று பெண்ணிடம் பேசியபடியே, பெண்ணிற்குக் காய்ச்சி வைத்திருந்த சத்துமாவுக் கூழை டப்பர்வேர் டப்பாவில் எடுத்து வைத்தாள் குந்தவை.

"ஷூ... பூ... பூ ஷூ...போவோம்..."

"டெய்லி ப்ளூ ஷூ தானே போடுறோம். இன்னைக்கு... கிரீன் மிக்கி ஷூ எடுத்து வை"

"ஹா... ஆஆஆஅ...ம்மா... பூ ஷூ மா..."

"ஒரே ஷூவையே போட்டுப் பழசாக்கிடாத அம்மு. சொல்றது கேளு... கிரீன் ஷூ எடுத்து வை. உன்னோட ஸ்கர்ட்க்கு கிரீன் ஷூ தான் மேட்சா இருக்கும்."

"ச்சயி... மச்சா யுமா. ச்சயி. ச்சயி..." என்றபடி பெண் ஷூ ராக் நோக்கிச் செல்வது ஓரக்கண்ணில் பட, சிரித்துக் கொண்டாள் குந்தவை.

'பெண் பிள்ளை என்பது சரியாய் தான் இருக் கிறது! இப்பவே, மேட்ச் பார்த்துப் போடத் தெரிகிறதே!' என்ற எண்ணம் முகத்தைப் பிரகாசமாக்க, கூழ்... தண்ணீர்... பிஸ்கட்... என அனைத்து டப்பாக்களையும்

எடுத்துக்கொண்டு, வரவேற்பறைக்குச் சென்றாள். அங்கிருந்த, மகளின் பார்பீ பையில் அவைகளை வைத்த வளை, “ம்மா... ஷூ போத்து...” என்று அதட்டி விளித் தாள் ஸ்ரீ துளசி.

சோபாவில் அமர்ந்தபடி அதிகாரம் செய்த மகளின் கன்னம் தட்டிய தாய், அவள் முன்னே மண்டியிட்டு அமர்ந்து, ஷூவை மாட்டிவிட்டாள்.

“நேயா போத்து... ம்மா!” என்ற அதிகாரம் வேறு!

“நீ தான்டி... காலை நேரா வைக்கணும்” என்றாள் குந்தவை, மகளின் கன்னத்தில் குத்தி.

“ஹ்ஹ்ஹா ஆஆஆ! வக்...த்து...” என்று சிணுங்கிய மகள், சோபாவை, விட்டிறங்கி, “ம்மா செப்பா” என்றபடி தாயின் செருப்பை எடுத்து வந்து போட்டாள்.

“நா...போட்டுக்கிறேன் குட்டி” எனத் தாய் சொன்னதைக் காதிலேயே வாங்காதவள் போல், தாயின் கால்களுக்கு நேராகச் செருப்புகளைச் சரியாகப் போட் டாள்.

பெண்ணின் தலையைக் கலைத்துவிட்டபடி, செருப்பை மாட்டிக்கொண்ட குந்தவை, கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டு, பெண்ணின் பார்பீ பையை எடுத்துக் கையில் தொங்கவிட்டுக் கொண்டு, பெண்ணின் கைகளைப் பற்றியபடியே, வீட்டை விட்டு வெளியே வந்தாள்.

“ம்மா... பாப்பா பா...” என்று தன் பையைக் காட்டி, தோளில் மாட்டச் சொல்லக் கேட்டாள் சின்னவள்.

“வேணாடா... வெயிட்டா இருக்கும். வீட்டுக்கு வரும்போது... கூழ் தண்ணி எல்லாம் காலி ஆகிடும். அப்போ... தோள்ல போட்டுக்கோ” என்றபடி, பெண்ணை நடத்திக் கூட்டிச் சென்ற குந்தவை, படிகளில் இறங்கத் தொடங்கினாள். ஒரு தளம் இறங்கி, இரண்டாம் தளத்தி லிருந்த ஆஷா மற்றும் ஜோஸ் வீட்டின் கதவைத் தட்டினாள்.



“ஹே குந்தவை... உள்ளவாடி” - ஆஷா ஆரவார மாய் வரவேற்க.

“கோயில்ல இருந்து வரும்போது... வரோம். இப்போ கோவிலுக்குக் கிளம்புறோம்ன்னு சொல்லத் தான் கதவைத் தட்டினேன். ஜோஸ்க்கு எப்படி இருக்கு?”

“இன்னும் ஃபீவர் குறையல”

“டாக்டர்ட்ட ஒரு கன்சல்டேஷன் போயிட்டு வந்து டேன்.”

“ப்ச்... இங்க இருக்க டாக்டர் எல்லாம் வேஸ்ட்டுடி. உனக்குத் தெரியாதா? குவாட்டர்ஸ் விட்டு வெளிய தான் போகணும்... அதை நினைச்சே ஜோஸ் பெட்ல இருந்து எழ மாட்டேங்கிறான்.”

“ஹ்ம்ம்ம்”

“நானும்... இன்னைக்குத்தானே ஊரில இருந்து வந்தோம். அந்த டயர்ட்னெஸ் போயிட்டா... சரி யாகிடும்ங்கிற அல்ப ஆசையில, ரொம்பப் புஷ் பண் ணாம இருக்கேன்.”

“நாளைக்கும் ஃபீவர் கண்டினியூ ஆச்சுன்னா... ஹாஸ்பிடல் போயிட்டு வந்துடு, ஆஷா”

“ம்ம்... சரி... அப்புறம், நாளைக்கு... association-ல கம்ப்ளைன்ட் பண்ணப் போறேன்டி. சும்மா... எம்.பி.பி.எஸ். படிச்சவனை கிளினிக்ல வச்சுக்கிட்டு, நம்மளைப் படுத்துறாங்க.”

“ஹ்ம்ம்... சரி, நீ போகும்போது நானும் வரேன். ரெண்டு பேருமா எழுதிக் கொடுக்கலாம். “சி” பிளாக்ல கூட, எல்லாரும் எழுதிக் கொடுத்திருக்காங்களாம்.”

“நம்ம பிளாக்லையும்... எல்லார்டையும் சைன் வாங்கிக் கொடுக்கலாம். ஜோஸ்க்கு ஓகே... பட் குட்டிப் பசங்களுக்கு ஒண்ணுன்னா கஷ்டமா இருக்கில்ல.”

“ஆமா... போன வாரம் அம்முக்கு டிசென்ட்ரி ஆகிடுச்சு. இவங்ககிட்ட காட்டியும், ரெண்டு நாளைக்குச் சரியாவே வரல, அப்புறம், ஜெய் நகர்ல தான் காட்டிட்டு வந்தேன்” என்றாள் குந்தவை.

“ஸ்ரீன்னு சொன்னதும் தான் நியாபகம் வருது... எங்க குட்டி? மூச்சே காட்டாம இருக்கா!?” என்ற குந்தவையைச் சுற்றித் தேடினாள் ஆஷா.

“அதோ...அங்க இருக்கா” என்றபடி, ஆஷா வைத் திருக்கும் செடிகளின் பக்கம் காட்டினாள் குந்தவை.

அங்கிருந்த ரோஜா... தக்காளி... தூதுவளை... சோற்றுக்கற்றாழை... மல்லிக் கொடி... ஆகியவற்றை ஆசையாய் வருடிக் கொடுத்தபடி, அவற்றுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள் சின்னவள்.

“அச்சோ... எவ்ளோ... ஸ்வீட் பாரேன்டி! மத்த பசங்களா இருந்தா... இலையை பிச்சு... பூவைப் பறிச்சுன்னு ஒரு வழி பண்ணியிருப்பாங்க. ஆனா... குட்டியைப் பாரேன் பெரிய மனுஷி மாதிரி... செடியை வருடி விடுறா! செல்லக் குட்டி! உன்னை மாதிரியே சாஃப்ட், குந்தவை!” என்றபடி, ஸ்ரீயிடம் சென்றாள் ஆஷா.



ஆஷாவின் பேச்சில் முன்பாதியை ரசித்தக் குந்தவையால், பின்பாதியின் தாக்கத்தில் இருந்து வெளி வர முடியவில்லை.

‘அம்மு... என்னை மாதிரி ஏமாளியா இருக்க வேணாம்!’ என்று அழுத மனதை அவள் அடக்கப் பெரும்பாடுபட்ட நேரத்தில்,

“ஸ்ரீ குட்டி... செடிட்ட என்னடா பேசுறீங்க?” என்றபடி ஸ்ரீயை ஆஷா தூக்கவும்,

“தோச்சு... ஆத்தி... தோச்சு... தோச்சு” என்று ஆர்ப்பரித்தாள் ஸ்ரீதுளசி.

“ரோஸா? ஸ்ரீக்கு வேணுமா? என்ன கலர் வேணும்?” என ஆஷா கொஞ்ச,

“கீ... தோச்சு... மாச்சு கீ!” என்றாள் சின்னவள், தான் போட்டிருந்த ஸ்கர்ட்டையும் ஷூவையும் காட்டி.

“என்னடி சொல்றா?” - ஆஷா குந்தவையின் புறம் திரும்ப,

“அவ போட்டிருக்க டிரஸ்க்கும் ஷூக்கும் மேட்ச்சா கிரீன் ரோஸ் வேணுமாம்?! வச்சிருக்கியா?” என்றாள் குந்தவை, சிரிப்புடன். அந்தச் சிரிப்பில், பெண்ணைப் பற்றிய பெருமை பொங்கி வழிந்தது.

“ஆஹா! கிரீன் ரோஸ்க்கு எங்க போவேன்? ஹ்ம்ம்... இதோ... இந்த டிரஸ்ல கொஞ்சூண்டு எல்லோ வருதே... எல்லோ ரோஸ் வச்சுக்கலாமா?” என்றாள் ஆஷா, ஸ்ரீயின் இல்லாத கன்னத்தைக் கிள்ளி.

“ஆ... ஆ...” என்று தீவிரமாய் சில வினாடி யோசித்த ஸ்ரீ, தன் உடையையும்... ரோஸையும் மாறிப் மாறிப் பார்த்தாள்.

ஆஷாவும் குந்தவையும் கண்ணாலேயே சிரித்துக் கொண்டனர்.

"ச்சயி... தாங்க" என அவள் முடிவுக்கு வரக் காத்திருந்தவள் போல், மஞ்சள் வண்ண ரோஜாவைப் பறிக்க கை நீட்டினாள் ஆஷா.

"ஹே...வேணாம் ஆஷா! ஜோஸ்க்கு... செடில இருந்து பூவைப் பறிச்சா பிடிக்காதுல்ல... அப்புறம்... ஏன் பறிக்கிறே? நா... அவளுக்கு... வெளிய வாங்கிக் கொடுத்துக்கிறேன்" என்றாள் குந்தவை.

"இந்தக் குட்டித் தேவதைக்குக் கொடுக்கலைன்னா தான்... ஜோஸ் கோச்சுப்பாங்க. செடில இருக்கிறதை விட... இவ தலையில இருந்தா... அந்தப் பூவுக்கே அழகு!" என ஸ்ரீயின் கன்னம் தொட்டுக் கொஞ்சிவிட்டு, தன் தலையிலிருந்த ஹேர்பின்னை எடுத்து, சின்னவளின் தலையில் பூவை வைத்துவிட்டாள் ஆஷா.

ஆஷா பூவை வைத்ததும், கையால் அதைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள் சின்னவள்.

"ச்சு... அம்மு... பூ கீழ விழுந்துரும். தொடாதடா" என்றபடி, பெண்ணின் கையைக் கீழே இறக்கிவிட்டவள், தோழியிடம் திரும்பி "உனக்கு... ஜெய் நகர்ல இருந்து ஏதாவது வாங்கிட்டு வரவா, ஆஷா? ஃப்ரூட்ஸ்... காய்... ஏதாச்சும்?" எனக் கேட்டாள்.

"ஒண்ணும் வேணாம். ஊர்ல இருந்தே...அம்மா நிறைய கொடுத்து விட்டிருக்காங்க. உனக்கும் கொடுத்து விட்டாங்க... ஜோஸ்க்கு முடியலைல்ல... அதில மறந்து போயிட்டேன்" என்றாள் ஆஷா, தலையில் அடித்துக் கொண்டு,



ஒரு வாரம், தங்களது சொந்த ஊருக்குச் சென்று விட்டு, இன்று காலையில் தான் பெங்களூர் திரும்பியிருந்தனர் ஆஷாவும் ஜோஸும்.

"பரவாயில்ல ஆஷா. வரும்போது... வாங்கிக்கிறேன். சரி... நாங்க கிளம்புறோம்" என்றபடி விடை பெற்ற குந்தவை, தலையிலிருக்கும் ரோஜாப்பூவைத் தலையை நிமிர்த்தி... நிமிர்த்திப் பார்த்துக் கொண்டிருந்த... இல்லையில்லை பார்க்க முயன்று கொண்டிருந்த ஸ்ரீயுடன், தன் குடியிருப்பை விட்டு வெளியே வந்தாள்.

அங்கிருந்து ஜெய் நகர் 9th block... அதாவது ஜே.பி. நகர் அருகே இருக்கும் ராகிகுடா ஆஞ்சநேயர் கோவிலுக்குச் செல்ல, ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பேருந்தில் பயணம் செய்ய வேண்டும் என்ற போதும், குந்தவை ஆட்டோவையோ டாக்சியையோ நாடவில்லை.

ஸ்ரீநகர் செல்லும் பேருந்து வந்ததும், தானும் மகளுமாய் ஏறி, ராகிகுடா கோவிலுக்கு டிக்கெட் வாங்கினாள்.

அவர்கள் ஏறிய பேருந்து கிளம்பக் காத்திருந்தது போல், பேருந்து நிறுத்தத்தை விட்டு சற்றே தள்ளி நின்று கொண்டிருந்த மாருதி ஸ்விப்ட் ஒன்று... தமிழ் நாட்டுப் பதிவெண்ணைத் தாங்கியபடி, அப்பேருந்தைப் பின் தொடர்ந்தது.

மாநகரப் பேருந்தின் வேகத்திற்கு ஈடுகொடுத்தபடி, அதன் பின்னாலேயே சென்ற அந்த மாருதி ஸ்விப்ட்டை யாரும் கவனித்துப் பார்க்கவில்லை.

பெங்களூரின் ட்ராபிக் அவர்களைக் கவனிக்க விட வில்லை.

அனைத்து வண்டிகளும் ஊர்கையில், இந்த ஒரு கார் ஊர்வதை யார் கண்டுகொள்ளப் போகிறார்கள்?!

அடுத்த நாற்பத்தி ஐந்தாவது நிமிடம், குந்தவை யும் ஸ்ரீயும் ராகிகுடா கோவிலருகே உள்ள பேருந்து நிறுத்தத்தில் இறங்கவும், பேருந்தைத் தாண்டிக் கொண்டு... கோவிலிருக்கும் வீதியில் திரும்பியது கார்.

தாயும் மகளுமாய் வளவளத்தபடி, கோவில் நோக்கி வருவதை, ரியர் வியூ மிரர் வழியாக உறுதி செய்துகொண்டு, குறுக்கு வீதி ஒன்றில் வண்டியை நிறுத்திவிட்டு, அதை ஓட்டி வந்தவன் அரக்கப் பறக்க ஓடி வருவதற்கும், ஸ்ரீயும் குந்தவையும் கோவிலுக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

"அம்மு.... ஷூ கழட்டுடா..." என்றபடி, அங்கிருந்த சிறு மேடையில் பெண்ணை அமர வைத்த குந்தவை, பெண்ணின் காலணிகளைக் கழட்டிவிட்டாள்.

"ம்மா... கத்து..." - தாயையும் செருப்பைக் கழட்டும்படி ஏவிய ஸ்ரீ, வேகமாய் ஓடிச் சென்று, அங்கு தொங்கிக் கொண்டிருந்த சாக்குப் பைகளில் ஒன்றை எடுத்து வந்தாள்.

அந்தக் கோவிலில், செருப்பை வெளியே... வெயிலிலோ மழையிலோ போட்டுச் செல்ல வேண்டிய தில்லை. நூற்றுக் கணக்கில் தொங்கும் சாக்குப் பைகளில் ஒன்றை எடுத்து, அதில் தங்கள் குடும்பத் தாரின் செருப்புகளை ஒன்றாய் போட்டு... செருப்புப் பாதுகாக்கும் இடத்தில் கொடுத்துவிட வேண்டியது.



அவர்கள், அந்தப் பையில் ஒரு டோக்கனை ஊக்கினால் மாட்டி ஒரு ஆணியில் மாட்டிவிட்டு, மற்றொரு டோக்கனை நம்மிடம் தந்து விடுவார்கள். தரிசனம் முடித்து வரும்போது, டோக்கனைக் கொடுத்து பையை வாங்கிக் கொண்டு, செருப்பை அணிந்ததும், பைகளை எடுத்த இடத்திலேயே மாட்டி விட வேண்டும்.

அடிக்கடி இங்கே வருவதால், இப்பழக்கத்தை அறிந்த ஸ்ரீ, பையை எடுத்து வரவும், "சமத்துடா" என்று பெண்ணைச் சிலாகித்தபடி, செருப்புகளை அதில் இட்டாள் குந்தவை.

அதே "சமத்து!" என்ற பாராட்டை மனதிற்குள் உதிர்த்தபடி, மற்றொரு பையில் செருப்பைப் போட்டு, இரண்டு பேர் இடைவெளியில் சென்றான் அவன்.

ராகிகுடா கோவிலில், ஆஞ்சநேயர் மலை மீதிருந்து அருள் புரிவார்.

மலை என்றால், பெரிய மலையல்ல, சின்னக் குன்று, அறுபது முதல் எழுபது படிகள் கொண்ட சின்னக் குன்று. இருபது படி உயரத்தில், பிள்ளையார்... அம்பாள்... சூரியனார்... அன்னபூரணி ஆகியோரது சந்நிதி இருக்க, குன்றின் உச்சியில் ஆஞ்சநேயர், சிவன் மற்றும் விஷ்ணு வுடன் வீற்றிருப்பார்.

முதல் இருபது அடி தூரத்தைக் கடக்கும்போது, கை கழுவ என இரண்டு தண்ணீர்க் குழாய்கள் இருக்கும்.

தாயின் கையைப் பற்றியபடி நடந்து வந்த ஸ்ரீ, குந்தவை அத்தண்ணீர் குழாய்களைத் தாண்டிக் கொண்டு நடக்கவும், "ம்மா... கய்யி... கயி... கச்சு..." என்று குதித்தாள்.

"ஓகே. ஓகே! மறந்துட்டேன்..." என்றபடி, பெண்ணை இடக்கையில் இடுக்கிக் கொண்டு பின்னே வந்தாள்.

அவள் பின்னே வந்த இருவரும், ஏற்கனவே கை கழுவி விட்டதால், முன்னே சென்றுவிட குந்தவையின் பின்னே நின்றன் அவன்.

பெண்ணின் கைகளைப் பற்றி, நீரில் காட்டிய குந்தவை, "போதுமாடா?" என்றாள் பிள்ளையிடம்.

"இய்யிம்..." என்றபடி, தண்ணீரில் கைவிட்டு விளையாடியது பிள்ளை.

"ப்ச்... பின்னாடி நிறைய பேர் வெயிட் பண்றாங்க பாரு... வா..." எனக் கூறி, பெண்ணை அழைத்துக் கொண்டு மேலே முன்னேறினாள் குந்தவை.

தான் கை கழுவும் இடைவெளியில், யாரும் குந்தவைக்கும் தனக்கு இடையே சென்றுவிடுவார்களோ என்று ஏக்கம் ஒரு புறம் இருந்தாலும், தன் பின்னே வந்த நால்வர் கொண்ட குடும்பம் ஒன்றைத் தனக்கும் குந்தவைக்கும் இடையே விட்டே சென்றான் அவன்.

இருபதடி உயரத்தில் இருக்கும் அன்னப்பூரணிக்கு, நெய்வேத்தியம் செய்யவென அங்கே அரிசிப் பொட்டலங்கள் கிடைக்கும். ஐந்து ரூபாய்க்கு ஒரு பொட்டலத்தை வாங்கி, அன்னப்பூரணியின் மேனியில் படர விட்டு, அவருக்கு வழிபாடு செய்வது குந்தவையின் பழக்கம். அதே நினைவில், சன்னிதானத்திற்குள் அவள் நுழையவும், "ம்மா... காச்சு... காச்சு தா" என்று பரபரத்தாள் சின்னவள்.



"ஒரு பாக்கெட்" என அங்கிருந்தவரிடம் ஐந்து ரூபாயைக் கொடுத்து, ஒரு அரிசிப் பொட்டலத்தை வாங்கி மகளின் கையில் கொடுத்தாள் குந்தவை.

இரண்டு நிமிடங்கள் கழித்து, "ரெண்டு பாக்கெட்" என்றது அவனின் குரல்.

"அம்மு... பிய்க்கக் கூடாதுடா. பிள்ளையார் உம்மாச்சி கும்பிட்டு... அம்மன் உம்மாச்சி கும்பிட்ட அப்புறம் தான்" என்ற தாயின் அதட்டலுக்கு மண்டையை ஆட்டிய கன்றோ, அந்த அரிசிப் பொட்டலத்திலேயே கவனமாய் இருந்தது.

"அம்மு... உம்மாச்சி கும்பிடு"

"கும்பிடும்மா..."

"பிள்ளையார் கொட்டிக்கோ..."

"அம்மு!!!"

"சரி வா... இந்த அரிசியை மொதல்ல கொட்டிடலாம்" என்றபடி, மகளைத் தூக்கிக்கொண்டு அன்னப்பூரணி தாயிடம் சென்றாள், குந்தவை.

ஸ்ரீயின் கையிலிருந்த அரிசிப் பொட்டலத்தை லேசாய் கிழித்துக் கொடுத்தவள், "ம்ம்... போடு... உம்மாச்சி மேல போட்டு... நல்லா சாப்பிடணும் உம்மாச்சி. இப்படி... ஒல்லியாவே இருக்கக் கூடாதுன்னு வேண்டிக்கோ" என்றபடி, பெண்ணின் கையைப் பிடித்து, அரிசியை அம்மன் மீது போட்டாள்.

பெரிய சாதனை ஒன்றைச் செய்வதைப் போல், தாயின் கையோடு தன் கையை இறுக்கியிருந்த ஸ்ரீ, அரிசியைக் கொட்டி முடித்ததும், அன்னபூரணியின் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

சிரிப்புடன் குந்தவை நகர, வேறு யாரும் அந்த இடத்தைப் பிடிப்பதற்குள், மறைவாய் நின்றிருந்த அவன், வேகமாய் முன்னே வந்தான்.

தன் கையிலிருந்த அரிசிப் பொட்டலங்களில் ஒன்றைத் தாயாரின் பாதங்களில் கொட்டியவன், "பாப்பா நல்லா சாப்பிடணும்" என உளமார வேண்டிக் கொண்டான்.

அடுத்தப் பொட்டலத்தைக் கொட்டும்போது, "இது... அவளுக்காக" என வேண்டியது அவனது மனம்.

அவன் தன் பிரார்த்தனையை முடித்துத் திரும்பக் காத்திருந்தது போல், பிள்ளையாரின் முன்னே தாயும் மகளும் விழுந்து கும்பிட்டுக் கொண்டிருந்தனர்.

தாயைப் போலவே மண்டியிட்டு, வலது காலை இடது காலின் மீது வைத்து, நெற்றியைத் தரையில் பதித்து, பிள்ளையாரைப் பதிந்த ஸ்ரீயைப் பார்க்கையில் உள்ளம் பூரித்தது அவனுக்கு!

"செல்லம்! சமத்து!" எனச் சீராட்டிக் கொண்டது மனது!

அந்தச் செல்லம், விழுந்து கும்பிட்ட நிலையிலேயே அரைக் கண் திறந்து... தாயைப் பார்த்துவிட்டு, வேகமாய் எழுந்து... தாயின் முதுகில் ஏற ஓடி வந்தது.

பெண்ணின் குறும்பை அறிந்த தாயாய், "எனக்குத் தெரியுமே! நீ... இப்படிப் பண்ணுவேன்னு எனக்குத் தெரியுமே!" என்றபடி விழுந்து பணிந்த நிலையிலிருந்து எழுந்து கொண்ட குந்தவை, பெண்ணைத் தூக்கி முகத்தோடு அணைத்துக் கொண்டாள்.

அழியா நிழற்படமாய், அக்காட்சியைத் தன் நெஞ்சினுள் பதித்துக் கொண்டான் அவன்!



## அத்தியாயம் – 4

கீழே உள்ள தெய்வங்களைத் தரிசித்து முடித்த பின்னர் தாயும் மகளுமாய் குன்று மேலிருக்கும் ஹனுமகா பிரபுவைக் காணச் சென்றனர்.

"ம்மா... ஆ... போவோம்..." என்று தாயின் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு, மேலே முன்னேறினாள் ஸ்ரீதுளசி.

முன்னர் போலவே, நாலு பேர் இடைவெளியில் தொடர்ந்தான் அவன்.

கூட்டம் நிறைய இருந்ததால், பிள்ளையை இடுப்பில் தூக்கிக் கொண்டு, படியேறத் தொடங்கினாள் குந்தவை.

வலது தோளில் கைப்பை... வலது முழங்கையில் ஸ்ரீயின் பை... இடது பக்க இடுப்பில் பிள்ளை என்று அவளைப் பார்க்கவே அவனுக்குத் தாளவில்லை.

அதிலும், படியேறுகையில்... புடவையின் முன்பக்க ஃப்ளீட்ஸில் தடுக்கி விழுந்து விடாமலிருக்க, புடவையை வேறு மேலே தூக்கிப் பிடிக்க வேண்டியதாய் இருந்தது.

ஒரு கட்டத்தில், பிள்ளையைச் சுற்றியிருந்த இடது கை விரல்களுக்கு... ஸ்ரீயின் பையை இடம் மாற்றியவள், வலது கையால் புடவையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு ஏறினாள்.

கொஞ்ச நேரத்தில், அதுவும் முடியாமல், புடவையை இடுப்பில் சொருகிவிட்டு, அங்கு போடப்பட்டிருந்த

கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு மேலே முன்னேறி னாள்.

அவள் படும் அவஸ்தையைப் பின்னாலிருந்து கண்டவனுக்கு, சட்டென முன்னே சென்று அவளிடம் பிள்ளையை வாங்கிக் கொள்ளலாமா என்றிருந்தது.

ஆனால், மனமோ 'கொஞ்சம் பொறுடா! அவங் களை... இன்னும் கொஞ்சம் நெருங்கிட்டு... அப்புறமா பேசலாம்!' என்று அடக்கியது.

பரபரத்த கைகளைக் கைப்பிடியில் இறுக்கியவன், 'சாரீ கட்டினா நல்லாத்தான் இருக்கு! ஆனா... இப்படிக் கஷ்டப்படுறதுக்கு... சுடிதாரே போட்டுட்டு வந்திருக்க லாம்ல' என்று மனதிற்குள், குந்தவையிடம் விவா தித்தபடியே, தானும் முன்னேறினான்.

பத்தே நிமிடத்தில், குன்றின் உச்சியில் இருக்கும் ஆஞ்சநேயர் சந்நிதியை அடைந்துவிட்டனர்.

மேலே சென்றதும், பிள்ளையைத் தன்னிட மிருந்து இறக்கிவிட்டாள் குந்தவை.

தாயிடமிருந்து குதித்துக்கொண்டு இறங்கிய ஸ்ரீ, அங்கிருந்த மற்றவர்களைப் போல், நேராகப் பிரதான சந்நிதிக்குள் செல்லாமல், பக்கவாட்டில் இருந்த சிறு இணைப்புக்குள் நுழைந்தாள்.

அங்கே, கையினில் வேள் பிடித்த கருணை சிவபாலன், ஆறு முகங்களுடன் ஓங்கி உயர்ந்து நின் றான்.

எப்போதும், குந்தவை இங்கே அழைத்து வரு வாள் போலும். அதுதான், குழந்தை ஓடுகிறாள் என்



றெண்ணிக் கொண்டவனின் இதழ்களில் புன்னகை மலர்ந்தது!

நூறு பேர் கோவிலுக்கு வந்தால்... அதில் ஐந்தோ ஆறோ பேர் மட்டும்தான், அந்த இணைப்புச் சந்நிதிக் குள் வந்து முருகனை வணங்கினர். 'சற்றே வித்தியாச மானவள் என்பது சரியாகத்தான் இருக்கிறது' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான் அவன்!

முருகனின் தரிசனத்தை முடித்துக் கொண்டு, தாயும் மகளும் ஆஞ்சநேயர் சந்நிதிக்குள் நுழைந்தனர்.

அர்ச்சனைச் சீட்டுக் கொடுக்குமிடம் நோக்கிச் சென்ற குந்தவை, "ஆஞ்சநேயருக்கு ஒரு அர்ச்சனை" என்றாள்.

"ஹேசரு?" என்றார் அங்கிருந்தவர்.

"ஸ்ரீதுளசி!"

"நட்சத்திரா? கோத்திரம்? போகாம்மா" - அவசரப்படுத்தினார் அவரோ.

"சிவ கோத்திரம்" - வேகமாய் சொல்லிவிட்டு, கைப்பைக்குள் பணத்திற்காகக் கையை விட்டாள் குந்தவை.

"ஐது ரூபா கொட்றி"

அர்ச்சனைச் சீட்டை வாங்கிக் கொண்டு, குந்தவை நகர, மேலும் பத்து பேர் அர்ச்சனைச் சீட்டு வாங்கிச் செல்லக் காத்திருந்தவன், பத்து நிமிடங்கள் கழித்து, அர்ச்சகரிடம் சென்றான்.

"ரெண்டு அர்ச்சனை!"

"ஹேசரு ஹேலு"

"ஸ்ரீதுளசி... மக நட்சத்திரம்... சிவகோத்திரம்"

"முந்தினா?"

"குந்தவை... அஸ்வினி நட்சத்திரம்... சிவ கோத்திரம்"

பத்து ரூபாயைக் கொடுத்துவிட்டு, அர்ச்சனைச் சீட்டுகளுடன் ஆஞ்சனேயரிடம் சென்றான் அவன்.

அதற்குள்ளாக, குந்தவையும் ஸ்ரீயும் அர்ச்சனை முடிந்து, ராமர் சந்நிதிக்கு சென்றிருந்தனர்.

அவர்களைப் பின் தொடரத் துடித்த கால்களைப் பக்தியால் கட்டிப்போட்டவன், ஹனுமனை மனமாரப் பிரார்த்தித்தான்.

'அசாத்தியமான காரியங்களையும் சாத்தியமாக்கக் கூடிய கடவுளே, நானும் அவளும் சேர்றது கூட ஒரு அசாத்தியமான காரியம் தான். அதை... நீங்க தான் நல்லபடியா நடத்திக் கொடுக்கணும். தனித்தனியா வந்து உன்னைத் தரிசனம் பண்ற நாங்க... இன்னும் கொஞ்ச நாளில் தம்பதி சமேதரா வந்து தரிசனம் பண்ண ணும். எனக்காக இல்லாட்டியும்... குழந்தையோட அவ தனியா படற கஷ்டத்தைப் பார்த்தாச்சும்... சீக்கிரமா வழி விடப்பா' என்று தன் வேண்டுதலை ஆஞ்சநேயரின் காதில் போட்டுவிட்டு, அவன் திரும்பியபோது, உண்டி யலைக் காட்டி, "ம்மா... பாப்பா... காச்சு... காச்சு" என்று குதித்துக் கொண்டிருந்தாள் ஸ்ரீ.

ஒரு ரூபாய் நாணயம் ஒன்றைக் குந்தவை அவள் கையில் கொடுக்கவும், வேகமாய் உண்டியலிடம் ஓடி யவள், தன்னால் முடிந்த மட்டும் எம்பி... காசை அதில் போட முயன்றாள்.



"உனக்கு எட்டாது... அம்மு! அம்மா... வரேன்" என்றபடி பைகளைத் தூக்கிக்கொண்டு குந்தவை வரு வதற்குள், அந்த வழியே சென்ற பெரியவர் ஒருவர், பிள்ளையைத் தூக்கிக் காட்ட, ஸ்ரீயின் கையிலிருந்த நாணயம் ஆஞ்சநேயரின் நற்பணிக்கு அர்பணிக்கப் பட்டது.

"ஹைய்யா... ப்பாப்பா போத்தே" என்று ஆர்ப் பரித்த குழந்தையை முத்தமிட்டபடியே, அப்பெரியவர் இறக்கிவிட, அவனுக்கு ஏற்பட்ட ஏக்கத்திற்கு அளவே இல்லாமல் போயிற்று.

அதிலும், "தேக்... ஊ" என்று ஸ்ரீ கொடுத்த பறக்கும் முத்தத்தின் பெறுநராய் அமைந்த அப்பெரியவர் மீது அதீத பொறாமை உண்டானது.

இப்போதே, ஸ்ரீயை முத்தமிட வேண்டும் போல் உடலும் உள்ளமும் பரபரத்தன.

ஆனால், இடம்... பொருள்... ஏவல்... முக்கியமாய் குந்தவை ஆகியவைத் தடுக்க, மெல்ல சந்நிதியை விட்டு வெளியே வந்தான்.

ஏறும் பாதையை விட, இறங்கும் பாதை அகல மானது என்பதாலும்... இறங்குகையில் கூட்டம் பிரிந்து விட்டதாலும், மகளை நடக்கவிட்டுத் தான் பின்னே நடந்தாள் குந்தவை.

அவள் பின்னே, பல அடிகள் பின்னே, தொடர்ந் தான் அவன்.

பாதி மலை கடந்ததும், சட்டெனத் திரும்பிப் பார்த்தாள் குந்தவை. குப்பென வியர்த்துவிட்டது அவனுக்கு.

சற்றே பக்கவாட்டில் அவன் நகர, பார்வையால் ஒரு முழு வட்டமடித்தவள், திரும்பி நடந்தாள்.

மலையை விட்டிறங்கியதும், அரிசிச் சீட்டிற்கு ஒன்றும்... அர்ச்சனைச் சீட்டிற்கு ஒன்றுமென இரண்டு கற்கண்டு பாக்கெட்டுகளை வாங்கிக் கொண்டவள், அங்கு வைக்கப்பட்டிருந்த குங்குமத்தை எடுத்து, தானும் நெற்றியில் இட்டுக்கொண்டு, பெண்ணிற்கும் வைத்துவிட்டாள்.

பழக்கத் தோஷத்தில், குந்தவையின் விரல்கள் எஞ்சியிருந்த குங்குமத்தை நெற்றி வகிட்டில் இடவும், சற்றே திகைத்தான் அவன்.

அவன் திகைப்பிற்கு அவசியமே இல்லை என்பது போல், தன்னுணர்வு பெற்றவளாய், வேகமாய் நெற்றியிலிருந்த குங்கமத்தைத் துடைத்தெடுத்தாள் குந்தவை.

அவளது கண்ணோரம் சிறு வலி துளிர்த்தது போலொரு பிரம்மை தோன்றியது அவனுக்கு!

தன் எண்ணமே பொய்யோ எனும்படி, ஸ்ரீயும் குந்தவையும் கிண்கிணியாய் சிரித்தபடி பிரசாதம் கொடுக்கும் வரிசையில் சென்று நின்றனர்.

மகளுக்கு ஒன்று... தனக்கு ஒன்று என இரு தையல் இலைகளில் புளியோதரைப் பிரசாதத்தை வாங்கிக் கொண்டு, அங்கிருந்த கல் பெஞ்சு ஒன்றில் அமர்ந்தனர்.

பிரசாதம் ஒரு வாய்... கூழ் ஒரு வாய் என இருவரது உணவும் முடிய, கிட்டத்தட்ட ஒரு மனி நேரமானது.

ஸ்ரீ உண்டு முடித்ததும், ஊட்டாத அவனுக்கே 'ஹப்பாடா' என்றிருந்தது எனில், ஊட்டிவிட்ட



குந்தவையின் உள்ளம் கொண்ட உணர்ச்சி, கற்பனைக்கு எட்டாதது.

உணவு முடிந்ததும், இரு பெண்களுமாய் கோவிலை விட்டு வெளியே வந்தனர்.

இப்போது பெண்ணின் முதுகில், அவளது பையை மாட்டிவிட்ட குந்தவை, அவளது பிஞ்சு விரல்களைப் பற்றியபடி, சாலையைக் கடந்தாள்.

அவனும் பின்தொடர்ந்தான்.

எதிர்ச்சாரியில் இருக்கும் பிக் பசாருக்குள் நுழைந்தனர் இருவரும்.

உள்ளே நுழையும்போதே, அங்கிருந்த ஷாப்பிங் வண்டி ஒன்றை இழுத்துக் கொண்ட குந்தவை, பெண்ணைத் தூக்கி அதில் அமர வைத்தாள்.

தன் பின்னே இருந்த பை இடிக்கவே "ம்மா... பே எடு..." என்று கோபம் கொண்டாள் சின்னவள்.

"இருடா..." என்றுவிட்டு, தன் கைப்பையை வண்டிக்குள் வைத்தவள், ஸ்ரீயின் பையையும் கழட்டி, கைப்பையின் மீது வைத்துவிட்டு, வண்டியைத் தள்ளிக் கொண்டு உள்ளே நடந்தாள்.

நுழைவு வாயிலின் வலது பக்கம் காய்கறிகளும்... பழங்களும் விற்பனைக்கு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பகுதிக்கு வண்டியைத் தள்ளிச் சென்றாள் குந்தவை.

DRDO வளாகத்தினுள்ளேயே மளிகை...காய்கறி... பழம் என அனைத்தும் கிடைக்கும் என்றாலும், ஸ்ரீயும் அவளுமாய் வெளியே வரும் ஒரே இடம், இங்குதான்.

வேறொரு காரணமாய், வளாகத்திற்குள் விற்கும் பழங்கள் புதிதாய் இல்லாதது போன்றொரு எண்ணம் குந்தவைக்கு.

அதனால், ஸ்ரீக்குத் தேவையான பழங்கள்... உள்ளே கிடைக்காத சில காய்கறிகள்... கீரைகள் என்று வார மொரு முறை இங்கே வாங்கிச் செல்வாள்.

அந்தப் பழக்கத்தின்படி, வண்டியைப் பழ வரிசையின் அருகே நிறுத்தியவள், "அம்மு... அம்மா போய் கீரை எடுத்துட்டு வரேன். நீ... வண்டில இருக்கியா?"எனக் கேட்டு, பெண் தலையாட்டியதும், கைப்பையை மட்டும் எடுத்துக் கொண்டு, காய்கறி அடுக்கியிருந்த வரிசையின் இடது பக்க வளைவிலிருந்த கீரைகள் தட்டிற்குச் சென்றாள். கீரை அடுக்கி வைத்திருக்கும் இடம், சற்றே சிறியது என்பதாலும்... பல பேர் அந்த இடத்தில் குழுமி நிற்பதாலும், குந்தவை வண்டியைப் பழங்கள் அருகேயே நிறுத்தி செல்வது வழக்கம்.

பக்கவாட்டில் அவள் தலை மறையக் காத்திருந்தவன் போல், வேகமாய் ஸ்ரீயின் அருகே வந்தான் அவன்.

ஸ்ரீ, பழங்களை எடுத்துச் செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் பைச் சுருளை அதிமும்முரமாய் ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

"டேய்... கியூட்டி!" என்றபடி, பிள்ளையின் கன்னம் தட்டினான் அவன்.

தன் ஆராய்ச்சியைக் கலைத்த முட்டாள் யாரடா என்பது போல், திரும்பிப் பார்த்தாள் ஸ்ரீ.

"செல்லக் குட்டி..." என்று ஆசையாய் அவளது கன்னம் தொட்டு வருடியவன், தன்னை அடக்க முடியாதவனாய் பிள்ளையின் கன்னத்தில் ஒரு அழுத்தமான முத்தமொன்றை வைத்தான்.

அவன் கொடுத்த முத்ததில் என்ன கண்டாளோ?



யாரடா நீ என்பது போல் பார்த்திருந்த ஸ்ரீ, அட்டகாசமான சிரிப்பொன்றை உரித்தாக்கினாள்!

"கிகிக்கி..." என அவள் வெட்கம் கொள்ள, சொக்கித் தான் போனான் அவளது தகப்பன்!

அதற்குள், கீரையை எடுத்துக் கொண்டிருந்த குந்தவையின் தலை பெண்ணின் புறம் திரும்ப, சட்டெனக் கீழே குனிந்தான் அவன்.

கீழே கிடந்த ஆப்பிள் ஒன்றை எடுத்தபடியே, வேறு பக்கமாய் நிமிர்ந்தவன், அவன் இடத்தை விட்டு நகர்ந்தான்.

கீரையை எடுத்துக்கொண்டு, பெண்ணிருந்த இடத்திற்கு வந்த குந்தவை "யாருடா?" என்றாள் பெண்ணிடம்.

"முத்தா குத்தா..." என்று சிரித்தாள் மகள்.

கோவிலில் பார்த்த பெரியவர் போல், குழந்தைகள் மீது பிரியம் கொண்ட யாரோ ஒருவர் என்றெண்ணியவளாய், வாங்கியப் பொருட்களுடன் பில் போடும் இடத்திற்குச் சென்றாள் குந்தவை.

பத்து நிமிடத்தில் பிக் பசாரை விட்டு வெளியே வந்த குந்தவை, "அம்மு... வீட்டுக்குப் போலாமா?" எனக் கேட்டாள், பெண்ணிடம்.

"ஹா!!! ச்சாப்பா?!! ச்சாப்பாவே ச்சாப்ப?" என்று கண்ணை உருட்டி, பெரும் குற்றம் ஒன்றைக் கண்டது போல் பாவனை செய்தாள் மகளோ.

"சாப்பாடா? இப்பத்தானேடா... கோவில்ல பிரசாதம் சாப்பிட்டோம்! வீட்டுக்குப் போய்... சாப்பிடலாம்" என்றாள் குந்தவை.

"ஹா!!! அய்யி... பெச்சாதா... யி ச்சாப்பா..." என்று பிரசாதத்திற்கும், சாப்பாட்டிற்குமான வித்தியாசத்தைத் தாய்க்கு எடுத்துக் கூறினாள் சிறுமி.

"என்னமோ சாப்பிடப் போறவ மாதிரி" என்று அலுத்துக்கொண்ட போதும், பெண்ணின் குற்றப் பார்வையைச் சகித்துக்கொள்ள முடியாத தாயாய், அருகே இருக்கும் உணவகம் ஒன்றிற்கு அழைத்துச் சென்றாள் குந்தவை.

அது, சுய சேவை முறையில் இயங்கும் உணவகம்.

ஓரமாய் போடப்பட்டிருந்த டேபிள் ஒன்றில் மகளை அமர வைத்தவள், "மசால் தோசை தானே அம்மு?" என மகளிடம் மெனு கேட்டாள்.

"ஹா... மச்சா ஆஆஆஆஅ" என்று கண்ணில் ஆசையைத் தேக்கி... உதட்டில் எச்சிலைக் கூட்டி, ஸ்ரீ சப்புக் கொட்ட, "சாப்பிடாம மட்டும் இரு... அப்புறம் பேசிக்கிறேன்" என்று ஒரு விரலால் மிரட்டிவிட்டு, உணவு டோக்கன் வாங்கி வரச் சென்றாள் குந்தவை.

இரண்டே நிமிடத்தில் திரும்ப வந்து, "அம்மா... தோசை வாங்கிட்டு வரேன். இங்கேயே இரு" எனச் சொல்லிவிட்டுச் சென்றாள்.

"ஐந்து நிமிடங்களில், தோசையுடன் குந்தவை மேசையில் அமர, "ஐய்யாஆஆ" என்று குதித்துக் கொண்டு, தோசையில் கை வைத்துப் பிய்த்தாள் ஸ்ரீ.

"சூடா இருக்கு அம்மு... மெதுவா" என்றபடி, தோசையைச் சிறு சிறு துண்டுகளாய் பிய்த்து, மகளிடம் நீட்டினாள் குந்தவை.

ஐந்து துண்டுகள் ஸ்ரீயின் வாய்க்குள் சென்றிருக்கும்.



அதன் பின்னர், தாய் பிய்த்துப் போட்ட துண்டுகளைச் சட்னியில் ஒரு தரம்... சாம்பாரில் ஒரு தரம் என முக்கி, "ம்மா... ச்சாப்பு... ம்மா... ச்சாப்பு..." என்று தாய்க்கு ஊட்டத் தொடங்கிவிட்டாள், சிறுமி.

"அம்மாக்கு வேணாடா.."

"ச்சோ... ச்சோப்பு... ச்சாப்பும்மா... ச்சாப்பு..." என்றபடி, பெண் எம்பி எம்பி ஊட்ட, குந்தவையும் சில பல துண்டுகளை வாங்கினாள்.

அதன் பின்னரும், ஸ்ரீ தான் உண்ணாமல், தாய்க்கே ஊட்டவும், "அம்மாக்கு வேணாம்டா... டேய்... வேணாம்டா" என்று கெஞ்சித் தான் பார்த்தாள் குந்தவை.

ம்ஹூம்! ஸ்ரீ மசிவதாய் இல்லை!

"ஒவ்வாய்... ஒவ்வாய் ச்சாப்பு..." என்று தாய் தனக்கு ஊட்டும்போது சொல்வது போலவே தானும் சொல்லி, தாய்க்கு ஊட்டிக் கொண்டிருந்தாள்.

வெட்கமாய் போய்விட்டது குந்தவைக்கு!

யாரும் பார்க்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, மகள் ஊட்டும் உணவை ஆசையுடன் வாங்கிய அத்தாயின் உதட்டோரம் தெறித்த புன்னகைக்கு நிகராய் கண்ணோரம் சிறு கண்ணீர் துளிர்த்து நின்றது!

அக்கண்ணீர், ஒதுங்கி நின்ற அவனது கண்களிலும் தேங்கி நின்றதை அவள் அறியாள்!

*** இரண்டு வாரங்கள் கழித்து ***

**ஸ்ரீ**யை டேகேரில் விட்டுவிட்டு, அலுவலகத்திற்குள் நுழைந்த குந்தவையை நோக்கி வந்தாள், ஆஷா.

"ஹே... குந்தவை! ஒரு குட் நியூஸ்! நம்ம... குவார்ட்டர்ஸ் கிளினிக்குக்குப் புதுசா ஒரு Pediatrician-ஐ அப்பாயிண்ட் பண்ணிட்டாங்களாம். வீக் டேஸ்ல... காலையில 9 to 11 பார்ப்பாராம். வீக் எண்டுல... ஈவினிங் பார்ப்பாராம். அடுத்த வாரம் புதன் கிழமைல இருந்து... வருவாருன்னு நோட்டிஸ்ல போட்டிருக்காங்க" என அவள் கூறவும், குந்தவைக்குமே மகிழ்ச்சியாய் இருந்தது.

## அத்தியாயம் – 5

மேலும் இரு வாரங்கள் ஓடியிருந்தன.

மதிய சமையலுக்கு கீரை மொளக்கூட்டல் செய்வதற்காக, தேங்காய்... பச்சை மிளகாய்... ஜீரகம் ஆகிய வற்றை மிச்சியில் அரைத்தெடுத்து, அதை வேகும் கீரை மற்றும் பருப்புக் கலவையில் கொட்டிக் கொண்டிருந்த குந்தவையை நோக்கி, "ம்ம்ஆஆ... உச்சா... உச்சச்" என்று கையை அடக்கியபடி ஓடி வந்தாள் துளசி.

சூழ்நிலை, ஏகப் பரபரப்பானது.

கையிலிருந்த விழுதை அப்படியே போட்டுவிட்டு, வேகவேகமாய் கையைக் கழுவிய குந்தவை, "வா... வா... போலாம்" என்று மகளை அழைத்துக்கொண்டு, குளியலறைக்குள் நுழைந்தாள்.

பெண் சிறுநீர் கழித்து முடிக்கவும், கால் கழுவி விட்டு வெளியே அழைத்து வந்தவள், "அம்மு... ரொம்ப சமத்தாகிட்டாளே! உச்சா வந்தா சொல்றாளே!!" என்றாள் பெண்ணிற்குத் துடைத்து விட்டபடி.



"கிகிகி..." என்று பாராட்டுக்குரிய பெருமைச் சிரிப்பை உதிர்த்த துளசி,

"பா... அங்கி சொய்யி யிக்கா" என்றாள் கண் களிலும் கைகளிலும் ஒருங்கே அபிநயம் பிடித்து,

பல நாட்களாய், பெண்ணின் பேச்சில் அடிபடும் "பா...அங்கிளை" குந்தவைக்கும் தெரியும். DRDO வளாகத்தில் புதிதாய் சேர்ந்திருக்கும் குழந்தைகள் நல மருத்துவர்.

காலை ஒன்பது மணி முதல் பதினோரு மணி வரை கிளினிக்கிற்கு வரும் அவனிற்கு, பெரிதாய் நோயாளி கள் யாருமிருக்கவில்லையாம். பொறுத்துக் கொள்ள முடியாத அளவிற்கு உடம்பு சரியில்லையென்றால் ஒழிய, காலை நேரப் பணிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, மருத்துவரிடம் வர யாருக்கு நேரமிருக்கிறது? அதனால், நோயளிகளைப் பார்க்கும் நேரம் போக, மீதி நேரம்... day care-இல் கழிக்கிறானாம். அங்குள்ள ஆயா சொல்லக் கேட்டிருந்தாள், குந்தவை.

இத்தனை நாளாய், தான் சொல்லிக் கேட்காத பிள்ளை, இன்று அவளாகவே உச்சா வருகிறது என்று சொல்கிறாள் என்றால்? என்ன சொல்லியிருப்பான்? எப்படி சாத்தியப்படுத்தினான்? என்ற கேள்வி மண் டையைக் குடைந்தது குந்தவைக்கு.

ஆனால், அப்போதைக்கு நேரமில்லாமல் போக... சமையலை முடித்துக் கொண்டு, உணவு ஊட்டும் போது, மெல்ல பெண்ணிடம் பேச்சுக் கொடுத்தாள்.

"பா அங்கிள்... உச்சா பாத்ரூம்ல தான் போணும்ன்னு சொன்னாங்களாடா?" என்றாள்.

"ஆஅன்..."

"ஏனாம்?"

"பா... அங்க்கி... உச்சா ச்சோனா தா... மவ்வு தவ்வா... மவ்வு... அப்பூம்... பூஊ தவ்வா... இய்ய இய்ய இய்ய... பூஊ செய் தவ்வா... உச்சா சொய்வன்னா தவதே மாத்தா... சொய்யி யிக்கா... ஹான்ன்ன்" - கண்ணை உருட்டி... உருட்டிக் கதை சொன்னாள் ஸ்ரீதுளசி.

குழந்தைகளின் மழலை மொழிக்கான முதல் மொழிப் பெயர்ப்பாளர், தாயே அன்றோ! ஆனால், இன்றோ...கை தேர்ந்த அம்மொழிப் பெயர்ப்பாளரே கையைப் பிசைந்து கொண்டு நின்றாள்! பெண் மகவு கூறியது, அத்தாய்க்கு முழுதாய் புரியவில்லை.

"என்னடா சொல்றே? அம்மாக்குப் புரியலையே!" என்று குந்தவை உதடு பிதுக்கி நிற்க,

"அச்சூஊ..." என்று சலித்துக் கொண்டது பிள்ளை.

அவளது சலிப்பு நெஞ்சைக் கொள்ளை கொண்ட போதும், முடிந்த வரையில் முயல்வோம் என்றெண்ணிய வளாய் "பூரி செஞ்சு தருவாங்களாடா?" என்றாள் குந்தவை.

"அச்சூஊ... இய்யிம்மா... செய் தவ்வா... ஆத்தி ஈத்அ யிக்கம்அ... செய்... தோச்சி செய்..."

"ஹோ! ஆன்ட்டி... வீட்டில இருக்கிற ரோஸ் செடியா?" எனக் கேட்டவளின் நெஞ்சில், 'ஆஷா வீட்டில இருக்க ரோஸ் செடிக்கும்... துளசி போற உச்சாவுக்கும் என்ன சம்பந்தம்? எங்க லிங்க்? புரியலையே!' என்ற கேள்வி பூதாகரமாய் எழும்பி நின்றது.

"ஆஅ... அத்தா..."



"ஆஷா ஆன்ட்டி வீட்டில இருக்க செடில இருந்து... அந்த அங்கிள் ரோஸ் பறிச்சுத் தரேன்னு சொன்னாங் களா? அதெல்லாம் bad habit. ஜோஸ் அங்கிள்க்கு... ரோஸ் பறிச்சா பிடிக்கவே பிடிக்காது. நல்லா திட்டப் போறாங்க பாரு"

"அச்சூஒ.... போம்மா... அய்யஈ தோச்சு இய்யி... போ" என்று கோபம் கொண்டவள், முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

"ஓ.கே. ஓ.கே! கோவப் படாதடா! அம்மாக்குத் தெரியலைன்னு தானே கேட்கிறேன்" என்று பெண்ணின் கன்னத்தைப் பிடித்துத் தன் புறம் திருப்பிய குந்தவை, "எதுவா இருந்தாலும்... என்னோட அம்மு சமத்துக் குட்டியா மாறி... உச்சா வருது சொல்லிட்டாளே. சோ... இன்னைக்கு அம்முக்கு ஸ்பெஷல் ஸ்வீட்... அம்முக்கு பிடிச்ச பால் கேசரி..." என்றபடி, கிண்ணத்திலிருந்த இனிப்பை எடுத்து ஸ்ரீதுளசிக்கு ஊட்டினாள்.

சொல்லப்போனால், துளசிக்கு பிடித்த உண வென்று எதுவும் கிடையாது.

குந்தவையாக எதையாவது செய்து, அவளுக்குப் பிடித்தது என்று கதை சொல்லி, ஊட்டிக் கொண் டிருப்பாள்.

தாயின் சந்தோஷத்தை உள்வாங்கிய மகவோ, துள்ளிக் குதித்தது! ஆனந்தமாய்!

*** முந்திய தினம் காலை ஒன்பதரை மணிக்கு***

"குட்மார்னிங்... குட்டீஸ்" என்றபடி, டே கேருக்குள் நுழைந்தான் பாலாஜி.

"ஹய்யா... அங்கிள்!"

"ஏ... பா... அங்க்கி..."

"குட்மார்னிங், அங்கிள்!"

"அங்கிள் வந்தாச்சு!"

"ஏ... ஏ... ஏ..."

"ஆஆஆஆஆஅ..."

இப்படியான வரவேற்புகளின் ஊடே, துளசியின் பட்டுக் கூந்தலைக் களைத்துவிட்டபடி, உள்ளே வந்தான் பாலாஜி.

அந்தக் குழந்தைகள் நல அமைப்பில், இரண்டு வயதிற்கு மேலே உள்ள பிள்ளைகளை மட்டுமே சேர்த்துக் கொள்வார்கள்.

மேலும், மூன்று வயதிற்கு மேலுள்ள பிள்ளைகள், அடுத்த கட்டிடத்தில் உள்ள "நர்சரி" வகுப்புகளுக்குச் சென்றுவிட,இரண்டு முதல் மூன்று வயது வயது வரை உள்ள குழந்தைகளைத் தனியாகப் பராமரிப்பார்கள்.

அக்கால இடைவெளியில் ஆறு பிள்ளைகளே இருக்க, அவர்கள் அறுவருமே பாலாவுடன் நன்றாக ஒட்டி விட்டிருந்தனர்.

வந்த அன்றே, கையில் பலூனும்... கலரிங் புக்கு மாய் வந்தவனை அவர்கட்குப் பிடிக்காமல் போயிருந் தால் தான், அதிசயம்.

இன்றும், அதே குதூகலத்துடன் அவர்கள் வர வேற்க, புன்னகையுடன் அங்கே இருந்த நாற்காலியில் அமர்ந்தான் பாலா.

"பா அங்க்கி... வெவ்வாமா?" - குஷியாய் முன்னே வந்து கேட்டாள் துளசி.



"ஹ்ம்ம் விளையாடலாம். ஆனா... இன்னைக்குப் புது விளையாட்டு... சூப்பர் விளையாட்டு" என்று கண்ணை உருட்டியவன்,

"யாரெல்லாம்... டாய்லெட்டை அவங்களோடவே கூட்டிட்டு வர்ரீங்க? அவங்களெல்லாம் இந்த விளை யாட்டில சேர்த்திக் கிடையாது!" என்றான் பாலா, கண்ணை உருட்டி.

"டாயே நா?" - ஒரு வாண்டு கொக்கிப் போட்டு நிறுத்த,

துளசியும் புரியா பாவனையுடன் நிற்க, துளசியின் தோழி அனுஷ்மீயோ தாடையை ஒரு விரலால் தட்டி யோசித்துவிட்டு, "டாயேட்ன்னா... பாத்தூம். குடா?" என்றாள் பாலாஜியின் பக்கம் கை காட்டி.

"சரியாக" பதில் சொல்லிவிட்டால், அவள் "குட்கேர்ள்" ஆகிவிடுவாள் அல்லவா? அதனால், அவளே "குடா" என்று கேட்டு விடுவாள்!

பிள்ளைகளின் அறிவைச் சிலாகித்தபடியே, "குட்! குட்!" என்று அவள் தோளில் தட்டிக் கொடுத்தான் பாலாஜி.

"பார்த்தூ ஆஅ... ஆ... இக்கு" என்று முந்திக் கொண்டு பதில் சொன்ன துளசியின் கைகள், அங் கிருந்த கழிப்பறையைச் சுட்டிக் காட்டின.

"குட்! ஆனா... உச்சா வந்தா... கக்கா வந்தா... அங்கயா போறீங்க? நீங்களே... ஒரு பாத்ரூமை உடம் போட கட்டிட்டு வரீங்களே!" என்றான் பாலா, யாரது முகத்தையும் பாராதவனாய்.

பிள்ளைகள் ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்த்துக் கொண்டனர்.

அங்கிருந்த சுட்டுப் பையன் நகுலின் பின் பக்கம் ஒரு தட்டுத் தட்டி, "இதோ... இதானே உங்க டாய்லெட்" என்றான் பாலா! ஹோ! டயப்பர்!

"ஹைய்யூஓ... அது ...டேப்பர்"

"அதே தா... உச்சா போவுமா?"

"அங்கிள்... அது டயர்ப்பர்... டாய்லெட் இல்ல" என்றது மூன்று வயதைத் தொடப் போகும் அக்ஷரா.

"நா எல்லாம்... டயப்பரே போட மாட்டேனே" என்ற அனுஷ்மீக்கும் மூன்று வயதாக இரண்டு மாதங்களே இருந்தன.

"நானும்..."

"நானும்..."

கூடவே இரு குரல்கள் கேட்டன. அக்ஷரா... அனுஷ்மீ... கிருத்தவ் ஆகிய மூவரும் அக்கூட்டணியில் இணைந் தனர்.

எஞ்சியிருந்தது துளசி... நகுல்.. பூர்வி ஆகிய மூவரும்.

அதற்குள், அனுஷ்மீ "நா... உச்சா வந்தா... சொல்லிருவேன். ஆயாம்மா. பாத்ரூம் கூட்டிப் போவாங்க" என்றாள் பெரியவளின் தொனியில்.

"நானும் சொவ்வேன்!"- கிருத்தவ் கத்த,

"நானும் சொவ்வேன்!" என்றான் நகுல் போட்டியாய்,

"அப்போம்... டயப்பர் கத்தது..."

"ஹா... அம்மா போத்தா..."

"கிர்த்து அம்மா... குட் பாய் சொன்னா... வேணா சொல்லிட்டாளே"



"பூரு... ஷீ... நக்கு... எய்யாமே பாட்! பாட்! பாட்!"

"நானு... அனு... கிரா... எய்யாம் அங்கிள் கூட வெவ்வோமே"

"ஆஅன்... ஆஅன்..."

"கிரா சொவ்வாத. நா கிர்த்து..."

"நானும்... நானும்..."

பயங்கர சண்டை ஒன்றுக்கு அடித்தளம் போட்டு விட்டு, அவர்களைச் சுவாரஸ்யமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் பாலாஜி.

"ஓகே! ஓகே! டயப்பர் போடாம... உச்சா வந்தா கரெக்டா சொல்றவங்க எல்லாம் இந்தப் பக்கம் வாங்க" என்று தன் இடப்பக்கத்தைக் காட்டினான்.

"நானு.."

"நானு..."

"நானு..."

"நானு..." - மூன்றல்ல, ஏகப்பட்ட குரல்கள்.

பார்த்தால், அனுஷ்மீ... அக்ஷரா... கிருத்தவ்... நகுல்.. பூர்வி என்று ஐவரும் இடப்பக்கம் வந்திருக்க,

எந்தப் பக்கமும் செல்லாமல், அவன் கால்களுக்கு நடுவே நின்றுகொண்டு, கீழ்க்கண்ணால் அவனை முறைத்துக் கொண்டிருந்தாள் ஸ்ரீதுளசி.

பிள்ளையை அள்ளி உச்சி முகர வேண்டும் என்று துடித்த மனதை அடக்குவது, பாலாவிற்குப் பெரும் பாடாய் இருந்தது. துளசியிடம் மட்டும் தனி கவனம் செலுத்தினால், அது வெளியே தெரிந்து... குந்தவை யின் காதிற்கு எட்டிவிடுமோ என்ற பயம் அவனுக்கு! அதற்காகவே, இந்த இரு வாரங்களாய்... வார இறுதி

யிலும் தன்னுடன் பணிபுரியும் ஒரு மருத்துவரை அனுப்பிவிட்டு, DRDO வளாகத்திற்குள் நுழையாமல் இருந்தான்.

கவனத்தை வேறு புறம் திருப்பி, "நகுல் கண்ணா...நோ சீட்டிங். டயப்பர் போட்டிருக்க இல்ல. இந்தப் பக்கம் வா" என்றான் பாலாஜி.

"ஆஆஆஆ!" உச்சா ஸ்தாயியில் அலறியவன், "நக்கு... உச்சா சொல்லுவா..."என்றான் கோபமாய்.

"உச்சா சொல்வேன்னா... அப்புறம் ஏன் அம்மா டயப்பர் போட்டு விட்டிருக்காங்க?"

"ஆஆஆஆஆன்... சொல்லுவா... சொல்லுவா... சொல்லுவா..." நகுலின் கோபம் அஷ்டக் கோணலான முகத்திலிருந்து தெரிந்தது.

"ஓகே! ஓகே!" - அவனை அப்படியே விட்டுவிட்டு, பூர்வியிடம் திரும்பிய பாலாஜி, "பூர்வி... bad girls தான் பொய் சொல்வாங்க. நீ குட் கேர்ள் ஆச்சே?" என்றான் சந்தேகமாய்.

பூர்வி குடுகுடுவென ஓடிவந்து, அவனது வலப் பக்கம் நின்று கொண்டாள்.

"குட் கேர்ள்!" என்ற பாராட்டோடு நிறுத்திக் கொள்ளாமல், அவளது கன்னத்தில் ஒரு முத்தம் வைத் தான்.

துளசியின் முகம், சுடு நீரில் போட்ட பட்டாணியாய் சுருங்கிவிட்டது.

"துளசி மேடம்? நீங்க எந்தப் பக்கம்?" என்றான் பாலாஜி.



மெல்ல நகர்ந்து, பூர்வியோடு ஒட்டிக் கொண்டு நின்றாள் ஸ்ரீதுளசி.

"ஏ... ஷீ... இ... வ்வா" என்று அவளையும் தன்னோடு இழுத்துக் கொள்ள முயன்றான் நகுல்.

"நகுல்... நோ!" - கண்டிப்பாய் வந்தது பதில்.

"ஷீ... ஏ... ஃபெ!" அவள் எனது தோழி... நீ என்னடா நடுல புகுந்து, கட்டப் பஞ்சாயத்து பண்ணி என்னையும் அவளையும் பிரிக்கிறே? என்ற ரீதியில் பாலாஜியை முறைத்துக் கொண்டிருந்தான் நகுல்.

"நக்கூ... இ... வா..." என்றாள் துளசி, அவனிடம்.

"அப்போம்... வெவ்வாவ மாத்தா..." என்றான் நகுல், கோபாமாய்.

"ஓகே! ஓகே! 2 minute வெயிட் பண்ணுங்க" என்ற பாலாஜி, வெளியே சென்று, பிளாஸ்டிக் பையில் வளர்ந்து நின்ற ரோஜாச் செடிகளை எடுத்து வந்தான். அனைத்தும் மஞ்சள் ரோஜாச் செடிகள். செடிக்கு ஒன்றென்று ஒரு மஞ்சள் ரோஜா பூத்திருந்தது. ஸ்ரீ அன்று வைத்திருந்த அதே வண்ண ரோஜா!

"ஹய்யா... தோச்சு..." என்று துள்ளிக் குதித்தாள் ஸ்ரீதுளசி.

கூடவே அனுஷ்மீயின் "ஹே...ரோஜூ" என்ற ஆர்ப்பரிப்பு கேட்டது.

மற்றவர்களிடமிருந்து, பெரிதாய் ஆவல் கிளம்ப வில்லை.

"என்ன வெவ்வாட்டு?" - கோபமாய் கேட்டான் கிருத்தவ், செடி கொடியோடு என்ன விளையாடுவது என்ற எரிச்சல் போலும், அச்சிறுவனுக்கு!

"யாரெல்லாம்... உச்சா வரும்போதே... உச்சா வருது... உச்சா வருது அப்படி சொல்லி... பாத்ரூம்ல உச்சா போறாங்களோ...அவங்களுக்கு எல்லாம்... அங்கிள் ஒரு செடி தருவேன்... அப்புறம்... கொஞ்சம் மண்ணு தருவேன்... அப்புறம் ஒரு தொட்டி தருவேன். அது உங்களுக்கே தான் சரியா?

ஆண் பிள்ளைகளான கிருத்தவும்... நகுலும், "ஹய்யே!!" என்று முகத்தைக் காட்டிவிட்டு, "வா... நாம பா வெவ்வாம்" என்றபடி நகர்ந்தனர்.

நகுல், "வா... ஷீ... ஷீ" என்று, துளசியின் கையையும் பிடித்து இழுத்தான்.

"விவ்வா... நக்க. செய் வெவ்வும்" என்ற துளசி, அவனது கையை உருவிக்கொண்டு, பாலாஜியிடம் கவனமானாள்.

"எக்கேவா?" - ஆச்சரியாமான ஆச்சரியம் துளசிக்கு.

ஆஷா ஆன்ட்டி வீட்டில் இருப்பது போல், தனக்கும் ஒரு செடி என்பதில் ஏற்பட்ட ஆர்வம் அச்சிறு உள்ளத்தினுள் குடி வந்தது.

"ஆமா... உங்களுக்கே தான். ஆளுக்கு... ஒன் செடி தருவேன் அங்கிள். அதில... அவங்கவங்க பேரை எழுதி ஒட்டிருவேன். தினமும்... அதை நீங்க தான் பாத்துக்கணும் சரியா? தண்ணி ஊத்தணும்... வெயில்ல கொஞ்ச நேரம் வைக்கணும். அப்புறம்... பூ வந்துச்சுன்னா... நீங்களே வச்சுக்கலாம். எப்படி சூப்பர்ல? இனிமேல்... இது உங்க செடி!" என்றான் பாலாஜி.

"ஹைய்யா!!" என்று அனுஷ்மீ துள்ளிக் குதிக்க,

"வெய்யின்னா என்ன?" என்று கேள்வி கேட்டாள் அக்ஷரா.



"வெய்யின்னா... சன்... கா" என்று பதில் சொன்னது, பாலாஜியின் அறிவாளிப் பிள்ளை.

"அப்போ... யி... ஷீ செய் ஆ?" என்று ஆசையாய், செடியை வருடிக் கொடுத்தாள் ஸ்ரீதுளசி.

"உனக்குக் கிடையாது. உச்சா வரும்போது... கரெக்டா பாத்ரூம் போறவங்களுக்குத் தான்" என்ற பாலாஜிக்குத் தன் மீதே கோபமாய் வந்தது.

ஆர்வமாய் கேட்ட மகளிடம் மறுக்கிறோமே என்ற கோபத்தை அடக்கிக் கொண்டு, "இன்னைக்கு... அனுஷ்மீக்கும்... அக்ஷுக்கும்தான்" என்றவன், "இந்தாங்க... வாங்கிக்கோங்க" என ஆளுக்கு ஒரு செடியை நீட்டினான்.

"ஹைய்யா..." என்ற குதூகலத்தின் பின்னணியில்,

"ஆஆஆஆஆன்..." என்ற இரு அழுகைக் குரல்கள் கேட்டன.

"நோ... நோ... நோ!" ஸ்ரீ... பூர்வி... நோ க்ரையிங். நாளைக்கே... நீங்க டயப்பர் போடாம வந்து... உச்சா வரதை கரெக்டா சொன்னா... அங்கிள் தருவேன். ஒன் கிடையாது... டூ செடி தருவேன். கிருத்தவ்து ஒண்ணு... பூர்விக்கு. நகுல்து... ஸ்ரீக்கு. ஓகே?! நோ... க்ரையிங்"

ஆனாலும், பிள்ளைகளின் அழுகை அடங்கவே இல்லை.

"செய்... செய்... செய்..." என்று அழுது கொண்டே இருந்தாள் ஸ்ரீதுளசி.

"ஸ்ரீ... நீ நல்ல பொண்ணு தானே!"

"கூ...கே!" என்றாள் ஸ்ரீ.

"அப்போ... நாளைக்கு உச்சா சொல்லு. அங்கிள் தரேன்..."

"இப்பி... தா..."

இப்படியே தொடர்ந்த் சம்பாஷணை, ஒரு மணி நேரம் கழித்து, குத்து மதிப்பாய் சமாதானத்திற்கு வந்தது."

அதன் விளைவு தான், ஸ்ரீயின் உச்சா சொல்லும் படலம்.

நேற்று மதியமும்... நேற்று இரவும் கூட, "டாயே வேணா... டாயே வேணா" என்று சிணுங்கிக் கொண்டே தான் இருந்தாள்.

ஆனால், தலைமை அதிகாரியுடன் நடந்தேறிய சந்திப்பில் வாங்கிக் கட்டிக் கொண்ட திட்டுக்களின் பயனாய், குந்தவையின் மனம் பெண்ணின் பேச்சில் லயிக்க வில்லை.

சரியான தூக்கமில்லை என்பதால் பிள்ளை பிதற்று கிறாள் என்றெண்ணிக் கொண்டவள், பிள்ளையைத் தூங்கச் செய்தாள்.

தூக்கத்திற்கு முன்னர் கூட, அவளை டயப்பர் மாட்ட விடாமல், ஸ்ரீ முறுக்கிக் கொண்டு அழ, முதலில் தோளில் போட்டு உறங்க வைத்தவள், பிள்ளையின் உறக்கம் உறுதியானதும் டயப்பரை மாட்டிவிட்டாள்.

இன்று காலை, பெண்ணிடம் தென்படும் மாற்றத் தில் கவனம் திரும்பியது தாய்க்கு.

"உச்சா" வருவதைச் சொன்னதுமே ஆனந்தப் பட்டவளுக்கு, அலுவலகம் கிளம்புகையில் "டாய்யே வேணா...ம்மா... செய் தவ்வ மாத்தா" என்றபடி டயப்பரைத்



தள்ளிவிட்டு அழுத மகளைக் காண்கையில் சற்றே கலக்கம் உண்டானது.

என்ன கெஞ்சினாலும், ஸ்ரீதுளசி டயப்பரை அணிவ தாய் இல்லை.

அழுகை! அழுகை! அழுகை! அடத்தின் ஊடே அழுகை!

நேரம் சுருங்கிக்கொண்டே செல்லவும், டே கேரில் என்னவென்று விசாரித்துக் கொள்ளலாம் என்றெண்ணிய வளாய் டயப்பர் அணிவிக்காத பிள்ளையையும், தனியே ஒரு டயப்பரையும் கையில் எடுத்துக் கொண்டு, டே கேரை எட்டினாள்!

## அத்தியாயம் – 6

**பெ**ண்ணுடன்டே கேருக்குள் நுழைந்த குந்தவையை, அங்கிருந்த ஆயாம்மா வரவேற்றாள்.

அங்கிருந்த பெரும்பான்மை தமிழர்களின் பிள்ளைகள் என்பதால், தமிழ் பேசும் ஆயாவையே வேலைக்கு வைத்திருந்தனர்.

"கொண்டாம்மா..." என்றபடி ஆயா, குந்தவையின் கையிலிருந்து கூடையை வாங்க,

"ஆயா... புதுசா வந்திருக்க டாக்டர் என்ன சொன் னாரு? அம்மு... டயப்பர் போட மாட்டேன்னு ஒரே அடம்" என்றாள் கவலையாக.

"பாலா தம்பியாம்மா? பிள்ளைங்களுக்கு... பாத்ரூம் போகப் பழக்குறாரும்மா" எனத் தொடங்கி,

நேற்று அவன் நடத்திய விளையாட்டைப் பற்றியும், அவன் கொண்டு வந்து வைத்திருக்கும் ரோஜாச் செடி கள் பற்றியும் குந்தவைக்கு விளக்கினாள்.

'பாலா' என்ற பெயர், இதமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்த, 'இந்தப் பாலாக்களே இப்படித்தான் போல! சிறுசு... பெருசு என்றில்லாமல் அனைவரிடமும் ஒட்டிக் கொள்வார்கள் போலும்! என உள்ளுக்குள் பாராட்டுப் பத்திரம் வாசித்தது குந்தவையின் மனம்.

"ஹோ! நல்ல பழக்கம் தான்!" என்று சிலாகித்துக் கொண்ட உதடுகளுக்கு எதிர்மறையாக, மனதின் ஓரம் கொஞ்சமாய் ஒரு பொறாமை! அவளையும் மீறி, ஒரு விதமான ஏக்கம்!

அதற்குள், துளசி ரோஜாச் செடியிடம் ஓடியிருந் தாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த குந்தவை, "இந்த... டயப்பர்..." என்றிழுத்தாள்.

"டாக்டர் தம்பி வார வரைக்கும்... என்னைய பார்த் துக்கச் சொல்லியிருக்கும்மா... நா... பாத்துக்கிறேன்" என்றார் ஆயா.

"ஆனா... ஆயாம்மா, ஒரே நாளில எல்லாம்... பாத்ரூம் போற பழக்கத்தை நடப்புக்குக் கொண்டு வர முடியாது" என்றாள் குந்தவை. என்னவோ, அந்த 'டாக்டர் தம்பி'யிடம் வாதிடுவது போலொரு எண்ணம்.

"மெதுக்க... மெதுக்கதான்மா. ஒரே நாளில... பூ பூத்துக் குலுங்கிருமா என்ன? அது மாதிரி... கொஞ்சம் கொஞ்சமா பழக்குவோம்ன்னு சொல்லியிருக்கு" என்றாள் அந்த ஆயாவோ, பாலாஜிக்கு ப்ராண்ட் அம்பாசிடராய் மாறி.



"ஹ்ம்ம்... இன்னைக்கே கூட... ஒரே ஒரு வாட்டி தான் உச்சா வருதுன்னு பாப்பா சொன்னா. மீதி... ரெண்டு வாட்டியும் டிரெஸ்ஸை நனைச்சுட்டா. அதனால... பார்த்துக்கோங்க... ரொம்பக் கஷ்டமா இருந்தா டயப்பரையே போட்டு விட்டுடுங்க" என்றவள், அலுவலகம் நோக்கி விரைந்தாள்.

பத்தடி எடுத்து வைத்தவள், லோசாய் தலை யில் தட்டிக்கொண்டு, மீண்டும் டே கேருக்குள் ஓடி வந்தாள்.

"ஆயாம்மா... அந்த டாக்டர்க்கு தேங்க்ஸ் சொன்னேன்னு சொல்லிருங்க" என்றவள், செடியிடம் நின்று கொண்டிருந்த பெண்ணிடம் ஓடி வந்து, மண்டி யிட்டு அமர்ந்து, "அம்மாக்குப் பையே சொல்லலை" என்றாள் பாவமாய்.

பிள்ளையோ செடியே கவனமாய், அதிலேயே கண்ணை வைத்துக் கொண்டு, "பை... போய்த்தா..." என்று அவளை அனுப்பி வைத்துவிட்டது.

ஏமாற்றமாய் இருந்தது குந்தவைக்கு,

"அம்மு... பை சொல்றா..."

"பே ம்மா... போய்த்தா..." என்றாள் ஸ்ரீதுளசி.

"ப்ச். அம்மாக்கு முத்தா இல்லையா?" எனத் தாய் கேட்க,

"அம்மா... இய்யி யா... செய்... தோச்சி செய்..." என்றாள் துளசி, அதிலிருந்த பூவை வருடியபடி.

"ரோஸ் செடியா? சூப்பர்! அம்முக்கேவா இந்தச் செடி?" - பெண்ணின் சந்தோஷத்தில் கலந்து கொண்டது, குந்தவையின் தாய் மனம்.

"ஆஆன்... ஷீ வோய செய்... பா அங்க்கி தவ்வுவா" - பாலாஜி கொடுக்கப் போகும் செடிகளை எண்ணி, ஸ்ரீக்கு இப்போதே பெரும் சந்தோசம் என்பது அவள் கண்கள் கொட்டிய ஆனந்தத்தில் தெரிந்தது.

"ஸ்ரீயோட செடியா? சரி... ஓகே! அம்மாக்கு ஒரு முத்தா கொடுறா! அம்மா... ஆபீஸ் போணும்!"

"பே மா.. போய்த்தா..." என்று "பை" சொல்லி அனுப்பி வைப்பதிலேயே குறியாய் இருந்தது கன்று.

அவளது கவனத்தை செடியிலிருந்து திருப்ப முடியாது என்று புரிந்தவளாய், தானே பெண்ணிற்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டு, அங்கிருந்து கிளம்பினாள்.

மதிய உணவிற்குத் திரும்பி வருகையில், இருமருங்கிலும் ரோஜாச் செடிகள் சகிதம் அவளை வரவேற்றாள் பிள்ளை.

"ம்மா... ம்மா... ஷீ வோவ செய்!!! என்று குதூகலித்து மகிழ்ந்தாள் ஸ்ரீ.

செடிகள் இரண்டும் தலா ஒரு சிறு மண் தொட்டியில் இருக்க, தொட்டியின் பக்கவாட்டில் ஒரு சிறு பேப்பர் ஒட்டி... அதில் "ஸ்ரீ துளசி ஷீ" என்று எழுதியிருந்தது.

அழகிய புன்னகை ஒன்று, இதழ்களில் தவழ்ந்தது!

"ம்மா... ஷீவோவ செய்!!" - ஸ்ரீக்கு அப்படியொரு சந்தோசம். தனக்கே தன்கென்று ஒரு பொருள். தன் பாதுகாப்பில் விடப்பட்ட ஒரு பொருள். ஹப்பா, ஏக ஆனந்தம்.



குந்தவை ஊட்டிய ஓரோர் வாய்க்கும், "ம்மா... செய்க்கு? செய்க்கு?" என்று தலையை ஒரு பக்கமாய் சாய்த்து கேட்டவளின் அழகில் சொக்கித் தான் போனாள் தாய்.

"செடி... சாத மம்மம்மல்லாம் சாப்பிடாதுடா. தண்ணி மம்மம் தான் சாப்பிடும்" என்று ஓரொரு வாட்டியும் பதில் சொல்ல வேண்டியிருந்தது குந்தவைக்கு.

சலிக்காமல் ஸ்ரீயும் கேட்க, குந்தவையும் அச்சுப் பிசகாமல் அதே பதிலையே சொல்லிக் கொண்டிருந்தாள்.

மற்ற நாட்களை விட, இன்று உணவு வேகமாய் காலியாக, "ஹப்பாடா" என்றெழுந்த குந்தவை, ஆயாவை நாடிச் சென்றாள்.

"ரொம்பக் கஷ்டமா இருந்துச்சா? டயப்பர் மாட்டி விட்டுட்டீங்களே!" என்றாள் சிறு சங்கடத்துடன்.

"இல்லம்மா... இப்பத்தான், டாக்டர் தம்பி போகையில் தான் மாட்டி விட்டுச்சு. அதுக்கு முன்ன வரைக்கும்... ஒரு மணி நேரத்துக்கு ஒரு வாட்டி... பிள்ளையை பாத்ரூம்ல கொண்டு போய் விட்டு... உச்சா போக விட்டுச்சு. அப்புறம்... அது கிளம்புற நேரம் வந்ததும்... நீங்க ஒராளா ரெண்டு பிள்ளையையும் பாத்துக்க முடியாதுன்னுட்டு... டயப்பரை மாட்டி விட்டுட்டுப் போச்சு" என்றாள் ஆயாம்மா.

'எல்லாருக்காகவும் பார்க்கிறான்' என்ற எண்ணம் குந்தவையினுள் விழத் தான் செய்தது.

அதை வெளிக்காட்டிக் கொள்ளாதவளாய், "சரிம்மா, பார்த்துக்கோங்க" என்று நகர்ந்தாள்.

ஸ்ரீ, அப்போதும் அச்செடிகளுடனே வாசம் செய் தாள்.

"இந்தக் காதல்... எத்தனை நாளைக்குன்னு பார்க் கிறேன்" என்று செல்லமாய் கடிந்தபடி, வேலைக்குச் சென்றவளுக்குத் தெரியவில்லை, வாரங்கள் கடந்த பின்னரும் அந்த மோகம் விடப் போவதில்லை என்று.

அந்த மோகத்தை நிந்திக்கவும் முடியாமல், மூன்று வாரங்களில் ஸ்ரீ தானாகவே பாத்ரூம் வருகிறது என்று சொல்லும் நிலைக்குப் படிப்படியாய் முன்னேறினாள்.

ஒரு நாளில், பத்து முறை உச்சா வந்தால்... நான்கு முறையேனும் கூறினாள். எடுத்ததுமே, பத்து முறை களும் கூறிவிட, இதென்ன ஜீபூம்பா மாஜிக்கா?

அதற்கும் மேலாய், உணவு வேளைகள் பெரிய பிரம்மப் பிரயத்தனம் இன்றி சென்றன.

இதற்கே, அந்த டாக்டருக்கு நூறு நன்றி சொல்ல வேண்டும் என்றெண்ணிக் கொண்டாள் குந்தவை.

இந்த வார இறுதியிலாவது, அவரைப் போய்ப் பார்க்க வேண்டும் எனக் குறித்தும் வைத்தாள்.

போன வார இறுதியில் கூட, அவனைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கிளினிக்கிற்க்குச் செல்லத் தான் செய்தாள். ஆனால், அந்த "பாலா" இல்லை. யாரோ, "விமல்" என்ற டாக்டர் இருந்தார்.

பாலாவைப் பற்றி விசாரித்ததற்கு, சொந்த ஊரான ராஜபாயைத்திற்குச் சென்றிருப்பதாகத் தகவல் கிடைத் தது.

"ராஜபாளையம்" என்ற ஊர், பல நினைவுகளைச் சுண்டி இழுக்க, அவை முகத்தில் பிரதிபலித்து விடாதபடி



காத்தவளாய், வீடு வந்து சேர்ந்தவளின் மனம், அடுத்த வார இறுதியில்... அந்தப் பாலாவைப் பார்த்தே ஆக வேண்டும் என்று தீர்க்கமாய் முடிவு செய்தது.

ஆனால், வார இறுதிக்குக் காத்திருக்க வைக்காமல், ஒரு நாள் மதிய உணவு கொடுக்கச் சென்றவளை, "அம்மா... ஷீக்கு... பா வந்தாச்சு... பாம்மா... பா..." என்று குதிக்கும் பிள்ளைப் பந்து எதிர்கொண்டது.

"என்னடா சொல்றே?" என்றவளுக்கு, முதலில் எதுவும் புரியவில்லை.

"பாம்மா... கிச்சி உம்மிச்சி பா மாயி... ஷீக்கு பா" என்றாள் பெண்ணோ, கண்களால் கவிதை படித்தபடி! தாய் சொல்லும் கிருஷ்ணன் கதையில் வரும் நந்தகோபரைப் போல், தனக்கும் ஒரு தந்தை இருக் கிறார் என்பதில் ஸ்ரீக்கு ஏக குஷி!

"என்னது?" - பெண் சொல்வதன் அர்த்தம் மூளைக்குப் புரிந்தபோதும், மனதிற்கு உவப்பானதாய் இல்லாமல் போக, நெரித்த புருவங்களுடன் பிள்ளையை நோக்கினாள் குந்தவை.

என்னவோ விபரீதம் என்றுணர்ந்த மனது, பட படவென அடித்துக்கொண்டது.

எந்த உறவு... தனக்கும் தன் பிள்ளைக்கும் வேண்டாமென்று நினைத்திருந்தாளோ, அந்த உறவைப் பெண்ணே அவளுக்கு அறிமுகம் செய்யும் நிலை வந்துவிட்டதா?

ஹய்யோ!!

தனக்கு ஸ்ரீயும், ஸ்ரீக்குத் தானுமாய் காலம் முழுதும் இருந்துவிடலாம் என்ற எண்ணத்தில் யார் மண்ணை அள்ளிப் போட்டது?

யார் இந்தப் பிள்ளையின் மனத்தைக் கலைத்தது!

மனம் நிலைகொள்ளாமல் தவிக்க, அதை உண ராத சிறுமியாய், ஸ்ரீ பதில் சொன்னாள்.

"பா... ஷீ வோத பா"

"அம்மா... அப்பா எல்லாமே நான் தான்டா உனக்கு!"

"அச்சூ... ப்பா யிக்கா மா..."

"யாரு? யாரு சொன்னா அப்படி?"

"பா அங்க்கி..."

"அவரு சொன்னாரா... உனக்கு அப்பா இருக்காங் கன்னு அவரு சொன்னாரா? அதெல்லாம் சும்மாடா... உனக்கு அப்பா கிடையாது! அம்மா... அப்பா எல்லாமே அம்மாதான்!" - தன் இயல்பு நிலையையும் மீறி, நிதானத்தை இழந்தபடி, வார்த்தைகளை ஓட விட்டாள் குந்தவை, ஏகக்கடுப்புடன் பாலாஜியைச் சபித்தது மனம்!

அறிவு கெட்டவன்.

இவனுக்கு என்ன தெரியும்?

தேவையில்லாமல் பிள்ளை மனதைக் கெடுத்துக் கொண்டு அலைகிறான்!

கொஞ்சம் இடம் கொடுத்தால், ஓவராக அட்வான்ட்டேஜ் எடுத்துக் கொள்கிறானோ?

அப்பாவாம்? அப்பா!

அப்பா எங்கிருந்து வந்தாராம்!

எங்கிருந்து வந்தார் என்று ஸ்ரீ சொன்னாள்.



"இய்ய்அ...ப்பா இக்கா" என்று அடித்துச் சொன்னது சின்னக்கன்று.

"யாரு அப்பா? சும்மா உளறாத! அப்பா எல்லாம் இல்லை."

"பா... அங்க்கி தா"

"அவரு ஒரு லூசு! யாரு... உன்னோட அப்பா வாம்?"

"பா... அங்க்கி!"

"என்னடி சொல்றே? கடவுளே..." எரிச்சலாய் வந்தது குந்தவைக்கு.

"பா... அங்க்கி தா ப்பா" என்றாள் பிள்ளை, தெளி வாய்!

அதிர்ந்து திகைத்துப் போனாள், குந்தவை.

"வாட்ட்ட்!" என்ற ஒற்றை வார்த்தையை உதட்டின் வழியே உதிர்த்துவிட்டு,

"லூசு! லூசு!"

"முட்டாள்!"

"அறிவு கெட்டவன்!" என்ற பின்னணியில் வசை பாடியது மூளை.

இல்லை, இதை இப்படியே விடக் கூடாது!

இதென்ன, இவனாக அப்பா என்று அறிமுகம் செய்வது? பிள்ளையின் தாயென்று நானில்லை?

என்ன தைரியம் இருந்தால்... என்னவொரு திமிர் இருந்தால்... ச்சே!

ஒருவேளை, இந்த உச்சா நாடகம்... செடிகள் பரிசு எல்லாமே இதற்கான அடித்தளமோ?

இவனுக்கு என்ன மோடிவ்?

ஏன் இப்படிச் செய்கிறான்?

தலை வெடித்துவிடும் போல் வலித்தது.

'என் பெண்ணின் மனதைக் கெடுக்காதேடா பாவி!' என்று அவனிடம் பேசியே ஆகவேண்டும்.

'என்னையும் என் பெண்ணையும் எதிலும் பிணைக்கும் உரிமை உனக்கில்லை' என்று அவனிடம் சொல்லியே ஆகவேண்டும்.

இந்தஉரிமை மீறல், தடைபட்டே ஆகவேண்டும். உள்ளம் உரத்தக் குரலில் உறுதி பூண்டது.

அதற்கு முன்பாக, பெண்ணிடம் சிலவற்றைப் புரிய வைக்க வேண்டும் என்றெண்ணியவளாய், "அம்மு... உனக்கு அப்பாவே இல்ல, சரியா? அம்மா தான்... அப்பா" என்றாள் கண்டிப்பாய்.

"இய்யம்மா... ப்பா இக்கா..." - இரண்டு வயதே ஆன பிள்ளைக்கு, புதிதாய் முளைத்த "அப்பா"வை அம்மா இல்லையென்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"நா சொல்றேன்ல்ல! உனக்கு... அப்பாவே இல்ல! செத்துப் போய்ட்டார்!"

"ப்பா... இக்கா!"

"அப்பா இல்ல! முதல... இந்த அப்பா புராணத்தை நிறுத்து!"

"ப்பா... அப்பா... இக்கா... ஆஆஆ..." - குழந்தை அழத் தொடங்கிவிட்டாள்.

"அம்மு... சொல்றதைப் புரிஞ்சுக்கோடா. உனக்கு... அப்பா வேணாம்டா" என்று பிள்ளையை அணைத்துக் கொண்டு, குந்தவை கெஞ்ச,



பிள்ளையோ "ப்பா... ப்பா இக்கா..." என்று அனற்றத் தொடங்கியது.

"சொல்றது கேட்க மாட்டே! அப்பா... இல்லைன்னா அப்பா இல்லை! அழறதை நிறுத்து!"

என்ற குந்தவை, ஸ்ரீயை அடிக்கக் கையோங்க, சட்டென அந்த இடத்தில் ஆஜரான பாலாஜி "ப்ளீஸ் அவளை அடிக்காத!' என்றான் பிள்ளையைத் தன்னிடம் இழுத்தபடி.

"அப்பா" என்று தன்னை அறிமுகம் செய்ததும், எப்போதும் போல் DRDO வளாகத்தை விட்டுக் கிளம்பி விடாமல், குந்தவையிடம் ஸ்ரீ பேசும் நாழிகைகளைத் துளித் துளியாய் எண்ணிக் கொண்டு, டே கேரின் பக்க வாட்டில்... தாயும் மகளும் தெரியும்படி நின்றிருந்தான்.

இதோ...இதோ...இதோ வந்துவிட்டது! அவனது குந்தவையைச் சந்திக்கும் அத்தருணம்!

யாரென்ற கேள்வியுடன் குந்தவை நிமிர்ந்து பார்க்கும் முன்னர்,

"பா..." என்று அழுதுகொண்டு, பாலாஜியிடம் ஒண்டினாள் ஸ்ரீ துளசி.

யாரென்று நொடி நேரத்தில் புரிந்துவிட்டது குந்தவைக்கு.

"என்ன நினைச்சிட்டு இருக்கீங்க... நீங்க? எதுக்காக...அவட்ட அப்பா...அது... இதுன்னு சொன்னீங்க?"

"நா... சொல்றதைக் கொஞ்சம்..."

"முடியாது! என் பொண்ணோட மனசைக் கெடுக்கிற உரிமையை உங்களுக்கு யாரு கொடுத்தா!"

"குந்தவை... ஒரு நிமிஷம்?"

"குந்தவையா? என்னோட பேரு... ஹஹ்ஹ..." என்று நெடுமூச்சு ஒன்றை அவசரமாய் வெளியேற்றி யவள்," அப்பான்னு சொல்லியிருக்கீங்க? அந்த உறவுக்கு அர்த்தம் தெரிஞ்சு தான் சொன்னீங்களா?" என்றாள் ஆங்காரமாய்.

"ஒன்..."

"நா குழந்தையோட தனியா இருக்கேன்னு தெரிஞ்சுக்கிட்டு... ஏதாவது சீப்பா ட்ரை பண்ணி றீங்களா?"

"ஸ்டாப் திஸ்..."

"நீங்க ஸ்டாப் பண்ணுங்க... நீங்க பண்ற கேவல மான ஆக்ட்டை முதல ஸ்டாப் பண்ணுங்க. மோர் ஓவர்... என் பெண்ணோட நீங்க பழகுறதை ஃபர்ஸ்ட் ஸ்டாப் பண்ணுங்க." என்று அடித் தொண்டையிலிருந்து கத்தி விட்டு, அவனிடம் ஒண்டிக் கொண்டு நின்ற பிள்ளையைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டு, விடுவிடு வென நகர்ந்தாள்.

பாலாவின் முகத்தில், வெற்றிப் புன்னகை ஒன்று மெல்லப் படர்ந்தது.

குந்தவை - குந்தவையின் கோபம் மற்றும் பாலாஜி - பாலாஜியின் புன்னகை ஆகியவை, மதிய உணவிற்காக வீட்டிற்கு வந்த ஆஷா மற்றும் ஜோஸின் கண்களில் பட்டு, சிலபல கணக்குகளை உள்ளுக்குள் போட வைத்தது.



# அத்தியாயம் – 7

*** அடுத்த நாள் காலை ***

எப்போதும் ஏழு மணிக்கெல்லாம் எழுந்து கொள்ளும் ஸ்ரீதுளசிக்கு, இன்று எட்டு மணிக்குத் தான் முழிப்பு வந்தது.

நேற்று, அழுத அழுகையின் விளைவு!

எழுந்ததும், சுற்றும் முற்றும் பார்த்தவள், மெல்ல படுக்கையை விட்டெழுந்து வெளியே வந்தாள்.

கொஞ்சமாய் திறந்திருந்த கதவின் இடைவெளி யில் கைவிட்டு, கதவை முழுதாய் திறந்தவள், சத்தம் எழுப்பாமல், அடுக்களையில் நின்று கொண்டிருந்த குந்தவையின் பின்னே வந்து நின்றாள்.

அம்மாவின் நைட்டியைப் பற்றி இழுத்தபடி, "ம்மா..." என மெல்ல முணுமுணுத்தது செல்லக் கன்று.

காலை எழுந்ததில் இருந்து, நெறித்தே இருந்த புருவங்களும், யோசனையில் சிக்கித் தவித்த மனமும், தத்தம் கனத்தை உடைத்தெழ, "அம்முக்குட்டி..." என்று பிள்ளையை வாரி அணைத்தாள் குந்தவை.

"ம்மூஅஅஅ..." - பாசத்தில் உதடு பிதுங்க, தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள் ஸ்ரீதுளசி.

"என்னடா?" - குந்தவை பிள்ளையின் முகத்தை நிமிர்த்திக் கேட்க,

"ம்முஆ... அவ்வாத" என்றாள் சின்னவள், தாயின் கன்னத்தில் வழியாத கண்ணீரைத் தன் பிஞ்சு விரல் களால் துடைத்தெடுத்தபடி.

இரவில் தான் அழுததை எண்ணிக்கொண்டே உறங்கியிருப்பாள் போலும் என்ற நினைப்பில் கண்கள் மீண்டும் ஈரமாக, பெண்ணின் முகத்தைத் தன் முகத்தோடு ஒட்ட வைத்துக்கொண்ட குந்தவை, “அம்மு... அம்மா வேணாம் சொல்லிட்டாளே, அதான் அம்மா அழுதேன்!” என்றாள் உதடு பிதுக்கி.

“ம்மா... வேவ்வும்... ம்மா...வேவ்வும்...” என்று அரற்றிக்கொண்டு, தாயின் கழுத்தை இறுக்கக் கட்டிக் கொண்டாள் துளசி.

“ஓகே! ஓகே! என்னோட அம்முக்குட்டிக்கு மட்டும் தான் அம்மா. வேற யாருக்குமே கிடையாது... சரியா? அழாதடா செல்வம்!” என்று மகளைக் கொஞ்சியவள்,

“அம்முவும் அம்மாவும் பல்லு விளக்கிட்டு... குளிக்கலாமா?” என்றாள் பெண்ணின் முகத்தை நிமிர்த்தி.

“ஹாஆஆஆ... குச்சா... குச்சாம்...” என்று துள்ளிய பூப்பந்து, தாய் வேலைக்குக் கிளம்பும் வரையிலும், அவளை வால் பிடித்துக் கொண்டே சுற்றியது.

குந்தவைக்குக் கொஞ்சம் சிரிப்பாகவும் இருந்தது. அதே சமயம், “செல்லக்குட்டி... அம்மா அழுதிட்டேனாம். அது இந்தக் குட்டிப் பாப்பாவுக்குத் தாங்கலை. என்னை... கன்சோல் பண்ண... இப்படிச் சுத்திச் சுத்தி வருது! Such a caring kid!” என்று சிலாகித்த மனதில் பாசம் பொங்கி வழிந்தது.

என்னதான் பிள்ளையின் முன்னிலையில் இயல்பாய் நடமாடினாலும்... சிரித்தாலும்... அந்த பாலாஜியைப் பற்றிய எரிச்சலும் கோபமும் அடிமனதை அரித்துக்கொண்டே இருந்தது.



டே கேரில் விட்டால், அவன் வந்து பார்ப்பானோ! பிள்ளையிடம் பேசுவானோ!

“அப்பா” என்று அந்தப் பிஞ்சு உள்ளத்தில் நஞ்சை விதைப்பானோ!

அப்பா புராணத்தை மறந்து, சற்றே சமன் பட்டிருக்கும் பெண்ணின் மனதை மீண்டும் கலைப்பானோ!

அம்மு... என்ன செய்வாள்?!

‘தந்தை’ என்ற ஆண் உறவு இல்லாது வளர்த்த பிள்ளை, புதிதாய் முளைத்த இந்த உறவில் வழுக்கி விடுவாளோ?

என்னை ஒதுக்கி விடுவாளோ!

ஹய்யோ!! அம்மு... அம்மு... அம்மு மட்டுமே அல்லவா என் வாழ்க்கை!

சிறுகச் சிறுக அவள் கட்டிய இந்தக் கூட்டை, ‘அப்பா’ என்ற கல்லெறிந்து, ஒரே நாளில் கலைத்து விடுவானோ!

கூடாது! தன் சிறு குடும்பம்... மீண்டுமொரு முறை கலைவதை அனுமதிக்கக் கூடாது! கூடவே கூடாது! எஞ்சி நிற்கும், இந்த உறவையும் அவன் பறித்துக்கொள்ள விடவே கூடாது!

“நோ! நோ! நோ!....”

கொதி நிலையிலிருந்த உள்ளத்தின் ஆவேசம், வார்த்தைகளாய் வெளியேற,

உணவூட்டிக் கொண்டிருந்த தாயின் தாடையை திருப்பிய ஸ்ரீதுளசியின் முகம் வெளியிறிருந்தது.

கையிலிருந்த உணவைத் தட்டில் உதறியவள், இடது கையால்... பெண்ணைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

"ம்மா..."

"அம்மு...அம்மா சொன்னா கேட்பே தானே!"

"ம்ம்ம்...கேப்பா ம்மா..."

"அந்த அங்கிள் கூடப் பேசக் கூடாது... என்னடா?"

"பா... கூவவா?"

"நேத்தே சொன்னேன்ல? அந்த அங்கிள்... அப்பா கிடையாது!"

"அப்பூம்..."

"அங்கிள், அவ்வளவுதான்... சரியா?"

"ம்ம்ம்... ஷீ கு பா இய்யிய்யா?"

"ஹய்யோ!" - இயலாமையும்... இப்படியொரு நிலைக்குத் தன்னைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டானே என்ற கோபமுமாய் கண்ணீர் பொங்கி வழிந்தது குந்தவைக்கு.

"அம்மா... அவ்வாத... ஷீ கு பா வெவ்வாம்..."

வார்த்தைகளால் பதில் சொல்ல முடியாமல், பெண்ணின் உச்சியில் இதழ் ஒற்றி நிமிர்ந்தாள் குந்தவை.

இருவருமாய், டேகேருக்கு கிளம்பினர்.

போகும் வழியில், ஆஷா வீட்டு அழைப்பு மணியை அழுத்திவிட்டுக் காத்திருந்தாள் குந்தவை.

"ஹே... குந்தவை. என்னாச்சு? காலையில அம்மாவும் பொண்ணும் படு பிசியா இருப்பீங்களே! என்ன



திடீர் வாசம்" என்றவளின் கூர்மையான கண்கள், குந்தவையையும் ஸ்ரீயையும் அடி முதல் நுனி வரைக் கணக்கெடுத்தன.

"இல்ல... நா லேப்க்கு வர லேட்டாகும். ஒன் ஹவர் பர்மிஷன் சொல்லுடுறியா?" என்றாள் குந்தவை.

"என்னாச்சு? உடம்பு எதுவும் சரியில்லையா? இஸ் ஸ்ரீ ஃபைன்?" என்றவளின் குரலில், உண்மையான அக்கறை இருந்தது.

"சேச்சே! அதெல்லாம் ஒண்ணுமில்ல... ரெண்டு பேருமே நல்லா இருக்கோம். டே கேர்ல... கொஞ்சம் பேசணும்..." என்றாள் குந்தவை. பார்வையை எங்கோ பதித்தபடி.

"என்ன குந்தவை... எதுவும் ப்ராப்ளமா? என்னடி... சொல்லேன்! சும்மா... ஃபிரண்டு... ஃபிரண்டுன்னு வாய் வார்த்தையால சொன்னா ஆச்சா? எதையும் மறைக்காத... குந்தவை... சொல்லுடி" என்றாள் ஆஷா, குந்தவையின் தோளைத் தட்டி.

"ஹே! என்ன ஆஷா! உன்னையும் பாலாவையும் விட்டா... எனக்கு வேற யாரு இருக்கா சொல்லு? என்னால சமாளிக்க முடியலைங்கிற நிலைமை வரும் போது... நா வந்து நிக்கிற முதல் ஆள் நீ தான்!" என்றாள் திடமாய்.

"அப்போ... ஏதோ பிரச்சனை இருக்கு?" என்றாள் ஆஷா, குந்தவையின் கண்களுக்குள் ஊடுருவி.

"ஹாம்... இருக்கு! ஆனா... என்னால மேனேஜ் பண்ண முடியும். ஓரோர் வாட்டியும்... உன்னையும் ஜோசையும் டிபெண்ட் பண்ணி இருந்தா... எனக்குன்னு

ஒரு individuality இல்லாம போயிடுமோன்னு பயமா இருக்கு! நானே... ஹாண்டில் பண்றேன்" என்றாள் குந்தவை, நேர்பார்வையுடன்.

தோழியைப் பற்றி அறிந்திருந்ததால், "ஓகே! ஆனா... நாங்க இருக்கோம்ங்கிறதை எப்பவும் மறக்காத" என்றாள் ஆஷா, தோழியின் கையைப் பற்றி அழுத்தி.

"தேங்க்ஸ்... ஆஷா!" என்ற குந்தவையின் குரலிலும், ஒரு ஆத்மார்த்தமான நட்பின் வெளிப்பாடு இருந்தது.

அவர்கள் பேசும் வரையிலும், தாயின் சுடிதாரைப் பற்றியபடி, அவளுடனே ஒண்டிக்கொண்டு நின்ற ஸ்ரீயிடம் தாவியது ஆஷாவின் கவனம்.

திரும்பி நடந்த குந்தவையின் கைப்பிடித்து நிறுத்தியவள், "Take care of sri! She seems to be out of her childishness!" என்றாள் கவனம் பரவிய குரலில்.

ஸ்ரீக்குப் புரியக்கூடாது என்பதற்காகவே, அவளைப் பற்றிய கவலையை ஆங்கிலத்தில் வெளிப்படுத்திய தோழியைப் பார்த்து சிநேகமாய் புன்னகைத்த குந்தவை, "Sure, I will" என்றாள் பெண்ணின் கையை இறுகப் பற்றி, வழி நடத்தியபடி.

நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையுமாய் எட்டுக்களை வேகமாய் எடுத்து வைத்த தோழியையே சற்று நேரம் பார்த்திருந்த ஆஷா, "ம்ம்ம்..." என்ற நெடுமூச்சுடன் உள்ளே நுழைந்தாள்.

அவள் நுழையக் காத்திருந்தவன் போல், "எப்படி இருக்கா? Is she alright?" என்றான் ஜோசு.



"அழுதிருக்கா!"

"ஹ்ம்ம்"

"ப்ராப்ளம் இருக்குன்னு அவளே ஒத்துக்கிறா! ஆனா... நம்மட்ட சொல்லாமலேயே அதை சால்வ் பண்ணிடனும்ன்னு நினைக்கிறா!"

"நீ... என்ன நினைக்கிறே? அவளால தனியா ஹாண்டில் பண்ண முடியுமா?"

"முடியாது! That guy will not go off... just like that! I am sure!" என்றாள் ஆஷா, உறுதியாக,

ஜோசுவிற்குமே, அப்படித்தான் தோன்றியது.

பாலாவின் சிரிப்பு, இன்னமும் ஜோசுவின் மனதில் அழியாமல் காட்சி தந்தது.

"அப்போ... என்ன பண்ணலாம்? பிரச்சனை பெருசாகுறதுக்குள்ள... ஏதாவது பண்ணனும்!"

"கண்டிப்பா! குந்தவை அனுபவிச்ச கஷ்டமெல்லாம் போதும். இனியாச்சும் அவ சந்தோஷமா இருக்கணும்!"

"எனக்கொரு டவுட்... இந்த பாலாஜி... ஒரு வேளை..." - வாக்கியத்தை முடிக்காமல் இழுத்தான் ஜோசு.

"எனக்கும் அதே டவுட் தான். கண்டிப்பா... குந்தவையைப் பத்தி நல்லா தெரிஞ்சிட்டுத்தான்... இங்க வந்திருக்காரு. சோ... he should be someway related to her!"

"Husband?"

"ஹ்ம்ம்... I guess! ஒரு வாட்டி... குந்தவையோட பாஸ்போர்ட்ல last name... spouse name எல்லாம் மாத்தறதுக்காக நானும் அவளும் ஒரு ஏஜென்சிக்குப் போனோம் தெரியுமா? அப்போ... பார்த்திருக்கேன்.. அவ ஹஸ்பண்ட்பேரு கூட.... B ல தான் ஸ்டார்ட் ஆகும். சம்திங் ... b... a..."

"ஃபுல் பேர் தெரியலையா?"

"ப்ச். அவளுக்கே... தேவையில்லாத ஆளுன்னு ஒதுக்கின அப்புறம்... நமக்கேன்னு விட்டுட்டேன். அதுவுமில்லாம... அதைப் பத்திக் கேட்டாலோ... இல்லை விசாரிச்சாலோ... மித்தவங்க மாதிரி காசிப் பேசுறே னோன்னு நினைச்சிடுவாளோன்னு பயமா இருந் துச்சு!"

"ஹ்ம்ம்..."

"எனக்கென்னமோ... நைன்ட்டி பெர்சென்ட்... இந்த பாலாஜி குந்தவையோட ஹஸ்பண்ட்ன்னு தான் தோணுது!"

"ஹ்ம்ம்... ஆனா... குந்தவை ரொம்பக் கோபப் படுற மாதிரி இருக்கே!"

"அவ பட்டக் கஷ்டம் அப்படி... இடியட்! எவ் வளவு... ஒரு நல்ல பொண்ணை... ச்சை... அந்தாளை..." - பல்லைக் கடித்த ஆஷா, "எனக்கு வர ஆத்திரத்துக்கு... அந்தாளைப் போய் ச்சப்பு... ச்சப்பு... ச்ச்சப்புன்னு அடிச்சிடலாமான்னு தோணுது!"

"ஆஷா!"

"பின்னே... என்ன? அவளோட நம்பிக்கையையே... கெடுத்துட்டானே! என்ன தைரியத்தில... இங்க வந் திருக்கான்னு தெரியலையே!"



"திருந்திக் கூட வந்திருக்கலாம்..."

"ஆனா... அவ அனுபவிச்ச கஷ்டமெல்லாம் இல்லைன்னு ஆகிடுமா? இங்க வந்த புதுசுல... எப்படி இருந்தா... உங்களுக்கே தெரியும்ல?"

"ம்ம்ம்..."

"இப்பக் கொஞ்ச நாளா தான்... சந்தோஷமாவே இருக்கா! அதுவும்... பொறுக்கலை போல இவனுக்கு! ச்சே!"

"ஆஷா... லீவ் இட். நா...இன்னைக்கு... அந்த டாக்டர்கிட்டப் பேசிப் பார்க்கிறேன்"

"நானும் வரேன்!"

"வேண்டாம்! நீ வந்தா... வார்த்தையை எக்குத் தப்பா விட்டிருவே!"

"ஆமா... ஒரு பொண்ணோட வாழ்க்கையை அழிச்சவனைக் கொஞ்சுவாங்களா?"

"ஹ்ம்ம்... லீவ் இட். நா... பார்த்துக்கிறேன்."

"ஓகே! ஆனா... குந்தவைக்குத் தெரியாம பேசு!"

"ஹ்ம்ம்..."

ஆஷாவும் ஜோசுவும் குந்தவையின் நண்பர்கள் என்றாலும், அது சில காலங்களாய் தான். அதுவும், பாலாவின் அறிமுகத்தின் பின்னரே, குந்தவை ஆஷா வுடன் ஒட்டத் தொடங்கினாள். குந்தவையின் இருண்ட வாழ்க்கை பற்றிய முன்னுரையுடனே, அவர்களது அறிமுகம் நடந்தேறியதால், குந்தவையாக அதைப் பற்றிப் பேசினால் ஒழிய ஆஷாவாக எதையும் குடைந்து

கேட்டுவிட மாட்டாள். குந்தவையும் மனதை அடக்கிப் பழகியவள் என்பதால், பெரிதாய் எதையும் ஆஷாவிடம் கொட்டிவிடவில்லை.

முடிந்தது என்று அவர்கள் ஒதுக்கிய ஒன்று, இப்போது துளிர்விடவே, குந்தவையுடன் சேர்த்து ஆஷாவின் மனமும் சற்றே அலைபாய்ந்தது.

ஜன்னல் வழியே, டே கேருக்குள் நுழையும் குந்தவையைப் பார்த்தபடி நின்றிருந்த மனைவியின் தோள் தட்டி, அலுவலகம் அழைத்துச் சென்றான் ஜோஸ்.

என்ன என்ன பேசவேண்டும் என்று மனதில் குறித்தபடி, டே கேருக்குள் நுழைந்த குந்தவை,

"Good Morning, Kunthavai!" என்ற உற்சாக அழைப்பில் சற்றே திகைத்துப் போனாள் என்றே சொல்ல வேண்டும்.

மலர்ந்த சிரிப்புடன், முகமெல்லாம் ஆனந்தம் பெருகி நிற்க, அவளுக்கு காலை வணக்கம் சொல்லிய படி நின்றவன், சாட்சாத் பாலாஜியே தான்!

இது நாள் வரையில், அவள் செல்லும் நேரங்களில் பாலாஜி அங்கிருக்க மாட்டான்.

கடந்த ஒரு மாதக் காலத்தில், "பா அங்க்கி" யாக அவளுக்கு பெயரளவிலும், "உச்சா" அளவிலுமே அறி முகமாகி இருந்தவன், நேரில் தன் முகத்தைக் காட்டியதே இல்லை.

அவளாய் சென்று பார்க்க முற்பட்டபோது கூட, அவன் கிளினிக்கில் இருக்கவில்லை.



இன்று என்னடாவென்றால்?

எவ்வளவு தைரியம் இருந்தால்... என்று குந்தவையின் நெஞ்சம் பொருமியதை உணர்ந்தவன் போல், அடக்க முடியாத ஒரு புன்சிரிப்புடன் அவளையே பார்த்திருந்தான் பாலாஜி.

"என் பொண்ணோட பேசாதீங்க" என்றாள் குந்தவை, எடுத்த எடுப்பிலேயே.

மிரண்டு விழித்தபடி, இரு பெரியவர்களைப் பார்த் திருந்தாள் ஸ்ரீதுளசி.

"குழந்தை முன்னாடி சண்டை போட வேண்டாம்! She seems terrified" என்றவன், "ஸ்ரீ குட்டி... நீங்க உள்ள போய் விளையாடுங்கடா" என்றான் பெண்ணின் கன்னத் தில் தட்டி.

"ப்ச்... அவளைத் தொடாதீங்க" என்றவள், இரண்டடி பின்னே நகர்ந்தாள்.

ஸ்ரீ, பயத்தில் குந்தவையின் கழுத்தை இறுக்கிக் கொண்டாள்.

"அவ... மிரள்றா... குந்தவை! லீவ் ஹெர்..." என்றான் பாலா, சற்றே குரலை உயர்த்தி.

"நீங்க... யாரு எனக்கு ஆர்டர் போட? Just get out of here" - அடித்தொண்டையில் இருந்து கத்தினாள் குந்தவை.

ஸ்ரீயின் பயம் அழுகையாய் மாறியது.

"ம்மா... ஆஆஆ..." என அவள் அழ.

"அவளை விடு! நீ பயப்பட்றதும் இல்லாம... அவளையும் கஷ்டப்படுத்துற" என்றான் அவன்.

"நா ஒண்ணும் பயப்படலை!"

"அப்போ... அவளை விடுறது தானே! எங்க... அவளை விட்டா... என்ட்ட ஓடி வந்துடுவாளோன்னு உனக்கு பயம்."

"அவ... என் பொண்ணு! உங்கட்ட வர மாட்டா..." என்ற குந்தவை, ஸ்ரீயைத் தன்னிடமிருந்து இறக்கிக் கீழே விட்டாள்.

"ம்மா... ஆ" - பெண் மயங்கி நிற்க,

"ஒண்ணும் இல்லடா... அங்க பாரு... நகுல்.. அனுஷ்மீ எல்லாரும் வந்துட்டாங்க. ஓடு... ஓடு... விளையாடு" என்று அவள் கவனத்தைத் திருப்ப முயன்றாள்.

தன்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே ஓடும் மகளைப் பார்த்தபடி நின்றிருந்த குந்தவையின் கவனத்தை, மகளையே ஆசையுடனும் ஏக்கத்துடனும் பார்த்திருந்த பாலாஜியின் முகம் கலைத்தது.

முகத்தைக் கடுமையாய் வைத்துக்கொண்டு.

"என் பொண்ணைப் பார்க்காதீங்க. அவளோட பேசாதீங்க!"

"ஓகே. ஆனா... என் பொண்ணோட பேசலாம் தானே!" என்றான் அவன், அடக்கிய புன்முறுவலும், "என்" என்ற சொல்லில் அழுத்தமுமாய்,

"அவ... உங்க பொண்ணு கிடையாது!" - பல்லைக் கடித்தாள் குந்தவை.

"ஹ்ம்ம்.. ஒத்துக்க முடியாது!" - திடமாய் வந்தது அவன் பதில்.

"ஹய்யோ... ப்ளீஸ்! உங்களுக்கு என்ன தான் வேணும்?"



"A life! A life with you and Sri!" என்றான் பாலாஜி தெளிவாய்.

"கிராப்!" என்று குந்தவை தலையைச் சிலுப்பும் போதே, அவளது கைப்பேசி கிணுகிணுத்தது.

அவளது மேலதிகாரி.

"ஹலோ சார்" - தயக்கத்துடனே எடுத்து வைத்தவளை, உடனே வரும்படி உத்தரவு பிறப்பித்தார் அவர்.

மீறவும் முடியாமல்... பிள்ளையை அவனிடம் விட்டுச் செல்லவும் முடியாமல் தவித்த மனதுடன், பாலாஜியின் புறம் திரும்பிய குந்தவை, "ப்ளீஸ்... அவட்ட பேசாதீங்க! அவ மனசில... தேவையில்லாத சஞ்சலத்தை உண்டு பண்ணி... அவளோட குழந்தைத் தனத்தை அழிச்சிடாதீங்க!" என்றாள் வேண்டுதலாய்.

பாலாஜிக்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

ஆனாலும், அவள் கேட்பதற்கு "சரி" என்று சொல்ல முடியாமல், வெறுமனே அவளையே பார்த்தபடி நின்றிருந்தவனை முறைத்துவிட்டு, அலுவலகம் நோக்கி விரைந்தாள் குந்தவை.

அவள் போவதற்காகவே காத்திருந்தவன் போல், ஜோஸ் பாலாஜியை நெருங்கினான்.

தன்னைத்தானே அறிமுகம் செய்துகொண்ட கையோடு,

"குந்தவை!?" என அவன் மெல்ல கொக்கிப் போட்டு நிறுத்த, விரிந்த புன்னகையொன்று பாலாவின் முகத்தில் படர்ந்தது.

"எனக்குத் தெரியும். நீங்க வந்து... என்ட்ட பேசுவீங்கன்னு எதிர்பார்த்தேன். ஆனா... இவ்வளவு சீக்கிரம்

வருவீங்கன்னு சத்தியமா எதிர்பார்க்கலை. அவளுக்கு... இவ்வளவு நல்ல ஃபிரண்ட்ஸ் இருக்காங்கன்னு நினைச்சாலே சந்தோஷமா இருக்கு" என்றான் பாலா, ஆத்மார்த்தமாய்.

"நல்ல ஃபிரண்ட்ஸ் அமைஞ்சு... என்ன புண்ணியம்? அவளுக்கு... நல்ல ஹஸ்பண்ட் அமையலையே! நீங்க... அவளோட ஹஸ்பண்ட் தானே?" என்றான் ஜோஸ், கடுமை ஏறிய முகத்துடன்.

"ஆமா...but... not in the present!" என்ற பாலாவிடம் அரை மணி நேரம் பேசிய ஜோஸ்," நானும்... ஆஷாவும் குந்தவைட்ட பேசிப் பார்க்கிறோம்" என்றான் முடிவில்.

"All the best!" என்றான் பாலா, ஒரு மர்மச் சிரிப்புடன்!

## அத்தியாயம் 8

**ஜோ**ஸிடம் பேசியவனின் கவனம், ஸ்ரீயிடம் திரும்பியது. "

'பாவம்... குழந்தை! ஒரே நாளில்... வாடி விட்டதே!' என்று மனம் தவித்துப் போனது,பெற்ற மனமாயிற்றே!

உள்ளே நுழைந்தவனின் கண்களில், நாற்காலியில் சோகமே வடிவாய் அமர்ந்திருந்த ஸ்ரீயும், அவளருகே மண்டியிட்டு, கன்னத்தில் கை வைத்தபடி தோழியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த நகுலும் பட்டனர்.



புன்னகை புது அரும்பாய் பூத்தது, பாலாவிற்கு!

'செம... போசா இருக்கே, மச்சான்!' என்ற நகுலின் தோளில் தட்ட வேண்டும் போல் எழுந்த ஆவலை அடக்கியவனாய், "ஹலோ... ஸ்ரீ பேபி!" என்ற அழைப்புடன் மகளிடம் சென்றான்.

"அன்க்கில்... ஷீ பா வெவ்வாவ வத மாத்தே சொவ்வா...." என்றான் நகுல் சோகமே வடிவாய்.

"நீ... போய் விளையாடு. அங்கிள் கூட்டிட்டு வந்து விடுறேன்"

"ஷீ... வவ்வாவா?"

"வருவா! வருவா! அங்க பாரு... கிருத்தவ் உன்னோட பேட்டை எடுக்கிறான்..." என்று அவனை அனுப்பி வைத்தவன், ஸ்ரீயிடம் திரும்பினான்.

அவளோ, வேறு புறம் திரும்பினாள்.

"ஸ்ரீ குட்டி... கோவமா இருக்கீங்களா?" என்றான் பெண்ணின் தாடையைப் பற்றி, தன் பக்கம் திருப்ப முயன்றவனாய்.

"ஆஅவா! கோப்பா இய்யிக்கே..." என்றாள் ஸ்ரீ.

"ஏன்டா... அப்பா பாவம்ல்ல... கோபப்படாதீங்கடா" என்றான் பாலாஜி குந்தவை போலவே. குந்தவையும் ஸ்ரீ கோபித்துக் கொண்டால் இப்படித் தான் கெஞ்சுவாள்.

"பா... இய்ய! அம்மா சொவ்விக்கா! அம்மாஅவ்வா! பா இய்ய... ஷீக்கு பா இய்ய சொய்யிக்கா... பா இய்ய" என்றாள் ஸ்ரீ வேகமாய்.

'இதெல்லாம் பி. ஹெட்ச்டி படிச்சுக் கிழிச்சிருக்கு! சின்னக் குழந்தைட்ட என்ன சொல்றதுன்னு கூட

தெரியல!' என்று மனதாரக் குந்தவையை வைதவன், அதைக் குழந்தையிடம் சொல்ல முடியாதவனாய் சற்று நேரம் யோசித்தான்.

"பிள்ளையின் மனம் என்ன... சட்டமா? இல்லை கட்டமா? இப்படிச் செய்யலாம்... அப்படிச் செய்யலாம் என்று வரையறுக்க!?

அவளைச் சமாதானம் செய்யும் வழிமுறை எதுவும் கிட்டாது போகவே, அவளிடம் பேச்சுக் கொடுத்தபடி யோசிப்போம் என்றெண்ணியவனாய், பிள்ளையின் திரும்பிய முகத்தின் முன்னே சென்று மண்டியிட்டு அமர்ந்தான்.

"அம்மா... என்னடா சொன்னா?" என்றான் தாடையைப் பற்றி.

"ப்பா... இய்ய சொன்னா..."

"ஹோ!!"

"ஆஆவா... ப்பா இய்ய்..."

"ஓகே! ஓகே! அப்போ... நா யாரு?"

"பா... அங்க்கி தா... சொய்யணும்! ம்மா... சொன்னா..."

"பா... அங்கிளா நான்?"

"ஆஆவா... பா அங்க்கி..."

"ஓகே! பா... அங்க்கி தான்... அப்படியே வச்சுக் கலாம்..."

"ஹா...." - விழி விரித்துப் பார்த்த ஸ்ரீ, "பா... சொவ்வே?" என்றாள் கேள்வியாய்.

"ம்ம். சொன்னேன். அம்மா அழமாட்டான்னு நினைச்சு சொன்னேன்டா! இப்படி ஒரே ராத்திரில



பெங்களூர்ல ஒரு ஆறை ஓட வைப்பான்னு... நா என்னத்தைக் கண்டேன்!"

"...."

"இதில... இந்தம்மா ஸ்ட்ராங்காம். இந்தம்மா வோட பிரண்டுன்னு ஒரு குரங்கு இருக்கில்ல... அது சொல்லுது! காலக் கொடுமை பாரேன்!"

"..."

"யாருன்னு பார்க்கிறியா? அந்த பாலா தான்..."

"பா... அங்க்கி..."

"செல்லக் குட்டி! பாலான்னாலே... பா அங்கின்னு சொல்லிடும்! என்னோட செல்லக்குட்டி!" என்று பிள்ளையைக் கொஞ்சியவன்,

"நா... சொன்னேன்டா. உன் ஃபிரண்டு... ஒரு அழுமூஞ்சி! நா ஸ்ரீயோட அப்பான்னு சொன்னதுமே, அழுது... ஆர்ப்பாட்டம் பண்ணுவான்னு சொன்னேன்டா. அந்தக் குரங்கு... நம்பவே இல்லை. என்னோட கவி அப்படியில்லை... அது இதுன்னு சவால் விட்டுச்சு"

ஸ்ரீ தலையைச் சரித்துக் கதை கேட்டாள்.

"என்னோட பிளான்படி... உன்னோட அப்பாவா தான் அம்மாவைப் பார்க்கணும்னு நினைச்சேன். அதை பேஸ் பண்ணித் தான்... எல்லா ஸ்டெப்ஸும் எடுத்தேன். பெங்களூர் வந்தது... இங்கேயே சைல்ட் ஸ்பெஷலிஸ்ட்டா சேர்ந்தது... உங்கம்மாவைப் பார்த்திடக் கூடாதுன்னு 9 to 11 டைம் ஸ்லாட் செலக்ட் பண்ணினது... கொஞ்சம் கொஞ்சமா உன்கிட்ட நெருங் கினது... உங்கம்மா கண்ணில பட்டுடக் கூடாதுன்னு வீக்

எண்டு கிளினிக் வராம இருந்தது... அப்பான்னு சொன்னது எல்லாமே, 'பாலா' வா உன் அம்மாகிட்ட அறிமுகம் ஆகிறதை விட, 'ஸ்ரீயோட அப்பா'வா அறி முகமானா, ரியாக்ஷன் செமையா இருக்கும்ன்னு நினைச்சேன். அது மாதிரியே நடந்துடுச்சு!"

ஸ்ரீயின் சரிந்த தலை நிமிரவில்லை.

அவ்வளவு சுவாரஸ்யமாகக் கதை கேட்டுக்கொண் டிருந்தது பிள்ளை.

"ஒரே நாளில... ஆளே மாறிப் போயிட்டாளே, உங்கம்மா!"

அந்த நேரம், அவனது கைப்பேசி ஓங்கி ஒலித்தது.

"ஹோ... தட் குரங்கு தான் லைன்ல இருக்கு" - கண்களை அகல விரித்து, பயம் போன்ற பாவனை ஒன்றை ஸ்ரீயின் முன்னே அள்ளி வீசியவன், "பேசிட்டு வரேன்..." என்றான் பிள்ளையிடம்.

எழுந்தவனின் சட்டை நுனியைப் பிடித்து இழுத்த ஸ்ரீ.

"பா... அங்க்கி சொவ்வா? பா சொவ்வா?" என்றது புரியாமல்.

நெஞ்சம் கனத்தப்போதும், "அம்மாட்ட பா அன்க்கியே சொல்லு. அப்புறமா... நாம பா ஆக்கிக்கலாம்" என்றான் தந்தை.

புரிந்தும் புரியாமலும், மையமாய் தலையாட்டி னாள் ஸ்ரீதுளசி.

பிள்ளையின் குழப்பம் நிரம்பிய முகம், வேத னையைக் கொடுத்தாலும், அதை மென்று விழுங்கி



யவன், 'அப்பாவே இல்லைங்கிற நிலைமைக்கு... இது மேல்!' என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டான்.

அதே சமயம், பிள்ளையின் இந்தக் குழப்பம்... குந்தவையைச் சிந்திக்க வைக்கும் என்ற நம்பிக்கையும் அவனுள் விதையவே செய்தது.

எப்படியும்... ஒரே மாசம் தான்! இவளை... என் வழிக்குக் கொண்டு வரலை... என் பேரு பாலாஜி இல்ல என்று சூளுரைத்தது மனம்.

அதற்குள், கைப்பேசி ஒரு முறை அடித்து நின் றிருக்க, அடுத்த அழைப்பு சீறிக் கொண்டு வந்தது.

"பொறுமையே கிடையாது" என்று சலித்தபடி, கைப்பேசியை அவன் உயிர்ப்பிக்க,

"டேய்... எருமை! என்ன செஞ்சு வச்சிருக்கே!" என்று சீறியது ஒரு பெண் புலி.

"சொன்னதைத் தான் செஞ்சேன்!"

"பெரிய... சூப்பர் ஸ்டார்ன்னு நினைப்பு!"

"ஹே... நான் தான் சொன்னேன்ல... ஸ்ரீயோட அப்பாவா தான் அவளைப் பார்க்கப் போறேன்னு சொல்லிட்டுத் தானே மூவ் பண்ணினேன்"

"அது... ஓகேடா! ஆனா... கவி பயங்கரமா அழு திருப்பா போலவே!"

"உனக்கு யாரு சொன்னா?"

"ஆஷா ஃபோன் பண்ணா!"

"ஆஹா.... ஜோஸ் வந்து என்கிட்டே பேசினாரு!"

"வாட்! நீ... என்ன சொன்னே!"

"நீங்க தான்... குந்தவையோட ஹஸ்பண்
டான்னு கேட்டாரு!"

"ஹோ காட்! என்ன சொல்லித் தொலைஞ்சே!"

"ஆமான்னு சொல்லிட்டேன்!" என்றான் பாலாஜ
கூலாக.

"....."- எதிர்ப்புறம் சத்தமே இல்லாமல் போக,

"என்ன தலையில அடிச்சுக்கிட்டியா?"

"நேர்ல இருந்திருந்தா... உன் தலையை
பொளந்திருப்பேன்! எருமை!"

"ஹஹ்ஹா!" - வாய் விட்டே சிரித்த பாலாஜி
"ஆனா... நீ ஆஷாட்ட எதுவும் சொல்லலை தானே?
என்றான் கவனமாய்.

"அதெல்லாம்.. நா ஒண்ணும் சொல்லிக்கலை
என்றவள், "என்ன தைரியத்திலடா... இதெல்லாம்
பண்றே!?" என்றாள் கவலையுடன்.

"ஆலமரமா... நீயும் என் அருமை ஃபிரண்டும் என்
பின்னாடி இருக்கிற தைரியத்தில தான்!"

"அடப்பாவி! டேய்... மாட்டிக்கிட்டின்னா..
எங்களைக் கையைக் காட்டி விட்டுறாதடா! ருத்
தாண்டவம் ஆடிடுவா!"

"இப்பவே... ஹாஃப் வே வந்துட்டா! கண்டிப்பா..
ரெண்டு நாளில... ருத்ர தாண்டவம் பெர்பார்மன்ஸ்
நடக்கும்ன்னு நினைக்கிறேன்"

"உனக்கு நக்கலா இருக்கா!?"



"ப்ச்! செம... இண்டரெஸ்டிங்கா இருக்கு! அடுத்து...
உன் ஃபிரண்டு... ஆடப்போற ஆட்டத்திற்காக, முதல்
வரிசையில துண்டு போட்டு உக்காந்திருக்கேன்.
உனக்கு...வேணும்ன்னா சொல்லு, நெக்ஸ்ட் ரோல
இடம் போடுறேன்"

"டேய்!!!"

"ஆமா... பாலா! ஜோஸ்... குந்தவைட்ட பேசிப்
பார்க்கிறேன்னு சொல்லிட்டுப் போயிருக்காரு."

"என்ன பேசப் போறாரு!" - எதிர்ப்பக்கம் இருந்த
பாலா பரபரத்தாள்.

"திருந்தி வந்த வீட்டுக்காரரோட சேருறது தான்...
நல்லதுன்னு பேசப் போறாரு!"

"யாரு வீட்டுக்காரரு?"

"ஏய்... என்ன கதை கேட்கிறே!லூசு! நான் தானே
குந்தவையோட ஹஸ்பண்ட்!"

"ஹய்யோ!!! முருகா..."

"கவலைப்படாத! அவ போக்கிலேயே விட்டா...
சரியா வராது. காசா பணமா... கல்லை எறிஞ்சு பார்ப்
போம். வந்தா... மாங்கா! போனா... ஜஸ்ட் கல்லு தானே!"

"எருமை. அவ... அந்தக் கல்லைத் திருப்பி அடிக்கப்
போறா பாரு!"

"நாம எரிஞ்ச கல்லு... நம்மளை எப்பயும் ஹார்ட்
பண்ணாது!"

"பெரிய தத்துவஞானி!!" என்று சலித்துக்
கொண்ட போதும், "உன்னால... அவளோட நாலு நாளா
பேசவே இல்லடா. இன்னைக்கு கூட.... கால் பண்ணி

யிருக்கா... புருவை விட்டு நா வெளிய போயிருக்கிறதா சொல்லச் சொல்லிட்டேன்" என்றாள் பாலா, வருத்த மாய்.

"பேசுறது தானே! இப்படி ஏதாவது காமெடி பண்ணி... நீயே போய் சிக்கிறாத!"

"ஏன்... பேச மாட்டே!?" என்று தலையில் அடித்துக் கொண்ட பாலா என்ற மதுபாலா, "கொஞ்சம்... பாத்துப் பதமா பண்ணுடா! சேதாரம்... ஜாஸ்தியாகிடாம பார்த்துக்கோ!" என்றாள் முடிவில்.

"கண்டிப்பா! நா... ஹேண்டில் பண்ணிக்கிறேன். நீ... அவ பேசினா... ஒழுங்கா நார்மலா பேசு. எதையும் உளறி வைக்காத" என்றான் பாலாஜி.

"ஹ்ம்ம்... ட்ரை பண்றேன்"

குந்தவையின் அலுவலக வளாகம்

ஆராய்ச்சிக் கூடத்தில் குந்தவையுடன் வேலையில் ஈடுபட்டிருந்த ஆஷாவின் கைப்பேசிக்குக் குறுஞ் செய்தி ஒன்றை அனுப்பி, வெளியே வரச் சொன்னான் ஜோஸ்.

அவள் வந்த நிமிடமில்லாமல், "ஹே ஆஷா... அவர்ட்ட பேசிட்டேன்" என்றான் பரபரப்பாய்.

"குந்தவையோட ஹஸ்பண்ட்ட்டையா?" என்றாள் ஆஷாவோ, ஆச்சரியத்துடன்.

"ஆமா..."

"என்ன சொல்றான்... அந்த ஸ்டுபிட்!"

"He seems to be good"



"வாட்... உளறாத ஜோஸ்!He has betrayed her! For eight long years... he has betrayed her! அவனை நம்பி வந்த பொண்ணை... கூடவே இருந்து... நல்லவன் மாதிரி நடிச்சு... கடைசில கரியைப் பூசியிருக்கான். அது கூட... குந்தவையா கண்டுபிடிக்கப் போய் தான், அவனோட ரியல் ஃபேஸே தெரிஞ்சிருக்கு. இல்லைன்னா... இன்னும் எத்தனை வருஷம் நடிச்சிருப் பானோ?!"

"ஆனா... இப்போ திருந்திட்டேன்னு சொல்றார்!"

"எப்படி நம்புறது?"

"இவ்வளவு நாள் கழிச்சு... குந்தவையையும் ஸ்ரீயையும் தேடி வந்திருக்கிறதே... அவர் மாறிட்டார்ங் கிறதுக்கு ப்ரூஃப் தானே!"

"என்னால ஒத்துக்க முடியலை. உயிரோட அவளைச் சாக அடிச்சிட்டு... இப்ப வந்து... ஸ்ரீயை கவர் பண்ண ட்ரை பண்றதெல்லாம் ரொம்ப ச்சீப்பா இருக்கு!"

"He is accepting his mistakes!"

"சோ... வாட்?! அவர்... பண்ணின தப்பு இல்லைன்னு ஆகிடுமா?"

"தப்பு தான்... அவருமே ஒத்துக்கிறாரே! இந்தக் காலத்தில... தான் செஞ்ச தப்பை எத்தனை பேர் உணருறாங்க?"

இந்தச் சமயத்தில், குந்தவை ஆஷாவைத் தேடி அங்கே வந்தாள்.

கணவன் - மனைவி இருவரும் பெரும் விவாதத்தில் இருப்பது புரிய, "ஹே... ஆஷா! என்னாச்சு... ஏதாவது பிரச்சனையா?" என்றாள் பதற்றத்துடன்.

“வேறென்ன? அந்தாளைப் பத்தித் தான்!” - கோபமாய் பல்லைக் கடித்தாள் ஆஷா.

“எந்தாளு?” - குந்தவை புரியாமல் கேட்க,

“ஆஷா... சும்மா இரு” என்றான் மனைவியை அடக்கும் குரலில்.

ஆனால், ஆஷாவின் கோபம் மட்டுப்படுவதாய் இல்லை.

ஏற்கனவே, பாலாஜி மீதிருந்த கோபம் ஒரு புறம்... அதைக் கூட்டுவது போல் ஜோஸ் அவனுக்கு வக்காலத்து வாங்கவும், சுள்ளென ஏறிவிட்டது.

“ஜோஸ் சொல்றதைப் பார்த்தா.... எனக்குத் தெரியக் கூடாத விஷயம் மாதிரி தெரியுது. இட்ஸ் ஓகே! நா... போயிட்டு அப்புறம் வரேன். ஹெட் கூப்பிட்டாரு... அதைச் சொல்லத் தான் வந்தேன்!” என்றாள் குந்தவை.

“இவ தெரசா தனத்துக்கு ஒரு அளவில்லாம போச்சு!” என்று மனம் சலிப்படைய,

“உன் ஹஸ்பண்ட் பத்தின விஷயம்... உனக்குத் தெரியக் கூடாத விஷயமா?” - பட்டெனக் கேட்டு விட்டாள் ஆஷா.

“வாட்? ஹஸ்பண்டா?????” - பேரதிர்ச்சி ஒன்று குந்தவையைப் பலமாய் தாக்கியது.

“ஆமா... அந்த டாக்டர் தானே உன்னோட ஹஸ்பண்ட். அவன்ட்ட போய்... பேசிட்டு வான்னு சொன்னா... திருந்திட்டாரு... அது இதுன்னு” - ஆஷா பேசிக் கொண்டே செல்ல,

“வாட்ட்ட்ட்ட்!!!” -கண்முன்னே பூச்சி பறந்தது குந்தவைக்கு.



# அத்தியாயம் 9

குந்தவையின் தலைக்குள் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டது போல், அப்படியொரு சத்தம்! வலி! இரைச்சல்!

கணவனா?!!

அவனா?!!

ஹய்யோ... என்ன நடக்கிறது இங்கே?

கண்களை இறுக மூடி, தான் கேட்டதை ஜீரணிக்க முயன்று தோற்றுப் போனாள் குந்தவை.

அப்பட்டமாய் வெளிப்பட்ட அவளது அதிர்ச்சி, குழப்பத்தை உண்டு பண்ண,

“ஹே... என்ன குந்தவை... ஏன் இவ்வளவு ஷாக் ஆகுறே?” என்று தோழியின் தோளைப் பற்றிக் குலுக்கினாள் ஆஷா.

தலையைக் குலுக்கித் தன்னுள் பிராவித்திருக்கும் அதிர்ச்சியை விலக்கி விட முயன்றாள் குந்தவை.

முடியத்தான் இல்லை!

“ஏய்... அவரு உன்னோட ஹஸ்பண்ட் தானேடி?”

“ஹய்யோ... இல்லை!!!”

“வாட்ட்ட்! என்னடி சொல்றே?” என்று அதிர்ந்த ஆஷா, “ஹே... டைவர்ஸ் ஆகிடுச்சுங்கிறதால அப்படிச் சொல்றியா?” என்றாள் சந்தேகமாய்.

“இல்ல ஆஷா... அவரை எனக்கு யாருன்னே தெரியாது!”

"என்னடி குழப்புற?" என்று தலையில் கை வைத்த ஆஷாவைத் தொடர்ந்து,

"குந்தவை... அவரு மேல இருக்கக் கோபத்தில... யாருன்னே தெரியலைன்னு சொல்றியா?"என்றான் ஜோஸ், அழுத்தமாக.

"என்ன ஜோஸ்... நீங்க? அவரு... என்னோட ஹஸ்பண்டே இல்லை..." -அடித்துக் கூறினாள் குந்தவை.

ஆஷா, புரியாமல் விழித்துக் கொண்டு நிற்க,

"பட்... முன்னாள் ஹஸ்பண்ட் கரெக்ட்டா?" என்றான் ஜோஸ். கணவன் செய்த துரோகத்தினால், அவனைக் கணவனாய் ஏற்றுக்கொள்ளும் மனப் பான்மை குந்தவையிடம் இல்லை என்பது அவனது எண்ணம்.

"ஹய்யோ... இல்ல... முன்னாளும் இல்ல... இந் நாளும் இல்லை!" என்று பரிதவித்த குந்தவை,

"நீங்க... எப்படி அவரை என்னோட ஹஸ்பண்ட்ன்னு முடிவு பண்ணீங்க?" என்றாள் கேள்வியாய்.

"என்ன பேசுறே நீ? ஸ்ரீயோட அப்பான்னு சொல்ற வரை... உன்னோட ஹஸ்பண்ட்ன்னு நினைக்காம என்னன்னு நினைக்கச் சொல்றே?"

தலையில் கை வைத்து, சற்று நேரம் தன்னையே ஆசுவாசப்படுத்திக் கொண்டவள், கையை எடுத்து நிமிரும் போது முகத்தில் தெளிவு இருந்தது.

"எனக்குமே... அவரு ஏன் அம்முட்ட அப்பான்னு சொன்னாருன்னு புரியல. ஆனா... அவரு என்னோட ஹஸ்பண்ட் கிடையாது. இது... உயிரா நா நினைக்கிற அம்மு மேல ப்ராமிஸ்" என்றாள் திடமாய்.



"ஹே... அறிவிருக்காடி உனக்கு? குழந்தை மேல ப்ராமிஸ் பண்ணிட்டு இருக்கே!" என்று ஆஷா கடிந்து கொள்ள,

"ப்ராமிஸ் பண்ணித் தான்... எங்களுக்கு ப்ரூவ் பண்ணணும் இல்ல, குந்தவை. அவரு மேல இருக்கக் கோவத்தில... ஹஸ்பண்ட் இல்லைன்னு சொல்றி யோன்னு நான் கேட்டேன்.ஆனா... நீ... இவ்வளவு தூரம் சொல்லும் போது..." - தோழனாய் அவளைப் புரிந்து கொள்ள முயன்றபோதும், விடை தெரியா பல கேள்விகளால் நிரம்பியிருந்தது அவனது மனம்.

"இல்ல ஜோஸ்... நிஜமாவே இல்லை. ஹய்யோ... எப்படி சொல்லிப் புரிய வைப்பேன் உங்களுக்கு?" என்று மருகிய குந்தவையிடம்,

"எங்களுக்குப் புரிய வைக்கிறது... இருக்கட்டும்! இந்த பாலாஜி... யாரு முதல?" என்றாள் ஆஷா.

"தெரியலையே!" - ஆத்திரமாய் வந்தது குந்தவைக்கு.

எங்கிருந்து வந்து தொலைத்தான்?

ஏன் வந்திருக்கிறான்?

என்ன செய்யப் போகிறான்?

தலை வெடித்து விடும் போலிருந்தது.

குந்தவையின் எண்ணங்கள் அவனைச் சுற்றி ஓடும் போதே, "ஹஸ்பண்ட்டான்னு கேட்டதுக்கு... எஸ்ன்னு சொன்னான் ஆஷா! அதான்...இன்னும்

குழப்பமா இருக்கு!" என்றான் ஜோஸ், நெற்றியைத் தேய்த்துவிட்டுக் கொண்டு.

"என்னது எஸ்ன்னு சொன்னானா? - ஆஷா அதிர, குந்தவையோ நெற்றி சுருங்க ஜோஸையே பார்த் திருந்தாள்.

"ஆமா... எஸ்... but not in the present ன்னு சொன்னான். நா... பாஸ்ட் ஹஸ்பண்ட்ங்கிறதை இப்படி சொல்றானோன்னு நினைச்சேன்."

"அப்படின்னா? குந்தவை சொல்றதை வச்சுப் பார்த்தா... இவன் பாஸ்ட் இல்லை. ப்ரசென்ட்டும் இல்லைன்னு அவனே சொல்லிட்டான். அப்போ.... ஃபியூச்சரா..."- ஆஷா சத்தமாக யோசிக்க,

"நோ!!! நோ... வே!" என்று ஆணித்தரமாய் இடையிட்ட குந்தவையின் கண்களில் இருந்த தீவிரம், ஆஷா - ஜோஸ் இருவரையும் திகைக்க வைத்தது.

"குந்தவை" - என்று ஜோஸ் பேசத் தொடங்கும் முன்னர்,

"கியா பாத் ஹே யார்?! ஹெட் இஸ் ஆன் மை ஹெட்! குந்தவை... கம் யார்" என்றபடி ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து ஓடி வந்தான் விக்ராந்த். அவர்களுடன் வேலை செய்யும் வட இந்தியன்.

அவன் பேச்சில், வேலை நினைவு வர, ஆழ மூச்செடுத்து தன்னை நிதானப்படுத்திக் கொண்டவள், இன்னும் ஐந்தே நிமிடத்தில் வருவதாகக் கூறி, விக்ராந்தை அனுப்பி வைத்தாள்.

ஆஷாவிடம் திரும்பி, "ஆஷா... முதல வேலையைப் பார்க்கலாம். அப்புறம்... அந்தாளை நா டீல் பண்ணிக் கிறேன்" எனக் குந்தவை கூறவும்,



"I will go and blast him! எப்படி... பொய் சொல்லியிருக்கான் பாரு? நா... அவ்வளவு திட்டினேன்... ஆஷா. புத்தன் மாதிரி கேட்டுட்டு இருந்தான். .. நடிச்சிட்டு இருந்திருக்கான்... ச்சே" என்றான் ஜோஸ், கோபமாய்.

"இல்ல ஜோஸ்! நீங்க பேச வேண்டாம்! நானே... நேரடியா பேசுறேன்!" என்றாள் குந்தவை தீர்மானமாய்.

"நீ... ரொம்ப எமோஷனலா தெரியுற குந்தவை! ஜோசையே... பேசச் சொல்லலாம்" என ஆஷா தோழிக்காய் பார்க்கவே,

மெலிதாய் புன்னகைத்த குந்தவை, "இதை விட... எமோஷனல் டாக்ஸ் எல்லாம் ஹேண்டில் பண்ணி யிருக்கேன் ஆஷா! அதிலிருந்தும் வெளிய வந்திருக் கேன். என்னால... சமாளிக்க முடியும்! ஐ வில் ஹேண்டில் ஹிம்!" என்றாள்.

"இல்லடி... நேத்தே ரொம்ப அழுதிருக்கே... இப்போ... இவன் வேற ஹஸ்பண்ட் அது இதுன்னு உளறியிருக்கான். அதான்..."

"இல்ல ஆஷா... நேத்து அப்பான்னு சொன்னதும், தூக்கி வாரிப் போட்டிருச்சு! அப்படியே படபடன்னு..." - தான் உணர்ந்ததை வார்த்தையால் வெளிப்படுத்த முடியாமல் சற்று நேரம் கண் மூடி நின்ற குந்தவை,

"வாழ்க்கையில எத்தனையோ கஷ்டங்களை ஃபேஸ் பண்ணியிருக்கேன். அதெல்லாம் எனக்கு வந்த கஷ்டம். ஆனா... இப்போ ஸ்ரீயையும் அதில சம்பந்தப் படுத்தின உடனே... ஐ லாஸ்ட் மை கண்ட்ரோல்!" என்றாள் தான் நிதானம் இழந்ததற்கான விளக்கமாய்.

வேலையிடம் என்றும் பாராமல், குந்தவையை மிதமாய் அணைத்துக் கொண்ட ஆஷாவின் நட்பு மௌனமாய் மேடையேறியது.

"சரி... சரி... ஹெட் கத்தறதுக்குள்ள போய்டலாம்" என்ற குந்தவையைத் தொடர்ந்து.

"அவரு கத்துறாரோ இல்லையோ... எலிப் பொந்துல மாட்டிக்கிட்ட பூனை மாதிரி சீனைப் போட்டுட்டு அலைவான்.வா..." என்றபடியே ஆஷாவும் உள்ளே சென்றாள்.

போகும் போது, "ஜோஸ்... நீங்க அந்த டாக்டர்ட்ட எதுவுமே பேசிக்க வேண்டாம். ஏன்... அவரு என்னோட ஹஸ்பண்டே இல்லைங்கிற விஷயம் தெரிஞ்ச மாதிரி கூடக் காட்டிக்க வேண்டாம். நா... பேசிக்கிறேன்" என மீண்டுமொரு முறை வலியுறுத்திவிட்டு, வேலையைப் பார்க்கச் சென்றாள் குநதவை.

அதன்பின், வேலையும்... அதை விட அந்தச் சிடுமூஞ்சி ஹெட்டின் கர்ஜனையுமாய் நேரம் கழிந்த போதும், குந்தவையின் மூளையையும் மனதையும் "பாலாஜி" மட்டுமே நிறைந்திருந்தான்.

மூளையின் ஒரு சிறு செல்லைக் கூட சும்மா இருக்க விடாமல், இவனைத் தனக்கு முன்னரே தெரியுமா என்று கேள்வியை அவற்றுள் புகுத்தி, யோசிக்க வைத்தாள்.

ம்ஹூம்!

பள்ளி...கல்லூரி... அமெரிக்க வாசம்... சொந்தம்... நட்பு... என்று எந்த வகையிலும், அவனது முகம் பரிச்சயப்பட்டதாய் தெரியவில்லை.



பாலாஜி என்ற பெயரைச் சில இடங்களில் கேள்விப்பட்டிருக்கிறாள் தான். ஆனால், அப்பெயர்களுக்கு உண்டான முகம்... இவனது முகத்தோடு ஒத்துப் போகவில்லை.

யாரிவன்?

யாராக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும்? ஆனால், இங்கே ஏன் வந்தான்? ஏன்... ஸ்ரீயிடம் தந்தை என்றான்? ஏன்... கணவன் என்கிறான்?

ஆயிரமாயிரம் கேள்விகள் உதயமான போதும். குந்தவை திடமாகவே இருந்தாள்.

நேற்றிருந்த அதே கோபம் இன்றும் இருந்த போதும், நேற்றிருந்த அழுகை இன்றில்லை.

"ஸ்ரீ" என்ற தனது அடித்தளத்தை அவன் அசைக்கவும் சற்றே கலங்கியவள்,

இப்போது அவன் தன்னைத் தொட நினைக்கவும், சுதாரித்தாள்.

இல்லை... அவனது குறி... நான்! என்னைச் சாய்க்க... ஸ்ரீயைக் கல்லாய் பயன்படுத்தப் பார்க்கிறான்!

கூடாது!

அவனது இந்த விளையாட்டில், தானும் அடிப்பட்டு... ஸ்ரீக்கும் சேதாரம் வரும்படி செய்துவிடக் கூடாது!

கவனம்! கவனம்! கவனமாய் அவனைக் கையாள வேண்டும்!

தன் கவனம் முழுதையும் ஒருங்கே கூட்டி, அவனிடம் பேசவேண்டிய விஷயங்களை நிதானமாய் வரையறுத்தாள்.

அதே நிதானத்துடன், மதிய உணவு இடை வேளை விட்டதும், டே கேர் நோக்கிச் சென்றாள்.

அங்கே அவள் கண்ட காட்சி!

நிதானம்... நிதானம்... நிதானம் என்று உருப் போட்டு அவள் வரவழைத்திருந்த நிதானத்தைச் சுக்கு நூறாய் உடைத்தது.

அவன்... அது தான் அந்த பாலாஜி தரையில் சம்மணமிட்டு அமர்ந்திருக்க, அவனது மடியில் ஸ்ரீ!

அதுமட்டுமில்லாமல், ஸ்ரீக்கு உணவூட்டிக் கொண்டிருந்தான்!

ஆத்திரம் கண்களைக் கடந்து, இமைகளில் இறங்க, கண் மூடித் திறந்தவள்,

"அம்மு!!!"என்றாள் அழைப்பாய்.

"ம்மா... வந்தாச்சு..." என்று கத்திக் கொண்டு ஓடி வந்தாள் ஸ்ரீ.

அந்த ஆர்ப்பரிப்பில், ஆத்திரத்தை ஆனந்தம் நிரப்ப, "அம்முக்குட்டி..." என்று அவளைத் தூக்கி உச்சி முகர்ந்தாள் குந்தவை.

"ம்மா...பா... இய்யம்மா... பா அங்க்கி சொவ் விட்டா" என்றாள் ஸ்ரீ.

தாயின் அழுகைக்கான வித்தென்று, அப்பிஞ்சு எண்ணிய "அழைப்பு", இப்போது பழையபடி மாறி விட்டதில், தாய் சந்தோஷமாகி விடுவாள் என் றெண்ணினாள் போலும்!

குதூகலமாய் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சியது கன்று.



"அப்படியாடா... சூப்பர். சாப்பிடலாமா?" எனப் பிள்ளையைக் குந்தவை கொஞ்சவும்,

"இன்னும்... ரெண்டு வாய் தான் இருக்கு. ஊட்டிடு" என்றான் பாலா, அவளிடம் சாப்பாட்டுக் கிண்ணத்தைக் கொடுத்து.

"ஆர்டர் போடற மூஞ்சியைப் பாரு" என்று ஆத்திரம் கிளம்பியபோது, கிண்ணத்தைப் பறித்துக் கொண்டு, "உங்கட்ட கொஞ்சம் பேசணும்" என்றாள் குந்தவை, சாதாரணக் குரலில்.

"ஊட்டிட்டு வா... பேசலாம்!" என்றான் அவன், கூலாக.

"குழந்தை முன்னாடி... இன்னொரு ஸீன் கிரியேட் பண்ண மாட்டேன்னு நம்புறேன்" என அவன் மேலும் பேச,

அவனை நேர் கொண்டு பார்த்த குந்தவை "அவ... என் பொண்ணு!"என்றாள் அவன் கண்களைத் தாக்கியபடி.

"ரியல்லி!?" என்று ஏகத்திற்கும் புருவத்தை உயர்த்தி வியந்த பாலாஜி,

"வெளிய வெயிட் பண்றேன்" என்றபடி அங் கிருந்து நகர்ந்தான்.

கால் மணி நேரம் கழித்து, கைகளைக் கர்ச்சீப்பில் துடைத்தபடி வந்தாள் குந்தவை.

கையை மார்பிற்குக் குறுக்கே கட்டியபடி மரத் தடியில் நின்றிருந்த பாலாவிடம் அவள் கேட்ட முதல் கேள்வி,

"யார் நீங்க?" என்பது தான்.

"நா... பாலாஜி. பாலாஜி சங்கரன். சைல்ட் ஸ்பெஷலிஸ்ட்!"

"என்னவா வேணா இருந்துட்டுப் போங்க.... ஆனா... இங்க என்ன பண்றிங்க?"

"இங்க இருக்க கிளினிக்ல கன்சல்டேஷன் பண்றேன்"

"நா... உங்களோட வேலையைப் பத்திக் கேட் கலை. என் பொண்ணுக்கும்... எனக்கும் நடுவுல என்ன பண்றீங்க?"

முந்தைய தினம் போல், இன்றைய கேள்விகள் எதிலுமே கோபம் இருக்கவில்லை. மாறாய், ஒரு நிதானம். ஒரு ஒதுக்கம். ஒரு மூன்றாம் மனிதத் தனம். ஒரு விலகல்.

'பி.ஹெட்ச்டி படிச்சதுக்கு... இப்பத் தான் நியாயம் பண்றா' என்று உள்ளம், அவளது தெளிவைச் சிலாகிக்க,

"உங்களுக்கு நடுவுல வரப் பார்க்கலை. உங்க ளுக்குத் துணையா வரப் பார்க்கிறேன்"

"எங்களுக்குத் துணை தேவையில்லை"

"இருக்கலாம். ஆனா... உங்களுக்குத் துணை தேவைன்னு எனக்குத் தோணுது!"

"உங்களுக்குத் தோணுறதுக்காக எல்லாம்... எங்க ளால வாழ முடியாது. அதுவுமில்லாம... உங்களுக்கும் எனக்கும் என்ன சம்மந்தம்? உங்களை... நா இதுக்கு முன்னாடி பார்த்தது கூடக் கிடையாது. அப்படியிருக்கும்



போது..." - தோளைக் குலுக்கிக் கொண்டு, சலிப்பு மேலிட இழுத்தாள் குந்தவை.

"உனக்கும் எனக்கும் சம்மந்தம்னு நா சொல்லவே இல்லையே!"

"புரியல!

"சிம்பிள் மாத்ஸ்... மேடம்.a = b, b =c. so.. a=c."

குந்தவை ஒன்றும் சொல்லாமல் அவனையே பார்த்திருக்க, குந்தவையைப் போலவே தோளைக் குலுக்கினான் பாலாஜி! சிரிப்புடன்!

## அத்தியாயம் 10

குந்தவை, பாலாஜியை நேர் பார்வையாய் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனுமே, அவள் பார்வையை சளைக்காமல் தாங்கி நின்றான்.

விருட்டெனத் திரும்பி நடந்தாள் குந்தவை.

பாலாஜியும் அவளைத் தடுக்கவில்லை.

நேராக டே கேருக்குள் நுழையாமல், அலுவலகம் நோக்கி நடந்தாள்.

பார்வையில் முடிச்சுடன் அவளையே பார்த்திருந் தான் பாலாஜி.

பத்து நிமிடத்தில் திரும்பி வந்தவள், மீண்டும் டே கேருக்குள் நுழைந்தாள்.

வெளியே வந்தவளின் இடக்கையை ஸ்ரீதுளசி பற்றியிருக்க, வலக்கையில் அவளது பைகள் இருந்தன.

'என்னாச்சு...?' என அவன் யோசிக்கும் போதே, வீடு நோக்கி நடந்தனர் தாயும் மகளும்.

பார்வையால் மட்டுமே பின்தொடர முடிந்தது பாலாஜியால். அதிரடியாய் அவளது வீட்டிற்குள் நுழையுமளவு அவன் அவசரக்காரன் அல்ல என்பதால், அவர்களது தலை மறையும் வரை பார்த்திருந்துவிட்டு, தான் வேலை பார்க்கும் மருத்துவமனைக்குக் கிளம்பிச் சென்றான். சோறு போடும் தொழிலைப் புறக்கணிக்க முடியாதே!

வீட்டிற்குள் நுழைந்த குந்தவையை, "ம்மா... ஆச்ச்சீஸ் இய்யா?" எனத் தொணத்தி எடுத்தாள் ஸ்ரீதுளசி.

"இல்லடா... அம்மாக்கு முடியலைடா. அதான்... லீவ் போட்டுட்டு... அம்முவோட இருக்கலாம்னு வந்துட்டேன்" என்று மீண்டுமொரு முறை, குழந்தைக்குப் பதில் சொன்ன குந்தவை,

"கொஞ்ச நேரம்... தூங்கலாமாடா? வரியா?" எனக் கேட்டாள்.

"தூச்சா? மே... தூச்சா? கீ... தூச்சா?"

"நீயே சொல்லு!"

"ஹா ஆ ஆ ஆ...ன்! மே... தூச்சு...வா" என்று தாயை இழுத்துக் கொண்டு படுக்கைக்குச் சென்றாள் ஸ்ரீதுளசி.

அவள் படுக்கையில் ஏறிப் படுக்கவும், குந்தவையும் படுக்க எத்தனிக்க,

"ம்மா... பாத்து போவே?" என்று ஏவினாள் சின்னவள்.



எப்போதும் சாமிப் பாட்டு எதையாவது பின்னணியில் ஒலிக்க விட்டபடி உறங்குவது குந்தவையின் பழக்கம்.

குழந்தையும் கெட்ட கனவுகளின் தாக்கத்தில் நடுநடுவே விழித்துக் கொள்ளாமல் இருப்பாள் என்பதால், மெல்லிசையாய் அவற்றை ஓடவிடும் குந்தவை, அப்பாடல்கள் போற்றும் தெய்வங்களைப் பற்றிய சிறுசிறு கதைகளையும் பெண்ணிற்குச் சொல்லுவாள்.

அதை மனதில் வைத்துக் கொண்டு, ஸ்ரீ கேட்கவே, "ஹ்ம்ம்... சரி போடுறேன் இரு"என்றபடி சி.டி. ப்ளேயரை ஓடவிட்டாள்.

ஏற்கனவே, பாதி ஓடி நின்றிருந்த நித்யஸ்ரீ மகாதேவனின் திருப்பாவை ஓடத் தொடங்கியது.

மார்கழி மாதத்தின் தொடக்கத்தில், இந்தப் பாடல் தட்டை வாங்கி வந்தது தொட்டு, குந்தவையின் விருப்பப் பாடல் தொகுப்பாய் மாறிவிட்டிருந்தது இத்தொகுப்பு.

தன் பக்கத்து ஊர்க்காரியான ஆண்டாள் பாடிய இத்திருப்பாவை மீது எப்போதுமே குந்தவைக்கு ஓர் ஈர்ப்பு இருந்ததுண்டு.

மேலும், நித்யஸ்ரீ மகாதேவன் மீதான மரியாதையும் பிரம்மிப்பும் சில வருடங்களாய் பன்மடங்காகியிருக்க, தனக்குப் பிடித்த இரு பெண்களின் சங்கமத்தை ரசித்துக் கேட்பாள் குந்தவை.

ஆண்டாளின் வரிகளுக்கு நித்யஸ்ரீ இசை புகுத்த, மகளுடன் வந்து படுத்தாள் குந்தவை.

"ம்மா...கத்தே..."

"நைட் சொல்றேன்டா... ப்ளீஸ்..."

"ம்ம்ம்... கத்தே..."

"அம்மாக்குத் தலை வலிக்குதுடா... நைட் சொல்லட்டா?"

"வவ்வியா?"

"ம்ம்...ஆமா..."

"ஷீ... பாப்பா அம்மவா"

"வேணாம்... வேணாம். அம்மு அழுக்க வேணாம். நீ தூங்கு... அம்மாவும் தூங்குறேன்" என்றவள், பெண்ணின் பட்டுக் கூந்தலை ஒதுக்கி விட்டாள்.

டே கேரில் மதியம் உறங்கிப் பழக்கம் என்பதால், பிள்ளையின் கண்கள் தூக்கத்தில் சொக்கின.

பெண்ணின் பூ மேனியை மெல்ல வருடி... அவளைத் தூக்கத்திற்குள் ஆழ்த்திய தாயின் கண்களில் தூக்கத்தின் சாயல் கூட இல்லை.

தன்னை அணைத்துக் கொண்டு உறங்கும் பெண்ணின் முகத்தையே பார்த்திருந்தவளின் கண்ணோரம் ஈரத்தின் சாயல்.

தாயின் கரங்கள்... பெண்ணின் மேனி முழுதையும் ஆசையும் பரிதவிப்புமாய் வருடிக் கொடுத்தன.

"அம்மு... என்னோட அம்மு...." என்று முணுமுணுத்தன உதடுகள்.

தாயின் தவிப்பை உணராத பிள்ளையோ, தூக்கத்திலேயே தாயின் மார்பில் தலை வைத்து, செல்லம் கொஞ்சியது.



தன் மாரோடு முட்டி நின்ற சின்னவளின் தலையை ஆதரவாய் வருடிக் கொடுத்த குந்தவை, பெண்ணின் காலைத் தூக்கித் தன் தொடை மீது போட்டுக் கொண்டாள்.

தாய்க்கும் பெண்ணிற்குமான இடைவெளி குறைந்தது.

பெண்ணின் மேனியைத் தலை முதல் பாதம் வரை மெல்ல வருடின விரல்கள்.

விரல்களில் மெல்ல மெல்ல புகுந்த நடுக்கம், உள்ளத்தில் இருக்கும் இறுக்கத்திற்கு வடிகாலாய் மாற, பெண்ணின் தலையை மாரோடு சேர்த்தணைத்தாள் குந்தவை.

"ம்மா..." என்று மேலும் ஒட்டினாள் ஸ்ரீ.

அப்போது ஸ்ரீயின் உதடுகள்... துணியால் மூடியிருந்த குந்தவையின் மார்புக் காம்புகளை உரசிச் செல்ல, சிலிர்த்து அடங்கியது குந்தவையின் மேனி.

என் பிள்ளை! என் பிள்ளை! என்று மீண்டும் மீண்டும் உருப்போட்டது மனம்!

பின்னணியில்

"ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே, உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய்"

எனத் தொடங்கும் இருபத்தியைந்தாம் திருப் பாவை பாசுரத்தைப் பாடிக் கொண்டிருந்தார் நித்யஸ்ரீ.

புறக்கண் முன்னே துளசி உறங்கிக் கொண்டிருக்க, அகக்கண் முன்னே காட்சிகள் விரியத் தொடங்கின.

குழலூதும் கண்ணனாய் சிரித்தாள் ஸ்ரீதுளசி.

விஷ்ணுவின் பரம பக்தையான துளசியே விஷ்ணுவாய் உருமாறி, குந்தவையைப் பார்த்து புருவம் உயர்த்தினாள்!

"ஒருத்தி மகளாய் பிறந்து... ஒருத்தி மகளாய்... " என்று அவள் பாடும் கீதம், நெஞ்சின் காதுகளை அடைத்தது!

"ஒருத்தி மகளாய் பிறந்து..."

"ஒருத்தி மகளாய் வளர்ந்து..."

உள் மனதின் கீதம் தொடர, "என்ன சரி தானே!?" என்று சொடுக்குப் போட்டுக் கேட்டாள், விஷ்ணுவின் வடிவான சாலிகிராமத்தை மணந்த துளசி!

குந்தவையின் மேனி மயிர்கள், சிலிர்த்து நின்றன.

மின்சாரம் தாக்கியவள் போல் திகைத்து விழித்த குந்தவை, ஸ்ரீயைத் தன்னுடன் இறுக... இறுக அணைத் தாள். அந்த இறுக்கத்தைத் தாள முடியாமல், பிள்ளை "ம்ம்ம்" என்று முனங்கும் வரை, குந்தவை தன் பிடியைத் தளர்த்தவே இல்லை.

பிள்ளை சிணுங்கிக் கொண்டு, திமிரவும் தான் "ஹய்யோ...சாரிடா... சாரி... அம்மாவ விட்டுப் போய்டாதடா" என்று பரிதவித்தபடி, பெண்ணை லேசாய் விலக்கி, உறங்கும் பிள்ளையின் முகத்தை நிமிர்த்திக் கெஞ்சினாள் குந்தவை.



புரிந்தோ...புரியாமலோ "ம்மா..." என்று ஆசை யாய் ஒட்டிக் கொண்டது சிட்டு.

ஓரமாய் துளிர்த்து நின்ற கண்ணீர், சஹாரா பாலை வனத்தில் போடப்பட்ட பனிக்கட்டியாய் உடைப் பெடுக்க, குந்தவை உடைந்தாள்.

"அம்மு........." என்ற அழைப்பு அடி வயிற்றி லிருந்து கிளம்பி வர, பெண்ணின் உச்சியில் பதிந்து எழுந்தன உதடுகள்.

"தாயிருந்தும் தாயற்றவளாய் வாழும் தனக்குத் தாயாய் இரடி செல்லமகளே!" என்ற ஆசையில், அவளை "அம்மு" என்றழைக்கத் தொடங்கியிருந்த குந்தவை, சேயாய் மாறி தாயின் இதம் தேடினாள்.

பெண்ணின் பிஞ்சுக் கரத்தை எடுத்து தன் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டவள், சில வினாடிகளில் அக்கையைப் பிரித்து, உள்ளங்கையில் அழுத்தமாய் ஒரு முத்தம் வைத்தாள்.

அம்மு...

அம்மு...

என் செல்ல அம்மு...

என்னோட பட்டு அம்மு...

என்னோட அம்மு...

ஆம், அவளுடையே அம்மு மட்டுமே!

அவளுக்கு மட்டுமே உரித்தானவள் இந்த அம்மு!

தன் தாயானவளுக்கு... தாயும் அவளே! தந்தை யும் அவளே!

அம்முவின் தாயுமானவள் குந்தவை!

எப்படிப்பட்ட பதிவிரதையாய் இருந்தாலும், பத்து மாதங்கள் கடந்த பின்னர் தான், தன் பிள்ளையின் முக வடிவைக் காண முடியும்.

ஆணா!?

பெண்ணா!?

கருப்பா!?

சிவப்பா!?

எதுவானாலும்,ஜனித்த தினம் தொட்டு... ஒன்பது மாதங்களேனும் காத்திருக்க வேண்டும்.

உயிர் ஜனித்து... உருவம் பெற்று... உதிரம் பாய்ந்து... உயிர் வலியெடுத்து... பிரசவம் காணும் தாய்மார்களின் மத்தியில். மனதால் தாயானவள் குந்தவை!

மணி வயிற்றில் சுமந்தால் தான் பிள்ளையா?!

மனமாடத்தில் சுமந்தவளுக்குத் தாயென்ற பட்டம் உரித்ததாகாதா என்ன?

இன்றும் குந்தவைக்கு... அன்றைய தினம் நினைவு இருக்கிறது.

"Ms.Kunthavai... your adoption petition has been approved. You can visit the orphanage and choose your child" என்ற செய்தியைத் தாங்கி வந்த Central Adoption Resource Authority (CARA) - இன் அழைப்பை நம்பவே குந்தவைக்குப் பல நிமிடங்கள் பிடித்தன.

இவ்வளவு சீக்கிரமா?

ஒரே மாதத்திலா?

இன்ப அதிர்ச்சியாய் இருந்தது குந்தவைக்கு!



பல காலங்களாய், துன்ப அதிர்ச்சிகளாய் பல வற்றைத் தாங்கிய அந்த வைர நெஞ்சம், அந்தச் சிறு இன்ப அதிர்ச்சியில் வெதும்பிப் போனது!

தம்பதியாய் வருபவருக்குத் தான் முதலிடம் "Single Mom" என்றழைக்கப்படும் பெண்களை அவ் வளவு சீக்கிரத்தில் அங்கீகரிப்பதில்லை.

அப்படியே அங்கீகரித்தாலும், எப்படியும் ஒரு வருடமாக்கி விடுவார்கள்.

தம்பதியருக்கே... ஆறு முதல் எட்டு மாதக் கால அவகாசம் பிடிக்கையில், தனி மனுஷியாய் ஒரு பெண் குழந்தையைத் தத்தெடுப்பது என்பது பெரிய விஷயம்!

"தாய் - தந்தை" என்ற குடும்பக் கட்டமைப்புக் குள் வாழும் குழந்தைகளே, நலமாய் இருப்பார்கள் என்ற சமூகத்தின் எண்ணம், ஒரு பெண் தன்னந்தனியாய் ஒரு பிள்ளையைத் தத்தெடுப்பதை விரும்புவதில்லை அல்லவா?! அதனாலேயே பல தடங்கல்கள்!

ஆயிரத்தெட்டு விசாரணைகள்!

நூற்றியெட்டு விதிமுறைகள்!

எண்ணிலடங்கா கேள்விகள்!

துளைக்கும் பார்வைகள்!

இப்படி... எத்தனையோ பயமுறுத்தல்களுக்கு நடுவே தான், பெங்களூரில் வேலைக்குச் சேர்ந்ததும், Central Adoption Resource Authority (CARA) விற்கு, ஒரு தனியார் தொண்டு நிறுவனம் மூலமாக, ஒரு பெண் குழந்தையைத் தத்தெடுக்க விண்ணப்பித்தாள்.

அப்போது குந்தவைக்கு DRDO வில் வேலை கிடைத்திருக்கவில்லை.

ஏதேனும் ஒரு வேலை கிடைத்தால் போதும்... அந்த ஊரை விட்டு... தன்னை ஜாடை பேசும் சுற்றத்தை விட்டு... ஏமாளி என்று தூற்றும் உறவுகளை விட்டு... மலடி என்று சொல்லாமல் சொல்லும் தாயை விட்டு... திருமணம் மட்டுமே ஒரு பெண்ணின் வாழ்க்கையை ஒளி விடச் செய்யும் என்றெண்ணும் தந்தையை விட்டு... இரண்டாவதாய் ஒரு திருமணம் தன் தங்கைக்கு நடக்கவே போவதில்லை என்று கோபம் கொள்ளும் அண்ணனை விட்டு... பரிதாபப்படும் அண்ணியை விட்டு என்று எல்லாவற்றையும் விட்டு ஓடி வர, அவளுக்கு ஒரு வேலை தேவையாய் இருக்கவே, கல்லூரி ஒன்றில் விரிவுரையாளராய் கிடைத்த வேலைக்கு வந்து விட்டிருந்தாள் குந்தவை.

வந்ததும் முதல் வேலையாக, Central Adoption Resource Authority (CARA) யில் பதிவு செய்து வைத்தாள்.

சுற்றியிருந்தவர்களும்... தொண்டு நிறுவனத்தாரும்... இணையதளமும் அவளை ரொம்பவே கவலைக்குள்ளாக்கி இருந்தனர்.

எப்படியும் ஆறு மாதம் கழித்துத் தான் உங்கள் விண்ணப்பமே கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று அனைவரும் அடித்துச் செல்ல, ஒரே மாதத்தில் தன் விண்ணப்பத்தை ஆய்வு செய்ததோடு அல்லாமல், உடல்நலம்... மனநலம்... பணபலம்... வேலைத்தரம் என்று அனைத்தையும் ஆராய்ந்து, 'நீங்க ஒரு குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்ளத் தகுதியானவரே' என்று சான்றிதழும் வழங்கி விட்டார்களே!

நெஞ்சம் நன்றியில் தோய்ந்தது குந்தவைக்கு!



'அழக்கூடாது...அழக்கூடாது...' என்று அடக்கி வைத்த அழுகையெல்லாம், ஆறாய் பெருக்கெடுத்து ஓட, தன் சிறு பூஜையறை நோக்கி ஓடினாள் குந்தவை.

'கடவுளே, இந்தவொரு விஷயத்திலாவது எனக்குக் கருணை காட்டினியே!' என்றவளுக்குப் பதிலாய், குழலூதும் கண்ணன் மோகனமாய் சிரித்து, 'போ...போய்... என் பரம பக்தையை வீட்டிற்கு அழைத்துவா' என ஆசீர்வதித்தான்.

"கிருஷ்ணா..."

"கிருஷ்ணா..."

"கிருஷ்ணா..."

கைகள் கூப்பியிருக்க, உதடுகள் உருக்கமாய் திருமாலின் பெயரை உச்சரிக்க, மூடிய இமைகளின் வழியே கோடென கண்ணீர் வழிய, நெஞ்சம் நிறைய நன்றியுடன், உலகளந்த உத்தமனின் முன்னே கை கூப்பி நின்றாள் குந்தவை.

உள்ளுக்குள், என்னவோ செய்தது!

அந்த நிமிடம்... அந்த நொடி... அந்த நாழிகை...

குந்தவை தாயாய் உருமாறினாள்!

உள்ளுக்குள் தாய்மை பெருக்கெடுத்து ஓடியது!

தன்னுள் ஒரு உயிர் உருவாகிறது என்ற செய்தியை உணரும் தாயைப் போலவே,

தனக்கென ஒரு உயிர் வரப் போகிறது என்ற செய்தியைக் கேட்ட அத்தாயும் பரவசப்பட்டாள்.

ஆசையாய் வயிற்றை வருடிக் கொடுத்தாள்.

என்னவோ... இப்போது அவள் பார்க்கப் போகும் குழந்தை தன்னுள்ளே உருவானது போல் ஓர் பரவசம்.

"கண்ணா..." - பக்தியும் பாசமுமாய் தன் இஷ்ட தெய்வத்தின் முன்னே கண்ணீர் மல்க நின்றிருந்தவள்,

"கண்ணா... நா போய் என்னோட பாப்பாவைப் பார்த்துட்டு வந்துடுறேன்" என்றாள் ஆசை மேலோங்க.

கண்ணன் தன் ஆசையைக் காது கொடுத்துக் கேட்பான் என்ற நம்பிக்கையில், அவனிடம் தொடர்ந்து பேசினாள்! அவளுக்கும் தான் யார் இருக்கிறார்கள் பேச?!

"இன்னைக்கே பாப்பாவைத் தர மாட்டாங்க"

"என்னோட பாப்பா யாருன்னு நானே செலக்ட் பண்ணிக்கலாம்..."

"சூப்பர்ல்ல கண்ணா... எந்தவொரு அம்மாக் காச்சும் இந்த வாய்ப்பு கிடைக்குமா?"

"தன் பிள்ளையைத் தானே செலக்ட் பண்ணிக்கிற பாக்கியத்தை எனக்குக் கொடுத்திருக்கே!"

"தேங்க்ஸ்... கண்ணா! தேங்க்ஸ்... தேங்க்ஸ் சோ மச்!"

"பிள்ளையைப் பார்த்திட்டு... இவ தான் என் குழந்தைன்னு எழுதிக் கொடுத்திட்டு வந்துடுறேன்... சரியா? அப்புறம்... அடுத்த வாரம்... நம்ம வீட்டுக்குப் பாப்பாவைக் கூட்டிட்டு வந்திடலாம்"

"அவ... வந்ததும், நல்லாப் பார்த்துக்கணும் என்ன?"

"அவளை நாம நல்லா வளர்க்கிறோம்ன்னு தெரிஞ்சா தான்... லீகல் பேப்பர்ஸ் எல்லாம் மூவ் பண்ணி... கூடிய சீக்கிரமே அவளை நம்ம பாப்பாவா



வச்சுக்க முடியும். அதுக்கு... எனக்கு ஹெல்ப் பண்ணு கண்ணா!"

"அவ... என்னோட ஒட்டணும்!"

"அம்மான்னு என்னைக் கூப்பிடணும்!"

"என்னைக் கட்டிக்கணும்..."

"முத்தம் கொடுக்கணும்..."

"செல்லம் கொஞ்சணும்..."

"அடம் பிடிக்கணும்..."

"என்னைக் கோபப்படுத்தணும்..."

"என்னோட சண்டை போடணும்..."

"கழுத்தைக்கட்டிட்டு... அம்மான்னு ஆசையா இருக்கணும்"

"ஹ்ம்ம்... இருப்பா தானே? இருக்க வைப்ப தானே?"

தன் ஆசைக்கு வார்த்தை வடிவம் கொடுத்து கொண்டிருந்தவளுக்குப் பதில் போல், குட்டிக் கிருஷ்ண னின் மேலிருந்த துளசி இலை, அருகே இருந்த குங்கும டப்பாவிற்குள் விழுந்தது.

கண்கள் பரவசத்தில் குளமாக, அத்துளசியை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டாள் குந்தவை.

மனம், அத்துளசியாய் மகளைக் கண்டது!

துளசி! துளசி!

என் கண்ணனுக்குப் பிடித்த துளசி!

நெஞ்சம் நிறைய தொண்டு நிறுவனத்திற்குக் கிளம்பிச் சென்றாள் குந்தவை!

பெண்ணென்று முடிவு செய்து விட்டபோதும்,

என்ன நிறம்... ராதையின் பால் வண்ணமா? கண்ணனின் கார் வண்ணமா?

என்ன உயரம்... சிறு பூப்பந்தைப் போல் குட்டையா? பூச்செடியென நல்ல உயரமா?

அடுக்கு மல்லிகைப் பூக்களைப் போல் புசுபுசு வென்று இருப்பாளா? ஜாதிப் பூவாய் ஒல்லியாய் இருப்பாளா?

கயல்விழிகளா? அகன்ற அகழி விழிகளா? பூனை விழிகளா? பட்டாம்பூச்சி சிறகுகளா?

ஒவ்வொன்றாய் கற்பனை செய்து பார்த்த குந்தவைக்குள் விரவிய உணர்விற்குப் பெயர் தாய்மை எனில், அவளும் தாயே!

ஒன்பது மாதம், கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் உயிரை நேசிக்கும் தாயின் அதே குணம்... அதே மனம்... அதே நிலை... அதே படபடப்பு... அதே பரவசம்... அதே பயம் என்று குந்தவையும் அந்த இரண்டு மணி நேரப் பயணத்தில் அனுபவித்தாள்.

உடனேயே, அப்பிள்ளையை வீட்டிற்கு இட்டு வர முடியாது என்ற சட்டத்தை உணர்ந்தாலும், தனக் கென்று ஒரு குழந்தை வரப் போவதை ஆசையும் பரவசமுமாய் அனுபவித்தாள் குந்தவை.

எட்டு வருடங்கள்!

எட்டு நீண்ட வருடங்கள்!

எத்தனை கோவில்கள்!

எத்தனை பிரார்த்தனைகள்!



எத்தனை மருத்துவர்கள்!

எத்தனை லட்சங்கள்!

எத்தனை சமாதானங்கள்!

'சமாதானம்' என்ற வார்த்தை, 'அவனை' நினைவு படுத்த,

'குந்தவை... நோ... நோ... நோ... அவனைப் பத்தி நினைக்காத, அவன் நினைப்பில கூட... உனக்கு ஒரு குழந்தை வேணாம்!' என்று உரக்க அறிவுறுத்தியது மனம்.

ஒருவேளை, அந்த ஈனப் பிறவியின் வாயிலாகத் தான் தாயாகக் கூடாது என்பதற்காகத் தான், இந்த ஏற்பாடு போலும் என்று காரணம் தேடிய மனதை, 'அவனை நினைக்காதே!' என்று பல்லைக் கடித்து அடக்கினாள் குந்தவை.

உள்ளங்கையில் மடித்து எடுத்து வந்த துளசியைக் கையை விரித்துப் பாத்தவள், அவற்றைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, தன்னை ஒரு நிலைப்படுத்தினாள்.

அத்துளசியின் தெய்வீகம் மகளின் வடிவங்களை உள்ளுக்குள் வடிக்கத் தொடங்கியது!

அதில்... கொஞ்சம் கொஞ்சமாய் கரைந்தவள், தன் மகளை முதன் முதலில் காணப் போகும் தருணத்தை எதிர்நோக்கி, தொண்டு நிறுவனத்திற்குள் நுழைந்தாள்.

உள்ளே சென்று, தன் விண்ணப்ப எண் மற்றும் விவரங்களைக் கொடுத்தாள்.

அவற்றைச் சரி பார்த்து, 'approval' வந்து விட்டது என்று உறுதி செய்து கொண்டவர்கள், "Come with us...

lets see the girl babies from ten months to 3 years" எனக் கூறி உள்ளே அழைத்துச் சென்றனர்.

கிட்டத்தட்ட இருபது குழந்தைகள்.

தவழ்ந்தபடி... நடந்தபடி... அழுதபடி... விளை யாடியபடி... சண்டையிட்டபடி...

இவர்களில்... யார்?!

இருபது பேரில்... யார் என் செல்வம்?

யார் கண்ணா... என் மகள்?

காட்டிவிடடா!

கண்களைச் சுழல விட்டவளின் பார்வையில், மண்டியிட்டுப் படுத்திருந்த ஒரு குழந்தையின் முதுகின் மீது ஏறி அமர்ந்து கொண்டு, "கிகிகி..." என்று சிரித்த அந்த முகம் பட்டது.

"நோ... செய்யக் கூடாது"என்று செவிலியப் பெண் அதட்டியவுடன் பயந்து விடாமல்,

அதே "கிகிகி" என்ற சிரிப்புடன், அப்பிள்ளையின் முதுகில் இருந்து இறங்கி, அப்பிள்ளையைப் போலவே மண்டியிட்டுப் படுத்து, கண்ணை உருட்டி... குறும்புக் கவிதை வாசித்த அந்த முகம்!

வெண்ணை திருடும் வேணுகோபாலனின் குறும்பு நினைவு வந்தது குந்தவைக்கு!

'தீண்டத்தகாததாய் மாறிய என் வாழ்வைப் புனிதமாக்க வந்த துளசி, இவளே!' என்று தீர்மானித்தது மனம்!

ஜாதிமல்லிச் செடியாய் சிரித்தாள் அந்த ராதை!



## அத்தியாயம் 11

விஷ்ணுவின் வடிவாய் தன் வாழ்வின் உள்ளே நுழைந்த மகளுக்கு, ஆசையாய் 'ஸ்ரீதுளசி' என்று பெயரிட்டு, தன் வாழ்வில் இணைத்துக் கொண்டாள் குந்தவை.

துளசி, அவள் வாழ்வின் அங்கமாய் மாறிய நாள் தொட்டு, குந்தவைக்கு ஏற்றமே!

DRDO வில் வேலை கிடைத்தது. அதுவும், நல்ல கிரேட்! நல்ல சம்பளம்! தங்க வீடு! சலுகை விலையில் பொருட்கள்!

எதற்கும் மேலாய், இரு நல்ல நண்பர்கள் - ஆஷா/ ஜோஸ்!

வளாகத்திற்குள்ளேயே டே கேர்!

மொத்தத்தில் தாயும் மகளுமாய் தனியாய் வசிப்ப தற்குப் பாதுகாப்பான இடம்!

'விவாகரத்தானவள்' என்ற அடைமொழியுடனே வந்ததால், ஸ்ரீயின் தந்தை பற்றிய பேச்சுக்கள் பெரிதாய் கிளம்பவில்லை. அவளது படிப்பும்.. அவளது திறனும்... அவள் பதவியும்... முக்கியமாய் அவளது நேர் பார்வை யும்... பார்வையிலேயே 'இது தான் உன் லிமிட்' என்று சொல்லாமல் சொல்லிவிடும் கண்ணியமும், பேச்சு களுக்கு அணை போட்டு நிறுத்தின.

நண்பர்கள் என்று அவள் கருதும் ஆஷாவிடமோ ஜோசிடமோ கூட, ஸ்ரீயின் மூலத்தை குந்தவை பறை சாற்ற விரும்பவில்லை. தான் ஒரு தத்துக் குழந்தை

என்று எந்த வகையிலும் துளசி உணரக் கூடாது என்பதில் வெகு கவனமாய் இருந்தாள்.

சுற்றியிருப்போரைப் பொறுத்தவரை, கணவனைப் பிரிந்து குழந்தையுடன் தனியாக வாழும் ஒரு தாய் அவ்வளவே! மதுபாலா தவிர! இல்லையில்லை மதுபாலா மற்றும் புருஷோத்தமனைத் தவிர!

அப்படித் தான் குந்தவை, இந்நாள் வரை எண்ணியிருந்தாள்!

ஆனால், இந்த பாலாஜி!

இவனுக்கு எதுவோ தெரிந்திருக்கிறது?

ஆனால், எது?

முழுதும் அறிந்தவனா? இல்லை, நடுவில் மூக்கை விட்டவனா?

"எனக்கும்... உனக்கும் சம்மந்தம்னு நா சொல்லவே இல்லையே!" என்ற அவனது வாக்கியத்தை மீண்டுமொரு முறை மனதிற்குள் ஓட்டிப் பார்த்தவளின் உதடுகள், "அப்போ... அவனுக்கும் ஸ்ரீக்கும் சம்மந்தம் இருக்குன்னு அடிச்சு சொல்றான். அப்படித் தானே!" எனச் சத்தமாக யோசித்தாள்.

"Thinking aloud " என்று ஆங்கிலத்தில் செல்வார்களே, அதுபோல தன் எண்ணங்களை உரக்க யேசித்தாள்.

அவனது A = B, B =C . So, A = C. என்ற கணக்கு நெஞ்சைக் குடைந்தது.

மருத்துவனான அவனே கணக்கில் புகுந்து விளையாடுகையில், கணக்கிலேயே வாழும் அவளால் புரிந்து கெள்ள முடியாதா என்ன?



நடுவே இருக்கும் "B" யைப் பற்றி எதையே தெரிந்து வைத்திருக்கிறான்!

ஒருவேளை...ஒருவேளை..துளசியின்...?

இல்லை... இல்லை... துளசி என் மகள். என் அம்மு. என் அம்முக்குட்டி.

விதிர்விதிர்த்தபடி படுக்கையில் எழுந்து அமர்ந்தாள் குந்தவை.

'ச்சே லூசு! எதுக்குப் பயப்படுறே!? நீ... அம்முவோட அம்மா. சட்டப்படி அவ...உன்னோட குழந்தை. யாரு நினைச்சாலும்... அவளை உன்கிட்ட இருந்து பிரிக்க முடியாது' என்று மூளை அவளை எச்சரித்தது.

'ஆமா...பிரிக்க முடியாது' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவள், படுக்கையை விட்டெழுந்து பூஜையறை நோக்கிச் சென்றாள்.

அவர்களது குட்டிப் பூஜையறையை பெரிய பெரிய விக்கிரஹங்கள் அலங்கரிக்கவில்லை என்றபோதும், வெண்கலத்தில் சிறிதாய் ஒரு விநாயகர், வேலேந்திய முருகன் படம், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் - ரங்கமன்னார் படம், ஒரு சிறிய சிவலிங்கம், இவையனைத்திற்கும் நடுநாயகமாய் ஒரு நடுத்தரமான மரப்பலகை மீது, கிருஷ்ணன்!

கண் மூடி, கை கூப்பி நின்றாள் குந்தவை.

பலவிதமான சஞ்சலங்கள் மேலெழும்பிய போதும், குந்தவையின் உதடுகள் வேண்டுதல் என்று எதையும் முன் வைக்கவில்லை.

கண் மூடி...கிருஷ்ணனின் உருவையே அகக் கண்ணுள் நிரப்பிக் கொள்ள முயன்றவள், உள்ளிருந்த சஞ்சலங்களின் விளைவாய் சற்றே தடுமாறி, புறக் கண் முன்னே இருந்த கிருஷ்ணனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

நொடிகள் கழிந்தனவா...நிமிடங்கள் ஓடினவா என்று தெரியவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாய், குந்தவையினுள் ஒரு திடம் குடி வந்தது.

அலை பாய்ந்த மனம், ஒரு புள்ளியில் சங்கமிக்கத் தொடங்கியது.

"ஸ்ரீதுளசி" என்ற அப்புள்ளியுடனே பயணித்த அவளது எண்ணங்கள், ஒற்றைக் கண்ணீர்த் துளியில் நினைவுக்கு மீண்டு வந்தன.

புறங்கையால் விழி நீரைத் துடைத்தவள், கிருஷ்ணனின் சிலையை இரு கைகளாலும் உயர்த்தி, அடியிலிருந்த மரப் பலகையைக் கையில் எடுத்தாள் குந்தவை.

அது மரப் பலகையல்ல! பெட்டி!

கண்ணுக்கே தெரியாமல் இருந்த சிறு கொக்கியை விலக்கி, அதைத் திறந்தாள்.

உள்ளே இருந்த காகிதங்கள், காற்றில் படபடத்தன.

அதை எடுத்தவள், அவற்றில் கண்ணை ஓட்டினாள்.

ஸ்ரீதுளசியைக் குந்தவையின் மகளாக்கிய சட்டப் பத்திரங்கள்.



பத்திரத்தின் முடிவில் "குந்தவை ராஜேந்திரன்" என்ற பெயரின் மேலே போடப்பட்டிருந்த கையெழுத்தை வருடிக் கொடுத்தாள்.

விரல்கள் ஏனோ சற்றே நடுங்கின.

தொப்புள் கொடியால் இணைத்திருந்தால் தான் தாயென்றும் பிள்ளையென்றும் ஆகுமா?

கையெழுத்தால் பிணைந்த இப்பந்தமும் புனிதமானதே! வலுவானதே!

ஆம்... வலுவானதே!

யாருக்காகவும்... எதற்காகவும்... அவளால் இப்பந்தத்தை பங்கு போட்டுக் கொள்ள முடியாது.

திடமாய் இன்னொருமுறை அந்தப் பத்திரத்தை வாசித்தாள்.

"Adoption is a process in which the child is separated permanently from the biological parents...:~

அதற்கு மேல் குந்தவையின் பார்வை போகவில்லை.

Permanently from the biological parents...:~

Biological Parents என்ற இடத்தில் 'A = B' என்ற அவனது கணக்கு மின்னி மறைந்தது.

துளசிக்கும் அவனுக்கும்?!!

இல்லை... நீயே எதையாவது கற்பனை செய்து கொள்ளாதே!

என்னவாய் இருந்தாலும், சட்டப்படி துளசி உன் மகள்! யாராலும்... எதுவும் செய்யமுடியாது! என்று

தனக்குத் தானே சொல்லிக் கொண்டவளின் கன்னத்தை மெல்ல வருடியது ஒரு விரல்.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் குந்தவை.

"ம்மா..." என்று சிணுங்கியது கன்று.

சட்டெனப் பத்திரத்தை மகளின் பார்வையை விட்டுப் பின்னே கொண்டு சென்றாள், குந்தவை.

நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டது.

அவள் குழந்தை...abcd கூடத் தெரியாத குழந்தை... அவளிடம் என்ன பயம் என்று மூளை எச்சரித்த போதும், மனம் நிலைகொள்ளாமல் தவிக்க,

"அம்மு... முழிச்சாச்சா?" என்று பெண்ணின் கன்னத்தை வருடியவளின் குரல் இன்னமும் கட்டுக்குள் வரவில்லை.

தொண்டையை மெல்லச் செருமி சரி செய்து கொண்டவள், "உச்சா போயிட்டு வரியாடா?" எனக் கேட்டாள் குந்தவை.

"ஊ ஒம்ம்ம்" என்று தாயின் மேல் சாய்ந்து கொண்டாள் துளசி.

வலது கையில் இருந்த பேப்பரை இன்னமும் பின்னே கொண்டு சென்றவள், "அம்மா... ஜட்டி கழட்டி விடுறேன். ஓடிப் போய்... உச்சா போயிட்டு வாங்க. நாம... ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போலாம். பிரசாதம் சாப்பிடலாம்" என்று ஆசை காட்டினாள்.

கண்ணை விரித்து சந்தோஷமாய் உள் வாங்கிய துளசி, பாத்ரூம் நோக்கி ஓட,

பின்னே இருந்த பத்திரத்தை வேகமாய் எடுத்து, அந்த மரப்பெட்டிக்குள் அடைத்தாள்.



பிள்ளை வருகிறாளா என்று திரும்பித் திரும்பிப் பார்த்தபடி, பெட்டியை அழுந்த மூடி, கிருஷ்ணனின் அடியில் வைத்தாள்.

கிருஷ்ணன் சிலையைச் சரியாய் வைத்து, துளசி மாலையை அதன் மீது மீண்டும் அவள் போடுகையில், "ம்மா..." என்ற குரல் கேட்க, துளசி மாலை கிருஷ்ணனை விட்டு லேசாய் நழுவியது.

கைகள் நடுங்க, மீண்டும் அந்த மாலையை ஒழுங் காய் போட்டவள், பெண்ணிடம் ஓடி வந்தாள்.

அடுத்த அரை மணி நேரத்தில், தாயும் மகளுமாய் ராகிகுடாவிற்குக் கிளம்பினர்.

வேலை முடிந்து வந்திருந்த ஆஷாவின் துளைக் கும் பார்வையைத் தவிர்த்துவிட்டு, பேருந்து ஏறினாள் குந்தவை! மகளுடன்!

பேருந்தின் பின்னே. தமிழ்நாடு பதிவு எண் கொண்ட ஸ்விஃப்ட் கார் பின் தொடர்ந்தது.

ராகிகுடா கோவிலுக்குள் நுழைந்த பெண்ணை யும் தாயையும், தன் "ஹலோ!!" வால் திணறடித்தான் அந்த ஸ்விப்ட் கார்க்காரன்.

இவனா?! என்று குந்தவை அதிரும் போதே.

"பா... அங்க்கி..." என்று குதித்தாள் ஸ்ரீ.

"ஸ்ரீ குட்டிம்மா" என்றபடி துளசியை உயரத் தூக்கினான்.

"அவளை இறக்கி விடுங்க" என்றாள் குந்தவை பல்லைக் கடித்தபடி.

"கோவிலுக்குத் தானே! நானும்... வரேன்... வா" என்ற பாலாஜியோ, பிள்ளையுடன் நடந்தான்.

"அவளை விடுங்க..." என்ற குந்தவையின் குரல், கடுப்பில் தோய்ந்திருந்தது.

அவனோ குந்தவையைக் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

"அம்மு... செருப்பு போட பாக் எடுக்கலாமாடா?" என்று மகளிடம் கேட்டபடி, சாக்குப் பைகள் கட்டியிருந்த இடத்திற்குச் சென்றான்.

"அம்மு... ஆஅ...ம்மா சொவ்வா அம்மு..." - விழி விரித்தாள் மகள்.

"அம்மா மட்டும் அம்மு கூப்பிடணுமா? நா... கூப்பிடக் கூடாதா?" என்று பாலாஜி சோகமாய் உதடு பிதுக்க,

"சொவ்வா... சொவ்வ..." என்று அனுமதி கொடுத்தாள் ஸ்ரீதுளசி, தலையை லாவகமாய் ஆட்டி.

"ஹலோ... அவளைக் கொடுங்க" என்றாள் குந்தவை, ஆணையிடும் குரலில்.

"அம்மு... செருப்பைக் கழட்டுடா..." என்று பெண்ணிடம் கூறியபடியே, அவளை ஏந்திய நிலையிலேயே தானே அவளது செருப்பைக் கழட்டினான்.

அவற்றைப் பையில் போட்டவன், மகளைத் தன்னை விட்டு இறக்காமலேயே தன் காலணிகளையும் கழட்டி உள்ளே போட்டான்.

"உன்னோடதையும் போடு" என்று முறைத்துக் கொண்டிருந்த குந்தவையிடம் நீட்டினான்.

இவனிடம் பேசிப் புண்ணியமில்லை என்று புரிந்து போக, "அம்மு... அம்மாட்ட வாடா" என்றாள் பெண்ணிடம்.



பெண் தாவிக் கொண்டு வரவும், ஒரு கர்வப் பார்வையை அவனை நோக்கி வீசியவள், புதிதாய் ஒரு பையெடுத்து, அதில் தன் செருப்பைப் போட்டாள்.

"அவளோடதைக் கொடுங்க" என்றாள் அவன் புறம் கை நீட்டியபடி.

"செருப்பு ஒண்ணா இருக்கிறதில என்ன ப்ராப்ளம்? இருக்கட்டும்" என்றவன், காலணி பாதுகாக்கும் இடம் நோக்கிச் சென்றான்.

"உங்களுக்கும் எங்களுக்கும் சம்மந்தம் இல்லைங்கற போது... செருப்பு மட்டும் ஏன் சேர்ந்திருக்கணும்" என்றவள், அவன் கையிலிருந்த பையைப் பறிக்கப் பார்த்தாள்.

"Sri is looking confused. Dont create a scene" என்றான் பாலாஜி கண்டிக்கும் குரலில்,

அக்குரலே கோபத்தைக் கிளப்பி விட, "செருப்பில கூட... நீங்க என் பொண்ணோட சம்மந்தப்பட்டிருக்கக் கூடாது. கொடுங்க" என்றாள் அடிக்குரலில்.

அடிபட்டார் போல் நிமிர்ந்து பார்த்த பாலாஜியின் பார்வை உடனேயே மாறியது.

"இந்த செருப்பை வேணும்னா... என்கிட்ட இருந்து நீ பிரிச்சிடலாம். ஆனா.... என்னோட ஜீன்ஸை அவகிட்ட இருந்து பிரிக்க முடியாது" என்றான் பாலாஜி குத்தலாய்.

கத்தியாய் அவனைப் பார்வையால் வெட்டியவள், அவன் கையிலிருந்த பையைப் பறித்து, அதிலிருந்து தன் மகளின் செருப்பை வெளியே எடுத்துத் தான் வைத்திருந்த பையினுள் போட்டு, உரிய இடத்தில்

கொடுத்து விட்டு, விறுவிறுவென நடக்கத் தொடங்கினாள்.

பிள்ளையை இடுப்பில் தூக்கியபடி அனைத்தையும் செய்தவளைப் பின் தொடர்ந்தான் பாலாஜி.

அவன் ஒருவன் வராதது போலவே பாவித்தபடி கோவிலுக்குள் முன்னேறினாள்.

வெளிப்பார்வைக்கு சாதாரணமாய் தெரிந்த போதும், உள்ளுக்குள் படபடவென அடித்துக் கொண்டது குந்தவையின் தாய் மனம்.

அதற்கு உரம் சேர்ப்பது போல், "பா... அங்க்கிவவ்வா ம்மா..."

"பா... அன்க்கியும் அம்மு சொவ்வாம்மா..."

"பா... அங்க்கி... பாப்பா கூப்பா..."

"பா... அங்க்கி..."

தன் பின்னேயே வந்து கொண்டிருந்த பாலாஜியைப் பார்த்து... பேசியபடியே வந்த மகள் வேறு படபடப்பை அதிகமாக்கினாள்.

அந்தப் படபடப்பில், அன்னபூரணி தேவிக்கு அரிசி வாங்கக் கூட மறந்துவிட்டு அவள் நடக்க,

"ம்மா... அச்சி... அச்சிய....பாப்பாக்கு" என்று கத்தினாள் பெண்.

"அச்சோ மறந்துட்டேன்டா" என்று குந்தவை திரும்புகையில், "அம்முக்கு... இந்தாருக்கு" என்றபடி ஒரு பாக்கெட்டைத் துளசியிடம் நீட்டினான் பாலாஜி.

"ஹாய்... பா அங்க்கி வாங்கிவா..." என்று துளசி ஆசையுடன் வாங்க.



"அம்மு... அதை கொடுத்திரு. அம்மா வாங்கித் தரேன்" என்றாள் குந்தவை கோபமாய்.

பிள்ளையின் முகம் வாடிவிட்டது.

தாயை ஒரு வினாடிக்கும் மேலாய் பரிதாபமாய் பார்த்தவள், மெல்ல தன்னிடம் இருந்த பாக்கெட்டை பாலாஜியிடம் நீட்டினாள்.

"நீயே வச்சுக்கோடா... அம்மா வாங்கிறதையும் நீயே வச்சுக்கோ என்ன?" என்றவன், அவர்களைத் தாணடிக் கொண்டு முன்னே சென்றுவிட்டான்.

அவனைப் பின் தொடர்ந்து சென்று திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் உவப்பானதாய் இல்லாமல் போகவே, "சாமிக்குத் தானே. போய்த் தொலையுது" என்றபடி, தானும் ஒரு பாக்கெட் அரிசியை வாங்கிக் கொண்டு முன்னேறினாள்.

சந்நிதி வளாகத்துள் அவனில்லை.

'ஹப்பா... தொலைஞ்சான்' என்று நிம்மதி பெருமூச்சு வர, "அம்மு... இறங்கிக்கிறியாடா? அம்மா... பிள்ளையார் உம்மாச்சி கும்பிட்டு... அரிசி போடத் தூக்கிக்கிறேன்" என்றபடி பிள்ளையை இடுப்பிலிருந்து இறக்கிவிட்டாள்.

"ச்சயி" என்றபடி இறங்கிய துளசியின் கவனம் அரிசி பாக்கெட்டின் மீதே இருந்தது.

இரண்டு பாக்கெட்டுகள் வேறு!

இரண்டையும் மாறி மாறிப் பார்த்தபடி நின்றிருந்த பிள்ளையை, முதுகின் பக்கம் இரு கைகளையும் கொடுத்துத் தூக்கிய பாலாஜி, அன்னபூரணியிடம் கூட்டிச் சென்றான்.

பிள்ளையாரின் முன்னே நமஸ்காரம் செய்த குந்தவை, மண்டியிட்ட நிலையிலேயே மகளைத் தேட, அந்தக் குறும்புக்காரியைக் காணவில்லை.

ஸ்ரீக்குப் பிடித்த விளையாட்டு என்பதாலேயே, அனைத்து சாமிகளின் முன்பும் ஒரு முறை விழுந்து கும்பிடுவாள் குந்தவை.

இப்போது... பிள்ளை எங்கே?

அவசரமாய் எழுந்தவளின் கண்ணில், "கிகிகி" என்று சிரித்தபடி, பாலாஜியின் தோளில் ஏறியிருந்த பிள்ளை பட்டாள்.

'ஹய்யோ... படுத்துறானே!'

ஜிவ்வென்று கோபமேற, "அம்மு" என்றாள் குந்தவை, வேகத்தைக் குரலில் கூட்டி.

அம்மு மட்டுமல்லாது...சுற்றியிருந்த அனைவரும் அவளைத் திரும்பிப் பார்க்க, முகத்தைச் சரி செய்து கொண்டவள், "அவளைக் கொடுங்க" என்றாள் பாலாஜி யிடம் சீறலாய்.

அவனோ, "அம்மு... நாம வேமா... படி ஏறலாமா? ஓடிடுவோமா?" என்றபடி பிள்ளையைத் தூக்கிக் கொண்டு, வேக எட்டுக்கள் போட்டு மலை மீது ஏறி னான்.

குந்தவை அவன் பின்னே ஓடினாள்.

"ஏன்... இப்படி டார்ச்சர் பண்றீங்க?"

"உங்களுக்கு என்ன தான் வேணும்!?"

"அவளை விடுங்க" என்று சீறியவளைக் கண்டு கொள்ளாமல் அவன் படியேற,



"அவளை... விடுங்க. எங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு... தயவு செஞ்சு போங்க" என்றாள் எரிச்சல் மிகவுற.

பக்கவாட்டில் இருந்த முருகன் சந்நிதிக்குள் நுழைந்திருந்த பாலாஜி, ஸ்ரீயை இறக்கிவிட்டு விட்டு குந்தவையிடம் திரும்பினான்.

அவளுக்கும் வாசலுக்கும் இடையே மறித்தபடி நின்று கொண்டவன், மார்பின் குறுக்கே கையைக் கட்டியபடி, "முடியாது. உங்களோட... வாழ ஆசைப்பட்டு வந்திருக்கேன். போக முடியாது!" என்றான் தீர்மானமாய்.

"நீங்க... யாரு? நீங்க ஏன் எங்க லைப்ல தலையிடு றீங்க!"

"சொன்னேனே! A =B, B =C. So, A =C இதில, A நா...B ஸ்ரீ... C... நீ!"

"A = B என்கிற அந்த ரிலேஷனை... என்னால நம்ப முடியலை"

"நம்ப முடியலையா? அப்படின்னா... ஒரு டி.என்.ஏ. டெஸ்ட் எடுத்துப் பார்த்திடுவோமா?" என்றான் அவன்.

"வாட்!" என அதிர்ந்தவளுக்கு உடம்பு நடுங்கியது.

ஆனாலும் சமாளித்துக் கொண்டு "அவ வேணாம்ன்னு தானே... தூக்கிப் போட்டீங்க. அப்புறம் என்ன?" என்றாள் குந்தவை காட்டமாய்.

"அது... நா... எக்ஸ்ப்ளெயின் பண்றேன்..."

"ஒரு மண்ணாங்கட்டியும் வேணாம்" என்று கடித்துத் துப்பியவளின் மனதில் "A = B" என்ற வாக்கி யமும்... டி.என்.ஏ. டெஸ்ட்டுமே ஓடிக் கொண்டிருந்தன.

அப்படியென்றால், ஸ்ரீயின் தந்தை என்கிறான். சரி... தாய் எங்கே?

அவளை விட்டுவிட்டு, ஸ்ரீயின் தாயான தன்னை ஏன் இதில் பிணைக்கிறான்?

மனைவி எங்கே?

மனைவியைத் தாயாக்கியவன், தாயாகி நிற்ப வளை ஏன் மனைவியாக்கத் துடிக்கிறான்?

எங்கேயோ இடித்தது?!

அந்த 'மனைவியில்' பதிலிருக்கும் என்றுணர்ந்த தருணம், உடம்பு தீப்பிடித்து எரிந்தது.

கண்களில் உஷ்ணம் பரவ,

"கல்யாணம் பண்ணி...ஒரு குழந்தையும் பெத் துட்டு... அதை வளக்கத் துப்பில்லாம... அ... ச்சே... ம்ம்ம்ம்.... ஹ்ம்ம்... குழந்தையைத் தனியா விட்டதோட இல்லாம... கட்டின பொண்டாட்டியையும் விட்டுட்டு... இன்னொரு பொண்ணோட வாழணும்னு ஆசைப் படறதா சொல்றீங்களே? வெக்கமா இல்லை உங்க ளுக்கு? ச்சே!!" என்றாள் அருவெருப்பை முகத்தில் தேக்கி.

"இதில...நீங்கெல்லாம் ஒரு டாக்டர்! அதுவும்... சை.... ல்...... ட் ஸ்பெஷலிஸ்ட்!"என்றவளின் குரலில் ஏளனம் மேலோங்கியிருந்தது.

பாலாஜி அசந்துவிடவில்லை.

"நீ சொல்ற மாதிரி... எனக்கு வைஃப்ன்னு யாரு மில்லை. அதுவுமில்லாம... ஸ்ரீயை எனக்கு இந்த ஆறுமாசத்தான் தெரியும்"என்றான் நிதானமாய்.

அதிர்ந்து நின்றாள் குந்தவை!



## அத்தியாயம் 12

புருவம் நெரிய அவனையே பார்த்திருந்தவள், முகம் சுருங்க...தலையசைத்து...அவன் பேச்சை ஜீர ணிக்க முடியவில்லை என்பதை வெளிக்காட்டினாள்

ஆனால், பாலாஜி கைகளைக் கட்டிய நிலையி லிருந்து மாறவுமில்லை. அவளது கண்களை நேராகப் பார்ப்பதைத் தவிர்க்கவுமில்லை. அதே சமயம், அவனாக எதையும் பேசவுமில்லை.

அவன் பேசிய அனைத்தையும் ஒரு முறை மூளைக்குள் ஓட்டிப் பார்த்தவளுக்கு, மேலும் குழப்பம் கூடியதே ஒழிய குறைவதாய் இல்லை.

"ஸ்ரீக்கும் உங்களுக்குமான சம்மந்தம் என்னன்னு எனக்கு இன்னும் புரியல..." என்றவள், பாலாஜி பதில் சொல்வதற்கு முன்னர்,

"அவட்ட அப்பான்னு சொல்லியிருக்கீங்க... டி.என்.ஏ. டெஸ்ட்ங்கிறீங்க...ஆனா... பொண்டாட்டி இல்லைங்கிறீங்க...எல்லாத்துக்கும் மேல அவளை ஆறு மாசமா தான் தெரியும்ங்கிறீங்க! எனக்கு... ஒண்ணுமே புரியல! சத்தியமா புரியலை! ஸ்ரீக்கும்... உங்களுக்கும் என்ன சம்மந்தம்? நீங்க சொல்ற மாதிரி...அப்பாவா?" - 'அப்பாவா' எனக் கேட்கையில் உள்ளம் முழுதும் நடுங்கியபோதும். குந்தவைக்கு அவனைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் மேலோங்கியிருந்தது.

"அப்பா...ஹ்ம்ம்...அப்பாவா இருக்க ஆசைப்படு றேன்"

"இதென்ன பதில்?"-எரிச்சலும் கோபமும் அவளை நிலை கொள்ளாமல் தவிக்கச் செய்தது.

"சொல்லப்போனா...ரொம்ப கரெக்ட்டான பதில்..."

அவள் முறைக்கவும், "குந்தவை... ஒரு விஷயத்தைத் தெளிவா புரிஞ்சுக்கோ. நா...அவளை உன்ட்ட இருந்து பிரிக்க வரலை. I repeat நா அவளோட அப்பாவா இருந்தேன்னு சொல்லலை. அப்பாவா இருக்கேன்னு சொல்றேன்! நீயும் நானும் அவளோட அப்பா- அம்மாவா இருக்கலாம்ன்னு சொல்றேன்!"

"ஹோ...காட்!"

"நான்... நடந்தது எல்லாத்தையும் சொல்றேன். கொஞ்சம் பொறுமையா... நா சொல்றதைக் கேளு"

"அதை அப்புறம் பாக்கலாம். ஒரே ஒரு கேள் விக்குப் பதில் சொல்லுங்க...அப்பா இல்லைன்றீங்க... அப்பாவா இருக்க ஆசைப்படுறேன்றீங்க...நடுவுல இந்த டி.என்.ஏ. டெஸ்ட் தான் கொழப்புது?! என்ன இருக்கும் அதில?"

"நா...அவளோட அப்பான்னு இருக்கும்!"

"வாட்!!" - குந்தவைக்குத் தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது.

என்ன பேசுகிறான் இவன்? ஒன்றுக்கும் அடுத்த தற்கும் சம்பந்தமில்லாமலே பிதற்றுபவனை என்ன வென்று சொல்வது?!

இவனது வாக்கியங்களில் முன்னதற்கும் அடுத்த தற்குமே தொடர்பில்லாதது போல், அறுந்த கயிறாய்



அவளது பொறுமையைத் துவம்சம் செய்தது அவன் பேச்சு.

கண்களை இறுக மூடி, சுவாசத்தைச் சீர்படுத்திக் கொண்டு. "உங்க வைஃப் எங்க?" எனக் கேட்ட குந்தவை, பல்லைக் கடித்துப் பொறுமையை வர வழைக்க முயன்றாள்.

"நான்தான் சொன்னேனே...எனக்கு வைஃப்பே இல்லை" என்றான் பாலாஜி மீண்டும்.

"வைஃபே இல்லைன்னா என்ன அர்த்தம்? இப்ப இல்லைன்னா? Are you a divorcee? Or a widower? என்ற குந்தவைக்கு, இவனது பேச்சிற்கான தெளிவான அர்த்தத்தைப் புரிந்து கொண்டே ஆகவேண்டும் போலொரு வேகம் வந்து விட்டிருந்தது.

"I am a bachelor!"

"But a father? Is it?"

"Yes...but not legally!

"Legally" என்ற அந்த வார்த்தை. பற்பல நம்பிக்கைத் துரோகங்களைக் கண் முன் இட்டு வர, குந்தவையின் முகத்தில் அருவறுப்பு படர்ந்தது.

"Legal father" இல்லை என்கிறான்!?அப்படித் தானே!

"ச்சே!" என்ற அவளது ஒற்றைச் சொல்லில் அவளது மொத்த அறுவெறுப்பும் தேங்கி நிற்க,

"கவி...ப்ளீஸ்...என்னால எக்ஸ்ப்ளெயின் பண்ண முடியும். இதுக்குப் பின்னாடி...நீ நினைக்கிற மாதிரி எதுவுமில்லை..." எனத் தொடங்கினான் பாலாஜி.

"கவி"என்ற அழைப்பு அதிரச் செய்ய.

அதை விட, "நீ நினைக்கிற மாதிரி எதுவுமில்லை" என்ற வாசகம் நெஞ்சை அறுக்க,

"கவியா? How dare? என்னோட அந்தப் பேரைச் சொல்லிக் கூப்பிட... உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்! என்னவொரு... திமிர் இருக்கணும்! எல்லாம்...நா கொடுத்த இடம்... உன்னையும் ஒரு ஆளுன்னு மதிச்சு... உன்னோட உளறலைக் கேட்டுட்டு இருக்கேன் பாரு. என்னைச் செருப்பால அடிக்கணும்! ராஸ்கல்!" - இதுவரை அடக்கி வைத்திருந்த பொறுமை முழுதும் பறக்க, அவனை ஏக வசனத்தில் வைத குந்தவை, முருகனின் சிலையை அண்ணாந்து பார்த்தபடி ஏதோ பேசிக் கொண்டிருந்த ஸ்ரீயை கையில் ஏந்திக் கொண்டு, அந்த இடத்தை விட்டு விறுவிறுவென நகர்ந்தாள்.

"கவி...stop right there! ...நீ...கீழ்த்தரமா நினைக் கிற..."-அதற்கு மேலான பாலாஜியின் பேச்சைக் கேட்க கந்தன் மட்டுமே பன்னிரெண்டு காதுகளுடன் காத் திருந்தான். குந்தவை சென்று விட்டிருந்தாள்.

"இவனெல்லாம் ஒரு மனுஷன்..."-பாலாஜி மீது ஒட்டிக் கொண்டிருந்த மரியாதை சுத்தமாய் மறைந்து போயிருந்தது, குந்தவை மனதிலிருந்து.

அவன் "அப்பா" என்றபோதோ... "உங்களுடன் வாழ ஆசைப்படுகிறேன்" என்றபோதோ... ஸ்ரீயை வலுக்கட்டாயமாய் அவனுடன் தூக்கிக் கொண்ட போதோ மறையாத மரியாதை, அவனது "not legally" என்ற வாக்கியத்தில் சுக்கு நூறாய் உடைந்து போனது.



"Legal" என்ற வார்த்தையால் அவள் பட்ட அவ மானங்கள்! ஏளனங்கள்! குன்றல்கள்! இழப்புக்கள்! ஹப்பா! எத்தனை எத்தனை! அவற்றையெல்லாம் திரும்ப நினைவு படுத்தி விட்டானே !

மருத்துவன்... அதுவும் குழந்தைகள் நல மருத்து வன்... என்ற அவனது பணிக்கேனும் மதிப்பு கொடுக்க வேண்டும் என்றெண்ணியதெல்லாம் தவிடு பொடி யானது.

"இவனெல்லாம்... ஒரு டாக்டர்! த்தூ!! முறை கெட்டுப் பிள்ளை பெற்ற இவனெல்லாம்... ஒரு குழந்தைக்கு வைத்தியம் பார்த்தால்... அக்குழந்தை பிழைக்குமா என்ன? பாவப்பட்ட கை!"

'Yes...but not legally!' என்று சொல்ல இவனுக்கு என்னவொரு நெஞ்சழுத்தம் இருக்க வேண்டும்!

ஆண் என்ற திமிர்!

திமிர் அவனுக்கல்ல...இந்த சமூகத்திற்கு!

விபச்சாரியைப் படம் பிடித்துப் போடும் அளவிற்கு, அவளை நாடிச் செல்லும் ஆண்களின் படங்களைப் பிரசுரிப்பது இல்லையே!

பெண்களை இழிவு படுத்த வரிசை கட்டிக் கொண்டு நிற்கும் இந்த சமூகம்... எவ்வளவு தான் ஒழுக்கம் கெட்டவனாய் இருந்தாலும், அவனை ஒதுக்கி வைப்பதில்லையே!

ராசியற்றவள்...வாழாவெட்டி...மலடி...விபச்சாரி-இப்பெண்பால் சொற்களுக்கு நிகரான ஆண்பால் சொற் களைக் கண்டு பிடிக்காத நம் முன்னோர்களைத் தூற்று வதா? இல்லை, கலாச்சாரம்... பண்பாடு ஆகியவற்றைப்

பெண்ணுக்கு மட்டுமே உரித்தாக்கிய இந்த சமூகத்தைச் சாடுவதா? இல்லை, இவற்றைப் பின்புலமாய் வைத்துக் கொண்டு தவறு செய்யும் ஆண்களைப் பழிப்பதா?!

இல்லை... தவறில்லை! தப்பு! தெரிந்தே செய்யும் தவறுக்குப் பெயர், தப்பு!

தவறிற்குத் தண்டனையில்லை. தப்புக்கு உண்டென்பார்கள். ஆனால், தப்பை செய்த எத்தனை எத்தனை ஆண்கள்... சுதந்திரமாய் நடமாடுகிறார்கள். இந்த பாலாஜியைப் போல்... அந்தப் பாஸ்கரனைப் போல்... ச்சே!

ச்சே... இவனும்...

குந்தவையால் நிம்மதியாக சாமியைக் கூடக் கும்பிட முடியவில்லை.

நினைவுகள் முட்டி மோதிக் கொண்டு, எட்டு வருடங்கள் பின்னோக்கிச் சென்றன

'கவி...நோ..நினைக்காத...அவனைப் பத்தி நினைக்காத...அவனோட வாழ்ந்த லைப்பைப் பத்தி நினைக்காத...வேணாம்...வேணாம்...' என்று மனம் தடுத்தபோதும், பாஸ்போர்ட்...விசா... டிக்கெட் என்று எந்தவிதமான தடைக்கற்களும் இல்லாமல் பறக்கும் எண்ணங்களை அவளால் தடுக்க முடியவில்லை.

நெஞ்சத்தின் கனம் பன்மடங்காய் பெருகுவது போலிருந்தது.

சுள்ளென்று ஒரு வலி வயிற்றிலிருந்து புறப்பட்டு மார்பு முழுதையும் நிறைத்தது.

கண்கள் மடமடவென தணலாகின.

உதடுகள் ஈரப்பதத்தை இழந்தன.



முகம் செங்கல்லாய் இறுகிச் சிவந்தது.

குந்தவை ஆஞ்சநேயர் சந்நிதியை விட்டு வெளியேறினாள்.

சுற்றியிருந்த ஜனக் கூட்டமும், கோவில் என்ற பொது இடமும், அதற்கும் மேலாய் அவள் மனநிலையும் புரிய, ஒன்றும் செய்ய முடியாமல் ஒதுங்கி நின்ற பாலாஜி, குந்தவை சந்நிதியை விட்டு வெளியேறவும், சற்றே திகைத்துப் போனான்.

'ஹய்யோ... சாமி கும்பிட வேண்டும் என்று வந்தவளை... என்னுடைய அரைகுறை பேச்சால் துரத்தி விட்டேனோ!? அந்த..லீகல் என்ற வார்த்தையை உபயோகப்படுத்தாமல் இருந்திருந்தால்... இந்நேரம் குழப்பங்கள் தீர்ந்திருக்குமோ!?' என்று தன்னைத் தானே சாடியது மனம்.

அவனுக்கும் உடைத்துச் சொல்ல வேண்டும் என்ற ஆசை தான். ஆனாலும், இடம்... பொருள்... ஏவல்... அதைவிட ஸ்ரீ என்று பல வகைத் தடைகள் இருக்கின்றனவே.

என்னதான் சிறு குழந்தையென்றாலும்... அறியாத வயசென்றாலும்... ஸ்ரீயின் முன்னிலையில் அவளது அடித்தளம் பற்றி விவாதிக்கவோ... விவரிக்கவோ விரும்பவில்லை பாலாஜி.

விஷயங்களைக் கிரஹிப்பதில் பெரியவர்களை விட குழந்தைகள் கில்லாடிகள்! எந்தவொரு சின்ன விஷயமும்...அவர்கள் மனதில் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளது!

அதுவுமில்லாமல், "ஸ்ரீ... ஒரு தத்துக் குழந்தை" என்ற விஷயத்தை, நண்பர்களான ஆஷா மற்றும் ஜோசிடம் கூடச் சொல்லாத குந்தவையை மனதில் வைத்தும் தான், பாலாஜி வெளிப்படையாய் பதில் சொல்லவில்லை.

"தான் ஒரு வளர்ப்புக் குழந்தை" என்று ஸ்ரீக்கு எந்தவிதத்திலும் தெரிந்து விடக் கூடாது என்ற அவளது கவனத்திற்கு மதிப்புக் கொடுத்து, பூடகமாய் பேச முயன்று... பூதத்தைக் கிளப்பிவிட்டு விட்டேன் போலவே என்று தன்னைத் தானே நொந்தான், பாலாஜி.

இப்போது நொந்து என்ன பயன்?!

"காச்சு...காச்சு... "என்று உண்டியலைக் காட்டி ஆர்ப்பரித்த பிள்ளையின் ஆசையைக் கூட நிறைவேற்ற முடியாதவளாய், இலக்கற்று வெறித்தபடி சந்நிதியை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தாள் குந்தவை.

"ம்மா... காச்சு...ப்பாப்பாக்கு காச்சு" - அவளை விட்டு இறங்க முயன்ற ஸ்ரீயை பலம் கொண்டு, இடுப்பிலேயே இருத்தியவள் "அம்மு... ப்ளீஸ்! சும்மா இரு! இன்னொரு நாள் வரலாம்!" என்றதோடு, மலையை விட்டுக் கீழே இறங்கினாள்.

அவர்கள் பின்னே ஓடத் துடித்த கால்களைச் சிறிது நேரம் பிடித்து வைத்த பாலாஜி, ஆஞ்சநேயரின் முன்னே கை கூப்பி நின்றான்.

'கடவுளே... ஏற்கனவே நொந்து போயிருக்க அவளோட மனசை... அவளே குத்திக் கிழிச்சுக்காம இருக்கணும். ப்ளீஸ்... எதாச்சும் செய். என்னோட explanation ஐ காது கொடுத்துக் கேட்கிற... பொறுமையை அவளுக்குக் கொடு. அவளுக்கு மட்டுமில்லை... எனக்குமே கொஞ்சம் பொறுமையைக் கொடு. ரொம்ப... அவசரப்படுறேனோன்னு தோணுது' - மனதை ஒருமுகப் படுத்த முடியாமல் தவித்தவன், தன் வேண்டுதலை வாய் வழியே வெளியிட்டு... காது வழியே மீண்டும் உள்ளே கிரகித்து... மனதில் பதிய வைத்துக் கொள்ள முயன்றான்.



நிலைகொள்ளா மனதினில், வேண்டுதல் ஆழமாய் பதிய மறுத்தது.

கைகளால் முகத்தை... புருவங்களை... கண்ணை என்று அழுந்தத் தேய்த்து விட்டுக் கொண்டவன், ஆஞ்சநேயரை மீண்டுமொரு முறை கண்ணுக்குள் நிறைத்துக் கொண்டு, சந்நிதியை விட்டு வெளியே வந்தபோது, குந்தவை மலையை விட்டு இறங்கியிருந் தாள்.

'என்ன வேகம்?' என்ற திகைப்பே அவளது கோபத்தின் அளவை எடுத்துக் காட்டிவிட.

இரண்டிரண்டு படிகளாய் வேகமாய் இறங்கி ஓடினான் பாலாஜி.

என்னதான் வேகமாய் ஓடிய போதும், பாலாஜி கோவில் வாசலை அடைந்தபோது, குந்தவை ஆட்டோ ஒன்றில் ஏறியிருந்தாள்.

"கவி..." என அவன் மூச்சிரைக்கக் கத்தியது ஆட்டோ சத்தத்தில் கரைந்து மறைந்தது.

கைகள் இரண்டையும் இடுப்பில் வைத்துக் கொண்டு... மூச்சிரைக்க... ஆட்டோ செல்வதையே... அரைக் கண்ணால் பார்த்தபடி இருந்தான்.

மேல் மூச்சு...கீழ் மூச்சு வாங்கியது பாலாஜிக்கு!

தன் உடம்பை மட்டுமே சுமந்தபடி ஓடி வந்த தனக்கே... இப்படி மூச்சிரைக்கிறதே! குழந்தையுடன் மலையிறங்கிய குந்தவைக்கு எப்படி இரைத்திருக்கும்? அதையும் மீறி ஒரே முடிவாய் கோவிலை விட்டு இவ்வளவு சீக்கிரம் வெளியேறி இருக்கிறாள் என்றால்?!

குந்தவையின் மனநிலையைக் கற்பனை செய்து பார்த்த பாலாஜிக்கு, நெஞ்சில் கனம் கூடியது!

அந்தப் பாஸ்கரன் செய்த துரோகங்களை... எண்ணி எண்ணிப் பார்த்து.... மனதைப் புண்ணாக்கிக் கொண்டிருப்பாள்!

ச்சை!

அந்த "ச்சை", அந்த நம்பிக்கைத் துரோகியையும் தன்னையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கும் குந்தவையின் எண்ணங்களில் "ஹய்யோ"வாக உருமாறியது.

"கவி... நான் அப்படியில்லை" என்று காற்றைக் கிழித்துக் கொண்டு கத்த வேண்டும் போலிருந்தது.

ஆனால், கேட்கும் தொலைவில் அவள் இல்லையே!

"அம்மா...பெச்சாதம்...பெச்சாதம்..."- பெண்ணின் அனத்தலைக் கூடப் புறம் தள்ளும் வண்ணம், அவள் எண்ணங்கள் தொலை தூரம் பயணப்பட்டிருந்தன.

திருமணம்!

"குந்தவை (a) கவிதா வெட்ஸ் பாஸ்கரன்" - திருமண மண்டபத்தின் முன்னே வைக்கப்பட்டிருந்த ஃப்ளெக்ஸ் போர்டில் மின்னிய அந்த எழுத்துக்கள். குந்தவையின் எண்ணங்களின் துவக்கமாய் அமைந்தன.



ஊரெங்கும் தோரணம்... வீடெங்கும் மக்கள்... முகமெங்கும் சந்தோஷம் என்று எவ்வளவு ஆனந்தமாய் நடந்தேறியது அத்திருமணம்.

"நடுக்குடி" என்ற அந்தச் சிறு கிராமத்தில், முதன் முதலில் குந்தவையின் திருமணத்திற்குத் தான் "ஃப்ளெக்ஸ் போர்டு" வைத்தார்கள்.

பின்னே, அமெரிக்க மாப்பிள்ளை அல்லவா?

அழகானவன்... அதிகம் பேசாதவன்... நல்ல குணமுடையவன்... மாதம் ஐந்து லட்சம் சம்பளம் வாங்குபவன்... ஊரில் சொத்துப் பத்து என்று பெரிய தனக்காரன்... அனைத்து சொத்திற்கும் ஒரே வாரிசு என்று பெற்றோரும் உடன் பிறந்தோரும் மகிழ்ச்சி கொள்ள ஆயிரமாயிரம் காரணங்கள் இருக்க,

குந்தவையின் மகிழ்ச்சி, நிச்சயத்தின் போது "உனக்கு படிப்பு மேல ரொம்ப ஆர்வம்ன்னு உங்க அண்ணா சொன்னாரு. கவலைப்படாத... கல்யாணத்துக்கு அப்புறம்... உன்னை எம்.எஸ். படிக்க வைக்கிறேன். யூ.எஸ். வரதுக்குள்ள... GRE...TOEFL எக்ஸாம் எழுதி கிளியர் பண்ணிட்டேன்னா... எந்த யூனிவர்சிடில சீட் கிடைச்சாலும் சேர்த்து விடுறேன்" என்ற அவனது வாக்குறுதியில் பொங்கி வழிந்தது.

சொன்னது போலவே, அவளுக்கு "GRE...TOEFL" ஆகிய நுழைவுத் தேர்வுகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்யவும் செய்தான்.

அவனது முதல் பரிசாய், "GRE" வினா - விடைகள் கொண்ட மூன்று புத்தகங்கள் வரவே, மதுபாலா ஓட்டி எடுத்துவிட்டாள்.

கூச்சமாய் இருந்தபோதும், குந்தவைக்குப் பெருமையாய் இருந்தது!

எத்தனை பேருக்கு அமையும் இந்த வாழ்வு!?

"படிச்சுக் கிழிச்சது எல்லாம் போதும்! வீட்டைப் பார்த்துட்டு இரு!" என்ற வாக்கியத்தைத் திருமணத்திற்கு முன்னரே கேட்கும் பெண்களின் மத்தியில், திருமணத்திற்குப் பின்னரும் படிப்பைத் தொடரும் அதிர்ஷடம் யாருக்குக் கிடைக்கும்!?

தன்னை மிகப்பெரிய அதிர்ஷ்டசாலியாய் எண்ணிக் கொண்ட குந்தவை, மனம் நிறைந்த சந்தோஷத்துடன், பாஸ்கரனின் தாலியைக் கழுத்தில் ஏந்தினாள்.

அந்த சந்தோசம், முதலிரவு தாண்டியதும் பன் மடங்கானது!

பூப் போன்ற குந்தவையை... பூவாய் முகர்ந்தவனின் கரங்கள். அவளைக் கசக்கிப் பிழியவில்லை.

மென்மையுடன்... மேன்மையுடன்... காதலுடன்... தாபத்துடன்... தேடலுடன்... ஆசையுடன் என்று தானும் அச்சுகத்தில் திளைத்து. அவளையும் திளைக்கச் செய்தான் பாஸ்கரன்.

சந்தோஷத்தின் உச்சியில் மிதந்த குந்தவைக்குத், தாய் - தந்தையரை... உடன் பிறந்த அண்ணனை... கூடப் படித்த தோழியை விட்டுச் செல்கிறோம் என்ற மனவருத்தமே ஏற்படவில்லை.

அந்தளவிற்கு, பாஸ்கரனின் மேல் மதிப்பும் மரியாதையும்... கூடவே ஆசையும் கூடியிருந்தது.

அவளது கெட்டகாலமோ... அவனது நல்ல காலமோ... அமெரிக்கா சென்ற அடுத்த மாதமே,



குந்தவைக்கு M.S. படிக்க இடம் கிடைத்தது! அதுவும், பிரபல பல்கலைக்கழகம் ஒன்றில்!

மிகுதியாய் சந்தோஷப்பட முடியாமல், பாஸ்கரன் வேலை செய்த இடத்தை விட்டு நான்கு மணி நேரத் தொலைவில் இருந்தது அவ்விடம்.

"உங்களை விட்டுத் தனியா இருக்கணுமேங்க. நா... வேணும்னா... நெக்ஸ்ட் இண்டேக்ல இங்க இருக்க யூனிவர்சிட்டியை செலக்ட் பண்ணிக்கவா?" எனக் குந்தவை வருத்தம் மேலோங்க கேட்டபோது,

"ஹே... இதென்ன சின்னக் குழந்தை மாதிரி?! உனக்கு... இந்த யூனிவர்சிட்டில இடம் கிடைக்கணும்னு நா எவ்வளவு ஆசைப்பட்டேன் தெரியுமா? One of the top universities in the world!... நீ இதில படிக்கணும் கவிம்மா... ப்ளீஸ்... எனக்காக" என்று பாஸ்கரன் கண்ணில் காதலுடன் கெஞ்சியது இப்போதும் அழியாமல் நினைவாடியது குந்தவைக்கு.

"எனக்காக" என்ற அவனது கெஞ்சலில் காதலை உணர்ந்து, "உங்களுக்காகப் போறேன்..."என்று முணுமுணுத்ததும்,

இடுப்பை இறுக்கிக் கொண்டு, அவன் முத்தத்தால் நன்றி சொன்னதும்,

"ஆனா... உன்னை விட்டுட்டு... எப்படி இருக்கப் போறேன்னே தெரியல" என அவன் கழுத்து வளைவில் முகத்தை மறைத்துக் கொண்டு வருத்தம் கொள்ள, "எனக்கும் தான்!"என்றபடியே வெட்கத்தை மறைத்துக் கொண்டு, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டதும்.

ச்சை...

"அதுக்கென்னடா பண்றது? வீக் எண்டு ஆனதும்... உன்னைப் பார்க்க ஓடி வந்துடறேன்" என்ற தன் கொஞ்சலை நிலைநாட்ட, குந்தவையைக் கல்லூரி விடுதியில் விடாமல், தனியாக வீடெடுத்து தங்க வைத்ததும்,

ச்சை...

நாள்காட்டியை மிஞ்சும் நேர்மையுடன், வாரா வாரம் வெள்ளிக்கிழமை இரவு வந்துவிட்டு, ஞாயிற்றுக் கிழமை இரவு கிளம்பிச் சென்ற அவனது கடமையும்.

அந்த இரண்டு நாட்களில்... மொத்த வாரதிற்கான சரச சாகசத்தை நிகழ்த்தி, குந்தவையைத் திணறச் செய்ததும்.

ஒவ்வொன்றாய் நினைவிலாடியது குந்தவைக்கு.

M.S. முடித்ததும், வேலைக்குச் செல்கிறேன் என்றவளை, "உன்னோட லெவெலுக்கு... பி.ஹெட்ச்டி... படிச்சா தான் நல்லா இருக்கும்!" என்று அதே பல்கலைக் கழகத்தில் தொடர வைத்த அவனது சாமர்த்தியத்தைக் காதல் எண்றெண்ணி, பாலாவிடம் பூரித்து மகிழ்ந்தது நெஞ்சை இன்றும் அறுத்தது.

அடுத்து வந்த ஆறு ஆண்டுகளில், படிப்பின் தீவிரத்தை அவள் உணராதிருந்ததற்கு காரணம் - பாஸ்கரன் மட்டுமே!

இதனடுவே, குழந்தை... மகப்பேறு மருத்துவ ரிடம் பரிசோதனை... மாமியார் வீட்டினரின் ஏச்சுப் பேச்சு... அம்மாவின் அழுகை... அப்பாவின் ஆதங்கம் என்று அனைத்தையும் குந்தவை தாங்கினாள் என்றால்... அது பாஸ்கரனின் அன்பால் மட்டுமே!

"குழந்தை எப்ப வரணுமோ... அப்ப வந்துட்டுப் போகட்டும். நீ... அதைப் பத்தி வொர்ரி பண்ணிக்காத. எல்லாரை மாதிரியும்... உன்னை அம்மாவாக்கிப் பாக்குறது என்னோட லட்சியமில்லை. உன்னோட திறமையை... வெளிய கொண்டு வரணும். You are not a house wife material, Kavi! You are something... beyond! Cheer up" என்று தோளில் சாய்த்துக் கொண்டு, அவன் சமாதானம் செய்த தருணங்கள் தான் எத்தனை எத்தனை!



அதைப் பாலாவிடம் பகிர்ந்து கொண்டபோது, "ச்சே... ரியல்லி கிரேட்டுடி! உன்னோட.... நல்ல குணத் துக்கு... இப்படியொரு நல்ல ஹஸ்பண்ட் கிடைச்ச மாதிரி, உனக்கு ஒரு அழகான... அன்பான... குழந்தை யும் பிறக்கும் பாரேன்" என்று அவள் ஆசையுடன் வாழ்த்திய தவணைகள் தான், எத்தனை எத்தனை!

எண்ணி எண்ணித் திளைத்துப் போயிருந்தாள் குந்தவை.

அவன் மேலிருந்த காதல் பன்மடங்காய் கூடியது.

என் கணவன் என்ற பெருமையில், குழந்தை யில்லாத குறை கூட பின்னோக்கிச் சென்றது.

ஆனால், இத்தனையும், ஒரே நாளில் அழிந்து போயின! சுக்கு நூறாய் நொறுங்கிப் போயின! குண்டடி பட்ட வீரனாய் மடிந்து போயின! தீயிலிட்ட காகிதமாய் கருகிப் போயின! அவள் வாழ்க்கை சூனியமாகிப் போனது!

ஒரே நாளில்!

ஒரே மணி நேரத்தில்!

ஒரே ஒரு வார்த்தையில்!

"Daddy" என்ற ஒரே அழைப்பில்!

அவனது பிறந்தநாளை, "சர்ப்ரைஸாக" கொண்டாட எண்ணி, அவனுக்கு அறிவிக்காமல், அவனிருக்கும் ஊருக்குச் சென்றவளுக்கு, அவன் தங்கியிருக்கும் வீட்டிலிருந்து வெளிப்பட்ட "டாடி" என்ற அழைப்பைச் சாதாரணமாய் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

நண்பர்களின் பிள்ளைகளாய் இருக்கலாம் என்று மூளை சொன்னபோதும்... ஏதோவொன்று தவறாய் பட்டது.

வெளியே இரைந்து கிடந்த சிறுவர்களின் காலணிகளா?

இல்லை... அவர்களது ஸ்கேட்டிங் போர்டுகளா?

இல்லை... பெண்கள் அணியும் ஹை-ஹீல்ஸ் செருப்புகளா?

இதற்கு முன்னரும், குந்தவை இந்த வீட்டிற்குப் பலமுறை வந்திருக்கிறாள் தான். ஆனால்... ஏதோ ஒன்று புதிதாய் தெரிந்தது. என்னவோ... தப்பாய்! நெஞ்சு படபடவென அடித்துக் கொள்ள, மெல்ல கதவைத் தட்டினாள்.

மொத்தமாய் வடிந்துவிடாத கதவைத் தட்டியவளுக்கு, உள்ளே இருந்து வெளிப்பட்ட வெள்ளைக்கார பெண்மணியைக் கண்டதும் கூட பெரிதாய் அதிர்ச்சி ஏற்படவில்லை.

"ஹோ... ஏதோ ஒரு நினைப்பில் வீடு மாறி வந்துட்டோம் போல" என்ற எண்ணத்துடன், "சாரி" என்ற சொல்லை அவள் உதிர்க்க எத்தனிக்கையில்



"Bass! Your wife is here!" என்று உள் நோக்கிக் குரல் கொடுத்தாள் அப்பெண்.

கண்கள் விரிய பார்த்திருந்தவளின் முன்னே, "What ?! Why did she come here?!" என்ற அவனது குரலும்,"Daddy... dont go" என்றபடியே அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு வந்த பெண்ணும், எட்டு ஆண்டுகளாய்அவன் நடத்திய வாழ்க்கையின் அர்த்தத்தைப் படம் பிடித்துக் காட்டின.

பாஸ்கரனின் உண்மை முகம், மடமடவென வெளியானது.

எவ்வளவுக்கு எவ்வளவு அழகானவனாய் தெரிந்தானோ... அந்தளவிற்கு அவனிடம் அசிங்கம் இருந்தது!

குந்தவை நொறுங்கிப் போனாள்! மொத்தமாய்!

யாரை... வாழ்க்கையென்று நம்பி, இந்த அந்நிய பூமிக்கு வந்தாளோ... அவன் அவளை ஏமாற்றி இருக்கிறான்.!

ஒருநாள்... இரண்டு நாள் அல்ல!

கிட்டத்தட்ட எட்டு வருடங்களாய்!

எட்டு வருடங்கள் அல்ல... ஒன்பது வருடங்கள் என்றான் பாஸ்கரன். குந்தவையை மணக்கும் முன்னரே, Lissyயுடன் அவனுக்குத் தொடர்பிருந்தது. தொடர்பிருந்தது என்பதை விட, பிள்ளையே இருந்தது.

ச்சை...

ஒவ்வொரு நிகழ்வாய் நினைவு வர, எப்படிப்பட்ட அடிமுட்டாளாய், ஏமாளியாய்... பத்தாம்பசலியாய் இருந்திருக்கிறோம் எனத் தோன்றியது குந்தவைக்கு.

இவ்வளவு படித்தென்ன புண்ணியம்? கணவனின் களவாணித் தனத்தைப் படிக்க முடியவில்லையே!

ச்சே... தன் மேல் உண்டான வெறுப்பு... கொஞ்சம் கொஞ்சமாய் அவனிடம் உருகி நின்ற அந்தரங்கத் தருணங்களில் வந்து நின்றது.

ஆயிரம் அட்டைப் பூச்சிகள் உடம்பில் ஊறுவது போலிருந்தது குந்தவைக்கு.

அவை ரத்தத்தை உருஞ்சும்! இவன்... வாழ்க்கையை உருஞ்சிவிட்டான்!

அருவெறுப்பின் உச்சியில் மேனி நடுங்க, அழுகை கூட வரவில்லை குந்தவைக்கு!

முகத்தில் வெறுப்பைத் தேக்கி, அவனை அவள் பார்த்த பார்வையில், வேறொருவனாய் இருந்தால்... ஒரு நொடிப் பொழுதேனும் குற்ற உணர்வில் குன்றியிருப் பான்.

ஆனால் பாஸ்கரன் அலட்டிக் கொள்ளவேயில்லை.

விஷயம் கேள்விப்பட்டு குந்தவையின் அண்ணன் "அவன் மேல... கேஸ் போடும்மா. போட்டு உள்ள தள்ளு" என்று கத்தியதன் பலனாய்,

I know the law! By law... I cant have two legal wives! But... I just have one! Moreover. Heather and Renold arent my legal kids!" என்ற அவனது வாக்கியம் பரிசாய் கிடைக்க, அமெரிக்காவை விட்டு நிரந்தமாய் வெளி யேறிய குந்தவையின் வாழ்க்கை வெறுமையானது! துளசி முளைக்கும் வரை!



## அத்தியாயம் 13

DRDO வளாகத்திற்குள் ஆட்டோ வந்து நின்றதும், அவன் கேட்ட முன்னூறு ரூபாயைத் தூக்கிக் கொடுக்கை யில், பாலாஜியை மனசார சபித்தாள் குந்தவை.

அவனால்தான்.. அந்தப் பாவியால் தான்... இந்த முன்னூறு ரூபாய் தண்டச் செலவு.

செலவு மட்டுமா? மன உளைச்சல்! பிள்ளையின் அழுகை! கோவிலுக்குச் சென்றும் நிம்மதியடையாத மனம்! பிள்ளை கேட்ட பிரசாதத்தைக் கூட வாங்கிக் கொடுக்க முடியாத வருத்தம்! இடியட்!

உள்ளக் குமுறல் அதிகமாகியது!

சிணுங்கியபடியே இருந்த பிள்ளையைத் தோளில் போட்டபடி, தங்கள் பிளாக் நோக்கிச் சென்றவள், நேராய் ஆஷாவின் வீட்டிற்குச் சென்றாள்.

"ஹே... என்ன இவ்வளவு சீக்கிரம் வந்துட்டே?" என்ற ஆஷாவின் கேள்விக்குப் பதில் சொல்லாமல், ஸ்ரீதுளசியை அவளுக்குப் பிடித்த செடிகளுக்கு மத்தியில் இறக்கிவிட்டுவிட்டு, அவளை விட்டு மெல்ல நகர்ந்து வந்த குந்தவை,"அம்முவைக் கொஞ்ச நேரம் பாத்துக் கறியா? ப்ளீஸ்!"என்றாள் யாசகத்தைக் குரலில் காட்டி.

"கரும்பு தின்னக் கூலியா? நீ... ப்ளீஸ் சொல்ல வேண்டிய அவசியமே இல்ல"என்றாள் ஆஷா.

"தேங்க்ஸ... நா...நா...ம்ம்ம்...ஒரு.... ஒரு மணி நேரம் கழிச்சு வந்து கூட்டிக்கவா? உனக்கு... வேலை யிருக்குன்னா ஃபோன் பண்ணு... நா வந்து கூட்டிட்டுப் போய்டுறேன்" எனத் தடுமாறினாள் குந்தவை.

"ஒரு வேலையும் இல்ல... இன்னைக்கு... ஜோஸ் பனீர் பராத்தா போடுறேன்னு சொல்லிட்டான். சோ... நான் ஃப்ரீ தான்" என்ற ஆஷா,

"நீ... லேப் போகப் போறியா? எதுவும் பெண்டிங் வொர்க் இருக்கா என்ன?" என்றாள். குந்தவை மதியம் வேலைக்கு வராததை எண்ணியவளாய்.

"இல்ல... வீட்டில தான்..."- மெல்ல முணுமுணுத்தாள் குந்தவை.

"வீட்டிலையா?"ஏதாவது பேப்பர் வொர்க்கா?" - மேலும் குடைந்தாள் ஆஷா. தோழியின் முகமே அவளைத் துருவச் செய்தது.

"இல்ல... கொஞ்சம்... கொஞ்சம்..."- திணறலுடன் ஆரம்பித்த குந்தவை, லேசாய் மூச்சை இழுத்துவிட்டு தன்னை நிதானப்படுத்திக் கொண்டு, "கொஞ்சம் அழணும்" என்றாள் ஆஷாவின் கண்களை நேராய் பார்த்து.

"ஹே! என்னடி...? அழணுமா? சாப்பிடணும்... தூங்கணும் மாதிரி கூலா சொல்லிட்டு இருக்கே?"

"ஆமா...ஆனா... அம்மு முன்னாடி அழ முடியாது"

"குந்தவை..."

"ப்ளீஸ் ஆஷா! I think I will feel better if I cry aloud for some time!" என்ற குந்தவையின் குரலில் பிடிவாதம் இருந்தது.

"ஹே... என்ன குந்தவை... எதுனாலும் ஷேர் பண்ணிக்கோடி..."

"ஷேர் பண்ணிக்கிற அளவுக்கு எனக்குத் தைரியம் இல்ல ஆஷா. ப்ளீஸ்... ஜஸ்ட் ஒன் ஹவர் பார்த்துக்கோ... அதுக்குள்ளே... நார்மலுக்கு வர முயற்சி பண்றேன்" என்றவளின் கண்கள் அகல விரிந்து, விழத் துடித்த கண்ணீரை உள்ளேயே இருத்தி வைக்க அரும்பாடு பட்டன.



அதை உணர்ந்த தோழியாய் குந்தவையின் தோளில் ஆதரவாய் தட்டி, "ரொம்பக் கஷ்டப்படுத்திக்காத, குந்தவை. Take care! " என்று அனுப்பி வைத்தாள் ஆஷா

"தேங்க்ஸ்..."- உதடுகள் பிரிந்தனவே ஒழிய, எங்கே ஒலி வெளியே வந்தால், அழுகையாய் ஒலித்து விடுமோ என்ற பயத்தில், படிக்கட்டின் பக்கம் திரும்பினாள் குந்தவை.

அதுவரையிலும் செடிகளுடன் உறவாடிக் கொண்டிருந்த ஸ்ரீ, தாய் கிளம்புவதை அறிந்ததும்,"ம்மா..."என ஓடி வர, குந்தவையின் நடுங்கிய விரல்கள் படிக்கட்டுக் கம்பிகளை இறுகப் பிடித்தன.

அதற்குள் "அம்மாக்குக் கொஞ்சம் வேலை இருக்காம்டா. ரொம்ப ரொம்ப முக்கியமான வேலையாம். இந்தச் செல்லக்குட்டிய விட ரொம்ப முக்கியமான வேலையாம். அதை... அவ ஆசை தீரப் பார்த்துட்டுப் போறா... நாம... பார்னே பாக்கப் போலாமா? " என ஆசை காட்டியபடியே பிள்ளையை இரு கைகளிலும் பூப்பந்தாய் ஏந்தியபடி வீட்டினுள் சென்றாள் ஆஷா.

குந்தவைக்கு ஆராய்ச்சிக் கூடத்தில் வேலையிருக்கும் நாட்களில், ஸ்ரீயை ஆஷா வீட்டில் விடுவது வழக்கம் என்பதால். குழந்தையும் பெரிதாய் முரண்டு பண்ணவில்லை.

தனக்குப் பிடித்த பொம்மை நண்பர்களைத் திரையில் காணவும், குதூகலமாய் குதிக்கத் தொடங்கிவிட்டாள்.

ஆனால், அதற்கு முற்றிலும் எதிர்மாறான உணர்ச்சியுடன் வீட்டினுள் நுழைந்தாள் குந்தவை.

வெளிக் கதவைத் தாளிட்ட மறுநிமிடம், சோபாவில் தஞ்சம் புகுந்தாள் குந்தவை.

தலையை வலப்புறமாய் திருப்பி, பூஜையறையை அலங்கரித்த கிருஷ்ணன் சிலையைப் பாத்தவளின் கண்ணில் என்ன இருந்தது?

கோபமா?

ஆதங்கமா?

எனக்கு ஏன் இந்த நிலைமை என்ற கேள்வியா?

நான் செய்த பாவம் என்ன என்ற வாதமா?

என்னை இன்னும் ஏன் சோதிக்கிறாய் என்ற குமுறலா?

நிலையான சந்தோஷத்தை எனக்குக் கொடுக்கக் கூடாதா என்ற யாசகமா?

என் அம்முவின் பிறப்பை... illegal என்று சொல்பவனை சுட்டுக் கொல்லாமல் இருக்கிறியா என்ற ஆத்திரமா?

எனக்கு நிம்மதியைக் கொடேன் என்ற வேண்டுதலா?

குந்தவை... கண்ணனையே பார்த்திருந்தாள்.

நொடிகள் கடந்து நிமிடங்கள் ஆனபோதும், அவள் பார்வை மாறவில்லை.



அவள் பார்வையின் பாவங்களைக் கிருஷ்ணனால் தாங்க முடிந்த அளவு, அவனது தீட்சண்யத்தைக் குந்தவையால் தாங்க முடியவில்லை.

அவனிடமிருந்து பார்வையை விலக்கியவள், இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு வீரிட்டு அழுதாள்!

“ஓ” என்ற அவளது ஓலம், கிருஷ்ணனின் செவிகளை நிறைத்தது.

ஆற்றவோ... தேற்றவோ யாருமில்லாதவளாய்,

விம்மி.... வெடித்து... கதறி... குமுறி என்று தன் வலிகள் முழுதையும் வெளியேற்ற முயன்றாள் குந்தவை.

தவறோ... தப்போ... மற்றவரின் மீது அது படிந்திருக்கையில். “ச்சை...” என்ற சொல்லோடு அவர்களை விட்டு விலகிவிடலாம்.

ஆனால், தன் மீதே தப்பிருக்கிறது... தன் வேதனைக்குத் தானே மூலக் காரணம் என்ற எண்ணம். ஒரு மனிதனைச் சுக்குநூறாய் உடைத்து விடும்.

குந்தவையும் சுக்கு ஆயிரமாய் உடைந்தாள்!

ஆம், தன் வாழ்வில் நடந்தேறிய அவலங்களுக்கு எல்லாம், ‘தானே’ காரணம் என்ற எண்ணம் அவளது குமுறலை அதிகமாக்கியது.

பாஸ்கரன்... ஏன் ஏமாற்றினான்? பணத்துக்காகவா? அழகுக்காகவா? பெற்றோருக்காகவா? இல்லை நற்பெயருக்காகவா? எதற்காக ஏமாற்றியிருந்தாலும், ஏமாந்தவள் அவள் அல்லவா?

ஏமாறுபவர்கள் இருக்கும் வரை, ஏமாற்றுபவர்கள் முளைத்துக் கொண்டே தான் இருப்பார்கள் என்ற வாக்கியம் நினைவில் வர, குமுறல் அதிகமானது.

எட்டு வருடங்களாய்... ஏமாந்திருக்கிறாள்?!

என்னவொரு முட்டாள்தனம்!

அவன் கள்ளத்தனத்தை அறிய முடியாதளவு ஏமாளியாய் இருந்த தன் மீது கட்டுக்கடங்காமல் கோபம் எழுந்தது குந்தவைக்கு!

சிறு சந்தேகம் கூட வரவில்லையே!

எப்படி... எப்படி தன்னால் இந்தளவிற்கு அப்பாவி யாய் இருக்க முடிந்தது!

அவன் சாமர்த்தியமாய் ஏமாற்றினான் என்பதை விட, தான் முட்டாள்த்தனமாய் ஏமாந்திருக்கிறோம் என்ற உண்மையைக் குந்தவையால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

படிப்பு ஒரு மனிதனை செம்மைப்படுத்தும் என் பார்கள்! தன் விஷயத்தில் சேதாரப்படுத்தியிருக்கிறது!

விஷயம் கேள்விப்பட்டதும், "இப்படியா ஒரு பொம்பள... புருஷன்காரன் என்ன செய்றான்... ஏது செய்றான்னு தெரியாம... கூமுட்டையா இருந்திருப்பா?" என்று தாய் தூற்றியது இன்னமும் நினைவிலாடியது.

அப்படியே பூமிக்குள் புதைந்து விட மாட்டோமா என்ற நிலையில் தாயின் முன்னே நின்ற அத்தருணம்! அப்பப்பா!!!

வலி! வலி! வலி!

"எப்படி கவி... உனக்குத் தெரியாம நடந்திருக்க முடியும்?"என்று அண்ணன், புரியாமல் கேள்வி கேட்ட போது,



"தெரியலைண்ணா..."என்ற பதிலைச் சொல்ல நா கூசியது.

"என்ன பதிலிது? தனித் தனி ஊரில இருந்தீங்க சரி... ஆனா... ஒரு தடவை... ஒரு தடவை கூடவா... அவனோட நடவடிக்கையில சந்தேகம் வரலை?" என்று தமையன் குமுறியபோது,

தன் அதீத நம்பிக்கையை எண்ணி அழத் தான் முடிந்ததே ஒழிய, வேறொன்றும் செய்ய முடியவில்லை குந்தவையால்.

அண்ணனுக்கு மாறாய், "கவி என்ன செய்யும்? அந்தாளு... கவிக்கு சின்னதா சந்தேகம் கூட வராதபடி நடந்திட்டு இருந்திருப்பான். அதான்... கவிக்குத் தெரியல. வருஷம் ஒரு வாட்டி இங்க வரையில கூட... கவி மேல எம்புட்டு ஆசையும் அக்கறையுமா இருந்தான் அந்தாளு. அப்படியாப்பட்டவன்... ஏமாத்துவான்னு கவி நினைச்சே பார்த்திருக்காதுல்ல. பாவம்!" என்று பரி தாபப்பட்ட அண்ணியின் வார்த்தைகளுமே குந்தவையைக் குன்றவே செய்தது.

"இப்படி...அறியா பிள்ளையாய் இருந்திருக்கி யேம்மா?" என்று ஊர்க்காரர்கள் குசலம் விசாரிக்கையில், செத்து விடலாமா எனப் பலமுறை யோசித்திருக்கிறாள் குந்தவை.

ச்சே! தன் மீதே... தன் படிப்பு மீதே... தன் ஆற்றல் மீதே குந்தவைக்கு வெறுப்பு உண்டான தருணங்கள் ஆயிரமாயிரம்!

எல்லாவற்றுக்கும் சிகரம் வைப்பது போல், அவளது மாமியார் பேசிய பேச்சுக்கள்!

"எம் புள்ள பண்ணது தப்புத் தான். இல்லைன்னு சொல்ல வரல..."

"எனக்கும்... அவன் நடந்துக்கிட்டதுல சம்மத மில்லை. எந்தவொரு ஆத்தாளுக்கும் இருக்க கோவம்... எனக்கும் அவன் மேல இருக்கு. விஷயம் கேள்விப் பட்டதில இருந்து... நா அவனோட பேசுறதே இல்லைன்னா பாருங்களேன்..."

"அவனை... நியாயப்படுத்த முடியாது தானாலும்... ஆனா... அவன் உங்க மகளைப் பூ மாதிரி தானே பார்த் துட்டு இருந்திருக்கான்..."

"கை நீட்டி அடிச்சான்... வீட்டை விட்டுத் துரத்தி னான்னு சொல்லச் சொல்லுங்க பார்ப்போம். உங்க மகளே... சொல்லாது! ஏன்னா... அது உண்மையில் லையே!"

"சொல்லப் போனா... ராசாத்தி மாதிரி தானே வச் சிருந்தான்"

"ஊரு உலகத்தில... எந்த ஆம்பிளை... பொண் டாட்டியைப் படிக்க வைக்கிறான் சொல்லுங்க? எம் புள்ள... உங்க மகளை எட்டு வருஷம் தஞ்செலவில படிக்க வச்சிருக்கான்..."

"அதுவுமில்லாம...."

"தகாத உறவுன்னாலும்... அவன் பிள்ளைங்கன்னு ரெண்டு இருக்குதுக! ஆனா... உங்க மக வயித்தில... எட்டு வருஷமா புழு பூச்சி முளைக்கலையே! அப்படி யெதுவும் இருந்தாலாச்சும்... அந்தச் சிறுக்கியை விட் டுட்டு வந்து... எம் மருமவளோட குடும்பம் நடத் துடான்னு நானே சொல்லிருப்பேன். இப்ப... அடிச்சு சொல்ல முடியலை... பாருங்க"



பாஸ்கரன் நொறுக்கிய மனதை, அவன் தாய் தீயிட்டு எரித்தார்!

திகுதிகுவென... உடம்பும் மனசும் தீப்பிடித்து இருந்தது குந்தவைக்கு!

என்ன மனிதர்கள் இவர்கள்!?

ச்சை!

'ஒரு குழந்தைக்குத் தாயாகாததால், இந்தத் தகாத வாழ்க்கை கூட உனக்குத் தகுதியானது அல்ல' என அவர் சொல்லாமல் சொன்னது, குந்தவையை நொறுக்கியது.

வஞ்சிக்கப்பட்ட பெண்ணாய் ஒதுங்கி நின்றாள் அவள்.

இதற்கெல்லாம் சிகரம் வைப்பது போல், விவா கரத்துக் கோரிய குந்தவையிடம் பாஸ்கரன் கொடுத்த விளக்கம்!

"இங்க பாரு... கவி! I dont want to explain how this happened!"

"எனக்கு ஒண்ணு சொல்லு... ஆப்பிள் பிடிக்கும்ங் கிறதுக்காக மாம்பழம் பிடிக்காம இருக்கணும்ன்னு அவசியம் இல்லையே!"

"எனக்கு... லிஸ்ஸியையும் பிடிச்சிருக்கு... உன்னையும் பிடிச்சிருக்கு! தட்ஸ் இட்! இட்ஸ் சிம்பிள்!"

"அப்புறம் ஏன்... உன்ட்ட மறைச்சேன்னு யோசிக்கிறியா? கல்ச்சர்... ஒருவனுக்கு ஒருத்தி... பண்பாடு... நாகரீகம்ன்னு ஆயிரத்தெட்டு டார்ச்சர் இருக்குமேன்னு தான் என்னால முடிஞ்சளவு மறைச் சேன்!"

"நீயே சொல்லு... நம்மளோட intimate moments எதிலையாச்சும்... நீ ஏங்குற மாதிரி நடந்துட்டு இருக் கேனா?"

" I kept you happy:! Obviously, I was also happy:!"

"உனக்கு... அந்த ரிலேஷன்ஷிப் தெரிஞ்சா... இந்த சந்தோஷம் போய்டும்ன்னு தான் மறைச்சேன்"

"ஓகே... இப்போ தெரிஞ்சுடுச்சு... லீவ் தட். I can still keep you happy!"

"அதை விட்டுட்டு... தேவையில்லாம அழுகை... ஆர்ப்பாட்டம்.. கோர்ட்... கேஸ்... டிவர்ஸ்...Why do you take this much trauma?""

"நீ... எப்பன்னாலும் யூ.எஸ். வரலாம். இன்னும் படிக்கிறதுன்னாலும் படிக்கலாம். I can afford. வேலைக்குப் போறதுனாலும் போலாம். வீட்டிலேயே இருக்கிறதுனாலும் இருக்கலாம்!"

தன் தப்பிற்குத் தங்கமுலாம் பூசிக் கொண்டிருந்த பாஸ்கரனையே வெறித்துப் பார்த்த குந்தவை,

"வீட்டிலன்னா???? அந்த லிஸ்ஸி கூடவா?" என்றாள் நேர் பார்வை ஒன்றைக் கண்களில் தாங்கி.

"பல பெண் தேடும் ஆணிற்குப் பட்டப் பெயர் இல்லையென்றாலும், அப்பல பெண்களில் பலரை வேசி என்கிறதே சமூகம். அப்படியானால்... தான் வேசியா?" - நெஞ்சத்தின் குமுறலைக் கண்ணில் தேக்கி அவள் கேட்ட கேள்வி, பாஸ்கரனை அசைத்துக் கூடப் பார்க்க வில்லை.

"இது என்ன..." என்பது போல் கைகளை அசைத்து, அவள் பேச்சை உதாசீனப்படுத்தியவன்,



"எனக்குக் குழந்தை பெத்துக்கக் கூடிய தகுதி இருந்தும்... உன்னால... உனக்கிருக்க பிரச்சனைகளால நமக்குக் குழந்தை பிறக்கலைங்கிறதை... நா அக்சப்ட் பண்ணிக்கிட்ட மாதிரி, லிஸ்ஸி விஷயத்தை... நீயும் அக்சப்ட் பண்ணிக்கோ, கவி! Lets get into a mutual agreement!"

எரிந்து கொண்டிருந்த மனதை, மீண்டும் மீண்டும் சம்மட்டியால் அடித்துச் சிதைத்தான் பாஸ்கரன்.

குந்தவையினுள் இருந்த கவி மடிந்து போனாள்!

தீயிலிட்ட பூவாய் கருகி... காய்ந்து... சருகாய் சிதைந்து போனாள்!

அழகிய கவிதையாய் அவளுள் விதைந்திருந்த பெண்மை, அழிந்து போனது!

ஆனால் அழியா நெருப்பாய் உள்ளம் புகுந்திருந்த உறுதி, அவளை விவாகரத்திற்குத் தயார் படுத்தியது

"புள்ள குட்டின்னு எதுனா இருந்திருந்தா... அந்தாளு லகானைப் பிடிச்சு இழுத்திருக்கலாம்" எனத் தவித்த தாய்,

"முப்பது வயசில... எம் பொண்ணுக்கு எங்க போய் மாப்பிள்ளை தேடுவேன்!" என்று அரற்றிய தந்தை,

"வரவன் எல்லாம்... அம்பது.... அறுபது வயசு கெழவனா வரான்! இந்தத் தரகனைப் பிடிச்சு உலுக்கினா... பொண்ணுக்குப் புத்திர பாக்கியம் இல்லைங்கிறதால... மாப்பிள்ளை கிடைக்கக் கஷ்டமா இருக்குங்கிறான்! என் தங்கச்சி வாழ்க்கை... இப்படியாகிடுச்சே!" என்று கோபம் கொண்ட அண்ணன்.

என அனைவரும் 'திருமணம்', 'குழந்தை' இவற்றுக்குள்ளேயே சுழல, குமட்டிக் கொண்டு வந்தது குந்தவைக்கு.

அதை விட்டு தூரமாய்... வெகு தொலைவாய்... பயணித்து வந்து,

தனக்கே தனக்கென்று ஒரு வேலை!

அருமையாய் ஒரு பிள்ளை!

நிம்மதியான ஒரு வாழ்க்கை!

தன்னை விட்டுத் தொலைந்து போயிருந்த பெண்மையை, தாய்மையால் நிரப்பி, நிம்மதியான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பவளை....

ச்சே!!!

இந்த பாலாஜி... சனியன் பிடிச்சவன் எங்கிருந்து வந்து தொலைத்தான்?

அப்பா என்கிறான்... அதுவும் illegal அப்பா என்கிறான்!

திண்ணக்கம் பிடித்தவன்!

என் துளசி... புனிதமானவள்! தகாத முறையில் பிறந்திருக்கவே மாட்டாள்! என்று குமுறிய மனம்,

அப்படியே பிறந்திருந்தாலும் என்ன? எனக்கு அவள் துளசியே!

ஆம், எனக்கு அவள் துளசியே!

விஷ்ணுவிற்கு ஈடான சிறு துளசி இலையே!

அவள் மேல், "தகாத"என்ற சேற்றை வாரியிறைக்க விட மாட்டேன்!

விடவே மாட்டேன்!



கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்ட குந்தவையின் மூளை, அடுத்து செய்ய வேண்டியவைகளை வரையறுத்தது.

கிருஷ்ணனின் முன்னே இருந்த குங்குமத்தை எடுத்து நெற்றியில் வைக்கையில் அவள் விரல்கள் காட்டிய அழுத்தம், அவளது உறுதியைக் கண்ணனுக்கு எடுத்துக் காட்டியது.

மாயக் கண்ணன் விஷமமாய் சிரித்தான்! பாலாஜியைப் பார்த்து!

***அடுத்த நாள் காலை***

பாலாஜியின் கைப்பேசி "பாலா" என்ற பெயரைத் தாங்கியபடி கத்தியது.

"ஹே... பாலா! சொல்லு! என்றான் பாலாஜி.

"எங்கடா இருக்கே?" - பரபரப்புடன் கேட்டாள் மதுபாலா.

"ஏன்? இன்னைக்கு... ஒரு எமெர்ஜன்சி c-section. சோ... டே கேர் போகலை"

"நல்ல காலம், போகாம இருந்தே! " என்றவளின் குரலில் வித்தியாசமான நிம்மதி விரவித் தெரியவும்,

"என்ன சொல்றே?" என வினவினான் பாலாஜி.

"தடால்... தடால்ன்னு எதையும் பண்ணாத. பார்த்துப் பதமா பண்ணுன்னு எத்தனை வாட்டிச் சொன்னேன்! "

"ஹே... என்னாச்சுன்னு சொல்லு? அவ கொஞ்சம் டென்ஷன் ஆகிட்டா அவ்வளவுதான். மத்தபடி... நீ சொன்ன மாதிரி சேதாரம் ஜாஸ்தியாகிடல பாலா" என்றான் பாலாஜி குந்தவையை மனதில் வைத்து.

"சேதாரம்... அவளுக்கில்லைடா லூசு?! உனக்கு!"

"என்ன சொல்றே? உளறாம பேசு!"

"என்னத்தைப் பண்ணித் தொலைச்சேன்னு தெரியல... பெரிய் ஆப்பா தூக்கி வச்சுட்டா!"

"ஏய்..."

"என்ட்ட கத்துறதுல ஒரு புண்ணியமும் இல்ல. உன் மேல... கம்ப்ளைன்ட் கொடுக்கப் போறாளாம். அதுவும்... போலீஸ் ஸ்டேஷன்ல. ஆஷாட்ட சொல்லியிருக்கா... ஆஷா பதறிப் போய் எனக்கு ஃபோன் பண்ணா..."

"வாட்ட்ட்ட்ட்ட்ட்ட்ட்ட்!" அதிர்ந்து போனான் பாலாஜி.

"ஆமா... பாஜி! நீ... ஒரு அக்யூஸ்ட் ஆகிட்டே!" என்ற பாலாவின் குரலில் கொஞ்சமே கொஞ்சம் சிரிப்பு.

"அடிங்க... சிரிப்பு வருது உனக்கு?! கொன்னுருவேன் கொன்னு! நீயும்... உன்னோட புருவும்... இன்னைக்கு நைட்க்குள்ள இங்க இருக்கணும். இல்ல... நா.... நிஜமான அக்யூஸ்ட்டா மாற வேண்டியிருக்கும்!"

## அத்தியாயம் 14

"பாஜி... நீ அக்யூஸ்ட் ஆகிட்டேடா!" என்ற மதுபாலாவின் பேச்சில் ஒரு குதூகலம் தெரியவே,

"அடிங்க... நக்கலா இருக்கு உனக்கு?"

"டேய்...டேய்... நான் போலீஸ் ஸ்டேஷன்லாம் பார்த்ததே இல்லை. நீ... உள்ள போ! நானும் புருவும் வந்து உன்னை வெளிய எடுக்கிறோம்!"



"குரங்கே! ரெண்டு ஃபிரண்ட்ஸுமா என்னை வச்சு காமெடி பண்றீங்களா?"

"ஹே ஹே! அவ காமெடி பண்ணலைடா.... அவ ட்ரேஜடி பண்ணப் போறா... அதில சிக்கிச் சின்னா பின்னமாகப் போற நீ காமெடியன் ஆகப் போறே!"

"விளையாடாத பாலா!"

"இல்லடா... எனக்கு ஒரே சிப்பு சிப்பா வருது!"

"கொன்றுவேன் கொன்னு! நீயும் உன் புருவும்... என்ன செய்வீங்க ஏது செய்வீங்கன்னு எனக்குத் தெரியாது. நைட்குள்ள பெங்களூர்ல இருக்கணும். அப்படியில்லைன்னு வச்சுக்கோ... நேரா உன்ஃபிரண்டு கிட்டப் போய். இந்தக் கதைக்கு திரைக்கதை... வசனம்... இயக்கம் எல்லாம் உன்னோட அருமை ஃபிரண்டு தான்னு சொல்லிக் கொடுத்துடுவேன்"

"சொல்லிக்கோ! நா... கதை உன்னோடதுன்னு சொல்லிடுவேன்ல. எப்படி?"

"சகிக்கலை!"

"போடா!"

"ஆனா... பாலா! நா... இதை எதிர்பார்த்தேன்!"

"எதை? அவ... உன்னை ஜெயில பிடிச்சுப் போடப் போறதையா?"

"ஹ்ம்ம்... கிட்டதட்ட! அவளைப் பொறுத்த வரை... நா ஒரு stranger. திடீர்னு ஒருத்தன் வந்து... குழந்தைக்கு அப்பான்னு சொல்லும் போது... கொஞ்சம் தடுமாறினாலும். ஜோஸ்கிட்ட அவளோட ஹஸ்பண்ட்ன்னு என்னை நானே அறிமுகம் செஞ்சதும்,

மேடம் சுதாரிச்சுட்டாங்க. எவ்வளவு... திடமா... தெளிவா என்ட்ட பேசினா தெரியுமா?என்னோட.... அந்த ஃபார்முலா அவளை ரொம்பவே டிஸ்டர்ப் பண்ணிடுச்சுன்னு என் னால புரிஞ்சுக்க முடிஞ்சது. எங்க...ஸ்ரீயை அவட்ட இருந்து பிரிச்சிடுவேனோங்கிற பயம்... அவ கண்ணில் ஆழமா பதிஞ்சு இருந்ததை என்னால புரிஞ்சுக்க முடிஞ்சது. அந்தப் பயம் தேவையில்லாததுன்னு சொல்லி... என்னோட பாக்ரௌண்ட்... ஸ்ரீயோட பிறப்பு எல்லாத்தையும் சொல்லிடலாம்ன்னு கோவில் வரைக்கும் போனேன். But...wrong word at the wrong place! particularly at a very wrong timing! எல்லாமா சேர்ந்து... கம்ப்ளீட்டாout of control ஆகிட்டா! அடுத்து என்ன செய்வான்னு... ஆவலா வெயிட் பண்ணிட்டு இருந்தேன். This police complaint shows that she has her head raised to face all problems with courage! Absolutely, awesome!"

"Awesome - ஆ? அப்ப... ஜெயிலுக்குப் போலாம்ன்னு முடிவு பண்ணிட்டே!"

"நா... ஏன் ஜெயிலுக்குப் போறேன்? நீயும் புருவும் வந்து... எனக்கு முன் ஜாமீன் வாங்குங்க!"

"என்னவோ... வஞ்சிர மீன் வாங்குற மாதிரி பேசுறே!"

"வஞ்சிர மீனை விட... இதுக்குக் காசு கம்மி தான். ஆனா... நீங்க முன் ஜாமீன் வாங்கப் போறது போலீஸ் ஸ்டேஷன்ல இல்ல... குந்தவைட்ட"

"எங்க மேல உனக்கிருக்க பாசத்தைப் பார்த்து... அப்படியே புல்லரிக்குதுடா!"



"பின்ன... இருக்காதா? நீ... என்னோட ஒண்ணு விட்ட பெரியப்பா பொண்ணாச்சே! உன் மேல... எனக்கு அப்படியொரு பாசம் பாலா!"- நக்கலாய் இழுத்தான் பாலாஜி.

"முடியல... பாசமலர் பார்ட் 2 எல்லாம் என்னால பாக்க முடியாது" என்று அலுத்துக் கொண்ட பாலா, "ஆமா... அப்படியென்னடா ஃபார்முலா சொன்னே?" எனக் கேட்டாள் ஆர்வமாய்.

"நீ... +2ல மாத்ஸ்ல எவ்வளவு மார்க்?"- படு தீவிரமாய் வினவினான் பாலாஜி.

"அது... எதுக்கு உனக்கு?"- சந்தேகமாய் கேட்டாள் மதுபாலா.

"விஷயமா தான். 70... 80 வாங்கி... சுமாரா பாஸ் பண்ணியிருந்தின்னா, என்னோட ஃபார்முலாவைப் புரிஞ்சுக்கிறதுல... உனக்கு நிறைய difficulty இருக்கும். அதான் கேட்டேன்!"

"நா... 67 மார்க் தான் வாங்கினேன்"என்றவளின் குரலே அவள் உண்மை சொல்லவில்லை என்பதை உணர்த்தியது.

"அப்போ... ரொம்பவே கஷ்டம் தான். இருந் தாலும் சொல்றேன். கவனமா கேளு! A= B, B= C. That makes, A=C. புரிஞ்சதா?" என்றான் அவனோ, கணித மேதையின் நுணுக்கங்களுடன்.

"த்தூ..."

"புரியலன்னா கேளு! இப்படி.. உன்னைப் பார்த்து நீயே பரிதாபப் பட்டுக்காத!"

"வந்தேன்... கொன்றுவேன். இந்த ஃபார்முலா வுக்கே... உன் மேல ரெண்டு கேசை எக்ஸ்ட்ராவா போடணும்! எருமை!"

"வான்னு தான் சொல்றேன்"

"கிளம்பியாச்சு. மதுரை ஏர்போர்ட்ல இருந்து தான் பேசுறோம். அடுத்ததா பெங்களூர் வர ஃப்ளைட்ல... நானும் புருவும் கிளம்பி வரோம்"

"ஹோ... வந்துட்டீங்களா? மேட்டர் அவ்வளவு சீரியஸா அப்போ!?"

"டேய்... பாவி! போலீஸ் கம்ப்ளைன்ட் கொடுக்கப் போறான்னு சொல்றேன். உனக்கு... சாதகமாக ஒரு சாட்சி கூட இல்லைங்கிறது உனக்குப் புரியுதா இல்லையா?"

"ஹ்ம்ம்.DNA டெஸ்ட் வச்சு..."

"அதை எடுக்கிற வரைக்கும்... ஜெயில்ல உக்காந்து புது ஃபார்முலா கண்டுபிடிக்கிறியா?"

"இப்போ... கண்டுபிடிச்சது நல்லாயில்லையா?"

"ஹய்யோ... புரு... என்னால முடியல இவனோட! சாவடிக்கிறான்!" என்றழுத பாலாவிடமிருந்து கைப்பேசி கைமாறியது.

"டேய் பாலா... கவி ரொம்ப தீவிரமா இருக்க மாதிரி தோணுது. விஷயம் நம்ம சர்க்கிளை விட்டு வெளிய வந்திரக் கூடாதுன்னு தான்... நானும் மதுவும் உடனே கிளம்பி வரோம். நீ... கொஞ்சம் கேர்ஃபுல்லா இருந்துக்கோ!"

"நா... சும்மா பாலாட்ட விளாடினேன். பார்த்துக் கலாம். நீங்க ரெண்டு பேரும் வந்துட்டா... கவிட்ட விஷயத்தைச் சொல்றதும் ஈஸியா இருக்கும்" என்றான் பாலாஜி.



"ஓகே. டிக்கெட் வாங்கிட்டேன். இன்னும் ரெண்டு மணி நேரத்தில ஃப்ளைட்."

"சரி... நா வந்து பிக்-அப் பண்ணிக்கிறேன்"

"நீ... இன்னைக்கு DRDO போக வேண்டாம்"

"இல்லை... புரு! போலைன்னா... தான் டவுட் வரும். அங்க போயிட்டு... அப்படியே ஏர்போர்ட் வரேன்" என்றான் பாலாஜி.

***DRDO ஆராய்ச்சிக் கூடம்***

"குந்தவை.. யோசிச்சுத் தான் முடிவெடுத்து இருக்கியா?" - அந்த நாளின் நூறாவது தடவையாக, அந்தக் கேள்வியைக் கேட்டாள் ஆஷா.

"ஆமா... நல்லா யோசிச்சுத் தான் முடிவெடுத்து இருக்கேன்!"

"இல்ல குந்தவை... கொஞ்சம் நிதானமா..."

"இதுவே லேட்ன்னு தோணுது... ஆஷா. அந் தாளை எனக்கு யாருன்னே தெரியல. ஸ்ரீட்டப் போய் அப்பான்னு சொல்லியிருக்கான். சின்னக் குழந்தை ஆஷா அவ... சட்டுன்னு இப்படிச் சொன்னா.... மனசு பாதிக்காதா? அதுவுமில்லாம... ஹஸ்பண்ட் அது இது... பொய் வேற!" என்றாள் குந்தவை, அருவெறுப்புடன்.

"இல்லை... இது மட்டும் காரணமில்லை. வேறு ஏதோ இருக்கிறது!" என்று ஆஷாவின் மனதிற்கு நிச்சயமாய் பட்டது.

குறுகுறுவென குந்தவையை ஆராய்ந்த ஆஷா, "இதான் ரீசன்னா... நேத்து நீ இவ்வளவு சீரியஸா ரியாக்ட் பண்ணலையே?! ஏன்? வேற என்னவோ இருக்கு. நீ கோவிலுக்குப் போயிட்டு வந்ததில இருந்து

தான்... இவ்வளவு ஹார்ஷா ரியாக்ட் பண்றன்னு தோணுது! அங்க... என்ன நடந்துச்சு!" என்றாள் கூர்மையேறிய குரலில்.

பக்கென்று நெஞ்சம் தடதடத்த போதும், நேற்று அவன் பேசிய "Yes... but not legally" என்ற வாக்கியம் படபடப்பை மறைக்க, உஷ்ணமேறியது குந்தவைக்கு.

"ஒண்ணும் நடக்கலை"- பட்டென்று பதில் சொன்ன குந்தவை,,

"காலையில டென்ஷன்ல அடுத்து என்ன செய்ற துன்னு திடமா யோசிக்க முடியலை. அப்புறம்... கோவில்ல போய் யோசிச்சதும்.... அந்தாளைத் துரத்தி அடிக்கிறதுக்கான ஒரே வழி... போலீஸ்ல கம்ப்ளைண்ட் கொடுக்கிறதுன்னு தான் தோணுச்சு" என்றாள்.

அப்போதும் ஆஷா தன் ஆராய்ச்சிப் பார்வையை விடாமல் தொடரவே, "இந்தாளுக்காக... என்னால வேலையை விட்டுட்டு... ஸ்ரீயோடவே இருக்கவும் முடியாது. அதே சமயும்... ஸ்ரீயைக் கொண்டு போய் வேற டே கேர்லயும் விட முடியாது. அந்தாளை... இங்க வரக் கூடாதுன்னு நா மட்டும் போய் கம்ப்ளைண்ட் கொடுக் கவும் முடியாது. அதுக்கு... ரெஸ்பான்ஸும் இருக்காது. So... the only way I have to get rid of him from our lives is filing complaint." என்றாள் குந்தவை.

அவளைப் பொருத்தவரையிலும் அது சரியான முடிவே!

பாலாஜி என்ற மனிதனைப் பற்றி அவளுக்கு எதுவுமே தெரியாத நிலையில்..."illegal father" என்ற அவனது அறிமுகத்தின் பின்னே. சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க அவளால் முடியவில்லை.



"தனியாக வசிக்கும் எனக்கும் என் பெண்ணிற்கும் தொந்தரவு கொடுக்கிறான். சிறு குழந்தையான என் பெண்ணை மனதளவில் குழப்புகிறான்" - ஆகிய இரு காரணங்கள். அவன் மீதான புகாருக்கு வலு சேர்ப்ப தற்குப் போதுமானது என்று தோன்றியது. கூடவே சான்றுகளும் தனக்கு சாதகமாய் இருப்பதாகவே பட்டது.

தனக்கும் அவனுக்கும் சம்மந்தமில்லை என்று நிரூபிப்பதற்கு, அவளது திருமண சான்றிதழும்... விவாகரத்துப் பத்திரமும் இருந்தது.

ஸ்ரீக்கும் அவனுக்கும் சம்மந்தமில்லை என்று நிரூபிக்க அவளிடம் சான்றுகள் இல்லையென்றாலும், "illegal father" ஆன அவனிடமும் சான்றுகள் இருக்க வாய்ப்பில்லையே.

இதில், அவளுக்கும் ஸ்ரீக்குமான சம்மந்தத்தை நிலைநாட்டும் சான்றுகள் தான் குந்தவைக்குப் பெரும் கலக்கத்தைக் கொடுத்தன.

கம்ப்ளைன்ட் விசாரிக்கப்படுகையில், ஸ்ரீயைப் பற்றிய உண்மையைச் சொல்ல வேண்டியிருக்கும். அப்படி இப்படி என்று பரவி... ஒரு கட்டத்தில் ஸ்ரீயிடம் சேர்ந்து விடுமோ என்ற பயம் நெஞ்சைக் கவ்வியது.

ஆனாலும், அந்தப் பயத்தை விட.... பாலாஜியை மகளிடம் நெருங்க விடக்கூடாது என்ற உறுதி, அவளைத் திடமாய் முடிவெடுக்க வைத்தது.

தோழியின் முகத்தில் தெரிந்த தீவிரம், அவள் இதிலிருந்து பின் வாங்கப் போவதில்லை என்பதை அறிவுறுத்த, "சரி... எப்போ கம்ப்ளைன்ட் கொடுக்கப் போறே?" என்றாள் ஆஷா.

"அதான் ஜோஸ்... போலீஸ் ஸ்டேஷனுக்குத் தனியா போக வேணாம்ன்னு சொல்லிட்டாங்களே!" - ஆயாசம் தெறித்த குரலில் குந்தவை சலிப்புற,

"ஒரு நாளில ஒண்ணும் ஆகிடாது. குந்தவை, ஜோசோடவே போ!" என்றாள் ஆஷா.

"ஹ்ம்ம் சரி... ஜோஸ்க்கு இன்னைக்கு வேலை முடிஞ்சிடும் தானே..." எனக் கேட்ட குந்தவை, ஆஷா குத்துமதிப்பா தலையசைத்ததும், "நாளைக்குக் காலையிலேயே போய்டலாம்ன்னு யோசிக்கிறேன். வேலை இருந்தாலும்... அப்புறம் வந்து பார்த்துக்கலாம்ல்ல" என்றாள்.

"பார்த்துக்கலாம்... பார்த்துக்கலாம்" என்று தலையை வேகமாய் ஆட்டிய ஆஷா,

"பாலாட்ட ஒரு வார்த்தை சொல்லிடேன்" என்றாள்.

"என்னன்னே தெரியல... ரெண்டு நாளா ஃபோனை எடுக்க மாட்டேங்கிறா. மாமியார் வீட்டுக்குப் போயிருக்கா போல... அங்க போனா... ஃபோனை எடுக்கிறது ரொம்பக் கஷ்டம். சிக்னலும் கிடைக்காது... அவங்க மாமியாரும் எதுனா சொல்லுவாங்க. அவளா பண்ணுவா... அப்போ சொல்லிக்கிறேன்" என்றாள் குந்தவை.

குந்தவை கூறுவதைப் புருவம் சுருங்கக் கேட்டிருந்த ஆஷாவின் மூளை, 'நா... பண்ணும் போது எடுத்தாளே!' என்று சொல்லத் துடித்த நாவை அடக்கி வைத்தது.



'எங்கேயோ இடிக்குதே!' - ஆஷாவின் மூளை அந்த யோசனையில் உழல, குந்தவையோ குழந்தையை நாடிச் சென்றிருந்தாள்.

அங்கே, எந்தவிதமான பதட்டமும் இல்லாமல், குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தான் பாலாஜி.

அந்த நிமிடமே போலீஸில் புகார் கொடுத்து விடலாமா எனுமளவிற்கு, குந்தவைக்கு வந்த ஆத்திரம் பொங்கி வழிந்தது.

"அவளை... விடுங்க" என்றாள் எரிச்சல் மிகவுற.

"ஹலோ... எப்படி இருக்கே? நேத்து... நீ பாட்டுக்கு ஓடி வந்துட்டே? ஆஞ்சு... கோச்சுட்டார் தெரியுமா? அப்புறம்.... நான் தான் அவரைச் சமாதானம் பண்ணினேன். அறியா புள்ள... தெரியாம பண்ணிடுச்சு... மன்னிச்சு விட்டுடு ஆஞ்சு பேபின்னு அவர்ட்ட உனக்காக மன்னிப்பு கேட்டுட்டு வந்தேன் தெரியுமா?" என்றான் அவனோ சாதாரணமாய்.

"ச்சே"என்று வந்தபோதும், 'எல்லாம் உன்னோட தப்பு குந்தவை. எதுக்கு... அவன்ட்ட கெஞ்சிட்டு இருக்கே? அவனெல்லாம் ஒரு ஆளுன்னு... அவன்ட்ட போய் பேசின பார்த்தியா... அதான் நக்கலடிக்கிறான்' என்று தன்னைத் தானே நொந்து கொண்டவள்,

"அம்மு... வாடா சாப்பிடலாம்"என்றாள் குழந்தையிடம்.

"ச்சாப்பா... ச்சாப்பா..." என்றபடியே பாலாஜியின் மடியை விட்டு எழுந்து வந்த ஸ்ரீதுளசி, "ம்மா...ம்மா... தோச்சு... ஷீ வோவ ஷயி இக்கு இய்ய... அதா... தோச்சு"

என்று கீரிடமாய் வீற்றிருந்த சிறு மஞ்சள் ரோஜாவைச் சுட்டிக் காட்டினாள்.

"ஹய்யா... சூப்பர் ரோஸ்டா..." என்று குந்தவையும் மகிழ,

"பா அங்க்கிள் தானே ரோஸ் பறிச்சுக் கொடுத் தேன்" என்று தாய்க்கும் மகளுக்கும் இடையே புகுந் தான் பாலாஜி.

"ஹா... ன்ன்ன்ன்" என்று அவனுக்குப் பதில் சொல்லத் தொடங்கிய மகளின் கன்னம் பற்றி,

"ஹைய்யா... அம்மு ட்ரெஸ்க்கு மாட்ச்சா ரோஸ் வச்சிருக்காளே! சூப்பர்!"

"இப்போ... அம்மு என்ன செய்யப் போறா தெரி யுமா?"

"டிரஸ்க்கு மாட்ச்சா ரோஸ் வச்ச மாதிரி... டிரஸ்க்கு மாட்ச்சா மம்மம் சாப்பிடப் போறா.... பருப்பு மம்மம் சாப்பிடப் போறா..."

"அப்புறம்... அம்மா டிரஸ்க்கு மாட்ச்சா கேரட்..."

"சாப்பாமா?"

"ச்சாப்பாம்... ச்சாப்பாம்..." - பிள்ளையின் கவனம் முழுதாய் தாயிடம் திரும்பியிருந்தது.

பிள்ளையை அழைத்துக் கொண்டு, மரத்தடிக்குச் சென்றவள், உணவை எடுத்து ஊட்டத் தொடங்கி னாள்.

சில நிமிடங்களில், "ம்மா... பா அன்னக்கி..."எனப் பிள்ளை தொடங்க,



"அம்முக்குத் தண்ணின்னா பிடிக்கும் தானேடா" என வேறொரு விஷயத்தை வைத்து இடை வெட்டி னாள்.

"ஹா... நின்னி... நின்னி... ச்சூப்பர்..."

"சூப்பர் தண்ணில... அம்முக்குத் தண்ணி பிடிக்கும்ல... அதா அம்மா உன்னை ஸ்விம்மிங் கிளாஸ் விடப் போறேன். அங்க... நிறைய தண்ணி இருக்கும்டா... நீ அதில விளையாடிட்டே இருக்கலாம்"

"ம்மா... திவ்வ மாத்தியா?" - விழி விரித்தாள் பெண்.

"திட்டவே மாட்டேன். எவ்ளோ நேரம் வேணா... நீ தண்ணில விளையாடலாம். சரியா? இந்த வாரம்... போலாமா?" என ஆசை காட்டினாள்.

"ஹாஆஆஆஆஅ...ச்சூப்பூ....ச்சூப்பூ" என்று கை தட்டி மகிழ்ந்த குழந்தையின் நினைவிலிருந்து "பா... அங்க்கி" கரைந்து போயிருந்தான். அப்போதைக்கு என்றாலும், எப்போதைக்கும் அவன் நினைப்பை மறக்கடிக்க முடியும் என்ற திடம், இளம் புன்னகை ஒன்றைக் குந்தவையின் முகத்தில் அப்பியது.

அதை விடவும் பெரிதான ஒரு புன்னகையை இதழ்களில் பூசியபடி, மரத்தின் மறுபுறம் நின்றிருந்த பாலாஜி, "Strategic moves. Kudos!" என்று சிலாகித்துக் கொண்டான்.

தாயும் மகளும் உணவை முடித்துக் கொண்டு கிளம்பவும், பாலாஜியும் விமான நிலையம் நோக்கி விரைந்தான்.

போகும் வழியில், இரு முக்கியமான நபர்களுக்கு அழைத்துப் பேசினான்.

ஒருவர் - அருந்ததி! அவனுடைய தோழி! முக்கியமாய், சென்னையில் அவன் வேலை செய்த மருத்துவமனையின் மகப்பேறு மருத்துவர்!

மற்றொருவர் - லலிதா! அவன் நடத்தும் நாடகத்தின் சூத்திரதாரி!

## அத்தியாயம் 15

"ஹலோ லலி..."

"என்னடா... இப்பத் தானே பார்த்துட்டுப் போனே? அதுக்குள்ள என்ன ஃபோனு!"

"உன் மேல இருக்க லவ்ல கால் பண்ணினேன், லலி! உன்னைப் பாக்காம... உன்ட்ட பேசாம என்னால இருக்க முடியலை தெரியுமா?"

"தாங்கலை! என்ன விஷயம் சொல்லு?" - நறுக்குத் தெரித்தார் போல் வந்தது கேள்வி.

"விஷயமிருந்தா தான் கூப்பிடணுமா என்ன? என்னோட லல்லுட்ட பேசி நாளாச்சேன்னு..."

"நாளாகலைடா... நேரம் தான் ஆச்சு!"

"என்னவோ ஆச்சு! நீ... சாப்பிட்டியா?"

"ஆச்சு... ஆச்சு..."

"எப்படி இருந்துச்சு சாப்பாடு!?"

"சாப்பாட்டை வீணாக்கிப் பழக்கமில்லையேன்னு சாப்பிட்டேன்!"



"ஓவர் கொழுப்பு! உனக்குப் பிடிக்குமேன்னு... வத்த குழம்பு வச்சிருந்தேனே... How was it?"

"அதுக்குப் பேரு... வத்தக் குழம்பா?! ஹய்யையோ..."

"எதுக்கு இந்த ரியாக்ஷன்?"

"நா... அதை ரசம்ன்னு நினைச்சில்ல சாப்பிட்டேன்!"

"எப்படியோ... சாப்பிட்டே! அதானே... இங்க மேட்டர்!"

"போதும்டா... உன்னோட மொக்கை. ஏர்போர்ட் போயிட்டியா?"

"ஹ்ம்ம். வந்தாச்சு! சாதம் மட்டும் வச்சு வை... லலி. பாலாவையும் புருவையும் நம்ம வீட்டுக்குத் தான் சாப்பிடக் கூட்டி வரப் போறேன். "

"ஏன்டா... அசந்து போய் வரவங்களை இம்சை பண்றே? வழியிலேயே... ஏதாவது நல்ல ஹோட்டலா பார்த்து... சாப்பிட்டு வந்துடுங்க"

"ஆனாலும்... உனக்கிருக்க நக்கலுக்கு!"

"என்ன செய்யச் சொல்றே? உன்னோட சாப்பாட்டைச் சாப்பிட்டு... நாளுக்கு நாள் வெயிட் ஏறுதோ இல்லையோ... நக்கல் ஏறுது!"

"அந்தக் குரங்குக்கு ஏற்கனவே மூட்டைக் கணக்கில நக்கல் இருக்கு. கூடக் கொஞ்சம் கூடினா... ஒண்ணும் தப்பில்லை. வீட்டுக்கே கூட்டிட்டு வரேன்"

"என்னவோ பண்ணு! அப்புறம்... என்னோட துசி குட்டி எப்படி இருக்கா?"

"அழகா... துளசின்னு பேரு வச்சா... அதென்ன துசி... தூசின்னுட்டு. ஒழுங்கா மரியாதையா துளசின்னு

கூப்பிட்டுப் பழகு.. சொல்லிட்டேன்! இல்லைன்னா... கவிட்ட சொல்லி... உன்னையும் ஜெயில்ல பிடிச்சுப் போடச் சொல்லிடுவேன்"

"நீ.... வேணா அவளுக்குப் பயப்படுடா! எனக் கொண்ணும் அவளுக்குப் பயப்படணும்னு அவசிய மில்லை. தெரிஞ்சுக்கோ!

"இந்த... உதாரெல்லாம், நாளைக்கு அவளைப் பாக்கும் போது எங்க போகுதுன்னு நானும் பார்க் கிறேன்"

"என்னது?!!!" - ஏகப்பட்ட அதிர்ச்சியுடன் வெளி யான அக்குரல், "நா அவளைப் பாக்கணுமா? இதென்ன... புது டர்னிங் பாயிண்ட்!" என்றது பீதியுடன்.

"டர்னிங் பாயிண்ட் வைக்கிறதெல்லாம்... என்ன நமக்குப் புதுசா? அது... பர்னிங் பாயிண்ட்டா மாறுற வரை... வேடிக்கைப் பார்த்துட்டு இருக்கிறதும் உனக்கு என்ன புதுசா?" என ரைமிங்காகப் பேசுகிறேன் என்று லலிதாவைப் பல்லைக் கடிக்க வைத்தவன், லலிதா மேலே பேசும் முன்னர் தானே பேசினான்.

"எப்படியும்... அந்தக் குரங்கு... என்னைக் கை காட்டிவிட்டுட்டு... எஸ்கேப் ஆக ட்ரை பண்ணும். அது மட்டும் எப்படி எஸ்கேப் ஆகலாம்? எனக்கும்... கை காட்ட ஒரு ஆள் வேணாம்? அதுக்குத் தான்... நீ!"

"அடப்பாவி! உன்னை ஒரு டாக்டர்ன்னு நம்பினே னேடா! நீ... ஒரு கொலைகாரனா இல்ல இருக்கே!"

"ஹலோ! ஹலோ! இந்த அறிவு... எனக்கு ஐடியா கொடுக்கும் போதே இருந்திருக்கணும்! இப்ப வந்து...



குய்யோ முய்யோன்னா... என்னால ஒண்ணும் பண்ண முடியாது!"

"ஹ்ம்ம். எல்லாம் என் நேரம்"

"துளசி நம்ம வீட்டுக்கு வர நேரம்... நல்ல நேரம் தான்!"

"எப்படிடா இவ்வளவு confident - ஆ இருக்கே! ஆனாலும்... உன் நம்பிக்கை எனக்குப் பிடிச்சிருக்கு!"

"எல்லாம்... என்னோட லவ்லி லலி கொடுத்த நம்பிக்கை தான்! சரி... புருவும் பாலாவும் வர மாதிரி இருக்கு.. அப்புறம் பேசுறேன்"

"சரி... சரி... அப்புறம் அருந்ததிட்ட பேசிட்டியா? வரேன்னு சொல்லிட்டாளா?"

"ரசம்... குழம்புன்னு மொக்கைப் போடுறதை விட்டுட்டு... இதைக் கேட்டிருக்கலாம் தானே!" எனச் சலித்துக் கொண்டவன், "மைசூர்ல தான் இருக்கா போல. வருணையும் குழந்தைங்களையும் அங்க இருந்தே சென்னை அனுப்பிட்டு... அவ மட்டும் பெங்களூர் வரேன்னு சொன்னா. நைட் வந்துடுவா" என்றான் தகவலாக.

"ஹ்ம்ம். பாவம்... குடும்பத்தோட ஜாலியா டூர் வந்தவளைப் பிடிச்சு... இப்படிப் படுத்துறோம்!"

"ஹ்ம்ம். எனக்கும் கஷ்டமா தான் இருந்தது. ஆனா... அவ ஒண்ணும் பெருசா ஃபீல் பண்ணிக்கலை. எப்படியும்... இன்னைக்கு நைட் கிளம்பறதா தான் இருந்தோம். சோ... பரவாயில்லைன்னு கூலா சொல்றா. அதுவுமில்லாம... சென்னை போய்ட்டா... பேஷண்ட்ஸ்... டெலிவரின்னு பிசி ஆகிடும். இந்த டூர் டைம்ல....

பெங்களூர் வரது பிரச்சனையில்லைன்னு சொல்லிட்டா. சோ... தேவையில்லாம வொர்ரி பண்ணிக்காத"

"சரிடா... நீ அவங்களைக் கூட்டிட்டு சீக்கிரம் வந்து சேரு. நா... சாதம் வைக்கிறேன்" என்றபடியே அழைப்பை லலிதா துண்டிப்பதற்கும், புருஷோத்தமனும்... மதுபாலா வும் பெங்களூர் விமான நிலையத்தை விட்டு வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

அடுத்த நாள் காலை

"ஹரே ராம... ஹரே ராம... ராம ராம ஹரே ஹரே!"

"ஹரே கிருஷ்ண... ஹரே கிருஷ்ண... கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே!"

எப்போதும் போல் அடுக்களையில் நிற்காமல், முக்கியமான ஆவணங்கள் வைத்திருக்கும் அலமாரியின் முன்னே நின்று கொண்டிருந்தாள் குந்தவை.

ஸ்ரீதுளசி இன்னமும் எழுந்து விடவில்லை. மணி ஆறு தானே ஆகிறது.

மகள் எழுவதற்கு முன்னர், கேஸ் ஃபைல் பண்ணு வதற்குத் தேவையான ஆவணங்களை எடுத்து வைக்க முடிவு செய்தவள், தனக்கும் பாஸ்கரனுக்கும் நடந் தேறிய திருமணம் தொடங்கி விவாகரத்து வரையிலான சட்டப் பத்திரங்களை எடுத்து வைத்தாள்.

கிருஷ்ணனின் அடியில் மறைந்திருக்கும், ஸ்ரீயின் ரகசியத்தை இப்போது எடுத்து வைக்க வேண்டாம் என்று முடிவு செய்தவளாய், தான் மட்டுமாய் சம்பந்தப் பட்ட ஆவணங்களை மட்டும் பையில் எடுத்து வைத் தாள்.



பின்னர் கிருஷ்ணன் முன்னே அமர்ந்து, ஒரு வெள்ளைக் காகிதத்தில், பாலாஜி மீது கொடுக்கப் போகும் புகாரைக் கைப்பட எழுதினாள்.

"Ms.Kunthavai" - தன் பெயரைக் கீழே எழுதி, சற்று மேலே தன் கையெழுத்தை அவள் இடப் போன சமயம், அழைப்பு மணி கூவியது.

பெருத்த ஆச்சரியம் தான் குந்தவைக்கு!

இந்த நேரத்தில் யார்?

அவள் வீட்டிற்கு வரும் ஒரே நபர்... இல்லை இரண்டே நபர்கள் ஆஷாவும் ஜோசும் தான். அதிலும், ஜோஸ் அவ்வளவாய் வந்துவிடமாட்டான். ஆஷா தான் வருவாள். ஆனாலும்... இவ்வளவு காலையில் அவள் வந்ததே இல்லை எனலாம். அவளது விடியலே ஏழரையைத் தாண்டித் தான் என்கையில், அவளாய் இருக்க வாய்ப்பு மிகவும் கம்மி.

பின்னே யார்?!

எழுதிக் கொண்டிருந்த புகார் காகிதத்தை மடித்து கிருஷ்ணனின் அருகே வைத்துவிட்டு, கதவைத் திறந் தவள் அதிர்ந்து போனாள்.

மதுபாலா... புருஷோத்தமன்... அருந்ததி... பாலாஜி... லலிதா என்று ஒரு பெரிய பட்டாளமே வாசலில் நின்று கொண்டிருந்ததைக் கண்ட குந்தவைக்கு சற்று நேரம் ஒன்றுமே புரியவில்லை.

மதுபாலா... ஏன் இங்கே? அதுவும்... பாலாஜி யுடன்?!

இந்த ஒரு கேள்வி மட்டுமே வந்திருந்த மற்றவர் களைப் பற்றிய சிந்தனையை மழுங்கடிக்க, புரியாமல் பார்த்தபடி நின்றாள் குந்தவை.

"ஏய்... கவி! என்னடி... வந்தவங்களை வாங்கன்னு கூடக் கேட்காம..." என்று மதுபாலா குந்தவையின் தோளை உலுக்க,

"ஹான்... நீ எங்க இங்க?" என்றாள் குந்தவை புரியாமல்.

"அதெல்லாம்... அப்புறம் சொல்றேன். நீ... மொதல எல்லாரையும் வாங்கன்னு கேளு"

"ஹ்ஹ்ஹ்ஹ்ம்..." - தலையை அவள் லேசாய் குலுக்கிக் கொண்டு, வந்தவர்களின் முகங்களை மனதில் பதிய வைக்க முயல,

"என்ன கவி... முழிச்சிட்டே நிக்கிற? அம்மாவால... ரொம்ப நேரம் நிக்க முடியாது. ஃபர்ஸ்ட் அவங்களை உள்ளே கூப்பிடு" என்று கடிந்தாள் மதுபாலா.

"ம்ம்ம்ம்ம்... வாங்க" - மதுபாலாவின் அவசரத்திற்கு ஆளானவளாய் திக்கினாள் குந்தவை.

பாலாஜி, லலிதாவின் இடது கையைப் பிடித்து முன்னே கூட்டி வர, தன் வலது கையால் குந்தவையின் கைகளைப் பிடித்தார் லலிதா.

என்னவோ செய்தது குந்தவைக்கு!

"என்ன குந்தவை... எப்படி இருக்கே?! பாத்து... ரொம்ப நாளாச்சே?" என்றார் அவரோ, வாஞ்சை நிரம்பிய பார்வை ஒன்றால் அவளை வருடியபடி.

"நீங்க...நீங்க... என்னை உங்களுக்குத் தெரியுமா? நீங்க..." எனத் திக்கிய குந்தவை, மூளையின் நுனி நுடுக்கெங்கும் அவரைப் பற்றிய நினைவுகள் ஏதும் இருக்கிறதா என ஆராய்ந்தாள்.



"ம்ம்... உனக்கும் என்னைத் தெரியும்!" என்றார் அவரோ விஷமமாய்.

"எனக்கும் தெரியுமா?" என ஆச்சரியமே உருவாய் யோசித்தவளின் மூளையில் ஒரு மின்னல்.

முகம் முழுதும் பிரகாசமுற, கண்ணில் ஆச்சரியமெனும் மின்னல் நர்த்தனமாட, மனம் முழுக்க சந்தோஷத்துடன்,

"லலிதா மிஸ்!!!" என்றாள் குந்தவை, குரலிலும் தன் அதீத ஆச்சரியத்தை வெளிக்காட்டி.

"கரெக்ட்!" - சந்தோஷமாய் சொன்ன லலிதா, குந்தவையின் தாடையைப் பற்றி முத்தம் கொடுத்தார். முத்தத்தின் வடிவில், பார்வையை விலக்கி கதவருகே நின்றிருந்த மகனை அண்ணாந்து பார்த்தவருக்கும் அவரது மகனுக்கும் நடந்த பார்வை பரிமாற்றங்களை வார்த்தையாக்கும் தகுதி எழுத்துக்களுக்கு இல்லை!

அதற்குள், "நீங்க... எப்படி மிஸ் இங்க?" உங்களுக்கு... எப்படி..." என்று படபடத்தாள் குந்தவை.

"அதெல்லாம் அப்புறம் பேசலாம்" என அவளை அடக்கிய மதுபாலா,

"அம்மா... மொதல உக்காருங்கம்மா" என்று பெரியவரைத் துரிதப்படுத்தினாள்.

"உக்காருங்க மிஸ்" என்றாள் குந்தவையும் வேகமாய்.

"ம்ம்... நீ.... எல்லாரையும் உள்ள கூப்பிடு" என்றார் அவரோ, ஒரு ஆசிரியரின் குரலில்.

ஒரு வினாடி என்றாலும் குந்தவையின் முகத்தில் தயக்கம் மண்டுவதைக் கவனித்த லலிதா,

“ஹோ... தெரியாதவங்களை எப்படி உள்ள கூப் பிடுறதுன்னு யோசிக்கிறியா?” எனத் தானே கேட்டு, அருந்ததியின் புறம் கை காட்டி, “அவ பேரு... அருந்ததி” எனத் தொடங்க,

“ஹான்... Dr. Arunthathi Varun தானே! ***Fertility Center Chief Doctor. எனக்குத் தெரியும்” என்றாள் குந்தவை தன் ஞாபக சக்தியை வெளிக்காட்டும் வண்ணம்.

“தெரியுமா? ஹோ... என்ட்ட ட்ரீட்மென்ட் வந்திருக்கீங்களா?” என அருந்ததி ஆச்சரியமாய் வினவ,

“ஆமா டாக்டர், ஒரு... நாலு வருஷம் முன்னாடி வந்தேன்” என்ற குந்தவையின் குரல் சட்டென தேய் வதைக் கண்ட பாலாஜி, அருந்ததியின் கைகளை லேசாய் அழுத்தினான்.

நண்பனை நிமிர்ந்து பார்த்தவளும், “புரிகிறது” என்பது போல் தலையாட்டினாள்.

அவர்கள் இருவருக்கும் இடையே நடந்த மௌன உரையாடலைத் தன்னுள் பதிவு செய்து கொண்ட குந்தவைக்கு என்னவோ போலிருந்தது.

இருவருக்குமே தன் முந்தைய வாழ்வின் அவலங்கள் தெரியும் என்பதை அச்செய்கை காட்டிவிட, முகம் வாடிப் போனது.

அதை உணர்ந்தவள் போல், “ஏய்... கவி... அவங் களை உள்ள வரச் சொல்லு” என்று பல்லைக் கடித்தாள் பாலா.

“வாங்க மேடம்... உள்ள வாங்க” அவள் அழைத் ததும் லலிதாவின் அருகே வந்தமர்ந்தாள் அருந்ததி.



புருஷோத்தமனும்... பாலாஜியும் மட்டும் வாசலில் எஞ்சியிருந்தனர்.

“ஏன்மா... இப்போ தான் தெரிஞ்ச லலிதா டீச்சரையும்... எப்பையோ பார்த்த அருந்ததியையும் உள்ள கூப்பிட்டுட்டே! பல வருஷமா தெரிஞ்ச... என்னை விட்டுட்டியேமா”என்றான் புருஷோத்தமன் பாவமாய்.

அனைவரின் முகத்திலும் புன்னகையைத் தவழ விட்ட அப்பேச்சு, குந்தவையின் முகத்தில் சிறு ஒளியைக் கொண்டு வந்தது.

“வாங்கண்ணா... வாங்கன்னு கூப்பிட்டா தான் வருவீங்களா? இது... உங்க தங்கச்சி வீடு... நீங்க எப்ப னாலும் வரலாம். இதோ... இவ உள்ள வரலை? நா... என்ன இவளை வான்னா கூப்பிட்டேன்?” என்ற குந்தவையின் பேச்சைத் தொடர்ந்து,

“அதானே... இங்கே ஏன் வந்தேன்னு இல்ல கேட்டே!?” என்று சலித்த பாலா,

“ஆனாலும்... வந்திருக்கேன்னா என்ன அர்த்தம்...” என்ற கேள்வியைக் கொக்கிப் போட்டு நிறுத்தவும்,

“உனக்கு மானரோஷமே இல்லைன்னு அர்த்தம்!” - அக்கேள்வியை முடித்தான் பாலாஜி.

ஆச்சரியத்துடன் மதுபாலாவையும் பாலாஜியை யும் மாறி மாறிப் பார்த்தாள்.

இவர்கள் இருவருக்கும்... ஒருவரை ஒருவர் தெரிந்திருப்பது மட்டுமல்ல. நல்ல பழக்கமும் இருக் கிறது என்று குறிப்பெடுத்தது மனம்.

அவளது அதிர்ச்சியைக் கவனித்த போதும், அதைக் கண்டு கொள்ளாமல், "எல்லாரும் உள்ள போய்ட்டா எப்படி? நானும் உள்ள வரணும்ல்ல. Give her an introduction about me!" என்றான் தோள்களை சாதாரணம் போல் குலுக்கி.

"பாலாஜி என்னோட அண்ணா. ஒண்ணு விட்ட சித்தப்பாவோட பையன்" - மதுபாலா.

"பாலா என்னோட ஃபிரண்டும்மா. நானும் அவனும்-2 வரை ஒண்ணா படிச்சோம்" - புருஷோத்தமன்.

"பாலா என்னோட பெஸ்ட் ஃபிரண்ட். We both did our UG together. ஒண்ணாவும் வொர்க் பண்ணி யிருக்கோம். இப்போ... உங்களுக்காக அவன் பெங்களூர் வரலைன்னா... இன்னமும் வொர்க் பண்ணியிருப்போம்" - அருந்ததி.

"அவன்... என்னோட பையன்ம்மா"- லலிதா.

ஒவ்வொருவரின் முன்னுரையையும் விரிந்த கண்களுடன் கேட்டிருந்த குந்தவை, பாலாஜியைப் புரியாமல் பார்த்தாள்.

அவனோ கண்களால் "ப்ளீஸ்!" என்றான்.

சட்டெனப் பார்வையை விலக்கிக் கொண்ட குந்தவை, "உள்ள வாங்க" என்றழைக்கையில் கண்கள் நேர்க்கோட்டில் அவனைச் சந்தித்தன. எந்தவிதமான தயக்கமோ... பயமோ... நடுக்கமோ... குழைவோ இல்லாமல், நிமிர்வுடன் கூடிய அவளது அழைப்பை ரசித்த பாலாஜி, வீட்டினுள் நுழைந்தான்! வலது காலை முன்னே வைத்து!



அதைக் கவனித்த மதுபாலா, "கிளுக்" எனச் சிரிக்க, "நறுக்" என அவள் தலையில் ஒரு கொட்டு விழுந்தது.

அதைக் கவனித்தபோதும், கண்டுகொள்ளாதது போல் ஒதுக்கிய குந்தவை, "இவர் மேல கம்ப்ளைன்ட் கொடுக்கப் போற விஷயத்தைக் கேள்விப்பட்டு... அதை ஸ்டாப் பண்றதுக்காக வந்திருக்கீங்க! சரியா?" என்றாள் அனைவர் மீதும் கூர் பார்வை ஒன்றை வீசி.

மற்றவர்கள் மௌனம் காக்க, மதுபாலாவின் தலை மெல்ல ஆடியது.

"சோ... நீ என்னோட ஃபோனை மட்டும் தான் எடுக்கலை!" என்றாள் குந்தவை. தோழியைப் பார்வையால் அளந்தபடியே.

அதற்கும் மதுபாலாவின் தலை ஆமோதிப்பதாய் அசைந்தது.

"ஆஷாட்ட பேசிட்டுத் தான் இருந்திருக்கே!"

மீண்டும் ஆமோதிப்பாய் ஓர் தலையசைப்பு.

"கம்ப்ளைன்ட் கொடுக்கிறதை... ஒரு நாள் தள்ளிப் போட வச்சதும் நீ தானே!"

மீண்டும் ஓர் தலையசைப்பு. இப்போதும் ஆமோதிப்பாகவே!

"அப்போ... உனக்கு இவர் என்னைத் தேடி வரது தெரியும்?"

இப்போது தலை ஆமோதிப்பாய் அசையவில்லை. பாலாஜியைக் கண்ணால் வெட்டிய மதுபாலா, கண்கள் சுருங்க அவனை முறைத்தாள்.

"அவளை விட்டுடு... பாவம்" என்றான் பாலாஜி மெதுவாய்.

அவனைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தாள், குந்தவை!

"இதுக்கெல்லாம் அசந்துருவேனாக்கும்?" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்ட பாலா, அவளைப் பார்த்து புன்னகைத்தான்.

விருட்டென பார்வையைத் திருப்பிக் கொண்ட குந்தவை, "உங்களுக்கும் அவருக்கும் உள்ள ரிலேஷன் ஷிப்பை சொல்லிட்டீங்க? ஆனா... அவரு...புதுசா ஒரு ரிலேஷன்ஷிப் சொல்றாரே? அதைப் பத்தித் தானே பேச வந்திருக்கீங்க. சொல்லுங்க. அவரோட "father... but not legally"ங்கிற ஸ்டேட்மெண்ட்க்கான விளக்கம் எனக்கு வேணும்" என்றாள் நிதானமாய்.

லலிதாவும் பாலாஜியும் பார்வையால் பேசிக் கொண்டபோதே,

"இந்த டாகுமெண்ட்டைப் படிச்சுப் பாருங்க" என்றபடி, தான் கொணர்ந்து வந்த "legal agreement" ஒன்றைக் குந்தவையிடம் நீட்டினாள் அருந்ததி.

அதில் மேலோட்டமாய் கண்ணை ஓட்டிய குந்தவைக்குத் தலை சுற்றியது!

## அத்தியாயம் 16

**சி**ல மாதங்கள் முன்னர்

"பாலா... நா வருண் பேசுறேன்" - பாலாஜியின் கைப்பேசிக்கு அழைத்த அருந்ததியின் கணவன் வருணின் குரல் இயல்பாய் இல்லை.



"என்ன வருண்... சொல்லுங்க? பதட்டமா இருக்க மாதிரி தெரியுதே!"

"இன்னைக்கு ஹாஸ்பிடல்ல ஏதாவது பேஷண்ட் இறந்து போயிட்டாங்களா?"

"இல்லையே! இன்னைக்கு இங்க ஆபரேஷன் எதுவும் நடக்கலையே! டே... நார்மலா தான் போச்சு!"

"ஹோ!!! இல்ல... அருண் பயங்கர அப்செட்!" - மனைவியின் கவலை படிந்த முகமும், யாரிடமும் பேசாமல் தோட்டத்தில் அமர்ந்திருக்கும் அவளது மௌனமும் வருணைக் கவலைக்கு உள்ளாக்கியது.

"ஹோ... இன்னைக்கு தேவகி ஹாஸ்பிடல்ல ஒரு எமெர்ஜென்சின்னு...c- section பண்ணப் போனா. அங்க... எதுவும்... " - தனக்குத் தெரிந்த வகையில் சிந்தித்தான் பாலாஜி.

"ஆமா... போனதா சொன்னா" - தானும் கூடச் சேர்ந்து சிந்தித்தான் வருண்.

"ஆனா... எங்களோட கேரியர்ல எத்தனையே டெத்தைப் பார்த்திருக்கிறோம். ஹாண்டில் பண்ணியிருக் கோம். ஹ்ம்ம்... ஒருவேளை... பிறந்த குழந்தை..."

"இல்ல இல்ல... கேட்டுப் பார்த்துட்டேன்! டெலிவரில எதுவும் பிரச்சனை இல்லைன்னு சொல்றா. அம்மாவும்... குழந்தையும் நல்லா இருக்காங்கன்னு சொல்றாளே!"

"ஹோ... வேறென்ன?"

வருணும் பாலாஜியும் தத்தம் யோசனையில் இருக்க, "யாரு ஃபோன்ல?" எனும் அருந்ததியின் குரல், வருணின் பின்னிருந்து கேட்டது.

"ஹான்... பாலா டா..."

"ஹோ.... அவனுக்கு கன்சல்டேஷன் எதுவுமில் லைன்னா... வீட்டுக்கு வரச் சொல்லுங்க" என்றாள் அருந்ததி சோர்வே உருவாய்.

வருண், மனைவியின் வேண்டுதலை மீண்டு மொரு முறை முன்வைக்க அவசியமில்லாமல் "இன்னும் 20 மினிட்ஸ்ல உங்க வீட்டில இருக்கேன், வருண்" என்று அழைப்பை வைத்தான் பாலாஜி.

குறித்த நேரத்தை விடப் பத்து நிமிடங்கள் கழித்தே பாலாஜி, அருந்ததியின் வீட்டிற்குள் நுழைந் தான்.

அந்தப் பத்து நிமிடத் தாமதத்தைக் கூடப் பொறுக்க முடியாமல், வீட்டு முற்றத்தை நடந்தே அளந்து கொண்டிருந்தாள் அருந்ததி.

அவன் காரை நிறுத்தும் வரை கூடப் பொறுக்க முடியாதவளாய், வேகமாய் சென்று கார் கதவைத் திறந்துவிட்ட தோழியை வித்தியாசமாய் பார்த்தான் பாலாஜி.

"என்ன அருண்? "Whats wrong? என்றான் தோழி யின் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடி.

"நீ... வா. சொல்றேன்" என்றபடி, தோட்டத்தை நோக்கி நடந்தாள்.

அங்கிருந்த ஊஞ்சலைக் கை காட்டி, "உக்காரு... என்ன சாப்பிடுறே?" என்றாள் உபசரிப்பாய்.

"ப்ச். No formalities!" என மறுத்த பாலாஜி,



"என்ன அருண்? என்ன பிரச்சனை? ஏன்... இவ் வளவு டென்ஷன்?" என்றான் உண்மையான அக்கறை யுடன்.

"I regret being a doctor!" என்றாள் அவள் அருவெறுப்பு முழுவதுமாய் அப்பிய குரலில்.

அதிர்ந்து நோக்கினான் பாலாஜி.

ஒரு மருத்துவரிடமிருந்து இப்படியொரு வார்த்தை வருகிறது என்றால்?!

"அருண்....!!!" எனத் திகைத்து விளித்த பாலாஜி,

"டாக்டர்ஸ் கடவுளுக்கு சமமானவங்க, அருண். அதுவும்... ஒரு உயிரை உருவாக்குற fertility specialistஆ இருந்துட்டு... நீயே இப்படிச் சொல்லலாமா? Calm down டா..."

"முடியல பாலா... என்னால முடியவே இல்ல" என்றவளின் குரல் உடைந்திருந்தது.

அவளது அழுகை நெஞ்சைப் பிசைய, "அருண்... நீ என்னை விட பயங்கர ஸ்ட்ராங்ன்னு நினைச் சிருந்தேனே, நம்ம லைஃப்ல எத்தனை விதமான டெத்தைப் பார்த்திருக்கோம்!" எனத் தேற்ற நினைத் தான் பாலாஜி.

"ப்ச்... ஒரு டெத்தை நினைச்சு அழல" என்றவள்,

"நீ சொன்னியே... ஒரு உயிரை உருவாக்குற Fertility Specialist ன்னு... அதுக்காகத் தான் ஃபீல் பண்றேன்! கடவுளை மீறி... "science" ங்கிற போர்ல நான் உருவாக்கின உயிர்களை நினைச்சு ரொம்ப ஃபீல் பண்றேன். I regret! I regret being a Gynecologist" என்றாள் வெறுப்பு மண்டிய குரலில்.

"அருண்!!!"

"ஆமா... பாலா... கடவுள் போட்ட கணக்குக்கு... நாம நம்ம வழில விடை தேடினது தப்போன்னு தோணுது!"

"என்ன சொல்றே, அருண்? என்னாச்சு!"

" ஒரு ஆணையும் பெண்ணையும் புருஷன் - பொண்டாட்டியாக்குறவனுக்கு... அவங்களுக்கு எப்போ குழந்தையைக் கொடுக்கணும்ன்னு தெரியாதா என்ன? அவனோட திட்டத்தை மீறிக்கிட்டு... நாங்க கடவுளுக்கு நிகரனாவங்கங்கிற திமிருல.... மிதப்பில... கொழுப்பில நாமளே ஒரு உயிரை உருவாக்கி... ச்சை... அந்த உயிர் இப்போ..." -அதற்கு மேல் தன் பேச்சைத் தானே தொடர முடியாதவளாய், அருவெறுப்பில் முகம் சுளித்தாள் அருந்ததி.

"அருந்ததி... என்ன நடந்துச்சுன்னு முழுசா சொல்லும்மா..." என்றான் பாலாஜி, அவள் தோள் தொட்டு, ஊஞ்சலில் அமர வைத்தபடி.

"உனக்கு... நேஹாங்கிற குழந்தையை ஞாபகம் இருக்கா?"

"ஹ்ம்ம்... நேஹா... யாரு..." - பாலாஜிக்கு சட்டென நினைவு வரவில்லை.

"அந்த குஜராத்தி கப்பிள்" - நண்பனின் நினை வலைகளைத் தூண்டி விட முயன்றாள் அருந்ததி.

"ம்ம்... அம்மா பேரென்ன?" - எப்போதுமே பிறந்த குழந்தைகளைத் தாயின் பெயரை முன்னிறுத்தி, "சுஜா பேபி...", "அனிதா பேபி" என்றழைத்தே பழக்கப்பட்



டிருந்த அந்த மருத்துவனுக்கு, அக்குழந்தையின் தாயின் பெயர் தேவையாய் இருந்தது.

"ஆராத்யா..."

"ஹான்... ஃபர்ஸ்ட் டைம்... செவென் மந்த்ஸ் லேயே...c-section பண்ணிக் குழந்தையை வெளிய எடுத்தோமே? அவங்களா?"

"ம்ம். அந்தக் குழந்தை தான். ஞாபகம் இருக்கா இல்லையா?" - அருந்ததிக்குத் தாயை விட, அக் குழந்தை தான் முக்கியமாய் இருந்தது.

"இருக்கு... என்கிட்ட தான் vaccination..check up எல்லாத்துக்கும் கூட்டிட்டு வருவாங்க. ஆனா... ரீசென்ட்டா பாக்கலை" என்றான் நண்பன், தன் consultation records இல் மூளையை ஓட்டி.

"எப்படி பாக்க முடியும்!?" - வெறுப்புடன் முகத்தைச் சுருக்கிய அருந்ததியை,

"என்ன சொல்றே... அருண்?" எனப் பாலாஜி புரியாமல் பார்க்கவும், "அந்தக் குழந்தையோட birth secret தெரியுமா... பாலா?" என்றாள் அவள் கேள்வியாக.

புரியாமல் மறுப்பாய் தலையசைத்தான், பாலாஜி.

"She was a test tube baby..."

இதிலென்ன ஆச்சரியம் என்பது போல், பாலாஜி அருந்ததியைப் பார்த்தான். இத்தனை வருடங்களில், எத்தனையோ சோதனைக் குழாய் குழந்தைகளை உருவாக்கியிருக்கிறாள் அருந்ததி. அவை... சந்தோஷமாகவும்... ஆரோக்கியத்துடனும் நடமாடுவதைக் கண்டிருக்கிறான் பாலாஜி.

அதற்கும், இவளது கோபத்திற்கும் என்ன சம்பந்தம் என்ற யோசனையில் உழன்று கொண்டிருந்த பாலாஜியைத் தன் பேச்சில் மீண்டுமொரு அதிர்ச்சிக்கு உள்ளாக்கினாள் அருந்ததி.

"அந்தக் குழந்தை டெஸ்ட் டியூப் பேபியா மட்டும் இருந்திருந்தா பிரச்சனையே இல்லையே! அந்த fetus ஒட sperm அவளோட அப்பாவோடது இல்லடா"

"ஹோ!!! ரியல்லி!"

"ஆமா.. நம்ம ஹாஸ்பிடல்ல ஃபர்ஸ்ட் டைம்... ஸ்பெர்ம் டொனேஷன் மூலமா IVF பண்ணோம் ஞாபகம் இருக்கா?"

"ம்ம்ம்... யா..."

"என்ன யா... மண்ணாங்கட்டி... நீ தானேடா... நம்ம ஹாஸ்பிடலோட முதல் ஸ்பெர்ம் டோனர்" - 'ஒண்ணும் ஒண்ணும் இரண்டு என்று கணக்குப் போடத் தெரியாமல், யா.... யோ என்று இழுக்கிறானே' என்ற கடுப்பு ஒருபுறம் என்றால், விந்தணு தானத்தைக் கூட மறந்து விட்டானே என்ற ஆதங்கம் மறுபுறம்.

"அதுக்கென்ன இப்போ?" - தோழியின் கடுப்பைப் புரிந்து கொள்ள முடியாமல் பார்த்தான் பாலாஜி.

"அந்தக் குழந்தை... உன்னோட விந்தணுல இருந்து உருவான குழந்தை!" - பல்லைக் கடித்துக் கொண்டு அறிவித்தாள் அருந்ததி.

சட்டப்படி, விந்தணு தானம் கொடுத்தவரிடம், அவரது விந்தணு மூலமாய் உருவான குழந்தை பற்றிய விவரங்களைக் கூறக் கூடாது என்றாலும், இப்போது சொல்ல வேண்டிய அவசியத்தில்... கட்டாயத்தில் இருந் தாள் அருந்ததி.



பாலாஜிக்கும் அதிர்ச்சியே! ஆனால்... பேரதிர்ச்சி அல்ல!

அதிர்ச்சியாய் இருந்தாலும், இதென்ன புரியாத பேச்சு என்ற உணர்வு தான் மேலோங்கியது. சட்டப்படி, தனக்கும்... தன் விந்தணுவில் இருந்து உருவாகும் குழந்தைக்கும் சம்பந்தமில்லை என்று எழுதிக் கொடுத் தாகிய பின்னர், அருந்ததி அக்குழந்தையின் பிறப்பைப் பற்றித் தன்னிடம் சொல்வதே தவறென்று எண்ணினான் பாலாஜி.

விந்தணு தானம் கொடுத்த கையோடு, தனக்கும்... தன் விந்தணுக்களால் உருவான குழந்தைக்கும் எந்த விதமான பிணைப்பும் இல்லை என்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பாலாஜி, அதைப் பற்றி மறந்தே போயிருந்தான்.

சொல்லப் போனால், அவன்... விந்தணு தானம் செய்ததே... அருந்ததியின் வற்புறுத்தலால் தான்.

"ஸ்பெர்ம் டொனேஷன்ங்கிறதை... ரொம்பப் பின் தங்கிய ஒரு ஆக்ட்டா நினைக்கிறாங்க, பாலா. வைஃப் ஒட மெடிக்கல் ரெகார்ட்ஸ் நல்லா இருந்து... ஹஸ்பண்ட்க்கு ஸ்பெர்ம் ஹெல்தியா இல்லைங்கிற பட்சத்தில... ஸ்பெர்ம் டோனர் மூலமா குழந்தை பெத்துக்க அவங்க ரெடியா இருக்காங்க. ஆனா... ஸ்பெர்ம் டொனேட் பண்ணத் தான் நிறைய பேர் ரெடியா இல்லை. அப்படியே ஸ்பெர்ம் டொனேட் செய்ய முன் வந்தாலும்... அவங்களோட மெடிக்கல் கண்டி ஷன்ஸ் நல்லா இல்லை. உன்னை மாதிரி... ஹெல்த்தியா... எந்தவிதமான கெட்டப் பழக்கமும் இல்லாத... நல்ல ஜீன்ஸ் உள்ள மனுஷங்க ஸ்பெர்ம் டொனேட்

பண்ணா... பிறக்கிற குழந்தையும் ஆரோக்கியமாவும் இருக்கும். நல்ல குழந்தையாவும் பிறக்கும்" என்று அருந்ததி ஒரு நாள் வருத்தப்பட்ட போது,

"நா கல்யாணமும் பண்ணிக்கப் போறதில்ல... சோ... குழந்தைக்கும் வழியில்லை. இப்படியாச்சும்... என் மூலமா ஒரு உயிர் உருவாகிட்டுப் போகுதே! I will donate!" என்று தோழிக்காக என விந்தணு தானம் செய்த பாலாஜி, அவற்றை... தோழி எவ்வகையில் பயன்படுத்தி னாள் என்பதில் கூட அக்கறை காட்டவில்லை.

அதே உணர்ச்சியை இப்போதும் காட்டி, "Come on, அருண்! உளறிட்டு இருக்காத... அந்தக் குழந்தை அவங்களோட குழந்தை. அந்தக் குழந்தையைப் பத்து மாசம் சுமந்து பெத்த அந்த லேடி தான்... அவளோட அம்மா, அந்தம்மாவோட ஹஸ்பண்ட் தான் அந்தக் குழந்தையோட அப்பா" என்றான் சற்றே கோபமாய்.

"நீயும் நானும் வேணா... இதைச் சொல்லிட்டு இருக்கலாம். அவங்க... அப்படி நினைக்கலை" என்றாள் அவளோ, அவன் கோபத்தை அலட்சியப்படுத்தியவ ளாய்.

"Meaning!?"

"Meaning? என்ன meaning?! தங்களுக்கே... தங்களுக்குன்னு ஒரு குழந்தை உருவானதும்... இந்தக் குழந்தையை வேணாம்ன்னு தூக்கிப் போட்டுட்டாங் கடா" - உடைந்து அழுதாள் அருந்ததி.

"ஹே... என்ன சொல்றே? உனக்கு... எப்படித் தெரியும்?" - இப்போது பாலாஜிக்கும் பேரதிர்ச்சியே!

"அந்த லேடிக்குத் தான்.... இப்போ டெலிவரி பார்த்துட்டு வரேன்"



"வாட்!!"

"ஆமா... நீ கூட சொன்னியே, ரீசென்ட்டா அவங் களைப் பாக்கலைன்னு... நாம பார்த்துடக் கூடாதுன்னு தான்... நம்ம ஹாஸ்பிடல் கிட்ட இருந்த வீட்டை மாத்திக்கிட்டு ரெட்ஹில்ஸ் பக்கம் போயிருக்காங்க..."

அவள் முழுதாய் சொல்லி முடிக்கட்டும் என்று கையைக் கட்டிக் கொண்டு காத்திருந்தான் பாலாஜி.

"நேஹா பிறந்து... ஆறு மாசத்திலேயே அந்த லேடி இயற்கையா கர்ப்பமாகிட்டாங்கன்னு நினைக்கிறேன்."

"மனைவி... இயற்கையா கன்சீவ் ஆனதும்... வேற யாரோட விந்தணு மூலமாவோ உருவான நேஹா அவங் களுக்கு வேண்டாத குழந்தையாகிட்டான்னு தோணுது."

"எங்க... நம்ம ஹாஸ்பிடல்ல செக்- அப் வந்தா... நேஹா பத்தின டாக்ஸ் வந்துட்டே இருக்கும்ன்னு நினைச்சு... கம்ப்ளீட்டா ரெட்ஹில்ஸ் பக்கம் மாறிட் டாங்க போல"

"அங்க தேவகி ஹாஸ்பிடல்ல... செக்-அப்... டெலிவரின்னு ப்ளான் பண்ணிட்டாங்க"

"ஆனா... அவங்களோட கெட்ட நேரம்... அந்த லேடியோட டெலிவரி டைம்ல... ஹாஸ்பிடல் சீப் இத்தாலிக்கு ஒரு டூர் போயிட்டாங்க. எமெர்ஜென்சின் னதும் எனக்குக் கால் பண்ணி... அவங்களைஅட்டெண்ட் பண்ணச் சொன்னாங்க"

"எனக்கு... அந்த லேடியைப் பார்த்ததுமே தெரிஞ் சுடுச்சு, பாலா!"

"ஆக்ச்சுவலி ஸ்பீக்கிங்... எனக்கு ரொம்பவே சந்தோஷமா இருந்துச்சு.."

"முதன் முதலா...third person sperm வச்சு IVF பண்ணின லேடி இல்லையா? So...எனக்கு நல்லாவே ஞாபகம் இருந்துச்சு!"

"ஹலோ... ஆராத்யா... எப்படி இருக்கீங்க? உங்க ளோட பொண்ணு எப்படி இருக்கா? அவ... பேரு நேஹா தானேன்னு நா கேட்ட நிமிஷமில்லாம... அவளோட ஹஸ்பண்ட் வந்து காச்சு மூச்சுன்னு கத்துறான். எங்க ளுக்கு... இது தான் ஃபர்ஸ்ட் பேபி... தேவையில்லாம பேசாதீங்கன்னு பயங்கர சவுண்ட். ஹாஸ்பிடல்ல விசாரிச்சா... இப்போ பிறக்கப் போற குழந்தை தான் முதல் குழந்தைன்னு சொல்றாங்க. வேற பசங்க இருக்க மாதிரி தெரியலைன்னு வேற நியூஸ்"

"எனக்கு ஒரே குழப்பமாகிடுச்சு. நாம தான்... தப்பா புரிஞ்சுக்கிட்டோம் போலன்னு விடவும் முடியலை"

"ஏன்னா..I still remember her face. அந்தக் குழந்தையைக் கையில வாங்கும் போது... அந்த லேடி முகத்தில தெரிஞ்ச சந்தோசம்.. பரவசம்... அதுவு மில்லாம... என்னோட ஃபர்ஸ்ட் அட்டெம்ப்ட் இல்லையா? சோ... எனக்கு அந்த நினைவுகள் பசுமையா இருந்துச்சு"

"குழப்பத்தோடவே... ஆபரேஷன் தியேட்டர்க் குள்ள நுழையுறேன்... உங்கட்ட தனியா பேசணும்ன்னு சொல்றா அந்த லேடி"

"எல்லாரையும் வெளிய அனுப்பிட்டுக் கேட்டா... என் மூலமா நமக்கொரு வாரிசு உருவாக வாய்ப் பில்லைன்னு நினைச்சுத் தான்... ஸ்பெர்ம் டொனேஷன் மூலமா குழந்தை பெத்துக்க சம்மதிச்சேன். ஆனா... இப்போ... நானே உன்னோட குழந்தைக்கு அப்பா ஆகமுடியும்ங்கிறப்போ... வேற யாரோட விந்தணு



மூலமா பிறந்த குழந்தைக்கு என்னால அப்பாவா இருக்க முடியாதுன்னு அவளோட ஹஸ்பண்ட் சொல் லிட்டானாம். இவளுக்கு வேற வழி தெரியலையாம். சோ... நேஹாவை எங்கேயோ கொண்டுஅநாதை ஆசிரமத்தில விட்டுட்டாங்களாம்" என்றாள் அருந்ததி, கோபம்... ஆதங்கம்... எரிச்சல்... ஆற்றாமை ... என்று அனைத்து எதிர்மறை உணர்ச்சிகளையும் குரலில் தேக்கி.

"I regret for being a gynecologist! I regret my ability to make a child out of the nature's way!

"என்னால தான்... என்னால தான் அந்தக் குழந்தை இப்போ அனாதையாகிடுச்சு"

"அந்த fetus... அந்த லேடியோட uterus wall ல attach ஆனப்போ... எவ்வளவு சந்தோஷப்பட்டேன் தெரியுமா?"

"கடவுளால செய்ய முடியாத ஒரு விஷயத்தை... நா செஞ்சுட்டதா பெருமைப்பட்டேன்"

"ஒரு டாக்டர்... அதுவும் ஒரு சின்ன உயிரை உருவாக்கக்கூடிய டாக்டர்ன்னு நினைச்சு நினைச்சு சந்தோஷப்பட்டேன்"

"என்னோட திட்டத்தை மீறி... என்னோட படைப்பை மீறி நீ ஜெயிச்சிடுவியான்னு... கடவுள் என் தலையி லேயே தட்டிட்டார் பாலா"

"எனக்கு... அவமானமா இருக்கு"

"I feel so guilty!"

"எத்தனையோ குழந்தைங்க... ரோட்டில பிச்சை எடுக்கறதை பாக்கும் போது, இப்படி கஷ்டப்படுறதுக்

காகவா... இந்தக் குழந்தைங்களுக்குப் பிறப்பைக் கொடுக்கிற? குழந்தை வேணும்... குழந்தையைக் கொடுன்னு தவம் கிடக்கிற எத்தனையே பேருக்கு இந்தக் குழந்தைகளைக் கொடுத்திருக்கக் கூடாதான்னு கடவுளை நிந்திச்சு இருக்கேன். IVF மூலமா... குழந்தை களை ஜனிக்க வைக்கும்போது... பார்த்தியா... உன்னால பண்ணமுடியாததை நா பண்றேன். பார்த்தியா... பார்த்தி யான்னு கடவுளை எக்காளம் பண்ணியிருக்கேன்."

"அந்தத் திமிருக்கெல்லாம்... இன்னைக்கு முழுசா வாங்கிக் கட்டிக்கிட்டேன்"

"ஆனா... என்னோட திமிர்னால... ஒரு குழந்தை அநாதை ஆகிடுச்சே, பாலா!"

"ம்ம்ம்... ஹய்யோ... பாவம்ல அந்தக் குழந்தை!?"

"அந்தக் குழந்தை என்ன பாவம் பண்ணுச்சு? எங்க இருக்கோ?எப்படி கஷ்டப்படுதோ?"

"அதோட லைப்பே போச்சில்ல...."

"ஹய்யோ... எனக்கு நெஞ்சை அறுக்குது பாலா!"

"பெண்களுக்கு மறுபிறப்பு கொடுக்கிற உயர்ந்த ஸ்பெஷலிட்டின்னு நினைச்சுத் தான் gynecக்குப் படிச்சேன். ஆனா... இப்போ... எனக்கு... அருவெறுப்பா இருக்கு!"

"I hate... I hate my job!" என்று முகத்தை மூடிக் கொண்டு குலுங்கி அழுதாள், அருந்ததி! அவளது மனிதநேயம் அவளை அழச் செய்தது!

பாலாவின் மனிதநேயம், அவனை யோசிக்கச் செய்தது!



## அத்தியாயம் 17

நடந்த அனைத்தையும் லலிதாவிடம் சொல்லி முடித்த பாலாஜி,

"எனக்கு... இதில எப்படி ரியாக்ட் பண்ண ணும்ன்னே தெரியல... லலி, ஒரு டாக்டரா... அருண் guilty - ஆ ஃபீல் பண்றா! அழறா! எனக்கும்... கஷ்டமா தான் இருக்கு! ஒரு சின்னக் குழந்தையை... தங்களோட சுயநலத்துக்காக அனாதை ஆக்கிட்டாங்கங்கிறதை என்னாலையும் டைஜஸ் பண்ணிக்க முடியலை தான்... ஆனா... அதுக்கு மேல... Idon't know how to react!" என்றான் பாலாஜி தன் உணர்ச்சிகளை மறையாமல் வெளியிட்டு.

ஆதுரம் பொங்க, மகனையே பார்த்துக் கொண் டிருந்தார் லலிதா.

"அருண்... திரும்பத் திரும்ப... அந்தக் குழந்தை என்னோட குழந்தைன்னு ஸ்ட்ரெஸ் பண்றா...ஆனா..." என்றவன் தானே தொடர்ந்தான்.

"ஆனா... லலி... என்னால... என்னால... டக்குன்னு ஒரு affection - ஐ develop பண்ணிக்க முடியலை. அருண்... என்ன சொல்ல ட்ரை பண்றான்னு என்னால புரிஞ்சுக்க முடியல... லலி"

"நா... அந்த பேபியைப் பார்த்திருக்கேன் தான். ஆனா... ஒரு டாக்டரா... ஒரு பீடியாட்ரீஷியனா தான் அந்தக் குழந்தையை நா ஹாண்டில் பண்ணியிருக் கேன்"

"சொல்லப்போனா... அந்தக் குழந்தை எப்படி இருப்பான்னு கூட என்னால கம்ப்ளீட்டா மைண்ட்ல செட் பண்ண முடியலை"

"எல்லாக் குழந்தைங்க மாதிரியும்... நான் அவளை ட்ரீட் பண்ணியிருக்கேன்."

"இப்போ... திடீர்ன்னு affection ஐ கொண்டு வரதுன்னா... என்னால முடியல லலி... நானும் அந்தக் குழந்தையோட முகத்தை... அவளைப் பாத்த நேரங் களைன்னு மைண்ட்ல கொண்டு வர ட்ரை பண்றேன். ஆனா... செட்டே ஆகல"

"நான்தான்... அந்தக் குழந்தையோட உண்மை யான அப்பாங்கிறது எல்லாம் ஓகே. பட்..."-முடிக்க முடியாமல் இழுத்தான் பாலாஜி.

"எனக்குப் புரியுது கண்ணா..."என்ற லலிதா, தன் மடியில் தலை வைத்துப் படுத்திருந்த மகனின் தலையை வருடிக் கொடுத்தார்.

மகனின் நிலைமை நன்றாகவே புரிந்தது அந்த அறுபத்தியைந்து வயது அனுபவஸ்தருக்கு.

இதுவரையிலும் யாரோவாய் இருந்த ஒரு குழந் தையைத் தன்னால் உயிர் பெற்ற உறவாய் ஏற்க முடி யாமல் தவிக்கும் மகனின் மனது அவருக்குத் தெளி வுறவே புரிந்தது.

சற்று நேரம்... அமைதியாய் கழிய, லலிதாவின் கரங்கள் மட்டும் யோசனையுடன் பாலாஜியின் தலை முடியை வருடிக் கொடுத்தபடியே இருந்தன.

"என்ன பண்ணலாம் லலி... எனக்கு அந்தக் குழந் தையை நினைச்சாலும் கஷ்டமா தான் இருக்கு..."எனக் கேட்ட மகனிடம்



"நா ஒண்ணு சொன்னாக் கேட்பியா?"என்ற கேள்வியை முன் வைத்தார் லலிதா.

"ம்ம்ம்ம்"- அவனது "ம்ம்"மே, அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை ஊகித்ததாய் ஒலித்தது.

"அந்தக் குழந்தையைத் தத்தெடுத்துக்கோயேன்?" என்ற லலிதாவின் குரலில், ஒரு விதமான ஏக்கமும் வருத்தமும், அவற்றை மிஞ்சிய ஆசையும் கலந் திருந்தன.

"என்ன லலி... நீ? நீயெல்லாம் ஒரு டீச்சரா? அதுவும் கணக்கு டீச்சர்ன்னு தயவு செஞ்சு வெளிய சொல்லிக்காத" - கோபமாய் சொன்ன மகனின் முடியை "ஏன்டா...?" என்றபடி மெல்லப் பிடித்து இழுத்து விட்டார் லலிதா.

"பின்ன... கல்யாணமாகாத ஒரு ஆளு... ஒரு குழந்தையை... அதுவும் ஒரு பெண் குழந்தையை எப்படித் தனியா தத்தெடுக்க முடியும்?! உளறாத!"

"அப்போ.. கல்யாணம் பண்ணிக்கோ!"

"ப்ச்... ஷ்... திரும்ப ஆரம்பிச்சிட்டியா? முடியல..." என்று பல்லைக் கடித்த பாலாஜி, எழுந்து அமர்ந்தான்.

"என்னடா திரும்ப ஆரம்பிச்சிட்டியா? கல்யாணம் பண்ணிக்கிறதில உனக்கு என்ன கஷ்டம்?" - சற்றே கோபமாய் வெளிவந்தது லலிதாவின் குரல்.

"எனக்குப் பிடிக்கலை லலி... என்னவோ... எனக்குக் கல்யாணம்ங்கிற concept மேல ஒரு பிடிப்பு வரலைன்னு வச்சுக்கோயேன்"

"என்னால தான்டா... உனக்குப் பிடிப்பு வராம போச்சு"

"ப்ச். அப்படியில்ல..." -இதென்ன பேச்சு என்பது போல் மறுத்த பாலாஜி, "என்னோட படிச்சவங்க எல்லாருமே... லவ்...மேரேஜ்... பிள்ளைங்கன்னு செட்டில் ஆனவங்க தானே! ஆனாலும்... எனக்கு...ம்ம்ம்... எப்படி சொல்றது... அந்த ஃபார்மேஷன் மேல எனக்கு ஒரு... எனக்கு... ஒரு லைக்கிங் வரலை..." என்றான் அவன், தன்னைப் புரிய வைக்க முடியாதவனாய்.

"ஒரு குடும்ப அமைப்பில வாழ்ந்திருந்தா... உனக்கு அந்த நினைப்பு வந்திருக்கும். இல்லையா?"

"ப்ச்... ஹய்யோ... விடு லலிம்மா. நா... இப்பவே ஹாப்பியா தான் இருக்கேன்"

"நா... ஹாப்பியா இல்லடா"- வேகமாய் மறுத்தார் லலிதா. கொஞ்சம் கோபமும் சலிப்பும் குரலில் கூடியிருந்தது.

"அதுக்கு என்ன பண்றது?"

"அந்தக் குழந்தையைத் தத்தெடுத்துக்கோடா பாலாஜி! நீயும்... குழந்தை... குடும்பம்ன்னு வாழணும் தானே"

"என்ன லலிம்மா திரும்பத் திரும்ப...!ஒரு single parent ஆ ஒரு பெண் குழந்தையைத் தத்தெடுத்துக்கிறது ரொம்பக் கஷ்டம்... லலி"

"அதான்... ஒரு கல்யாணம் பண்ணிக்கோன்னு சொல்றேன்"

"நிஜமாவே...நீ புரிஞ்சு தான் பேசுறியா? இந்தக் குழந்தை ஏன் தெரியுமா அனாதையாச்சு?"- கேள்வியால் கொக்கிப் போட்டவன், அசூசையுடன் மேலும் தொடர்ந்தான்.



"தன் சொந்த ரத்தத்தில இருந்து... அந்தக் குழந்தை உருவாகலைங்கிற ஒரே காரணத்துக்காக...அந்தக் குழந்தையை அனாதையாக்கி... எங்கேயோ போட்டுட்டான் ஒரு அப்பன். அப்படிப்பட்ட மனுஷங்க வாழற பூமில வாழ்ந்துக்கிட்டு... அந்தக் குழந்தைக்கு சம்பந்தமே இல்லாத ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணி... இன்னொரு விதமான வெறுப்பை அந்தக் குழந்தை சம்பாதிச்சுக்கணுமா என்ன? வேணாம்... லலி! Let that baby be happy... somewhere!"

"அந்த பேபி ஹாப்பியா இருப்பான்னு நினைக்கிறியா.... பாலா?"

"ஹ்ம்ம்... தெரியல... லலி...ஆனா..."

"அப்போ... அப்படியே விட்டுடப் போறியா?"

"விடவும் மனசு வரலை..." என்றவன், மீண்டும் லலிதாவின் மடியில் படுத்துக் கொண்டான்.

"என்னவோ செய்யுது..." என்றான் நெஞ்சைக் கைகளால் அழுத்தியபடி.

"அந்தக் குழந்தையைப் பத்தின... whereabouts தெரிஞ்சிட்டு வாயேன் கண்ணா!"

"ம்ம்ம்... ஆனா... அதைத் தெரிஞ்சு என்ன பண்ணப் போறோம்"

"அப்போ... என்னவோ செய்யத் தான் செய்யும்!" என்றார் அவர், நறுக்குத் தெறித்தார் போல்.

"ப்ச்...ஊப்ப்..நீ இருக்கியே!"

"உனக்கு... அந்தக் குழந்தை மேல பிடிப்பு வரலைன்னா விட்டுடு. ஏன்... டென்ஷன் பண்ணிக்கிற?" என்றார் லலிதா சாதாரணமாய்.

"விட முடியல... கொஞ்சம் கஷ்டமா தான் இருக்கு. எங்கேயோ... வலிக்குது. அந்தக் குழந்தை எப்படியிருக்கோ... சேஃபா தான் இருக்காளான்னு ஓரத்தில உறுத்திட்டே இருக்கு. என்ன வழிலன்னாலும்... என்னோட குழந்தையில்லையான்னு ஓரமா ஒரு கேள்வி நச்சரிச்சுட்டே இருக்கு. பாவம்ல... லலி... அந்தக் குழந்தை..."

"அப்போ... விசாரி..."

"ப்ச்..."

"என்னடா எல்லாத்துக்கும் உச்சு கொட்டிட்டு..." - தானும் எரிச்சல் பட்டார் லலிதா.

"என்னன்னு விசாரிக்கிறது? குழந்தையைப் பத்திக் கேட்கிறீங்களே... நீங்க யாருன்னு கேட்டா என்ன சொல்றது?"

"அப்பான்னு சொல்லு!"

"லலிதாம்பாள்! அடிச்சிருவேன்" -கோபமாய் எழுந்தமர்ந்தான் பாலாஜி.

"சொல்லப் போனா... அதானே உண்மை!"

"ப்ச்.. ஊஊப்... போட்டுப் படுத்தாத லலி! என்ன பண்ணலாம் சொல்லு!"

"அந்தக் குழந்தை... இப்போ எங்க இருக்கான்னு விசாரி...?"

"விசாரிச்சு...?"

"விசாரி... அப்புறம் பார்க்கலாம்" என்றார் லலிதா அழுத்தமாய்.

அருந்ததியின் உதவியுடன், நேஹாவின் தற்போதைய இருப்பிடத்தைக் கண்டுபிடித்து, பாலாஜி அங்கே செல்வதற்குள், நேஹா... ஸ்ரீதுளசியாய் உருமாறி, குந்தவையின் சேயாய் மாறியிருந்தாள்.



பெங்களூரில் இருந்து திரும்பிய பாலாஜியின் முகத்திலோ... மனதிலோ சிறு துக்கமோ... சிறு வருத்தமோ... ஏன் ஏமாற்றமோ இல்லை. மாறாய், ஒரு சந்தோசம். ஒரு நிம்மதி. "ஹப்பாடா..." என்ற உணர்வு.

"அந்த நேஹா பேபியை... ஒரு லேடி தத்தெடுத்துட்டாங்களாம், லலிம்மா! She is in a safe place!"

"அவளோட லைஃப் செட்டில் ஆகிடுச்சு...."

"நமக்கு நேஹா எப்படி இருப்பாளோ? ஸேஃபா இருக்காளா? நல்ல வளரணுமேன்னு தானே கவலைப் பட்டோம். இப்போ... அவ நல்லா இருக்கா. ஹப்பா...i am happy!" என்றான் நிம்மதியே உருவாய்.,

மனதினோரம் இருந்த சிறு நம்பிக்கை உடைந்து போனதில், சோர்ந்து போனார் லலிதா.

அந்தக் குழந்தையின் மேலிருக்கும் சிறு பிடிப்பை... வலுவான கயிறாய் திரித்து, அவனுக்கென ஒரு குடும்பத்தை உருவாக்கிவிடலாம் என அவர் கொண்டிருந்த நம்பிக்கை உடைந்து விட்டதில் துவண்டு போயிருந்த லலிதாவின் முகம், "குந்தவைங்கிற ஒரு சிங்கிள் லேடிதான்... நேஹாவைத் தத்தெடுத்து இருக்காங்க லலி! கிரேட் இல்ல! இப்படியும் மனுஷங்க இருக்காங்க" என்ற பாலாஜியின் பேச்சில், சட்டென யோசனையில் மூழ்கியது.

"குந்தவையா?!" - யோசனையுடனேயே இழுத்தார் லலிதா.

"ஆமா... ஏன்?" - புரியாமல் கேட்டான் பாலாஜி.

"குந்தவை... ம்ம்ம்...குந்தவை... இந்தப் பேரு, peculiar பேருடா... பாலா"

"ஆமா... நானே நினைச்சேன். பொன்னியின் செல்வன்ல வர characters ல... பூங்குழலி... நந்தினி... இந்த characters ஒட பேரு தானே நிறைய பேரு வைப்பாங்க. குந்தவைங்கிற பேரை... நானுமே முதல் தடவையா கேள்விப் படறேன். அதுவுமில்லாம...அந்த single mom ங்கிற விஷயமே... எனக்கு... ஒரு விதமா... ரெஸ்பெக்ட் வருது"என்றான் பாலாஜி, முகம் தெரியாதவளை சிலாகித்தபடியே.

"நா.. முதல் தடவையா கேள்விப்படலைடா..."

"..."- புரியாமல் புருவத்தை நெரித்தான் பாலாஜி.

"ஏற்கனவே... கேள்விப்பட்டிருக்கேன். குந்தவை... ம்ம்ம்...குந்தவை... எங்க? எங்க?"

"போன வாரம்... நூறாவது தடவையா படிச்சியே... அதே பொன்னியின் செல்வன்லையா இருக்கும்!"

"ப்ச்... விளையாடாதடா. புக்ல படிக்கலை... குந்தவைங்கிற பேரு எனக்கு ரொம்ப ஃபெமிலியரா தெரியுதுடா..."

"நீ... யோசிச்சுட்டே இரு! நா... சமைச்சிட்டு வரேன்" - பாலாஜி எழுந்து சென்று விட,

குந்தவை... குந்தவை... அவருக்குத் தெரிந்த பெயர்! எங்கே!? எங்கே?!

"டேய்!!!" - ஐந்தே நிமிடத்தில் தொண்டை உலரக் கத்தினார் லலிதா.

"என்னாச்சு?" - பதறியடித்துக் கொண்டு ஓடி வந்த மகனிடம், "குந்தவை யாருன்னு கண்டுபிடிச்சுட்டேன். அவ... என்னோட student டா, +2ல... நான்தான் அவளுக்கு மாத்ஸ் எடுத்தேன்" என்றார் சந்தோஷமே உருவாய்.



"நிஜமாவே லூசாகிட்ட நீ? உன்னோட student குந்தவை மட்டும் தான்... உலகத்திலேயே ஒரேயொரு குந்தவையா?"என பாலாஜி முறைக்க,

"ஹ்ம்ம்... இருக்கலாம். ஆனா.... நிறைய பேரு... குந்தவைன்னு பேரு வச்சுக்க மாட்டாங்கதானே! இதுவே... ஒரு லலிதா... விஜயா...ராதா...நந்தினி...ஏன் ...பூங்குழலி... எப்படி ஏதாவது பேரா இருந்திருந்தா... நீ சொல்றது கரெக்ட்! ஆனா... குந்தவைங்கிற பேரு... ரொம்ப ரேர்டா...."

"ஒரே மாதிரி ஃபேஸ்கட்டோட... உலகத்தில ஏழு பேரு இருக்கலாமாம். அப்படியிருக்கும் போது... எவ்வளவு peculiar name - ஆ இருந்தாலும்... ஒரே பேர்ல எத்தனையோ பேர் இருக்கலாம். என்ன லட்சக் கணக்கில இல்லாம... ஆயிரக் கணக்கில இருப்பாங்க. தட்ஸ் இட்!" என்றான் பாலாஜி, சாதாரணமாய்.

"ப்ச்... போடா இவன் ஒருத்தன். எனக்கென்னவோ... அந்தப்பொண்ணு தான்னு தோணுது!"

"இருக்காது லலி! +2ன்னா... ராஜபாளையம்ல தானே இருந்தே.. அந்த ஊர்ல எல்லாம்.. பொண்ணுங்களை எட்டாவது படிக்கும் போதே கட்டிக் கொடுத்துடுவானுங்க. என்னவோ... உன்னோட student தப்பித் தவறி... +2 வரைக்கும் வந்துடுச்சுன்னு நினைக்கிறேன். அப்படியே படிக்க வச்சிருந்தாலும்... கல்யாணம்

குழந்தைன்னு லைஃப் வேற மாதிரி செட்டில் ஆகி யிருக்கும் லலிம்மா. நம்ம ஊர் பொண்ணுங்க... single mom adoption லெவலுக்கு எல்லாம் வரது ரொம்ப.. ரொம்ப ரொம்ப அபூர்வம்" என்றான் பாலாஜி, மனிதர் களின் தன்மையை அறிந்தவனாய்.

"ஹ்ம்ம்... சந்தேகம்ன்னு வந்திருச்சு. எதுக்கும் clarify பண்ணிக்கலாம் இல்லையா?"

"எங்க போயி?" என்றான் பாலாஜி புரியாமல்.

"உன்னோட ஒண்ணு விட்டச் சித்தப்பா பொண்ணு... அதான் தேவநாதன் சித்தப்பா... அவரோட பொண்ணு... மதுபாலாவை ஞாபகம் இருக்கா?" எனத் தாய், விளக்க மாய் கேள்வியைத் துவங்கவும்,

"இருக்கே... அந்த வாலுக்கென்ன??"- சந்தேகமாய் இழுத்தான் மகன்.

"அவளும் இவளும் ஃபிரண்ட்ஸ்டா. படிக்கும் போது... ஒண்ணாவே சுத்துவாங்க. பாலாவை வச்சுத் தான்... எனக்குக் குந்தவையைத் தனிப்பட்ட முறையில தெரியும்!" என்ற லலிதா, "நல்லாவும் படிப்பா... சோ... ஞாபகத்தில இருக்கு" என்றார் எதையோ கணக்கிட்டவ ராய்.

"அந்தக் குரங்கோட படிச்சதுன்னு சொல்றே... அப்புறம் எப்படி நல்லா படிக்க முடியும்?" என்று சந்தேகப் பார்வை ஒன்றை வீசி, தாயின் முறைப்பைப் பரிசாய் பெற்றுக்கொண்டவன், "இப்ப... என்ன... பாலாட்ட.... அந்தக் குந்தவை தான்...இந்தக் குந்தவையான்னு



கேட்டுத் தெரிஞ்சுக்கணும். அப்படித் தானே" என்றான் தாயின் மனதைப் படித்தவனாய்.

"ஆமா..." என்றார் லலிதா உறுதியாய்.

"நா... அவட்டப் பேசியே ரொம்ப நாளாச்சு. என்ட்ட இருக்க மொபைல் நம்பருக்கு ட்ரை பண்ணிப் பார்க்கிறேன்" என்றவன், தன் கைப்பேசியில் மதுபாலா என்றிருந்த எண்ணை அழுத்திவிட்டு, லலிதாவிடம் நீட்டினான்.

"நீ... பேசிட்டுத் தாயேண்டா" என லலிதா சொல்லும் போதே அழைப்பு எடுக்கப் பட்டிருக்க, லலிதா அழைப்பில் கவனமானார்.

வழக்கமான நல விசாரிப்புகள்... பல நாட்கள் கழித்துப் பேசும் உறவுகளின் பேச்சுக்கள் என்ற வழமைக்குப் பின்னர்,

"பாலா... உன்னோட +2ல குந்தவைன்னு ஒரு பொண்ணு படிச்சா இல்ல"

"ஆமா...ம்மா. உங்களுக்கு ஞாபகம் இருக்கு.... அவ... அவ... ரொம்பப் பாவம் ம்மா... என்னாச்சு தெரியு மா?" என்று தொடங்கி, குந்தவையின் வாழ்வில் நடந் தேறிய அநியாயங்கள் அனைத்தையும் ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள் மதுபாலா.

கூடவே, குந்தவை ஒரு பெண் குழந்தையைத் தத்தெடுத்து இருப்பதையும் அவள் முத்தாய்ப்பாய் சொல்லி முடிக்க, முடிந்து போயிற்று என அவர் எண்ணிய நம்பிக்கை துளிர் விட்டது.

லலிதாவின் முகத்தில் நிறைந்த புன்னகை ஒன்று, குடியேறியது!

## அத்தியாயம் 18

"பாலா... எனக்காக ஒரு வாட்டி சென்னை வந்துட்டுப் போறியா?" என வேண்டிக் கேட்டுக் கொண்ட லலிதாவிடம்,

"ஏன்மா?" எனப் புரியாமல் கேட்டாள் மதுபாலா.

"நீ... வாயேன்! எனக்காக இல்லாட்டியும்... உன்னோட அண்ணாக்காக வா"

"உங்களுக்காகவே வரேன்" என்றவள், அந்த வார இறுதியில் பாலாஜியின் சென்னை வீட்டில் இருந்தாள்.

"அவள் வந்ததும், "டேய் பாலா... குந்தவை இருக்காளே... நம்ம நேஹாவைத் தத்தெடுத்த பொண்ணு.. அவளைப் பத்தி... பாலா சொல்லுவா... கேட்டுட்டு... அப்புறம் ஹாஸ்பிடல் போ!" என்றார் லலிதா.

"நேஹாவா?" என்று மதுபாலாவும்,

"நம்ம நேஹ்ாவா?" என்று பாலாஜியும் லலிதாவைப் புரியாமல் பார்த்தனர்.

"ஆமா... நீ பேசு! பாலா... குந்தவையோட பாஸ்ட் பத்தி... விவரமா உன்னோட அண்ணனுக்கு சொல்லு" என்றார் மதுபாலாவிடம்.

"இவன்ட்ட எதுக்கு சொல்லணும்?"

"ஏய்... சொல்லு!" என்று மண்டையில் ஒரு தட்டுத் தட்டியவன், "சோ... உன் ஃபிரண்டு குந்தவை தான்... நேஹாவைத் தத்தெடுத்து இருக்காங்களா? அந்தக் குந்தவை தான்... இந்தக் குந்தவையா?" என்றான் கேள்வியாய்.



"நேஹா... யாரு மொதல?"

"என்னோட பொண்ணு! நீ... சொல்லு!" என்றான் பாலாஜி நறுக்குத் தெறித்தார் போல்.

"ஆஆ" என்று வாயைப் பிளந்து பார்த்த போதும், குந்தவையின் முன் கதையை ஒரு இறுக்கத்துடன் சொல்லி முடித்தாள் மதுபாலா.

அதைப் பொறுமையாய் கேட்ட பாலாஜி, இரு கைகளாலும் கண்களை அழுந்தத் தேய்த்துக் கொண்டான்.

மெல்ல இருக்கையை விட்டு எழுந்தவன், "I pity..." என்றான் மெதுவாய்.

"யாரைப் பார்த்து?" என்றாள் மதுபாலா கோபமாய்.

"அந்த so called ஹஸ்பண்டைப் பார்த்து!" என்ற பாலாவின் குரலில் வேகமிருந்ததே ஒழிய, கோபமில்லை.

மதுபாலா ஆச்சரியத்துடன் பார்த்திருக்க, "பின்னே... எவ்வளவு ஆழமான நம்பிக்கை அந்தப் பொண்ணோடது! அதை அனுபவிக்கக் கொடுத்து வைக்கலையே! இவ்வளவு pure emotions இனிமேல் யார்கிட்ட இருந்தும் அவனுக்குக் கிடைக்காது! I pity him" என்றான் பாலா, வருத்தத்துடன்.

"ரியல்லி? எல்லாருமே... குந்தவையைத் தான் ப்ளேம் பண்ணாங்கடா. இவ்வளவு ஏமாளியா இருந்திருக்கியேமான்னு...அவங்க எல்லாரும் சொல்லும் போது, குந்தவை முகத்தைப் பார்க்கவே சகிக்காது! ச்சே... அவன் அவ்வளவு தூரம் நடிச்சிருக்கான்... அதை

யாருமே உணரல... இவ கண்டுபிடிக்கலைங்கிறதைத் தான் பெருசா சொல்றாங்க...."என்றாள் கோபமாய்.

"ஹ்ம்ம்... ஆனா... அவன் மேல ஒரு சின்ன சந் தேகம் கூட உன்னோட ஃபிரண்டுக்கு வரலைன்னா... எந்தளவுக்கு அவனை நம்பியிருக்காங்க. அந்த நம்பிக்கையோட அழகை... ஆழத்தை அவனுக்கு அனுபவிக்கக் கொடுத்து வைக்கலை! ப்ச்!" என்றான் பாலாஜி, வருத்தம் தொனிக்க.

"கண்டிப்பா! குந்தவை மாதிரி ஒருபெண்ணோட வாழ... அவனுக்குத் தான் கொடுத்து வைக்கலை!" என்றாள் மதுபாலாவும், கண்களில் தீவிரத்துடன்.

பலத்த மௌனமொன்று அந்த இடத்தை ஆக்கிர மித்தது.

இருவரும் தத்தம் யோசனையில் சிக்கியிருக்க, "ஆமா... நேஹா யாரு? உன் பொண்ணுன்னு சொல்றே? எனக்கு ஒண்ணுமே புரியலையே!" என்றாள் மதுபாலா, குழப்பமாய்.

"அதுவா? நா... கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு முன்னாடியே அப்பாவாகிட்டேன் பாலா! நம்ம... குடும்ப மானத்தையே வாங்கிட்டேன்! உன்னோட பிறந்த வீட்டுக் குலப் பெருமையைக் குலைச்சுட்டேன்! ஹோ..நோ... எவ்வளவு பெரிய இழுக்கு! எவ்வளவு பெரிய குத்தம்! " என்று அவன் உச்ச ஸ்தாதியில் வசன மொழி பொழிய,

"அந்தளவுக்கு எல்லாம்... உனக்குத் தைரியம் கிடையாதுடா! நீ... ஒரு பக்கா பார்சல் தயிர்சாதம்!" என்றாள் மதுபாலா சிரிப்புடன்.



பலத்தக் கரகோஷம் ஒன்று லலிதாவிடம் இருந்து உதயமானது.

உள்ளங்கையை மடக்கி, நெற்றியில் குத்திக் கொண்ட பாலாஜி, "என்ன ஒரு அவமானம்! என்றான் பொறுக்க முடியாத குரலில்.

"ஹஹஹா!" என்று மதுபாலா அடக்க மாட்டாமல் சிரிக்க. லலிதாவும் அதில் இணைந்தார்.

"என்னைப் பார்த்தா நக்கலா இருக்கா?" எனப் பாலா கோபம் போல் கேட்க,

"இல்லையே! ஒரே காமெடியா இருக்கு! இவ் வளவு... சீரியஸ் தப்பெல்லாம் பண்ற அளவுக்கு... நீ வளரல பாஜ்ஜி! இன்னமும்... அந்த வெங்காய பஜ்ஜி லெவலை விட்டு நீயும் வெளிய வரல... உன் ஃபிரண்டும் வெளிய வரல!" என்றாள் மதுபாலா, உறுதியுடன்.

மூக்கைச் சுருக்கி... முறைத்தவனுக்குமே சிரிப்பை அடக்க முடியவில்லை.

மூவருமாய் சிரித்த பின்னர், "நேஹா யாரு?" என்று மீண்டும் ஆரம்பித்தாள் மதுபாலா.

"நா... சொல்றேன்" எனத் தொடங்கி, நேஹா என்ற ஸ்ரீதுளசியின் பிறப்பு ரகசியத்தை முழுதுமாய் சொல்லி முடித்தார் லலிதா.

"ச்சே... இப்படியுமா ஆளுங்க இருப்பாங்க" என் றாள் வெறுப்புடன்.

"இருக்காங்களே! குந்தவையோட ஹஸ்பண்ட்... சாரி எக்ஸ்- ஹஸ்பண்ட் மாதிரி ஆளுங்க இருக்கும் போது, நேஹாவோட எக்ஸ்-பேரன்ட்ஸ் மாதிரி ஆளுங்க

இருக்கிறதில என்ன ஆச்சரியம்?" என்றான் பாலாஜியும் வருத்தத்துடன்.

"ஹ்ம்ம்ம்" -ஆமோதிப்பாய் ஆடிய மதுபாலாவின் முகம் வருத்தத்தில் வாடியிருந்தது.

"ஆனா... கடவுள் கொஞ்சமே கொஞ்சம் நல்லவர் தான். எவ்வளவு அழகா...குந்தவையையும்... ஸ்ரீயையும் ஒண்ணு சேர்த்துட்டார் இல்லம்மா" என்றாள் கண்ணில் கனிவுடன்.

"அந்த நல்லவரோட திருவிளையாடல்ல, இன்னும் கொஞ்சம் நல்லதும் நடக்கணும்ன்னு... நா ஆசைப் படுறேன்" என லலிதா பீடிகை போடவும்,

புருவம் சுருங்க, தாயைப் பார்த்தான் பாலாஜி.

"எனக்குப் புரிஞ்சுடுச்சு!" - பல்ப் போட்டார் போல் பிரகாசமானது மதுபாலாவின் முகம்.

"இவளுக்கே புரிஞ்சுடுச்சா? ஹைய்யோ... கடவுளே!" என்று விளையாட்டாய் தலையில்அடித்துக் கொண்டபோதும், லலிதாவின் கண்களை நேர் கோட்டில் சந்தித்து, "என்ன லலி... ப்ளான் பலமா இருக்கே?" என்றான் கிண்டலாய். அவனுக்குத் தாய் போடும் கணக்கு புரியவே செய்தது. ஆனாலும், நடக்கிற காரியமா?!

"நா... எங்கடா பிளான் போடுறேன்?! அந்த நல்லவர் ப்ளான் போடுறார்... நா... அதை வழி நடத்து றேன்" என்றார் லலிதா விட்டேற்றியாய்.

"புரியாம பேசாத லலி! அந்தப் பொண்ணு..."

"இன்னும் என்ன அந்தப் பொண்ணு... குந்தவைன்னு சொல்லு!"



"ஆமா... என்ன அழகான பேர் தெரியுமா?" - ஒத்து ஊதியது பாலாஜியுடன் பிறவாத முத்துரத்தினம்.

அவளை முறைத்துவிட்டு, "ஓகே... குந்தவை! சரியா?" என சரிபார்த்துக் கொண்டு, "குந்தவை... ஒரு பெரிய நம்பிக்கைத் துரோகத்தில இருந்து மீண்டு வந்தவங்க. அவங்களால... இன்னொரு ஆளை முழுசா நம்பவே முடியாது! அவங்களோட பழைய வாழ்க்கை... அவங்களை நம்ப விடாது! Its so difficult for her to trust any other male! அப்படியிருக்கும் போது... நீங்க நினைக்கிற மாதிரியெல்லாம்... ப்ச்... சான்ஸே இல்ல!" என்றான் பாலாஜி,தோளைக் குலுக்கி.

குந்தவையின் வேதனையை உடனிருந்து பார்த்த மதுபாலாவிற்கு, அவன் சொல்வதில் நியாயம் இருப்பதாகப் பட்டது.

குந்தவை இன்னொரு ஆணை நம்பி, தன் வாழ்க்கையை ஒப்படைப்பது என்பது பெரிய காரியமே!

அவள் அனுபவித்த வலியும்... வேதனையும்... அவமானமும் ரணத்தில் குறைந்தவை அல்லவே!

அவற்றை அப்படியே ஒதுக்கி வைத்துவிட்டு, இன்னொரு ஆண் மகனுடன் கை கோர்ப்பது என்பது நடவாத காரியம் என்றே தோன்றியது!

மறு திருமணமும்... மறு திருமணத்திற்குத் தடையாய் இருக்கும் அவளது மலட்டுத்தன்மையும் தானே, அவளை ஊரை விட்டு... உறவுகளை விட்டு.. தூரமாய் ஒதுங்கிப் போக வைத்தது!

அப்படியிருக்கையில்...

ஆனாலும் பாலாஜி நல்லவன்! அக்மார்க் நல்லவன்!

மதுபாலாவின் மனதின் ஒரு ஓரத்தில், குந்தவையின் பழைய வாழ்வின் கோரங்கள் நர்த்தனமாடிக் கொண்டிருக்க, மறு ஓரத்தில் பாலாஜியும் அவளும் கணவன் - மனைவியாய் மாறும் காலத்தைப் பற்றிய எண்ணங்கள் இதத்தைக் கொடுத்தன.

துக்கமும்... சந்தோஷமும் சரி பாதியாய் மனதை ஆக்கிரமித்து இருந்தன.

மது தன் யோசனையில் உழன்று கொண்டிருந்த வேளையில்,

"பாலா... எனக்காக ஒரு வாட்டி... குந்தவையையும் நேஹாவையும்... இல்ல இல்ல ஸ்ரீயையும் பார்த்துட்டு வாயேன்!"என்றார் லலிதா.

அவர்களை நேரில் காணும் போது, மகனின் மனதிற்குள் ஏதேனும் மாற்றம் ஏற்படும் என நம்பினார் போலும்!

"ஆனாலும்... உனக்கு ஓவர் கான்ஃபிடன்ஸ் லலி! அவங்களைப் பார்த்ததும்... தொபக்கடீர்ன்னு காதல்ல விழுந்து... அந்தக் குட்டிப் பெண்ணைப் பார்த்ததும் பாசத்தை அருவியா கொட்டி... ஒரேடியா வழுக்கி விழுந்துடுவேன்னு எப்படி இவ்வளவு உறுதியா நம்புறே? அந்தளவுக்கு... மெச்சூரிட்டி இல்லாதவன் மாதிரியா தெரியுறேன்"என்றான் பாலாஜி கிண்டலாய்.

"உன்னோட மெச்சூரிட்டி லெவலையும்... அவளோட லெவலையும் நல்லா புரிஞ்சுக்கிட்டதால தான் சொல்றேன்" என்றார் லலிதாவோ உறுதியாய்.

"ப்ச்... இதெல்லாம் நடக்கிற காரியமா?"எனச் சலித்த மகனை,



"நடக்காதுன்னு நீயே ஏன் முடிவு பண்றே? ஒரு வாட்டி... முயற்சி பண்ணிப் பாரேன்"என்று கேள்வியால் மடக்கினார் லலிதா.

"புரியாம பேசாத, லலி!How come will she be able to accept me?"

"அவ அக்சப்ட் பண்றா... பண்ணலை... அது அவளோட முடிவு. அதை... ஏன் நீ சொல்றே?"

"ப்ச். ரொம்பத் தான்! சரி... என்னை அவ அக்சப்ட் பண்ணிக்கிறது வேணும்ன்னா அவளோட முடிவா இருக்கலாம். ஆனா... நா அவளை அக்சப்ட் பண்ணிக் கிறது என்னோட முடிவு தானே?" எனத் திருப்பியவன்,

"ஏற்கனவே சொன்ன மாதிரி... எனக்குக் கல்யாணம்ங்கிற கான்சப்ட் மேல ஈடுபாடே இல்ல லலி!"

"பெரிய ஈடுபாடு! புத்த மகாப் பிரபுவாடா... நீ? போய்ப் பார்த்துட்டு வான்னா... வாயேன்! தத்துவம் பேசிட்டே அலையுறான்!" - கோபமாய் காய்ந்தார் லலிதா.

"லலி... நா என்ன சொல்றேன்னா..."

"ஒண்ணும் சொல்லத் தேவையில்லை. என்னை அம்மாவா மதிச்சின்னா... போய்ப் பார்த்துட்டு வா"

"லலி..."

"நா... உன்னோட அம்மாங்கிறது உண்மைன்னா போயிட்டு வாடா"

"என்ன ப்ளாக்மெயில் பண்றியா?"

"ஆமா... ப்ளாக்மெயில் தான் பண்றேன். போக முடியுமா முடியாதா?!"

"கொஞ்சம் புரிஞ்சுக்கோ லலி..."

"எனக்கு எதுவும் புரியத் தேவையில்லை. போன்னா... போயிட்டு வா!"

"இதென்ன திடீர்ன்னு இப்படி அடம் பண்றே?"

"அடம் பண்ற பிள்ளையை மேய்ச்சு... மேய்ச்சு... நானும் அப்படியே மாறிட்டேன்!"

"இந்த வாட்டி... ஏன் இவ்வளவு பிடிவாதம்? எத்தனையோ வாட்டி... நீ பார்த்த பொண்ணுங்களை நான் ரிஜக்ட் பண்ணியிருக்கேன். அப்ப... வராத கோபம்... அப்ப வராத பிடிவாதம்... இப்ப ஏன்?"

"என்னவோ தெரியலை. எனக்கு... குந்தவையும் நீயும் சேர்ந்தா நல்லா இருக்கும்ன்னு ரொம்ப ஆணித் தரமா தோணுது. அதான்..."

"அது... எந்த ஆணின்னு சொன்னின்னா... அதைப் பிடுங்கி எரிஞ்சுடுறேன். ப்ளீஸ்!"

"ஆணியே புடுங்கத் தேவையில்லை! நீ... பெங்களூர் கிளம்பு!"

"லலி..."

"போவியா மாட்டியாடா? போய்ப் பார்த்துட்டு வான்னு தானே சொல்றேன். உடனே... கல்யாணம் பண்ணிக்கோன்னா சொல்றேன்? போடா!"

"ஆமா... நீ சொன்னதும்... டபால்ன்னு கழுத்தை நீட்ட.... குந்தவை என்ன குளத்தில இருக்க கொக்கா? She seems to be a very strong person!"

"இருந்துட்டுப் போறா?! உனக்கு... என்ன வந்துச்சு? போய்ப் பார்த்துட்டு வா!"



"லலி...."

"டேய்... வெறுமனே பார்த்துட்டு வான்னு தானே சொல்றேன். அதுக்கேன்... இவ்வளவு பேசுறே?"

"சரி போறேன்"

"ஹப்பா..." என லலிதா பெருமூச்சு விட,

தலையை இடமும் வலமுமாய் திருப்பித் திருப்பி, அவர்களது பேச்சுவார்த்தையைக் கேட்டுக் கொண டிருந்த மதுபாலா, கழுத்தைத் தேய்த்துவிட்டபடி, "இப்பவே கண்ணைக் கட்டுதே!"என்றாள் பீதி நிரம்பிய குரலில்.

அவள் தலையில் தட்டிவிட்டு பாலாஜி மருத்துவ மனைக்குக் கிளம்பிச் செல்ல, "இது சரியா வரு மாம்மா?"என்றாள் மதுபாலா கவலையுடன்.

"கண்டிப்பா" என்றார் லலிதா உறுதியாய்.

"எப்படிம்மா... இவ்வளவு உறுதியா சொல்றீங்க" என அவள் இன்னமும் சந்தேகமாய் இழுக்க,

"குந்தவையைக் கன்வின்ஸ் பண்ற பார்ட் வேணும்ன்னா கொஞ்சம் கஷ்டமா இருக்கலாம். ஆனா... இவங்க ரெண்டுபேரும் ஒரு நல்ல கணவன் - மனை வியா இருப்பாங்கன்னு எனக்குத் தோணுது... பாலா!" என்றவர்,

"கணவன் - மனைவியா வாழ்ந்து... அப்பா-அம்மாவாகுற சந்தோஷத்தை விட, அப்பா-அம்மாங்கிற ஸ்தானத்தில இருந்து, கணவன் - மனைவிங்கிற இடத் துக்கு ட்ராவல் பண்றது... அவங்களுக்கு ஈசியா இருக்கும்" என்றார் உறுதியாய்.

"அண்ணா ஒத்துப்பான்னு உங்களுக்கு நம்பிக்கை இருக்கா, லலிம்மா?" - சந்தேகமாய் இழுத்த மது பாலாவின் கன்னம் வருடிய லலிதா, "கண்டிப்பா!" என்றார் அவரோ, மிக மிகத் தீவிரம் படிந்த குரலில்.

"ரியல்லி?"

"ஆனா... குந்தவை..." - அப்போதும் சந்தேகமாய் இழுத்த மதுபாலாவிடம், "முதல உங்கண்ணா எஸ் சொல்லட்டும்... குந்தவையை எஸ் சொல்ல வைக்க வேண்டியது என்னோட பொறுப்பு" என்றார்.

பாலாஜி பெங்களூர் கிளம்பினான். குந்தவையை நேரில் சந்திக்க மாட்டேன் என்ற ஒரே ஒரு நிபந்தனை யுடன்.

லலிதாவும் சரியென்றார்.

மதுபாலாவின் கூற்றிலிருந்து, குந்தவையும் ஸ்ரீயும் ராகிகுடா ஆஞ்சநேயர் கோவிலுக்கு சனிக்கிழமை தோறும் வருவர் ஏன்பதை அறிந்த கொண்டவன், அவர்களுக்காக ராகிகுடா கோவில் வாசலில் காத்திருந் தான்.

பாலாவின் உபயத்தில், குந்தவையின் புகைப் படம் ஒன்று கையில் இருந்தது.

அவனை அதிக நேரம் காத்திருக்க வைக்காமல், "நாலு மணியில இருந்து நாலரைக்குள்ள அங்க இருக்க மாதிரி போவாளாம்டா" என்ற மதுபாலாவின் கூற்றை மெய்யாக்குவது போல், நான்கு மணி இருபது நிமிடங்களுக்குக் கோவிலிருக்கும் வீதியில் நடந்து வந்தாள் குந்தவை.



இளம் பச்சை வண்ணத்தில், அடர் மஞ்சள் வண்ண பார்டர் வைத்த சில்க் காட்டன் புடவை, அவளது நிமிர்வை அழகாய் காட்டியது.

அதை விடவும், மாம்பழ மஞ்சள் வண்ணத்தில் அரக்குக் கரையிட்டப் பட்டுப் பாவாடையில் அழகுப் பதுமையாய் அசைந்தாடி வந்தாள் ஸ்ரீதுளசி.

உள்ளுக்குள் என்னவோ செய்தது.

பரவசமா? புது சுகமா? ஆர்ப்பரிப்பா? ஆனந்தமா?

என்னவோ ஒன்று!

அவனையும் அறியாமல், பாலாஜியின் முகத்தில் புன்னகை ஒன்று மெல்லப் படர்ந்தது.

அதிலும், அவளை விட உயரமாய் இருந்த பாவாடையை, ஒரு கையால் தூக்கிப் பிடித்தபடி, ஓரோர் அடியையும் பார்த்துப் பார்த்து வைத்த அந்த இளம் தேவதை, அவனது இமைகளை அசைய விடாமல் செய்தாள்.

உள்ளுக்குள் இன்னமும் அதிகமாய் என்னவோ செய்தது.

காதல் கடிதம் கொடுக்கப் போகும் காதலனாய், இதயம் படபடத்தது!

கொஞ்சமாய் வேர்த்தது!

அதே சமயம், இனம் புரியாத சந்தோஷம் ஒன்று அவனுள் வியாபிப்பதை அவனால் உணர முடிந்தது!

உனக்கான உரிமையை அவளிடம் நிலைநாட்ட முடியாதடா மடையா என்று மூளை எச்சரித்தபோதும், மனம் அவள் பால் சரிவதை அவனால் தடுக்க முடிய வில்லை.

அவளது இரண்டடி மேனியை நூறாவது முறையாக ஆராய்ந்தான் பாலாஜி.

"அந்தக் கண்ணு... என்னை மாதிரியே இருக்கோ?" என்று சின்னதாய் ஒரு சந்தேகம், மனதின் ஓரம் முளைக்க. வேக வேகமாய் கைப்பேசியை எடுத்து... அதிலிருக்கும் கேமராவை உயிர்ப்பித்து, 'Secondary Camera' mode இற்கு மாற்றி, தன்னைத் தானே அதில் கண்டான்.

கண்ணை விரித்து... கண்ணைச் சுருக்கி... கைகளால் கண்களை லேசாய் அகற்றி... புருவத்தை நீவி என்று சிறிது நேரம் தன்னைத் தானே பார்த்துக் கொண்டவன். காலணிகளைக் கழற்றிப் போடுவதில் கவனமாய் இருந்த தாயையும் மகளையும் கூர்ந்து பார்த்தான்.

பையைக் கொக்கியில் இருந்து எடுத்து வரும் தாயை அண்ணாந்து பார்த்த நிலையிலிருந்த ஸ்ரீயின் கண்கள், அவனைக் காந்தமாய் இழுத்தன.

ஆழ் கிணறென, அக்கண்களில் தான் என்னவொரு சக்தி!?

வெண்பாற்கடலில் ஒற்றைத் திமிங்கலமாய் மிதந்த அந்தக் கருவிழிகளில் தான், என்னவொரு தீட்சண்யம்!?

பார்வையில் தான் என்னவொரு துறுதுறுப்பு!

எதிராளியை 'ஹிப்னாட்டைஸ்' செய்யுமளவிற்கு, அதில் தான் என்னவொரு ஈர்ப்பு!

பாலாஜியை 'ஹிப்னாட்டைஸ்' செய்து விட்டிருந்தாள் அந்தச் சின்னத் தாரகை!



ஹப்பப்பா!

ஒரே பார்வையில், அவளைப் பெற்றவனைச் சாய்த்து விட்டிருந்தாள் ஸ்ரீதுளசி!

ஆர்ப்பரிக்கும் இரு கடல்களை அருகருகே ஏந்தியிருந்த போதும், அவற்றை அடக்கி ஆண்ட அந்தக் குட்டி தேவதையின் பால் அவன் நெஞ்சம் மெல்ல மெல்லச் சாய்ந்தது.

"என் குழந்தை..." என்ற எண்ணம், மனதின் ஓரத்திலிருந்து மெல்ல மெல்ல நகர்ந்து மனதின் நடுவே சிம்மாசனம் இட்டு அமர எத்தனித்தது.

என் மகள்! என் ரத்தம்! என் குழ்ந்தை!

கோவிலின் வாசலை நோக்கி நடந்தான் பாலாஜி.

"ம்மா... இச்ஷி..." என்று கையிலிருந்த தண்ணீர் பாட்டிலையும், செருப்பைப் போட்டிருந்த பையில் போடும்படி, தாயிடம் நீட்டினாள் ஸ்ரீதுளசி.

"இதெல்லாம் செருப்போட போடக் கூடாது" என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல்,

"உம்மாச்சியைப் பாக்கப் போகும்போது, செருப்புப் போட்டுப் போகக் கூடாதுடா. அதான்... வெளிய கழட்டி வச்சிட்டுப் போறோம். ஆனா... தண்ணி கொண்டு போலாம். சரியா?" என்று விளக்கமும் கொடுத்த குந்தவையைப் பார்க்கையில் 'கல்யாணம்ங்கிற கான்சப்ட் மேல எனக்கு ஒரு ஈடுபாடே வரல' என்ற தன் வாக்கியத்தை எண்ணி, அவனுக்கே கொஞ்சம் சிரிப்பாய் வந்தது.

செருப்பை உரிய இடத்தில் கொடுத்துவிட்டு, தாயும் மகளும் தண்ணீரில் விளையாடி... அரிசி வாங்கி...

அன்னப்பூரணியின் பாதத்தில் கொட்டி.... பிள்ளையாரை விழுந்து கும்பிட்டு... என்று ஓரோர் அசைவிலும், அவனைக் கொஞ்சம் கொஞ்சமாய் அசைத்துத் தான் பார்த்தனர்.

அழகிய கவிதையாய் மிளிர்ந்த அவர்களது வாழ்வில், தானும் ஒரு வரியாக வேண்டும் என்ற ஆசை, முதல் இருபது நிமிடங்களிலேயே, பாலாஜியின் மனதில் உதயமாகிவிட்டது.

தண்ணீரில் விளையாடியபோது, "ஷ்... என்ன விளையாட்டு? போதும் வாங்க" என்று கண்டித்து அழைத்துப் போக வேண்டும் போல் ஓர் அக்கறை!

அரிசி வாங்கியபோது, "நீ முன்னாடி போ... நா பணம் கொடுத்திட்டு வரேன்"என்று அனுப்பி வைக்க வேண்டும் போல் ஓர் உரிமை!

அன்னப்பூரணியின் பாதங்களில்அரிசியைக் கொட்டி விட்டு, கண் மூடி வேண்டிக் கொண்ட குந்தவையிட மிருந்து, அரைக் கண் திறந்து தாயையே பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீயை வாங்கிக் கொள்ள வேண்டும் போல் ஓர் பாசம்!

பிள்ளையாரின் முன்னே மண்டியிட்டபடி பணிந்த குந்தவையின் முதுகில் ஏறப் போன ஸ்ரீயை, இரு கைகளாலும் அலாக்காய் தூக்கி, ஒரு சுத்து சுத்த வேண்டும் போல் ஓர் ஆசை!

"எனக்குத் தெரியுமே... நீ இப்படிச் செய்வேன்னு எனக்குத்தெரியுமே" என நாக்கை வெளியே நீட்டிக் குழந்தைக்கு அழகு காட்டிய குந்தவையோடு, தானும் சேர்ந்து சிரிக்க வேண்டும் போல் ஓர் உவகை!



பாலாஜி என்ற பிரம்மச்சாரி, குடும்பஸ்தனாய் மாற உவகை கொண்டான்!

அதிலும், சாமி தரிசனம் முடிந்து, குந்தவையும் ஸ்ரீயும் உணவுண்ட அழகைக் கண்டவனுக்கு, மனமே நிலை கொள்ளவில்லை!

"படுத்தாத குட்டிம்மா... அம்மா பாவம்ல" என்று குழந்தையிடம் கெஞ்ச வேண்டும் போல் ஆசையாய் இருந்தது.

"அச்சோ... பாவம்... ஒரு வாய் வாங்குறதுக்கு என்ன ஓட்டம் ஓட வைக்கிறா?!" என்று குந்தவைக்குப் பரிதாபப்பட்டது.

இந்த ஏக்கங்களுக்கு எல்லாம் மகுடம் வைக்கும் வண்ணம், மற்றொரு நிகழ்வு அன்றைய தினமே நடந்தேறியது.

உணவு முடிந்த பின்னர், ஸ்ரீயும் குந்தவையும் கோவிலின் பின்பக்கம் இருக்கும் கழிப்பறை நோக்கி நடந்தனர்.

அங்கே செல்பவர்களைத் தொடர்ந்து செல்ல ஒரு மாதிரி கூச்சமாய் இருக்கவே, சற்று தொலைவிலேயே நின்று கொண்ட பாலாஜி, அவர்களைக் கண்களால் மட்டுமே தொடர்ந்தான்.

கழிப்பறைக்கு சிறு தொலைவு முன்னே இருந்த, கை கழுவுமிடத்தில்,ஸ்ரீயின் கை.... வாய் அனைத்தையும் தண்ணீர் வைத்துத் துடைத்துவிட்ட குந்தவை, பெண்ணின் பாவாடையை சற்றே தூக்கி, அவளது நாப்பியை ஆராய்ந்தாள்.

சற்றே திருப்தியுற்றவள் போல் நிமிர்ந்தவள், பெண்ணிடம் குனிந்து... ஒரு விரல் நீட்டி ஏதோ சொன்னாள்.

அவர்கள் பேசுவது தெளிவாய் கேட்காவிடினும், பாலாஜி அவளது உதட்டசைவிற்கு ஒலி கொடுத்து, தானே அதைக் கேட்டும் கொண்டிருந்தான்.

"அம்மா.... உச்சா போயிட்டு வரேன் என்ன?"

"நீ... இங்கேயே இருக்கியா?"

அருகே இருந்த சிறு மரப் பெஞ்ச்சைக் காட்டி, "இதிலேயே உக்காந்துக்கோ... சரியா குட்டி?"

"எங்கேயும் போகக் கூடாது! சரியா குட்டி?"

"அம்மா டென் மினிட்ஸ்ல வந்துடுறேன். சமத்தா உக்காந்துக்கோ!" என்று குந்தவையின் உதட்டசைவைக் கணித்துக் கொண்டிருந்தவனின் கண்மணிகளும் குந்தவையைப் போலவே நர்த்தனமாடின.

குந்தவையும் அதையே தான் சொல்லிக் கொண்டிருந்தாள். என்ன, குட்டிக்குப் பதிலாக, அம்மு என்று வந்தது. அம்முவின் மூலம், பாலாஜிக்குத் தெரியாதல்லவா!? அதனால், அவனுக்கு "குட்டி".

ஸ்ரீயும் மண்டையை உருட்டி ஆமோதித்துக் கொண்டிருந்தாள். ஸ்ரீயைத் தூக்கி, அங்கிருந்த சிறு மரப் பெஞ்ச்சில் உக்கார வைத்துவிட்டு, குந்தவை கழிப்பறைக்குள் நுழைய, பாலாஜியின் கண்கள் கூடுதல் ஆசையுடன் ஸ்ரீயைத் தழுவின.

அந்தத் துறுதுறு வெண்பந்தால், அரை வினாடி கூட பெஞ்ச்சில் அமர்ந்திருக்க முடியவில்லை.

இடுப்பை ஆட்டி... ஆட்டி... பெஞ்ச்சை விட்டுக் கீழே குதித்தவள், அவள் குதித்ததால் கீழே விழுந்த பையை எடுத்து, பெஞ்சின் மீது சரியாக வைக்கவும்,



"ஹைய்யோ... என் செல்லக்குட்டி... சமத்துடா தங்கம் நீ" எனச் சிலாகித்துக் கொண்டான் பாலாஜி.

பெஞ்சை விட்டு இறங்கிய குழந்தை, அங்கிருந்த செடி கொடிகளை ஆராயத் தொடங்கினாள்.

இலைகளை வருடுவதும்... பூக்களை ஆசையாய் பார்ப்பதும்... கீழே விழுந்து கிடந்த சிறு பழங்களைக் கையில் எடுப்பதுமாய் அவள் இருக்க, "பூச்சி... கீச்சி கடிச்சிடப் போகுது குட்டி" என்று பதைபதைத்தது தகப்பனின் மனம்.

அதிலும், சற்றே அடர்ந்திருந்த செடிக்கு இடையே அவள் நுழைவதைக் கண்டவன், இடத்தை மறந்து... அவளை நோக்கிக் கிட்டத்தட்ட ஓடினான்.

குத்துச் செடிகளாய் இருந்த பூச்செடிகளுக்குள் கையை விட்டு எதையோ எடுத்துக் கொண்டிருந்த பிள்ளையின் இடுப்பில் கை கொடுத்து, "நோ.. நோ... செய்யக் கூடாது" என்றபடியே வெளியே தூக்கிய பாலாஜிக்குள், அப்படியொரு பரவசம்!

பிறந்த குழந்தையைக் கையிலேந்தும் ஓரோர் தகப்பனுக்கும் உண்டாகும் அதே மகிழ்ச்சி அவனுள் ஊற்றாய் பெருகியது.

என்ன... இந்தக் குழந்தை பேசியது! பேசும் பூவாய் தன் கையில் மிதந்த சிறு முல்லை மலரை உச்சி முகர்ந்தான் அவளது தந்தை!

முத்தத்தின் ஈரத்தில், நெஞ்சம் சில்லென நனைந்து போனது!

இன்னும் இன்னும் நனைய வேண்டும் போல் ஓர் உவகை, காவிரி ஊற்றாய் பொங்கி வழிந்தது!

அவளது பட்டு மேனியும்... அதில் பூத்திருந்த உறுப்புப் பூக்களும்... அவனைக் கொள்ளை கொண்டன! மொத்தமாய்!

"குட்டிம்மா..." என்று ஆசையாய் அவள் கன்னத்தில் இதழ் பதித்தவனின் காதுகளில், "அம்மு... எங்கடா போனே?" என்ற குந்தவையின் குரல் கேட்க.

வேகமாய் குழந்தையை இறக்கிவிட்டவன், "அம்மா... வந்துட்டாங்க. சீக்கிரம் ஓடிப் போங்க" என்று குந்தவையின் பக்கம் அவளைத் திருப்பிவிட்டான்.

"கிக்க்கீக்கி" என்று அரிசிப் பல் தெரிய சிரித்தவள், செடிகளுக்கு இடையிலிருந்து தான் எடுத்திருந்த செம்பருத்திப் பூவொன்றை, பாலாஜியின் கைகளில் கொடுத்துவிட்டு ஓடிப் போனாள்.

அந்த மலரையே பார்த்தபடி இருந்தவன், சென்னை வந்ததும் "எனக்கு... அவங்க ரெண்டு பேரோடவும் லைப்பை ஷேர் பண்ணிக்கணும்ன்னு ஆசையா இருக்கு, லலி!" என்றான் ஆசையாக.

லலிதா அர்த்தத்துடன் சிரிக்க.

"என்னால அவங்களுக்கு ஒரு பெஸ்ட் லைஃப்பைக் கொடுக்க முடியுமான்னு தெரியலை. ஆனா... அந்த அம்மாவும் பொண்ணும் என்னோட வாழ்க்கைக்கான பெஸ்ட் கலர்ஸ்ஸை எடுத்திட்டு வருவாங்கன்னு தோணுது!" என்றான், நிறைவாய்.

**இ**ன்றைய தினம்

குந்தவையிடம், பாலாஜி அவர்களைத் தேடி வந்த கதையை ஒவ்வொருவராய் சொல்லிக் கொண்டிருக்க.



பாலாஜியோ, அந்தப் பேச்சு வார்த்தைகள் எதிலும் பங்கு பெறாமல், தன் பாண்ட் பாக்கெட்டில் இருந்த பர்ஸை எடுத்து, அதனுள்ளிருந்த சிறு கவரைப் பிரித்து, அதனடுவே பதப்பட்டிருந்த செம்பருத்தி மலரையே புன்னகை மாறாது பார்த்துக் கொண்டிருந்தான்.

## அத்தியாயம் 19

**கு**ந்தவை ஓய்ந்து போய்,. சோபாவில் அமர்ந்தாள்.

பெரும் சுழற்சியில் சிக்கிக் கொண்டார் போல், தலை நாலா பக்கமும் சுற்றியது.

கைகளால் முகத்தை அழுந்தத் தேய்த்துவிட்டுக் கொண்டவள், சோபாவில் அமர்ந்து தலையைக் கைகளால் தாங்கிக் கொள்ளவும்,

"ஏய்.. கவி... என்னாச்சுடி? தண்ணி தரட்டா? இல்ல இல்ல... காஃபி போட்டு எடுத்திட்டு வரேன்" என்று பரபரப்பானாள் மதுபாலா.

தன்னருகே அமர்ந்த குந்தவையின் தோளை மெல்ல வருடிய லலிதா, "என்னம்மா... பயங்கரமா கோவம் வருதா?" என்றார் வாஞ்சை ததும்பிய குரலில்.

சோர்ந்திருந்த போதும், குந்தவையின் தலை மறுப்பாய் அசைந்தது.

புருஷோத்தமனும்.... பாலாஜியும் லலிதாவை அர்த்தத்துடன் பார்த்தனர்.

இருவரையும் பார்த்துக் கண்ணால் சிரித்த பெரியவர், "பின்னே?" என்றார் மீண்டும்.

"உலகம்... ரொம்ப ரொம்பச் சின்னதுன்னு தோணுது!" என்றாள் மனதின் ஆச்சரியத்தை மறையாமல் வெளியிட்டு.

"ஹ்ம்ம்..."

"ஆனா... அம்முவோட பேரன்ட்ஸ்ஸை..."

"முன்னாள் பேரன்ட்ஸ்" இடையிட்டுத் திருத்தினார் லலிதா.

"ஆமா... முன்னாள்! முன்னாள் பேரன்ட்ஸ்ஸைப் பத்தி நினைக்கும் போது... செம எரிச்சலும் ஆத்திரமும் வந்தாலும், அவங்களோட சுயநலத்தால தான், எனக்கு என்னோட அம்மு கிடைச்சிருக்கா இல்லையா? அதனால... அந்தக் கோபமும் கம்மியாகிடுச்சு"

"அப்போ... பாலாஜி மேல உனக்கு எந்தக் கோபமும் இல்லையா?" என்றார் லலிதா.

காபி கலந்து எடுத்து வந்த மதுபாலாவை வழி மறித்து, "லலி இருக்கே... ஹப்பா!!! அவளுக்குக் கோபமில்லைன்னா கூட.... ஹய்யையோ அவன் மேல கோபப் படாம இருக்கக் கூடாது... அது தர்மமே இல்லைன்னு ஹை- ரியாக்ஷன் கொடுத்து... இல்லாத கோபத்தை வரவச்சிட்டு இருக்குப் பாரேன்" என்றான் பாலாஜி முணுமுணுப்பாய்.

"என்னடா அங்க முணுமுணுப்பு?" - வாத்தியார் என்று நிரூபித்த லலிதாவிடம், மறுப்பாய் தலையசைத்து... தெய்வீகமாய் ஒரு சிரிப்பை உதிர்த்த பாலாஜி, மதுபாலாவின் புறம் திரும்பினான்.



"உன் ஃபிரண்டுக்கு மட்டும் தான் காஃபி போட்டியா?" என்று அவள் தலையில் கொட்டியவன், "நா... என்னோட ஃபிரண்ட்ஸ்க்குப் போட்டு எடுத்திட்டு வரேன்" என்று அடுக்களைப் பக்கம் திரும்பினான்.

அவன் அடுக்களைக்குள் நுழையவும், வேகமாய் சோபாவில் இருந்து எழுந்தாள் குந்தவை.

"நோ டென்ஷன்... வெறுமனே காஃபி மட்டும் தான் போடப் போறேன். மத்தபடி... ஒண்ணுமே செய்ய மாட்டேன்" என அவன் நல்லபிள்ளையாய் உறுதி கொடுக்க,

"அது இல்லை. எல்லாருக்கும் காஃபி போடுற அளவுக்கு... வீட்டில பால் இல்லை" என்றாள் குந்தவை, பதிலாய்.

"அதானே பிரச்சனை? நா... போய் வாங்கிட்டு வரேன்" என்று புருஷோத்தமன் கிளம்ப,

"எனக்கு... லேட்டாகிடுச்சு. நா கிளம்புறேன்" என்று அருந்ததி விடைபெற, "கொஞ்சம் இருங்க மேடம்... ஒரு கப் காஃபி குடிச்சிட்டுப் போலாம்" என்று வீட்டரசியாய் தடுத்தாள் குந்தவை.

"இட்ஸ் ஓகே, குந்தவை! நோ... ஃபார்மாலிட்டீஸ்!" என்று மறுத்த அருந்ததி, "எனக்கு ஏதாவது கொடுக்கணும்ன்னு நினைச்சீங்கன்னா... என் ஃபிரண்டைக் கல்யாணம் பண்ணிக்கோங்க. அக்மார்க் நல்லவன்" என்று கண்ணடித்தாள்.

குந்தவையின் முகம் இறுகவும், "நோ ஹர்ரி. மெதுவா... நிதானமா யோசிங்க. இப்போதைக்கு நா கிளம்புறேன்" என அவள் கன்னத்தைத் தட்டிவிட்டு,

அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பி னாள் பாலாஜியின் உற்றத் தோழி.

அருந்ததி கிளம்பவும், குந்தவையிடம் திரும்பிய பாலாஜி, "குந்தவை, லலி... ஏழரை மணிக்கு ஒரு காஃபி குடிப்பாங்க. அவங்களுக்கு மட்டும்... ஒரு அரை கிளாஸ் போட்டுக்கிறேன். சரியா?" என அவளது அனுமதியைக் கேட்டு, அதற்குப் பதிலாய் குந்தவையின் ஆச்சரியம் மேலோங்கிய ஆமோதிப்பைப் பெற்றுக் கொண்டு, அடுக்களைக்குள் நுழைந்தான்.

அவன் சென்றதும், "நீ... உட்காரும்மா... அவன்... போட்டு எடுத்திட்டு வருவான்" என்ற லலிதா, "அவன் மேல கோபம் வரலையா, குந்தவை?" என்றார்.

"ஹ்ம்ம்... கோபமே இல்லைன்னு சொல்ல முடியாது. ஆனா... அவரோட பாயிண்ட் ஆஃப் வியூல இருந்து பார்த்தா..." எனக் குந்தவை இழுக்க,

"அப்போ அவன் மேல கோபமில்லை... ரைட்?"

"ஹ்ம்ம்... ஸ்ரீக்கும் அவருக்குமான சம்பந்தத்தைப் பத்தின கோபம் சுத்தமாய் போய்டுச்சு! மாறா, ஒரு விதமான மதிப்பும்... ஹ்ம்ம்... great in someway அப்படின் னும் தோணுது"

"ம்ம்ம்"

"ஆனா... அவருக்கும் எனக்குமான அந்த சம்பந்தத்தைப் பத்தின கோபம் போகலை!" என்றாள் குந்தவை.

"அது கண்டிப்பா இருக்கத் தான் செய்யும்!" என்று தானும் ஒத்துக் கொண்ட லலிதா,



"ஆனா... ஸ்ரீயோட அப்பாங்கிற உறவையும்... உன்னோட கணவன்ங்கிற முறையையும் பிரிச்சுப் பார்க் கிற அளவுக்கு நீ முதிர்ந்திருக்கிறன்னு நினைக்கும் போது, எனக்கு ரொம்பவே பெருமையா இருக்கு கண்ணா" என்றார் பெருமையில் திளைத்தவராய்.

"என்ன மிஸ் செய்றது? வாங்கின அடிகள் அப்படி!" என்றாள் குந்தவை, கசந்த புன்னகை ஒன்றை வெளி யிட்டு.

அவளைத் தோளோடு சேர்த்தணைத்துக் கொண்ட லலிதா, அவளது முகத்தைத் திருப்பி நெற்றியில் சிறிதாய் ஒரு முத்தம் வைத்து நிமிர்ந்தார்.

ஆயிரமாயிரம் ஆறுதல் வார்த்தைகளுக்கு ஈடாய் அமைந்த அச்செயலில், குந்தவையின் கண்ணோரம் கசிந்தது.

"Kunthavai is such a strong person ன்னு பாலாஜி சொல்லிட்டே இருப்பான். நீ... என்னடான்னா அழ றியே!?" என்று விளையாட்டாய் அவளது கண்களைத் துடைத்துவிட்டார் லலிதா.

"Strong person..." என்பதைத் தானும் ஒரு முறை உச்சரித்துப் பார்த்த குந்தவை, "ஹ்ம்ம்ம்" என்றொரு பெருமூச்சை வெளியிட்டாள்.

"ஏன்டா?"- எனக் கேட்ட லலிதாவிற்கு. அவளது பெருமூச்சிற்கான விடையை அறிந்து கொள்ள வேண்டி யதாய் இருந்தது.

"இல்ல மிஸ்... உங்க பையன் வந்து.. ஸ்ரீயோட அப்பான்னு சொன்னதும், தடுமாறிப் போயிட்டேனே.. நானும் அழுது... அம்முவையும் பயமுறுத்தி... ஹ்ம்ம்...

I wasnt a strong person..." என்றாள் குந்தவை, தன் செயலை எண்ணித் தவித்தவளாய்.

"எப்படியாப்பட்ட ஞானியா இருந்தாலும். முதல் ஷணத்தில தடுமாறத்தான் செய்வாங்க. அதுவும் தனக்கே தனக்குன்னு இருக்கிற உறவை... யாரோ ஒருத்தர் சொந்தம் கொண்டாடும் போது, மனசு தடுமாறத் தான் செய்யும்! ஆனா... அந்த முதல் தடுமாற்றத்துக்கு அப்புறம் எவ்வளவு தெளிவா ரியாக்ட் பண்ணியிருக்கே!" என்று சிலாகித்த லலிதாவின் குரலில் பெருமையிருந்தது.

"ஹ்ம்ம்..." - மடியில் கோர்த்திருந்த கைகளையே பார்த்தபடி முணுமுணுத்த குந்தவை,

"ஆனா... மிஸ்... நா....உங்க பையனை..."

"டக்குன்னு முடிவு சொல்ல வேண்டாம், குந்தவை. நிதானமா யோசிச்சு சொல்லு..."

"யோசிக்கிறதுக்கு என்ன இருக்கு... மிஸ்? ஹஸ்பண்ட்ங்கிற உறவை ஏத்துக்கக் கூடிய மனநிலை என்கிட்ட சுத்தமா இல்ல"

"ஹ்ம்ம்... புரியுது! ஆனா... ஸ்ரீயோட அப்பாங்கிற உறவை ஏத்துக்கலாம் இல்லையா?"

"என் பெண்ணோட அப்பாவையும்... என்னோட கணவரையும் பிரிச்சுப்பார்க்கக் கூடிய சமூகத்தில நாம வாழலையே!"

"நியாயம் தான்!" என்பது போல், ஆமோதிப்பாய் தலையாட்டிய லலிதா, "பாஸ்கர்ங்கிற ஒருத்தன் செஞ்ச தப்புக்காக... ஆம்பிளைங்களையே வெறுக்கிறது தப்பில்லையா... கண்ணம்மா?"என்றார் வாஞ்சையாய்.



"கண்டிப்பா தப்பு தான்! நானுமே... ஒட்டு மொத்த ஆம்பிளைங்களையும் வெறுக்கலையே மிஸ். எங்கப்பா... எங்கண்ணன்... இதோ புருஷோத்தமன் அண்ணன்... ஜோஸ்... என்னோட ஹெட்... ஏன் உங்க பையனைக் கூட நான் மதிக்கிறேன். ஆனா... ஒரு ஆம்பிளையை நம்பி... என்னோட வாழ்க்கையை ஒப்படைக்க எனக்கு விருப்பமில்லைன்னு சொல்றதை விட இன்னொரு அடி வாங்குற அளவுக்கு எனக்குத் தைரியமும் இல்லை. தெம்பும் இல்லை" என்றாள் குந்தவை தெளிவாக.

"என் பையன் மேல உனக்கிருக்க மதிப்பே... கணவன்- மனைவி உறவுக்கு அடித்தளமா அமையலாம், குந்தவை" என்றார் பெரியவரும், அவளது வார்த்தையைத் தனக்குச் சாதகமாக்கி.

"ஹ்ம்ம்... எனக்கு அப்படித் தோணலை..." என்றாள் குந்தவை தெளிவு மாறாமலேயே.

"சரி... ஓகே... அதை விடு! ஸ்ரீ எங்க? நா... அவளைப் பார்க்கணுமே!?" என்று சட்டென இறுக்கமான சூழ்நிலையைத் தகர்த்திவிட்டு வெளியே வந்தார் லலிதா.

"தூங்குறா..." என்று குந்தவை சொல்லும் போதே,

"அம்மா...." என்ற குரல் படுக்கையறையிலிருந்து ஒலித்தது.

"இதோ எழுந்துட்டா..." என்றபடியே இருக்கையை விட்டு எழுந்த குந்தவையின் முகத்தில் இளம் புன்னகை ஒன்று வேகமாய் வந்து உரசி நின்றது.

“எழுந்ததும்... நீ பக்கத்தில இல்லைன்னா அழு வாளா?” என லலிதா தன் விசாரணையைத் தொடர,

“ம்ஹூம். அழ மாட்டா... ஃப்ரெஷா சிரிச்சிட்டே தான் வருவா...” என்ற குந்தவையின் குரலில் தாயின் பூரிப்பு பொங்கி வழிந்தது.

“பரவாயில்லையே” என்று சிலாகித்த லலிதாவின் கைகளில், காப்பி டம்ளரை வைத்தான் பாலாஜி.

“தேங்க்ஸ்டா கண்ணா” என்றபடி அவர், அதை உறிஞ்ச.

“அம்முக்குட்டி... நம்ம வீட்டுக்கு யாரு வந்திருக் காங்க பாரு...” என்று இடுப்பில் தூக்கி வைத்துப் பிள்ளையைக் கொஞ்சியபடியே வெளியே வந்தாள் குந்தவை.

“ஏய்... குட்டி... என்னடா எப்படி இருக்கீங்க?” என்று மதுபாலா கொஞ்சவும். கண்ணை விரித்து அவளை யாரென்று பார்த்தது சின்னக் கன்று.

ஸ்ரீதுளசியைத் தத்தெடுத்த பின்னர், குந்தவை ஊர்ப்பக்கம் வந்ததில்லை.

பிஞ்சென்ற போதும், யாரது சொல்லோ... பார்வையோ மகளைப் பாதித்து விடக் கூடாது என் றெண்ணியவளாய், குந்தவை மகளைப் பொத்திப் பொத்தியே வைத்திருந்தாள்.

ஆதலால், குந்தவையின் நெருங்கிய தோழியான மதுபாலாவே ஸ்ரீக்கு சற்று அன்னியப்பட்டவளாய் தெரிந் தாள்.

“அத்தைடா... பாலா அத்தை...” என்று குந்தவை அறிமுகம் செய்ய,



“பா... அங்க்கி...” என்று தன் “பா அன்க்கியை” நினைவு கூர்ந்தது செல்லக் கன்று.

“பா அங்க்கி இல்ல, அம்மு! பாலா அத்தை. பா அங்க்கி வேற... பாலா அத்தை வேற” என்று குந்தவை விளக்க,

“குழப்புறதுக்குன்னே... அண்ணனும் தங்கச்சியும் ஒரே பேரை வச்சிருந்தா... குழந்தை என்ன செய்யும்? பாவம்...” என்று தன் பேத்திக்காக வக்காலத்து வாங்கிய லலிதா, இருக்கையை விட்டு எழுந்து, குழந்தையை வாங்கப் போனார்.

அதுவரையிலும், பின்னணியில் ஒதுங்கியிருந்த பாலாஜி, சட்டென முன்னே வந்து “மெதுவா லலி...” என்று அவரைத் தடுத்த கையோடு,

“அம்மாவால குழந்தையைத் தூக்க முடியாது. அவங்க உக்காந்துக்கட்டும்... அவங்க மடில ஸ்ரீயைக் கொடுக்கிறியா?”எனக் குந்தவையைக் கேட்டுக் கொண்டான்.

இதற்கிடையே, “பா... அன்க்க்கி...” என்று துளசி தன் பங்கிற்கு ஆர்ப்பரிக்க, அவளைப் பார்த்துச் சிரித் தான் பாலாஜி.

தந்தைக்கும் மகளுக்கும் இடையே நடந்த உரை யாடலை ரசித்தபடியே, “அதெல்லாம் ஒண்ணுமில்லை... கொஞ்ச நேரம் தானே... நானே தூக்கிக்கிறேன்” என்று மீண்டும் எழ முற்பட்ட லலிதாவின் தோளைப் பற்றி அமர வைத்த பாலாஜியைத் தொடர்ந்து,

“நீங்க உக்காருங்க மிஸ்... நா அம்முவைத் தரேன்” என்று முன்வந்தாள் குந்தவை.

"அம்மா... பா அங்க்கி..."- ஆசையும் ஆர்வமுமாய் தாயிடம் சொன்னாள் ஸ்ரீதுளசி.

குந்தவையும் எந்தத் தடையுமின்றி, குழந்தையின் சிரிப்பை ரசித்துத் தானும் சிரித்தாள்.

"பா... அன்க்கியை உனக்கு ரொம்பப் பிடிக்குமா?" என்றபடியே குழந்தையைக் கையில் வாங்கிய லலிதா, அவளது பட்டுக் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டார்.

ஸ்ரீக்கு ஒரே வெட்கமாகிவிட்டது.

"கிகிகி..." என்று நாணிக் கோணிச் சிரித்தவள், தாயை ஒரு முறையும்... பா அன்க்கியை ஒரு முறையும் வெட்கத்துடன் பார்த்துக் கொண்டாள்.

அவரவர் முறைக்கு, குந்தவையும் பாலாஜியும் பெண்ணின் வெட்கத்தை ரசித்துப் புன்னகை செய்ய,

"பாட்டிடா... ஸ்ரீயோட பாட்டி" என்று அறிமுகம் செய்து வைத்தான் பாலாஜி.

"பாத்தா?"- கண்ணை விரித்துக் கேள்வி கேட்டது கன்று.

"பாட்டி... பா.........ட்... டீ..."

"பாத்ஈ..."

"ஹான்... பாட்டி... ஸ்ரீகுட்டியோட பாட்டி..."

"பாத்ஈன்னா?"- பெரியவள் போல், கேள்வியால் கொக்கிப் போட்டு அவள் நிறுத்த,

"பாட்டின்னா... ஹ்ம்ம்... பா அங்க்கியோட அம்மா..."

"அச்சூ... அப்போ... அம்மா..." என்று தந்தையைத் திருத்தினாள் சின்னவள். கூடவே,



"இதா... அம்மா" என்று குந்தவைக் கையைக் காட்ட வேறு செய்தாள்.

"இது... ஸ்ரீயோட அம்மா" என்று குந்தவையைக் காட்டி, ஸ்ரீயின் கூற்றை ஆமோதித்தவன், லலிதாவைக் காட்டி "இது... பா அன்க்கியயோட அம்மா" என்றான் விளக்கமாய்.

"பா... அங்க்கி அம்மா..." என்றாள் பெண்ணோ, அழுத்தமாய்.

சிரிப்பு வந்தது குந்தவைக்கு.

"பா அன்க்கிக்கு அம்மாடா. உனக்கு... பாட்டி"

"ஷீ இக்கு பாத்ஈயா?"

"ஹ்ம்ம். ஸ்ரீக்குப் பாட்டி"

"ஊஒஷ்ஷ்ஷ்..."- விதவிதமாய் ஒலியெழுப்பி, தன் யோசனையை முன் வைத்தவள், முடிவில் ஒரு வாறாக ஒத்துக் கொண்டாள்.

"ஹப்பா... ஒருவழியா ஒத்துக் கிட்டா" என்ற லலிதா, பிள்ளையுடன் சற்று நேரம் அளவளாவி மகிழ்ந்தார்.

பின்னர், "பாலா... கொஞ்ச நேரம் ஸ்ரீயை வச்சுக் கிறியா? நா... குந்தவையோட தனியா பேசணும்!" என்று மதுபாலாவிடம் குழந்தையின் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, குந்தவையின் படுக்கையறைக்குள் அவளை அழைத்துக் கொண்டு நகர்ந்தார்.

"என்ன மிஸ்... என்ன பேசணும்?" என்று குந்தவை தொடங்கவும்.

"உன்னோட ஃபியூச்சர் பிளான் என்ன, குந்தவை?" எனத் தன் கேள்விகளை முன் வைக்கத் தொடங்கினார் லலிதா.

"ஹ்ம்ம்... பிளான்... என்ன பிளான்... ஸ்ரீயை நல்லபடியா வளக்கணும் ... வேலையில நல்ல லெவலுக்குப் போணும்... நிம்மதியா வாழணும்" அவரது கேள்வியின் நோக்கம் புரியாமல் இழுத்தாள் குந்தவை.

"உன்னோட திறமைக்கு... வேலை விஷயத்தில எந்தவிதமான தொய்வும் இருக்காது. சோ... நாம அதைப் பத்திப் பேச வேண்டாம். ஸ்ரீயைப் பத்தியே பேசுவோம்" என்றவர், "ஸ்ரீயைப் பத்தின உன்னோட ட்ரிம்ஸ் என்ன?" எனக் கேட்டார்.

"ட்ரீம்ஸ்... ஹ்ம்ம்... அவளை நல்லா படிக்க வைக்கணும். முக்கியமா... அவளுக்குப் பிடிச்சதைப் படிக்க வைக்கணும். அவ படிக்கணும்ன்னு நினைக்கிற கோர்ஸைப் படிக்க வைக்கிற அளவுக்கு... என்கிட்ட வசதி இருக்கணும்..."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? அவ... சொந்தக் கால்ல நிக்கணும்! நல்ல வேலைக்குப் போய்... அவளோட தேவைகளை அவளே பார்த்துக்கணும். indipendent ஆ... தைரியமா...எந்தவொரு பிரச்சனையையும் ஹாண்டில் பண்ணக் கூடியவளா... bold ஆ... வளக்கணும்"

"அப்புறம்?"



"அப்புறமா... அப்புறம் என்ன?"

"அவளுக்குக் கல்யாணம் செய்ய வேண்டாமா?"

"ஹோ... அதைக் கேட்கிறீங்களா? கண்டிப்பா... ! கண்டிப்பா... நல்ல இடமா... நல்ல மாப்பிள்ளையா... நானே நேரடியா விசாரிச்சு... அவளுக்குப் பொருத்தமான ஒரு பையனுக்குக் கல்பாணம் பண்ணிக் கொடுப்பேன்" என்றாள் உறுதி நிரம்பிய குரலில். கூடவே, "ஏன் மிஸ்... இதெல்லாம் கேட்கிறீங்க? அப்பா இல்லாத காரணத்தால்... அவளுக்குக் கல்யாணம் நடக்கிறது கஷ்டமாகிடும்ன்னு சொல்லப் போறீங்களா?" என்று தன் பக்கக் கேள்வி ஒன்றை, லலிதாவின் புறம் தூக்கி வீசினாள் குந்தவை. குரலில் சற்றே கோபம் ஏறியிருந்தது.

"சேச்சே... கண்டிப்பா இல்ல! கட்டுக்கோப்பான சமூகம் தான்னாலும்... மனிதாபிமானம் உள்ள மனுஷங்க இருக்கத் தான் செய்றாங்க. நா... அதுக்காக கேட்கலை" என்று வேகமாய் மறுத்தவர்.

"நா... கேட்டதுக்கான ரீசனே வேற" என்று பொடி வைத்துத் தொடங்கினார்.

"ஸ்ரீ... கல்யாணம் பண்ணிப்பான்னு உனக்குத் தோணுதா?" என்றார் சந்தேகமாய்.

பெருத்த ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்த குந்தவை, "ஏன் மிஸ்... ஏன் இப்படிக் கேட்கிறீங்க? பண்ணிக்க மாட்டான்னு நினைக்கிறீங்களா?" என்றாள் கேள்வியாய்.

"ஹ்ம்ம்... எப்படி சொல்றது? அம்மா - அப்பாங்கிற குடும்ப அமைப்பில வளராத அந்தக் குழந்தைக்கு...

தனக்குன்னு ஒரு குடும்பத்தை அமைச்சுக்கிற எண்ணம் வரது கொஞ்சம் கஷ்டம்ன்னு தோணுது!"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?" இன்னமும் குந்தவைக்குப் புரியவில்லை.

"ரெண்டு காரணங்கள்..."

"ஒண்ணு... இப்போ கூட... 'பாட்டி'ங்கிற புது உறவை அவளால டக்குன்னு அக்சப்ட் பண்ணிக்க முடியலை. அம்மா... அங்கிள்... ஆன்ட்டி... இப்படி நீ அறிமுகப்படுத்தின உறவுகளைத் தான் அவளுக்குத் தெரிஞ்சிருக்கு. அதுவும்... அவங்கெல்லாம் குடும்பத்தைத் தாண்டின உறவுகள். பாட்டி... தாத்தா... மாமா... அத்தை... சித்தி... சித்தப்பா... பெரியப்பா... ஏன் அப்பாங்கிற உறவு கூட... அவளோட குடும்பத்துக்குள்ள இல்லையே! அப்படியிருக்கும் போது... எப்படி அவளால கல்யாணம்ங்கிற உறவுமுறைக்குள்ள புகுந்து... மாமியார் மாமனார்... ஹஸ்பண்ட்... பசங்கன்னு செட் ஆக முடியும்!"

குந்தவைக்கு நெஞ்சினோரம் லேசாய் வலித்தது.

கண்ணில் அதைக் காட்டாதிருக்க அரும்பாடு பட்டவளாய், பெரியவரையே பார்த்திருந்தாள் குந்தவை. அவர் இன்னமும் இரண்டாவது காரணத்தைக் கூற வில்லை. மொத்தமாய் சொல்லி முடிக்கட்டும். பேசிக் கொள்ளலாம் என்று காத்திருந்தாள்.

அவளது எண்ணம் புரிந்தவராய், வலிதாவும் பேசினார்.

"இரண்டாவது காரணம்... அவளோட *genes!*"



நேற்றி சுருங்க, குந்தவை கேள்வியாய் நோக்க,

"பாலாஜியோட அணுக்கள் சிலது அவளுக்கும் இருக்கும் தானே? அதில இருந்து...பிறந்தவ தானே அவளும்!" இன்னமும் அவரது வார்த்தைகள் புதிராகவே வெளிப்பட்டன குந்தவைக்கு.

"புரியலை ... என்ன சொல்ல வரீங்க" என்ற குந்தவையின் கண்கள் அவரை நேர்கோட்டில் சந்தித்தன.

"நாங்க பேசினதில இருந்தே... பாலாஜிக்கு இன்னமும் கல்யாணமாகலைன்னு உனக்குப் புரிஞ்சிருக்கும்ன்னு நினைக்கிறேன். முப்பத்தியாறு வயசாகியும் ... அவன் ஏன் கல்யாணம் பண்ணிக்காம இருந்தான்னு யோசிச்சியா?" எனக் கேட்டார் லலிதா.

"ஹோ... ஆமா! ஏன் கல்யாணம் பண்ணிக்கலை? நல்ல படிப்பு... நல்ல வேலை... ஸ்பெர்ம் டொனேட் பண்ணியிருக்கார்ன்னா ஆரோக்கியத்திலயும் எந்தப் பிரச்சனையும் இருக்க வாய்ப்பில்லை. அப்புறம் என்ன பிரச்சனை? எதுவும் ... love failure- ஆ?" என்று குந்தவை, தன் யூகங்களை முன்வைக்க,

"சேச்சே... லவ் பண்ற அளவுக்கெல்லாம் அவனுக்குத் தைரியம் பத்தாது" என்று சிரித்த லலிதா,

"நா சொன்னேனே... ஒரு குடும்ப அமைப்பில வளராத குழந்தைக்குத் தனக்குன்னு ஒரு குடும்பத்தை அமைச்சுக்கிற எண்ணம் வராதுன்னு. அது... வெறுமனே அட்வைசா சொல்லலை. நேரடியா அனுபவிச்சதால சொல்றேன்"

"மிஸ்? என்ன சொல்றீங்க? நீங்க ... நீங்க... " என இழுத்தவள், "உங்க ஹஸ்பண்ட்?" என்று புரியாமல் விழித்தாள்.

"எனக்கு ஹஸ்பண்டே கிடையாதும்மா?" என்று சிரித்தார் லலிதா.

"இறந்து போயிட்டாங்களா மிஸ்?"- குரல் உள்ளே போய்விட்டிருந்தது குந்தவைக்கு.

"இருந்தா தானே இறக்க!"இதற்கும் லலிதா சிரிக்க,

"மிஸ் நீங்க... நீங்க ... என்னை மாதிரி..." அதைச் சொல்லும் போதே, குந்தவையின் வார்த்தைகள் நடுங்கின.

"இல்லடா... எனக்குக் கல்யாணமே ஆகலே!" என்றார் லலிதா, அதே சிரிப்புடன்.

பாலாஜியின் அம்மாவும்... அவனது உரிமை விரவிய லலியும் குந்தவையைக் குழப்பின.

"அந்தக் காலத்திலேயே... நா ஒரு சிங்கிள் மாம்!" என்றார் லலிதா.

"அப்போ... பாலாஜியைத் தத்தெடுத்து வளர்த் தீங்களா? இல்லையே... பாலாஜி மதுவோட பெரியப்பா பையன்னு இல்லை சொன்னீங்க? அப்படியிருக்கும் போது... ஹ்ம்ம்... குழப்புதே!"

"பாலாஜியோட அம்மா... எனக்கு அக்கா! அவ ளும்... அவளோட வீட்டுக்காரரும் இறந்ததும், அவனை நானே வளர்த்தேன். அவனை வளர்க்க... கல்யாணம் ஒரு தடையா இருக்கும்ன்னு நினைச்சு... நா கல் யாணமே பண்ணிக்கலை" என்று குரலில் சாதாரணத் தனத்துடன் சொல்லிக்கொண்டே சென்ற லலிதா,



"அவனை நல்லா வளர்த்து ஆளாக்கினேன்... டாக்டர்க்கு படிக்க வச்சேன்... குணத்தில அவனை மிஞ்ச ஒருத்தன் பிறந்து வரணும்ன்னு பெருமைப் பட்டேன்... ஒத்த பொம்பளையா வளர்க்கிற பிள்ளை உருக்குலைஞ்சு போயிரும்ன்னு புரளி பேசின உறவுக் காரங்க முன்னாடி அவனைப் பெரிய மனுஷனா நிக்க வச்சேன். ஆனா... ஒரு விஷயத்தில தோத்துப் போயிட் டேன்"

"என்ட்டையே வளர்ந்ததாலயோ என்னவோ... கல்யாணம்ங்கிற கான்சப்ட் மேலேயே அவனுக்கு ஒரு பிடிப்பே வரலை! என்ன சொல்லியும்... கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சாதிச்சுட்டான்!" வருத்தம் அருவியாய் பெருகி ஓடியது அவரது குரலில்.

"எல்லாத்தையும் கொடுத்தும்... அவனுக்கொரு குடும்பத்தை என்னால கொடுக்க முடியலை! ஒரு அம்மாவா தோத்துப் போயிட்டேன்!" என்றார் முழுதாய் தோற்றக் குரலில்.

விரல்கள் நடுங்க குந்தவையின் கையைப் பற்றிக் கொண்டவர், "நீயும் தோத்துடக் கூடாது, குந்தவைம்மா' நா... படுற வருத்தம் நீ படக் கூடாது!" என்றார் உணர்ச்சிகள் ததும்பி வழிய

குந்தவை திகைப்பில் சுழன்று கொண்டிருந்தாள்!

## அத்தியாயம் 20

குந்தவையின் திகைத்த முகத்தை, மனதில் நிம்மதி படரப் பார்த்துக் கொண்டிருந்தார் லலிதா.

அவள் மனதில் புதிதாய் முளை விட்டிருக்கும் கேள்விகள், அவளைச் சரியான பாதையில் சிந்திக்க வைக்கும் என ஆணித்தரமாய் நம்பியவரின் மனதில் ‘ஒரு அம்மாவாக... நான் ஜெயிக்கும் நாள், வெகு தொலைவிலில்லை’ என்ற நம்பிக்கை வேரூன்றியது.

“குந்தவை...” என மெல்ல அவள் தோள் தொட்டு, நடப்புக்கு இட்டு வந்தனர்,

அவள் திடுக்கிட்டு விழிக்கவும், “ரிலாக்ஸ்” என்றார் இதமாய்.

“பாலாஜி மாதிரியே தான் ஸ்ரீயும் இருப்பான்னு சொல்ல வரலை. அப்பா மாதிரியே பொண்ணு இருக்க வாய்ப்பிருக்குன்னு தான் சொல்றேன்” என்றார் அவளது திகைப்பை வடிய வைக்கும் நோக்கத்தில்.

“இப்படித் தான் நடக்கும்ன்னு உன்னைப் பயமுறுத்தி... அந்தப் பயத்தை அடிப்படையா வச்சு உங்களோட கல்யாணத்தை நடத்த நினைக்கலைம்மா. இப்படியும் நடக்கலாம்ன்னு தான் சொல்றேன்”

“சோ... ரொம்ப டென்ஷன் ஆகவேண்டாம்”

“நிதானமா... யோசிச்சுப் பாரு!”

“ஒரு மாசம் டைம் எடுத்துக்கோ... நல்லா யோசி... ஸ்ரீயைப் பத்தி மட்டுமில்லை... உன்னைப் பத்தியும் யோசி. ஸ்ரீக்காக மட்டும்ன்னு இல்லாம உனக்காகவும் இந்தக் கல்யாணத்துக்கு சரி சொன்னின்னா... எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும்.”

“சரியா? இப்பவே... எல்லாத்தையும் மனசுக்குள்ள போட்டு அலசி ஆராயாதே!”



“பொறுமையா... அமைதியா... நிதானமா... தெளிவா யோசிச்சு முடிவெடு!”

இதமாய்... பதமாய் தன் மாணவிக்கு அறிவுறுத்தியவர், “சரி வா... ஹாலுக்குப் போலாம்” என்றபடியே எழுந்தார்.

குந்தவையால், லலிதாவின் வார்த்தைகளை விட்டு வெளியே வர முடியவில்லை என்றாலும், ஆசிரியரின் சொல்லை மீற முடியாமல், அவருடன் எழுந்தாள்.

ஒரே நாளில் ஏற்பட்ட பற்பல அதிர்ச்சிகளால், சற்றே பாரமாய் இருந்தது மனம்.

கனத்திருந்த மனம், முகத்தைக் கலையிழக்கச் செய்ய, சோர்வே உருவாய் எழுந்தவளைத் தோளோடு சேர்த்தணைத்த லலிதா, “ஒண்ணுமில்லைடா... எல்லாமே நல்லதுக்குத் தான்னு நினைச்சுக்கோ” என்றபடி அவளை அறை வாயிலுக்கு வழிநடத்தினார்.

கதவைத் திறந்தவரின் முகத்தில், அழகிய சிரிப்பொன்று வேகமாய் வந்து ஒட்டிக் கொண்டது.

தன்னோடு வந்த குந்தவையை ஓரடி பின்னே நகர்த்தியவர்,“சத்தம் போடாம... என்ன நடக்குதுன்னு பாரு” என்றார் முணுமுணுப்பாய்.

தன் யோசனையிலேயே உழன்று கொண்டிருந்த குந்தவை, லலிதாவின் பேச்சில் நிகழ்காலத்திற்கு மீண்டு வந்தாள்.

பார்வை... வெளியே பாய்ந்தது.

சமையலறையில் அடுப்பு மேடையின் முன்னே பாலாஜி நின்றிருக்க, அவனருகே கையில் தட்டை ஏந்தியபடி ஸ்ரீதுளசி நின்றிருந்தாள்.

"பா... அங்க்கி... தா ஆஆஅ" என்று அவள் ராகம் பாட,

"இருடா குட்டி... இப்பத் தான் ஊத்தியிருக்கேன். வெந்ததும் எடுத்துத் தரேன்" என்றவனின் கரங்கள், கல்லில் ஊற்றியிருந்த தோசைக்கு எண்ணையை ஊற்றின.

"தாஆஅ... ஆஅ... ஆஆஆ..." மீண்டுமொரு அழகிய ராகம்.

"வேகட்டும்... வேகட்டும்..."

இரு கைகளிலும் பிடித்திருந்த தட்டை, வலக் கையில் மட்டும் பிடித்துக் கொண்டு, இடக்கையை இடுப்பில் வைத்து கொண்டு நின்றாள் பெண் 'பொறுமையைச் சோதிக்காதேடா, தகப்பா!" என்று சொல்லாமல் சொன்ன சின்னவளின் கன்னத்தை ஆசையாய் நிமிண்டி விட்ட பாலாஜி, தோசை மூடியை அகற்றிவிட்டு, தோசையைத் திருப்பிப் போட்டான்.

"பா... அன்க்க்கி.................. ஈஈஈஈ" இப்போது சத்தம் பெரிசாகியது.

"திருப்பிப் போட்டா தான்... உன்னோட அத்தைக்குப் பிடிக்கும். வெயிட் பண்ணு" என்று விளக்கம் கூறினான் தகப்பன்.

"அத்தை" என்றதும், கையில் தட்டுடன் வர வேற்பறைக்கு ஓடியவள், அங்கு அமர்ந்திருந்த மதுபாலா விடம் சென்று "ஒவ்வு நினிஷம் ... இய்யு... அத்தெ... ஒவ்வே நினிஷம்... ஓகே?" என்று சமாதானப்படுத்தி னாள்.



கண்களை அகல விரித்து... ஆட்காட்டி விரல் தவிர மற்ற விரல்களை மடக்கி... உதட்டைக் குவித்து அவள் கூறிய சமாதானத்தில் சொக்கித் தான் போனாள், அத்தைக்காரி.

"சரிடா... குட்டி! அத்தை வெயிட் பண்றேன்... நீ மெதுவா வாங்கிட்டு வா" என்று பிள்ளையின் கன்னம் தட்டி அவள் அனுப்பி வைக்க,

"பா... அங்க்கி... த்தோச்சை தாஆஆஆ" என்று அடுக்களைக்குள் ஓடிவந்தாள்.

"இதோ... தோசை! " என்றபடி, தோசையை கோன் போல் மடித்து, மகள் வைத்திருந்த தட்டில் வைத்தான் பாலாஜி.

"ஹைய்யா... த்தொப்பி இஇ த்சோச்சை" என்று துள்ளியவள், தட்டிலிருந்த தோசையுடன் வரவேற் பறைக்கு ஓடினாள்.

"அத்தே... த்தே... இய்யா த்தோச்சை" என்று ஆர்பரித்த பெண் பூவின் கன்னத்தை வருடிவிட்ட பின்னரே, தோசையைத் தன் தட்டில் எடுத்து வைத்துக் கொண்ட மதுபாலா, ஒரு வாய் தோசையைப் பிட்டு, தன் மருமகளுக்கு ஊட்டி விட்டாள்.

"கிக்கி... போத்தும்... நீ சாப்பு..." என்று அத்தை யின் கையை நகர்த்திவிட்டாள் ஸ்ரீதுளசி.

அதற்குள், "எனக்கு தோசை கிடையாதா? உங்க அத்தைக்கு மட்டும் தானா?" என்று சோகமே உருவாய் புருஷோத்தமன் கேட்க,

ஒரு வினாடிக்கும் குறைவாய் என்ன சொல்வ தென்று யோசித்த ஸ்ரீ துளசி, "இய்யு மாமா... இய்யு! பா...

அங்க்கி தவ்வா... த்சோச்சை தவ்வா... ஷீ வான்வி வவ்வேன்" என்று வார்த்தைகளால் சமாதானம் செய்த தோடு நில்லாமல், புருஷோத்தமனனின் தாடையைப் பற்றி செல்லம் கொஞ்சவும், அவளது மழலையிலும்... பாசத்திலும் கரைந்து போன மாமன், அவளது கன்னத் தில் அழுத்த முத்தமிட்டான்! ஆசையாய்!

"விவ்வு... ஷீ த்தோச்சை வான்வி வாவ்வ்வேன்" என்று அவனது பிடியிலிருந்து விடுபட்டு, சமைய லறைக்குள் ஓடினாள்.

"பா... அங்க்கி... மாமாக்கு த்தோச்சை தா..." என்றாள் அவனிடம் ஏவலாய்.

"இதோ... ரெடி!" என்றபடி வந்திருந்த தோசையை எடுத்து, ஸ்ரீ பிடித்திருந்த தட்டில் வைத்தான்.

"திப்பி போவல?" என்று கேள்வி கேட்டது கன்று.

"உங்க மாமாக்குத் திருப்பிப் போடவேண்டாம். அவனுக்கு இளந்தோசை தான் பிடிக்கும்" மகளின் மூக்கைப் பிடித்து ஆட்டிய தந்தை, "கொண்டு போய் கொடுங்க மேடம்" என்றான் செல்லமாய்.

"த்தொப்பி செய்யி... பா... அங்க்கி த்தொப்பி ச்சய்யி" என ஏவினாள் மகள்.

"அத்தைக்குத் தான் தொப்பி தோசை! மாமாவுக்கு ... பேப்பர் தோசை தான்!" என்றான் தந்தையோ மீண்டும்.

"ம்ம்ம்... த்த்தொப்பி ச்சய்யி..." மீண்டும் "தொப்பியிலேயே" நின்றாள் ஸ்ரீதுளசி.

"குட்டி... மாமாக்குத் தொப்பி தோசை வேணாம்டா இதையே எடுத்திட்டு வா" என்று புருஷோத்தமன்



உணவு மேசையில் இருந்து குரல் கொடுக்க, "குக்கவா?" என்று பாலாஜியிடம் அனுமதி கேட்டு, அவன் தலை யாட்டவும், அங்கிருந்து வேகமாய் ஓடினாள் ஸ்ரீ.

"மாமா... இய்யா... பேப்பே த்த்தோச்சை" என்றபடி தட்டை அவள் நீட்ட, புருஷோத்தமன் எடுத்து வைத்துக் கொண்டான்.

"அத்தைக்கு..." என்று மதுபாலா சோகமாய் இழுக்க,

"இய்யி..." என்று கோபமாய் கையமர்த்திக் கூறிய ஸ்ரீ, "ஒவ்வு மாமாக்கு... ஒவ்வு... ஒக்கு.. எத்து வவ்வேன்" என்று கூறிவிட்டு, சமையலறை நோக்கிப் பறந்தாள்.

அடுத்த இரண்டாவது நிமிடம், உணவு மேசைக்கே ஓடி வந்தவள், "அத்தே.... இய்யி... ஒவ்வு நினிஷன் இய்யி... த்தோச்சை வான்வி வவ்வேன்" என்று தலையை ஆட்டி... ஆட்டி... சமாதானம் சொல்லிவிட்டு, மீண்டும் பாலாஜியிடம் வந்தாள்.

"பா... அங்க்கி... த்தொச்சை தா" என்று ஓடி வந்தவளை வாரியணைத்துத் தூக்கிய பாலாஜி, "போதும்டா... கால் வலிக்கும்" என்றான் அவள் கால் களை மென்மையாய் பிடித்துவிட்டபடி.

"அடடா... ரெண்டு தோசை கொண்டு வரதுக் குள்ள, கால் வலிச்சிடுச்சாடா?" என்று மதுபாலா நக்கலாய் குரலெழுப்ப,

"ரெண்டு தோசைக்கு... ரெண்டாயிரம் வாட்டி நடக்க வச்சா... வலிக்கத் தான் செய்யும்!" என்று திருப்பிக் கொடுத்தவன்,

"இனிமேல் தோசை வேணும்ன்னா... நீ வந்து வாங்கிக்கோ! ஸ்ரீ குட்டி வரமாட்டா!" என்று அறிவித் தான்! கோபமாய்!

"பா... அங்க்கி... ஷீ போவே" என்று பிள்ளை மறுக்க,

"வேணாம்டா... உனக்குக் கால் வலிக்கும்" என்றான் அவளது தந்தை, அவள் கன்னத்தோடு கன்னம் வைத்து உரசியபடி.

தன்னை ஏந்தியிருந்த பாலாஜியின் கழுத்தைச் சுற்றியிருந்த ஸ்ரீயின் கரங்கள், அழகிய மலர் மாலையாய் குந்தவையின் மனதைச் சுற்றியது.

உள்ளிருந்த குழப்பங்கள்... மனதை அழுத்திய பாரங்கள்... உடலைக் குறுக்கிய சோர்வு... எல்லாம் மாயமாய் மறைய, மென்புன்னகை ஒன்று குந்தவையின் முகத்தில் குடி கொண்டது! அவள் முகத்திலிருந்த புன்னகை, லலிதாவின் மனதிலிருந்த நிம்மதியைப் பன்மடங்காக்க, "என்னடா... என் பேத்தியை வேலை வாங்கிட்டு இருக்கீங்க போல?" என்றபடி அறையை விட்டு வெளியே வந்தார் லலிதா.

"வாங்க நாட்டாமை!" கேலி கலந்து வரவேற்ற பாலாஜி,

"குட்டையைக் குழப்பியிருப்பீங்கன்னு பார்த்தா... தெளிஞ்சிருக்கே!" என்றான் குந்தவையைக் கண்ணால் காட்டி.

"சும்மா... இருடா! இவன் ஒருத்தன்!" என்று மகனின் தோளில் தட்டியவர்.

"வெட்டிப் பேச்சு பேசுறதை விட்டுட்டு... தோசையை எடு!" என்றார் அதிகாரமாய்.

"ஹய்யையோ... ஆமா..." என வேகமாய் திரும்பியவன், தோசை மூடியை விலக்கிய நிமிடமில்லாமல்,



"ஆஹா! ஹே குரங்கு... தொப்பி தோசைக்குப் பதிலா... காப்பி தோசை ஆகிடுச்சுடி! சாப்பிட்டுடுறியா?" என்றான் சிரிப்பை உள்ளுக்குள் அடக்கியபடி.

"பாவி... கருக்கிட்டியா?" என்று மதுபாலா அலற,

புரிந்தோ... புரியாமலோ... வாயைக் கையால் மூடிக் கொண்டு, சந்தோஷமாய் சிரித்தாள் ஸ்ரீ.

மகள் சிரிக்கவும், அடக்கி வைத்திருந்த சிரிப்பிற்கு விடை கொடுத்து வெளியேற்றிய பாலாஜி, "ஹஹ்ஹா... அத்தையோட தோசை... காப்பி தோசை ஆகிடுச்சுடா" என்றான்.

பெண்ணோ"காப்ப்பி த்தோச்ச இய்ய... டிக் காஷும் த்தோச்ச!" என்றாள் அடக்க முடியா சிரிப்புடன்.

வீடே சிரிப்பால் நிரம்பியது! அந்த சந்தோஷத்தின் ஊடே, ஸ்ரீயைக் குந்தவைத் தூக்கிக் கொள்ள, "அம்மா... அம்மா... ஷீ த்தோச்சை கொவ்வே கொத்தேன்" என்று தாயிடம் தன் செயலை ஆசையாய் விளக்கினாள்.

"சூப்பர்டா! என் செல்லக்குட்டிக்கு எல்லா வேலையும் தெரியும்!" என்று உச்சி முகர்ந்த தாய்க்கு அப்படியொரு பூரிப்பு!

அவர்களது சங்கமத்தைப் புன்னகையுடன் பார்த்திருந்த பாலாஜி, "சாரி... உங்களோட பர்மிஷன் இல்லாம கிட்ச்செனை யூஸ் பண்ணிட்டேன்!" எனத் தொடங்கினான்.

குந்தவை நிமிரவும்,

"பாலா... பசியில புருஷோத்தைக் கடிச்சுத் தின்னுட்டு இருந்தாளா! அதான்... தோசையை ஊத்திக் கொடுத்துட்டேன்! தப்பா எடுத்துக்க வேண்டாம்!" என்றான் மீண்டும், விளக்கமாய்.

"பரவாயில்ல" அவனை நேராய் பார்த்துச் சிரித்த குந்தவை, "நீங்களும் மிஸ்ஸும் சாப்பிடுங்க. நா... தோசை ஊத்துறேன்" என்றாள், உபச்சாரமாய்.

"இட்ஸ் ஓகே! மாவு... கொஞ்சம் தான் இருக்குப் போல! நானும்... லலியும் வீட்டில போய் சாப்பிட்டுக் கிறோம்" என மறுத்தான், பாலாஜி.

"இல்ல... கோதுமை மாவுல கொஞ்சம்..." என்று தொடங்கிய குந்தவையின் குரலுடன் சேர்ந்து,

"நீ வேணும்ன்னா வீட்டில சாப்பிடுடா... நா இங்க தான் சாப்பிடுவேன். குந்தவை... நீ தோசை ஊத்து!" என்ற லலிதாவின் குரல் ஓங்கி ஒலித்தது.

"இதோ மிஸ்! ரெண்டே நிமிஷம்!" என அடுப்பின் பக்கம் குந்தவை திரும்ப,

"ஹப்பா... இவனோட பத்தியச் சமையல்ல இருந்து தப்பிச்சுட்டேன்!" என்று சத்தமாய் முணுமுணுத்தபடியே உணவு மேசைக்குச் சென்றார் லலிதா.

"இன்னைக்கு ஒரு நாள் தான்! நாளையிலிருந்து இந்த பாலாஜியோட நளபாகம் தான்! தெரிஞ்சுக்கோ!"

"நீ செய்றதுக்குப் பேரு நளபாகமாக்கும்? பாவம்... நளன்!" என்று நளனின் நலனை எண்ணிக் கலங்கியது, அந்தத் தாய் மனம்!

குந்தவையின் முகத்திலிருந்த புன்னகை, சிரிப் பானது!

"உங்க பஞ்சாயத்தில... என்னை ஒரு தோசை யோட விட்டுறாதீங்க!" என்று நடுவே அலறி, தான் இருப்பதை ஊர்ஜிதப் படுத்திக் கொண்டாள் மதுபாலா.



"நீ பண்ணின வேலைக்கு... இந்த டிக்காஷத் தோசையைச் சாப்பிடு! போதும்!" என்றபடி, கருகிய தோசையை எடுத்து வந்து தோழியின் தட்டில் வைத் தாள் குந்தவை.

"ஹான்ன்ன்ன்ன்ன்" என்று மதுபாலாவின் அழுகை, மீண்டுமொரு சிரிப்பலையை இட்டு வந்தது.

இருந்த தோசை மாவுடன், இரண்டு கப் கோதுமை மாவைக் கலந்து கரைத்த குந்தவையின் கண்கள், அடுப்பு மேடையை வேகமாய் வலம் வந்தது.

போலீஸ் கம்ப்ளைன்ட் செய்யும் மும்முரத்தில், குந்தவை முழு சமையலை முடித்திருக்கவில்லை. குக்கரில், புடலங்காயையும் பாசிப்பருப்பையும் கூட்டிற் கென வேக வைத்துவிட்டு, வெண்டைக்காயைப் பொரியலுக்காக நறுக்கி வைத்திருந்தாள். வேறேதும் செய்யவில்லை.

இப்போதோ, மேடையின் ஓரத்தில்... புடலங்காய் கூட்டு தாளித்து வைக்கப்பட்டிருந்தது. மறு கிண்ணத்தி லிருந்த வெண்டைக்காய் மசாலா சிரித்தது. மற்றொரு பாத்திரத்தில், கொஞ்சம் ரசம்.

சின்க்கில், தக்காளி சட்னி அரைத்த மிக்சி கழுவக் கிடந்தது.

மனதினோரம் ஏதோ உந்த, மாட்டியிருந்த கரண்டி ஒன்றை எடுத்து, கொஞ்சமாய் வெண்டக்காயை எடுத்து வாயில் போட்டாள் குந்தவை.

இரண்டு துண்டு வெண்டக்காய்களை, இரண்டு நிமிடங்களுக்கு மேலாக வாயில் வைத்து, அவற்றின் சுவையை ரசித்தாள்!

இடக்கன்னம், சிரிப்பில் உப்பியது!

அடுத்ததாய், ரசம்! அரைக்கரண்டி ரசத்தை எடுத்து வாயில் ஊற்றியவள், "ப்ச்ச்சப்" என்று ரசித்துக் குடித்தாள்.

புதிதாய் நாக்கில் படர்ந்த ரசத்தின் சுவை, மனதிலோர் புது உணர்வை விட்டுச் சென்றது!

பின்னே இருந்து, "நல்லா இருக்கா?" என்ற குரல் கேட்கவும், சற்றே திடுக்கிட்டுத் திரும்பியவள்.

"ம்ம். ரொம்ப நல்லா இருக்கு! ஆனா... உங்களுக்கேன் சிரமம்?" என்றாள்.

"இதில எதுவுமே சிரமம் இல்ல. கூட்டுக்கு அவிய வச்சு வச்சிருந்தீங்க... பொரியல் காய் கட்பண்ணியே இருந்துச்சு. நா... ஜஸ்ட் வச்சுத் தான் இறக்கினேன்" என்று தன் செயலைக் குறைத்தே கூறியவன்.

"மத்தியானத்துக்கு சாதம் மட்டும் வச்சுக்கோங்க. எனக்கு அளவு தெரியல" என்றவன், "லலிக்குத் தோசை ஊத்தும் போது... ரொம்ப எண்ணெய் வேணாம். நான்-ஸ்டிக் தோசைக்கல் இருந்தா... அதில ஊத்துங்க. ப்ளீஸ்!" என்றான் வேண்டுதலாய்.

"சரி..." என்ற குந்தவையின் கரங்கள், கீழே இருந்த கப்போர்டிலிருந்து நான் - ஸ்டிக் தோசைக் கல்லை எடுத்தன.

காலை உணவு முடியக் காத்திருந்தார் போல், குந்தவையின் வேலையைக் கைகாட்டி, அனைவரும் கிளம்பினர்.

கிளம்புவதற்கு இரண்டு நிமிடங்கள் முன்னர் குந்தவையிடம் வந்த பாலாஜி, "நீங்க முடிவெடுக்கிற



வரைக்கும்... உங்களையோ... ஸ்ரீயையோ டிஸ்டர்ப் பண்ணாம இருக்க ட்ரை பண்றேன். ஒருவேளை... உங்க முடிவு வேறயா இருந்தா, தேவையில்லாம அவ மனசைக் கலைக்கக் கூடாது இல்லையா?" என்றான்.

தன் பேச்சைத் தானே ஒத்துக் கொள்ள முடியாதவனாய், தலையை மறுப்பாய் அசைத்தவன், "ஏற்கனவே ரொம்பக் கலைச்சுட்டோம்! சாரி! எனக்கு வேற வழி தெரியலை! ஆனா... இனிமே... கொஞ்சம் கன்ட்ரோலோட இருக்கேன்!" என உறுதி கொடுத்தான்.

அவன் பேசுவதை இடையிடாமல் கேட்டிருந்த குந்தவை, "சரி" என்றாள் முடிவாய்.

"நல்ல முடிவா எடுக்கணும்... என்னடா?" என்று லலிதாவும்,

"அண்ணா நல்லவன், கவி! பாசிட்டிவாவே யோசி!" என்று மதுபாலாவும்,

"என் ஃபிரண்டுங்கிறதுக்காக சொல்லலைம்மா. ஓரோருத்தரோட பிடித்தமும் தெரிஞ்சு... ரொம்ப சப்போர்ட்டிவா நடந்துப்பான். ஆனா... நாங்க சொல்றோம்ங்கிறதுக்காக, நீ முடிவெடுக்கத் தேவையில்லை. உன் மனசுக்கு எது சரின்னு படுதோ... அதை நாங்க அக்சப்ட் பண்ணிக்கிறோம். பாலாவும் ஒத்துப்பான்!" என்று புருஷோத்தமனும் விடைபெற,

குந்தவையிடம் ஒரு தலையசைப்புடனும், ஸ்ரீயிடம் ஒரு முத்தத்துடனும் விடை பெற்றான் பாலாஜி.

அனைவரும் சென்றதும், வாடி நின்ற மகளைப் பார்க்கையில் கஷ்டமாய் இருந்தது குந்தவைக்கு!

மீண்டும் யோசனைக்குள் சிக்கியது மனம்!

ஸ்ரீயின் பிறப்பு ரகசியம்!

அருந்ததி கொடுத்த லீகல் பத்திரங்கள்!

புருஷோத்தமன் மற்றும் மதுபாலாவின் முயற்சிகள்!

பாலாஜியின் பிரம்மச்சரியம்!

லலிதா - பாலாஜி உறவு!

லலிதாவின் பேச்சு!

"ஒரு அம்மாவா தோத்துட்டேன்!" என்ற அவரது வருத்தம்!

பாலாஜியின் புரிதல்!

முக்கியமாய், பாலாஜியை உரித்து வைத்திருந்த ஸ்ரீ!

குந்தவையின் மனம் சிந்தனைக் குளத்தில் தத்தளித்தது!

## அத்தியாயம் - 21

நாட்கள் வேகமாய் ஓடுவது போலிருந்தது குந்தவைக்கு!

அவர்கள் அனைவரும் வந்து போய், இன்றோடு பன்னிரெண்டு நாட்கள் ஓடி விட்டிருந்தன.

சொன்ன சொல்லைக் காப்பாற்றும் விதமாய், பாலாஜி ஸ்ரீயையோ... குந்தவையையோ பார்க்க முற்பட வில்லை.

அதற்காக, அவன் கிளினிக்கிற்கே வராமல் இருக்க வில்லை.



கிளினிக்கிற்கு வந்தான். தன் வேலையைப் பார்த் தான். கிளம்பிச் சென்றான்.

தானுண்டு தன் வேலையுண்டு என்றிருந்தவனை எந்த விதத்திலும் குறை சொல்ல முடியவில்லை குந்தவை யால்.

லலிதா இரண்டு முறை அலைப்பேசியில் பேசி னார். ஸ்ரீயைப் பற்றிய விசாரிப்புக்கள்... குந்தவையின் நலம்... அவரது உடல்நிலை ஆகியவற்றில் சுழன்ற பேச்சை, பாலாஜியின் புறம் திருப்ப முற்படாத அவரது அணுகுமுறை, குந்தவையைக் கவரவே செய்தது.

மதுபாலாவும் புருஷோத்தமனும் மீண்டுமொரு முறை வீட்டிற்கு வந்து சென்றனர். அவர்களுமே, பாலாஜியின் புகழையோ... அவனைத் திருமணம் செய்து கொள்வதால் குந்தவைக்கு உண்டாகப் போகும் நன்மைகளையோ... ஸ்ரீக்குக் கிடைக்கப் போகும் பாசத் தையோ பற்றி பக்கம் பக்கமாய் பேசாமல், "உன் முடிவுக்கு நாங்கள் ஆட்படுகிறோம்" என்று தன்மை யாய் ஒதுங்கிக் கொண்டது, குந்தவையை நல்ல விதமாகவே யோசிக்க வைத்தது.

மதுபாலா ஆஷாவிடம் என்ன சொன்னாளோ, ஆஷாவும் ஜோஸும் அவள் கொடுக்கவிருந்த 'போலீஸ் கம்ப்ளைன்ட்' பற்றியோ... பாலாஜி பற்றியோ எதுவுமே கேட்கவில்லை. குந்தவையும் விளக்க முற் படவில்லை.

மற்றவர்களின் உந்துதல் இல்லாமல், வெளியே இருந்து கிளம்பும் ப்ரெஷர் இல்லாமல், குந்தவையால் நிதானமாய் யோசிக்க முடிந்தது.

தனியொரு மனுஷியாய், உழைத்துச் சம்பாதித்து, அவளால் ஸ்ரீயை ஆளாக்க முடியும்!

அதற்கான, தெம்பும்... திறமையும்... நம்பிக்கையும் அவளிடம் நிறையவே இருக்கின்றன!

அவளுக்கு ஸ்ரீ! ஸ்ரீக்கு அவள்! என்று இருவர் மட்டுமே குடும்பமாய் வாழவும் முடியும்!

ஸ்ரீயை விடுத்துப் பார்த்தால், அவளுக்குமே இந்தத் தனி வாழ்க்கை உசிதமாகவே பட்டது!

ஆனாலும்!

பாலாஜி?

சிறு ரோஜா மலராய், நெஞ்சத்தின் ஓரம் உரசிக் கொண்டே நின்றன, அவனது நினைவுகள்!

நெருஞ்சி முள்ளாய் உறுத்தாமல், இதமாய் உரசிய அப்பூவின் ஸ்பரிசம், வேறுவிதமாய் செல்லும் சிந்தனைகளைக் கூடக் கட்டி இழுத்துக் கூட்டி வந்தது.

பாஸ்கரனின் துரோகம்! அவனது அலட்சிய வார்த்தைகள்! அவள் பட்ட அவமானம்! வலி! வேதனை! என்று எவ்வளவோ விஷயங்களை முன்னிறுத்தி, மனம் பாலாஜியை நிராகரித்த போதும், நெஞ்சினோரம் இருந்த சிறு ரோஜா பூ, ஒவ்வொரு முறையும் நிராகரிப்பை ஊதித் தள்ளியது!

அதற்காக, பாலாஜியைத் திருமணம் செய்து கொள்ள சம்மதம் என்று உடைத்துச் சொல்லவும் மனம் வரவில்லை.

மீண்டுமொரு மணவாழ்க்கையைத் தன்னால் ஏற்று நடத்த முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு வர மறுத்தது.



'வேண்டாம்' என்று ஒதுக்கவும் முடியாமல், 'வேண்டும்' என்று எடுத்துக் கொள்ளவும் முடியாமல், பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை யோசனைக் குதிரை அங்குமிங்கும் ஓடிக்கொண்டே இருந்தது.

'தீர்வென்று ஒன்றுக்கு வா குந்தவை!' என்று மூளை சொன்னாலும், இதுவா... அதுவா என்று நிலை கொள்ளாமல் தவித்தது மனம்!

இதற்கு நடுவே, தோசை ஊற்றும் போதெல்லாம், "ஷீ... அத்தேக்கும்... மாமாக்குத் தொச்சை கொத்தாவே! பா... அங்க்கி... தந்தாவா... ஷீ கொத்தா..." என்று ஆசையும் ஏக்கமும் கலந்து ஸ்ரீதுளசி கண்ணை விரிக்கும் போது, நெஞ்சினோரம் ஒரு குற்றவுணர்வு அவளையும் அறியாமல் வந்து ஒட்டிக் கொள்ளும்!

உறவுகளுக்காக அழுதாள்... அவர்களைப் பார்க்க வேண்டும் என்று அடம் செய்தாள்... பாலாஜியைப் பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் செய்தாள் என்று எந்தவிதத்திலும் ஸ்ரீ, குந்தவையைப் பாதிக்கவில்லை. அவர்கள் கிளம்பிச்சென்று, சற்று நேரத்திற்கெல்லாம் சோர்வு மாறி, உற்சாகமாய் மாறிவிட்டாள் தான்!

ஆனாலும், குந்தவைக்கே ஒரு விதமான குற்ற உணர்வு!

இதுநாள் வரையிலும் சாதாரணமாய் தெரிந்த பல விஷயங்கள், உள் மன உறுத்தலுக்குக் காரணமாகின.

டே கேரில், ஒரு பாட்டி... தன் பேரனுக்கு உணவூட்டினால், அதைப் பார்த்து, ஸ்ரீ லலிதாவுக்காக ஏங்குவாளோ என்றெண்ணியே குந்தவை சோர்ந்து போனாள்.

டூ வீலரில், தந்தையும் மகளுமாய் செல்வதைக் காண்கையில், 'நம்மால் இப்படிப் போக முடியாதே!' என்று ஸ்ரீ நினைப்பாளோ என்ற நினைப்பே குந்தவையைத் தூங்க விடாமல் செய்தது.

கடையில் காய் வாங்கும் போது, கையில் ஏந்திய பிள்ளையுடன் ஆண்கள் நிற்கும் போது, தன் மகளுக்கும்... பாலாஜிக்குமான பிணைப்பை எண்ணி, உள்ளே தவித்துப் போனாள் குந்தவை!

கோவிலுக்குச் செல்கையில், "ஆகாஷ்... வாட்டர் பாட்டில் அத்தைட்ட இருக்கு. வாங்கிக்கோ!" என்று யாரோ குரல் கொடுத்தால், ஸ்ரீ மதுபாலாவை "அத்தே" என்றழைப்பது நெஞ்சில் ஊஞ்சலாடியது!

ஜோஸின் வீட்டிற்கு வந்திருந்த, அவனது அக்காள் பிள்ளைகள், அவனை "மாமா" என்றழைக்கும் போதெல்லாம், "சக்... சக்..." என்று சிறு ஊசி ஒன்று அவளைக் குத்தியது.

பாலாஜியைத் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றாலும், மது 'அத்தையாகவும்' புருஷோத் 'மாமாவாகவும்' இருக்கத்தான் செய்வார்கள்! ஆனாலும், திருமணம் ஆகாத பட்சத்தில், ஸ்ரீயை அழைத்துக் கொண்டு, குந்தவை தனியாளாக சொந்த ஊர் செல்வதென்பது நடக்காத காரியம் அல்லவா?

எல்லாவற்றுக்கும் மேலாய், 'ஒரு அம்மாவா நான் தோத்துட்டேன்' என்ற லலிதாவின் வார்த்தைகள், ரோஜாவில் இருக்கும் முள்ளாய், அவளைத் துளைத்து எடுத்தன.

"அவனுக்கு... எல்லாத்தையும் கொடுத்தேன்! ஒரு குடும்பத்தைத் தவிர!" என்ற அவரது வலி நிரம்பிய வார்த்தைகள், அவளையுமே வலிக்கு ஆளாக்கின.



"என் மகளும் தனியாய் நின்று விடுவாளோ?"

"தந்தையைப் போல... தாயைப் போல... ஒற்றை மரமாகவே வாழ்க்கையைக் கழித்து விடுவாளோ?"

திருமணமே வேண்டாம் என்று விடுவாளோ? என்ற பயம், ஒரு தாயாய் அவளைக் குடைந்து எடுத்தது!

பற்பல எண்ணங்களில் சிக்கித் தவித்த குந்தவை, வார நாட்கள் ஒன்றிலேயே ராகிகுடா சென்று வர முடிவு செய்தாள்.

"அம்மு... ராகிகுடா போலாமாடா?" என மகளை அவள் கேட்க,

"போவாமே... பத்தி... யேறி போவாம்" என்று உற்சாகமாய்த் தயாரானாள் மகள்.

இருவருமாய், கோவிலுக்குக் கிளம்பிச் சென்றனர்.

என்ன தடுத்தும் முடியாமல், கோவில் வாசலை அடையும் போது, குந்தவையின் கண்கள் நாலாபக்கமும் சுழன்றன.

'அன்று வந்தானே!' என்ற எண்ணம் உள்ளுக்குள் தவிப்பைக் கிளப்ப, இன்றும் அவனைத் தேடின கண்கள்.

சற்றுத் தொலைவில், கடைகளுக்கு இடையே, கொஞ்சம் மறைவாய் நின்றிருந்தான் அவன்!

சாதாரணமாய் என்றால், குந்தவையால் அடையாளம் கண்டிருக்க முடியாது! ஆனால், 'அவனுக்காகவே' சுழன்ற பார்வையில், 'அவனும்' சிக்கிக் கொண்டான்!

அவள் பார்த்துவிட்டாள் என்று தெரிந்த போதும், பாலாஜி தன் மறைவிடத்தை விட்டு வெளியே வர முற்படவில்லை.

இயந்திரத்துவமாய், பையை எடுத்து... செருப்பைக் கழட்டி அதில் போட்டவள், படியில் அமர்ந்திருந்த மகளின் ஷூவைக் கழட்ட, மெதுவாய் மண்டியிட்டு அமர்ந்தாள்.

வலது கால் ஷூவைக் கழட்டிவிட்டு, இடது காலின் பக்கம் கைகள் செல்கையில், ஏதோ எண்ணியவளாய், மீண்டும் வலது கால் ஷூவை மகளுக்கு மாட்டிவிட்டாள்.

"ம்மா... ஷூ கவத்து... போணும்..." என்று சொல்லி அம்மாவின் கைகளைத் தள்ளிவிட முயன்றாள் சின்னவள்.

அதற்கு பதில் சொல்லாமல், "அம்மு... அங்க பார்த்தியா... அந்த ஜூஸ் கடை தெரியுதே... அங்க பா அங்க்கி நிக்கறாங்க... கோவிலுக்குப் போலாம்... வாங்க அங்கிள்ன்னு சொல்லிக் கூட்டிட்டு வரியா?" என்றாள், பாலாஜி நின்ற திசையைக் காட்டி.

"பா... அங்க்கி..." என்று கண்களும் முகமும் வெண்ணிலாவாய் ஜொலிக்க, ஆர்ப்பரித்த மகளிடம் "ஆமாடா... உன்னோட பா அங்க்கி தான். கூட்டிட்டு வரியா?" என மீண்டும் கேட்டாள்.

"ஹான்... போத்தா... ஷீ போத்தா..." என்று அமர்ந்திருந்த படியை விட்டுத் துள்ளிக் குதித்துக் கொண்டு எழுந்தாள் சின்னவள்.

தாய் கைகாட்டிய திசையில் அவள் ஓட, "பார்த்து... பார்த்து..." என்று பின்னிருந்து குரல் கொடுத்த தாய் ஒரு பக்கமும், "குட்டிம்மா... பார்த்துடா..." என்று மறைவிடத்திலிருந்து ஓடி வந்த தந்தை ஒரு பக்கமும், அந்தச் செல்வ மகளைக் காக்க ஓடி வந்தனர்.



பிள்ளையை அள்ளிக் கொண்டான் பாலாஜி.

"உங்களைக் கூட்டிட்டு வான்னு சொன்னேன். இப்படி... ஓடுவான்னு எதிர்பார்க்கலை" என்றாள் குந்தவை மூச்சிரைக்க.

கூர் பார்வை ஒன்றை, அரை நிமிடத்திற்கும் மேலாய் அவள் புறம் செலுத்திய பாலாஜியின் கரங்கள், ஸ்ரீயை ஆதரவாய் அணைத்திருந்தன.

தாய்-தந்தையின் மனநிலையை உணராத கன்றோ, "பா... அங்க்கி! பா... அங்க்கி!" என்று குதூகலித்தது!

"குட்டிம்மா..." என்று தானும் குதூகலித்து, பிள்ளையின் நெற்றியில் செல்லமாய் முட்டி நிமிர்ந்த பாலாஜி,

"கொஞ்சம் பேசலாமா?" என்றான் குந்தவையிடம்.

"ம்ம். பேசலாம். எனக்கும்... உங்ககிட்ட பேசணும்" என்றாள் அவளும், தீர்மானம் புகுந்த குரலில்.

"சாமி கும்பிட்ட அப்புறம் பேசலாமா?" என அவன் கேட்க,

"பேசின அப்புறம், சாமி கும்பிடலாமே?" என்றவளின் குரலில் ஒரு கணக்கு இருந்தது.

"ஓகே... எங்க போலாம்?"

"கோவிலுக்குள்ளேயே போலாம். சாமி தரிசனம் பண்ற கியூல போகாம... அடுத்த கேட்வழியா போனா, கோவில் premises ல உக்காந்து பேசலாம்" என்றாள் குந்தவை.

"ம்ம் சரி..." என்றவன், நடக்கத் தொடங்கவும்,

"செருப்பு?" என்று கொக்கிப் போட்டு நிறுத்தினாள் குந்தவை.

"ஹோ... யா..." என்றபடியே, கொக்கியில் மாட்டியிருந்த மற்றோரு பையை எடுக்க அவன் கை நீட்டவும், "இல்ல... இதிலேயே போடுங்க" என்று தான் எடுத்து வைத்திருந்த பையை விரித்துக் காட்டினாள் குந்தவை.

மீண்டும் பாலாஜியின் அர்த்தமுள்ள பார்வையொன்று, குந்தவையைத் தாக்கிச் சென்றது! குந்தவை செருப்பைக் கொடுத்துவிட்டு வந்ததும், மூவருமாய் கோவில் வளாகத்திற்குள் நுழைந்தனர்.

"அந்தப் பக்கமிருக்க பெஞ்ச்சில உக்கார்ந்துக்கலாமா?" எனக் கேட்ட குந்தவைக்குப் பதிலாய், பாலாஜி தலையசைக்கவும், அங்கிருந்த கல் பெஞ்சு ஒன்றில் அமர்ந்தனர் மூவரும்.

ஸ்ரீயை நடுவே அமர வைத்து, இடப்பக்கம் பாலாஜியும், வலப்பக்கம் குந்தவையும் அமர, அங்கே சிறிது நேரம் அமைதி நிலவியது.

அந்த நேரம், அங்கே ஒரு நாய் வர, "பா... அங்க்கி ... போவ்... போவ்" என்று பயந்து கத்திய ஸ்ரீ, வேகமாய் ஏறி அவன் மடியில் அமர்ந்து கொண்டாள்.

"போவ்... போவ் ஒண்ணும் செய்யாதுடா..." என்ற தந்தையும் அவளை மடியில் இறுக்கிக் கொண்டான்.

தாயோ "போவ்... போவ்க்கு இங்கிலீஷ்ல என்னடா?" எனக் கேட்டு, "டாக்கு..." என்று பெண்ணைச் சொல்ல வைத்து, சந்தோஷப்பட்டாள்.

கூடவே, "தமிழ்ல?" என அடுத்தக் கேள்வியைக் கேட்டு, அவள் "நய்..." என்று சொல்லவும், "செல்லக் குட்டி..." என்று பிள்ளையின் கன்னத்தைத் தொட்டு



அவள் முத்தம் கொடுக்க, பாலாஜியின் பார்வை குந்தவையின் மீது அழுத்தமாய் படிந்து மீண்டது.

தான் வாங்கி வந்திருந்த கலரிங் புக் ஒன்றைக் கொடுத்து, ஸ்ரீயைத் தன்னருகே அமரச் செய்தவன், "குட்டிம்மா... கலர் பண்றீங்களா?" என்று சில க்ரயான்களையும் அவளிடம் கொடுத்தான்.

ஸ்ரீ, அதில் மும்முரமாகும் வரை, அங்கே நிலவிய அமைதியைக் கலைக்கும் வண்ணம், தொண்டையைச் செருமிக் கொண்டு "கவி... "என்று கரகரத்தான் பாலாஜி.

சட்டென விழியுயர்த்தி, குந்தவை பார்க்கவும், "கவின்னு கூப்பிடலாம் தானே?" என்றான் அவன்.

குந்தவையின் தலை ஆமோதிப்பாய் ஆடியது.

"தேங்க்ஸ்..." அவன் குரலில் என்ன இருந்தது? வெறுமனே நன்றியோடு நில்லாமல், கூடுதலாய் ஒரு உணர்வு அதில் தொக்கி நின்றது என்பதைக் குந்தவையால் உணர முடிந்தது.

ஏனோ பாஸ்கரன் அழைக்கும் "கவி" யை இந்த அழைப்புடன் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு, தலையைக் குலுக்கிக் கொள்ளவும்,

"கவி... நாம ரெண்டு பெரும் டீன்- ஏஜ் பசங்க கிடையாது" என்று தொடங்கினான் பாலாஜி.

ஆமோதிப்பாய் தலையாட்டினாள் குந்தவையும்.

"உங்களோட..." எனத் தொடங்கியவன், சற்றே தொண்டையைச் சரி செய்து கொண்டு, "உன்னோட previous marriage...உன்னை எவ்வளவு தூரம் பாதிச்சிருக்கும்ன்னு என்னால உணர முடியுது!"எனத் தொடங்கினான்.

"ஹ்ம்ம்... எஸ். ஸ்ரீயோட birth secret ... லலிதா மிஸ்ஸோட பேச்சு...உங்களோட அப்ரோச்... எல்லாத்தை யும் யோசிக்கும் போது, நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிறதில தப்பில்லைன்னு தோணுற அடுத்த நிமிஷம்... பாஸ்கரன் எனக்கு செஞ்ச நம்பிக்கைத் துரோகம் நெஞ்சை அரிச்சிடுது!"

"நானும் பாஸ்கரன் மாதிரி உன்னை ஏமாத்திடு வேன்னு நினைக்கிறியா?" சாதாரணமாய் கேட்டான் அவன்.

"ஹ்ம்ம். இந்தக் கேள்விக்கு... முழு மனசோட இல்லைன்னு சொல்ல முடியலை"

"புரியுது! உனக்கு... முழு நம்பிக்கை வரது கஷ்டம் தான்!" என்று ஒத்துக் கொண்டவன், "உனக்கு நம்பிக்கை வரணும்ன்னா... நான் என்ன செய்யணும்?" என்றான் கேள்வியாக.

"தெரியலை! உங்களோட வேலை... லலிதா மிஸ்... அருந்ததி மேடம் கொடுத்த அக்ரீமெண்ட் பேப்பர்ஸ்... நீங்க ஒதுங்கி நின்ன முறை எல்லாத்தையும் வச்சுப் பாக்கும் போது, நீங்க பாஸ்கரன் மாதிரியான அளில்லைன்னு மனசு சொல்லத் தான் செய்யுது! ஆனாலும்..."

"ஆனாலும்..."

"ஹ்ம்ம். ஆனாலும்... பாஸ்கரன் ஏற்படுத்திட்டுப் போன வலியால... உங்களைக் காயப்படுத்திடுவே னோன்னு பயமா இருக்கு!"

"சோ... உனக்கு ரெண்டு பிரச்சனை! ஒண்ணு... என் மேல நம்பிக்கை இல்லாதது. அடுத்தது... உன் னோட ரியாக்ஷன்ஸ்!"



"ஆமா... என்னோட பாஸ்ட் லைஃப்ல நடந்த ஹிட்ச்ஸ்ஸை மனசில வச்சுட்டு... உங்களைக் காயப் படுத்திடுவேனோன்னு பயமா இருக்கு!"

"ஹ்ம்ம்... புரியுது!" என்றவன், ஆழ மூச்செடுத்து விட்டான்.

சில நிமிட அமைதிக்குப் பின்னர், "நா... வெளிப் படையா சொல்றேன். என்னால... உன்னையையும் ஸ்ரீயையும் பார்க்காம இருக்க முடியலை. ரொம்பக் கஷ்டமா இருக்கு! என்னதான்... நீ என்ன முடிவெடுத் தாலும் நா கட்டுப்படுறேன்னு சொல்லிட்டாலும்... என்னால... உன்னோட நெகடிவ் முடிவை ஏத்துக்க முடியும்ன்னு தோணலை!"

"அதே சமயம்... உன்னோட பயமும் எனக்குப் புரியுது!" என்றவன், மீண்டும் அமைதியானான்.

அந்த அமைதியைக் கிழிக்கும் வண்ணம், "நீங்க வேணும்ன்னா... ஸ்ரீயை டே கேரில பார்த்துக்கோங்க" என்றாள் குந்தவை, மெதுவாக.

"நா... உன்னையும்ன்னும் சொன்னேன்!"என்றான் அவன், அந்த "உன்னை" யில் அழுத்தம் கொடுத்து.

குந்தவை, தன் பார்வையால் அவனை நேரடியாய் சந்திக்க, "ஸ்ரீ... இந்த ரிலேஷன்ஷிப் போட ஸ்டார்ட்டிங் பாயிண்ட்ன்னாலும்... நீ என்னோட லைஃபோட கமா! என்னைக்கு உங்க ரெண்டு பேரையும்... இதே கோவில்ல வச்சு ஒண்ணா பார்த்தேனோ... அன்னைக்கே... உங்க வாழ்க்கையுல ஒரு அங்கமா இருக்கணும்ன்னு ஆசைப் பட்டேன். என்ன சொன்னேன்னு கவனிச்சியா... உங்க வாழ்க்கை! ஸ்ரீயோட வாழ்க்கை... உன்னோட வாழ்க் கைன்னு நான் அதைப் பிரிக்க விரும்பலை! உங்க

வாழ்க்கையை... நம்ம வாழ்க்கையா மாத்தணும்ன்னு தான் ஆசைப்படுறேன்" என்றான் அவன், தெளிவாய்.

குந்தவையின் நேர்ப்பார்வை, சற்றே கனிந்திருந் தது.

I love you அப்டின்னு சொல்றதை விட, I respect you ன்னு சொல்றதைத் தான் விரும்புறேன்! I respect you as a fighter... as a mother... as a scientist! more than everything, as a women!"என்றான் அவன், உளமார!

குந்தவைக்கு மனதை என்னவோ செய்தது.

அவள் ஒன்றும் சொல்லாமல், மடியில் கோர்த் திருந்த விரல்களையே பார்த்திருக்கவும், "நாம... கல்யாணம் பண்ணிக்கலாம் கவி! we will make a happy pair ன்னு தோணுது!" என்றான் பாலாஜி, கற்பனை நிரம்பிய குரலில்.

"ம்ம்ம்... எனக்குமே தோணுது! ஆனா..."

"ஆனா... என்ன? என் மேல உனக்கு நம்பிக்கை வரக் கொஞ்ச வருஷ்மாகலாம். ஆகட்டும்! Lets enjoy life as sri's parents!காலப்போக்கில... husband and wife ஆ மாறிக்கலாம்! no hurry! no compulsion!" என்றான் அவனோ, விடை போல்.

மறுக்க முடியவில்லை குந்தவையால்.

"என்னையும் மீறி... உங்களை ஹர்ட் பண்ணிடு வேனோன்னு தோணுது!" என்றாள் சற்றே உள்ளே சென்ற குரலில்.

"இட்ஸ் ஓகேமா. நாம ரெண்டு பேருமே... மெச்சூர்ட் பர்சனலாட்டீஸ்தான். we will gel well !" என்றவனின் குரலில் நம்பிக்கை இருந்தது.



"ஹ்ம்ம்..." தன் விரல்களையே பார்வையைப் பதித்திருந்த குந்தவையால், அவன் சொல்வதை ஒதுக்கி வைக்க முடியவில்லை.

சில நிமிடத் தாமதத்திற்குப் பின்னர், "சரி... போலாமா?" என அவன் எழ, குந்தவையும் எழுந்தாள்.

"அம்மு... வாடா போலாம்" என்று குழந்தையை அவள் தூக்க,

"ம்மா... பா அங்க்கி... வான்வி தந்தா... ஷீ குவ்வி வஞ்சேன்..." எனத் தன் கிறுக்கல்களைத் தாயிடம், பெருமையாய் காட்டினாள்.

"சூப்பரா இருக்குடா... குட்டி!" என்று பெண்ணின் கன்னத்தில் முத்தமிட்டவள்,"பா... அங்க்கி இல்லடா! அப்பா! அப்பா... சொல்லுங்க என்ன?" என்றாள் பெண்ணின் தாடையைப் பற்றி.

பளீர் புன்னகையால், பாலாஜியின் முகம் ஜொலித்தது!

## அத்தியாயம் 22

மூன்று மாதங்களுக்கு பின்னர்.

இரவு மணி பதினோன்று

கணினியின் வாய் வழியே, கசிந்து கொண்டிருந்த ராஜாவின் மெல்லிசை தவிர, வீட்டில் வேறு சத்தங்கள் ஏதுமில்லை.

விரவியிருந்த அமைதியைக் கிழிக்கும் வண்ணம், வெளிக்கதவின் சாவித் துவாரத்திற்குள்ளிருந்து,

"ஹிடிக்! ஹிடிக்!" என்று இரு முறை சத்தம் எழும்பியது. மடியில் கணினியுடன், சோபாவில் சாய்ந்து உறங்கிக் கொண்டிருந்த குந்தவையின் தூக்கம் சற்றே கலைந்தது.

மீண்டுமொரு "ஹிடிக்... ஹிடிக்!" இப்போது கதவு சாற்றப்பட்டு, பூட்டப்பட்டது.

கண்ணைக் கசக்கிக் கொண்டு, தூக்கத்தை விரட்ட முற்பட்ட குந்தவையின் நெற்றியை, ஆதரவாய் வருடியது ஓர் ஆண் கரம்!

"வந்துட்டீங்களா?" விலுக்கென திறந்த விழிகளும், நிம்மதியில் தோய்ந்த வார்த்தைகளுமாய் கணவனை வரவேற்றாள், குந்தவை.

"டெலிவரி கேஸ் இருக்கு, வர லேட்டாகும்ன்னு சொன்னேனே! அப்புறம் ஏன்டா முழிச்சிட்டு இருக்கே?" என்று அன்பாய் கடிந்தான் பாலாஜி.

"எனக்கும் வேலை இருந்துச்சு" என்றவள், மடியிலிருந்த கணினியை எதிரே இருந்த சோபாவில் தூக்கி வைத்துவிட்டு, சோபாவை விட்டு எழுந்தாள்.

"லேப்டாப்பை... மடில வச்சு வேலைப் பார்க்காத கவிம்மா. ஹீட் பரவிட்டே இருக்கும்..." என்ற பாலாஜி, "முடிச்சிட்டியா? ஷட்டவுன் பண்ணிடவா?" என அனுமதி கேட்டான்.

"பவர்பாயிண்ட்டை மட்டும் சேவ் பண்ணிட்டு... ஷட்டவுன் பண்ணிடுங்க. நான்... சாப்பாடு எடுத்து வைக்கிறேன்" சமையற்கட்டு நோக்கி நடந்தபடியே கணவனுக்குப் பதில் கூறியவள், போகும் வழியில் ஃப்ரிட்ஜில் இருந்து பாலை எடுத்துக் கொண்டு நடந்தாள்.



"நிறைய... சைட்ஸ் ஓபன் ஆகியிருக்கே? எல்லாத்தையும் க்ளோஸ் பண்ணிடலாமா?"

"ம்ம். பண்ணுங்க"

"ஹே... உன் ஃபிரண்டு யாரோ ஜி- சாட்ல பிங்க் பண்றாங்கம்மா"

"இப்பவா?"

"ம்ம்"

"பேரென்ன?"

"இரு பார்க்கிறேன்..."

"ஜூலியட் எட்வின்னு வருது..."

"ஹோ... என்னோட பி. ஹெட்ச்டி பண்ணின ஃபிரண்டுப்பா"

"அப்போ... நீ பேசும்மா. நா... கிட்சென்ல பார்த்துக்கிறேன்"

"இல்ல இல்ல. சாட் பண்ற மூடு இல்லைப்பா... தூக்கம் வருது. அப்படியே விட்டுடுங்க... நா நாளைக்குப் பேசிக்கிறேன்"

"ஓகே..."

"ஒரு நிமிஷம்... ஒரு நிமிஷம்..."

"என்ன சொல்லு..."

"என்னோட யாகூ ஈமெயில்ல, சோமசுந்தரம்ங்கிறவர்ட்ட இருந்து... ஏதாவது ஈமெயில் வந்திருக்கான்னு பாருங்க. அவர் பண்ணின தீசிஸ் பத்தின டீட்டைல்ஸ் கேட்டிருந்தேன். அனுப்பியிருக்காரான்னு பார்க்கணும்... இல்லைன்னா வாட்ஸ் ஆப்ல ஒரு வாட்டி ரிமைண்ட் பண்ணனும்"

ஒரு நிமிடம் கழித்து, கையில் கணினியுடன் அடுக் களையில் நின்றிருந்தான் பாலாஜி.

"சைட் ஓபன் பண்ணி... ஈமெயில் ஐடி அடிச்சுட் டேன். பாஸ்வர்ட் மட்டும் டைப் பண்ணித்தா..." என்று கணினியை மனைவியின் முன்னே நீட்டினான்.

"நா சொல்றேன்... நீங்களே அடிங்களேன்"

"தட்ஸ் யுவர்ஸ்டா... நீயே டைப் பண்ணு" என்றவன், அவள் டைப் அடிப்பதற்கு ஏதுவாக கணினியைச் சற்றே தாழ்த்திப் பிடித்துக் கொண்டான்.

அவள் அடித்து முடிக்கவும், கணினியை எடுத்துக் கொண்டு நகர்ந்தவன், "சோமசுந்தரம் பழனிவேல்ங் கிறவர்ட்ட இருந்து, ஒரு ஈமெயில் வந்திருக்கு" என்றான் தகவலாய்.

"ஹப்பா... நல்லவேளை" என்ற நிம்மதிப் பெரு மூச்சுடன், "இப்போ... ஷட்டவுன் பண்ணலாம்" என அறிவித்தாள் குந்தவை.

இரண்டாவது நிமிடம், சமையலறைக்குள் இருந் தான் பாலாஜி.

"லலியும் அம்முவும் எப்ப தூங்கினாங்க?" என்ற கேள்வியுடன், தோசைக்கல்லில் போடப்பட்டிருந்த சப்பாத்தியைத் திருப்பிப் போட்டபடியே அவன் கேட்க,

"அம்மா... ஒன்பது மணிக்கே தூங்கியாச்சு. அம்மு... டாம் அண்ட் ஜெர்ரி பார்த்துட்டுப் படுத்தா"

"ம்ம்ம்"

"நாளைக்குக் காலையில ஹாஸ்பிடல் போணுமா? இல்ல... டைரக்ட்டா... கிளினிக் தானா?"

"கிளினிக் தான்டா! என்ன விஷயம்?"



"அம்முவை ப்ளே ஸ்கூல்ல சேர்க்கணும்ன்னு சொல்லி யிருந்தேனே..." கொஞ்சம் கோப சுருதி கூடியது குந்தவையின் குரலில்.

"ஐயோ... மறந்துட்டேன்! சாரி!" உடனடியாக சரணடைந்து, மனைவியின் கோபத்தைக் குறைத் தவன்,

"ஆனா... இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு சேக்க லாமே... கவிம்மா. ப்ளீஸ்..." என்றான் கெஞ்சுதலாய்

"உங்க பொண்ணுக்கு என்ன வயசாகுது தெரி யுமா?"

"என்ன பெரிய வயசு? இரண்டரை வயசு தான் ஆகுது"

"இரண்டு வயசு... பதினோரு மாசம் ஆயாச்சு! உங்க வசதிக்குத் தகுந்தாப்ல... அஞ்சு மாசத்தை முழுங்கி யாச்சு" காட்டமாய் காய்ந்தாள், குந்தவை.

"மூணு வயசு கூட ஆகலை... கவிம்மா" சோகமே உருவாய் இழுத்தான் பாலாஜி.

"அவங்கவங்க... ரெண்டு வயசிலேயே குழந்தை களை ப்ளே ஸ்கூல்ல விட்டுடுறாங்க"

"இன்னும் இருபது... இருபத்தியைஞ்சு வருஷத் துக்குப் படிச்சிட்டே தான் இருக்கப் போறா. கொஞ்ச நாள் ... வீட்டில ஜாலியா இருக்கட்டுமே!"

"என்னப்பா... நீங்களும்? ரெண்டு பேரும் வேலைக்குப் போயிடுறோம். அம்மா... ஒராளா... அவளை எப்படிப் பார்த்துப்பாங்க? ப்ளே ஸ்கூல்ன்னா, டெய்லி ரெண்டு மணி நேரமாச்சும் ஃப்ரீயா இருப்பாங்க இல்லை?"

"லலிக்கு ஸ்ரீயைப் பார்த்துக்கிறதில கஷ்டமே இருக்காதுடா..."

"அவங்களுக்கு இருக்காது! ஆனா... அவங்க உடம்புக்கு இருக்கும்!"

"ம்ம்ம்..."

"இதைப் பத்தி... நாம நூறு வாட்டிப் பேசியாச்சு! நாளைக்கு அம்முவை ஸ்கூல்ல சேர்க்கிறதுன்னும் முடிவு பண்ணியாச்சு. தினம்... தினம் புதுசா ஆரம்பிக்காதீங்க"

"ஓகே... டன்! ஆரம்பிக்கலை! சாப்பிடலாமா?"

"ம்ம். உட்காருங்க..." என்றபடியே கையில் சப்பாத்திகளுடன், உணவு மேசை நோக்கி நடந்தாள் குந்தவை.

"நீ சாப்பிட்டே தானே?" என்றபடியே தனக்கு மட்டும் தட்டை எடுத்து வைத்துக் கொண்டு அமர்ந்தான் பாலாஜி.

"ஆச்சு..."

அவனது தட்டில் இரண்டு சப்பாத்திகளையும், கொஞ்சம் பாசிப் பருப்பு கூட்டையும் வைத்தவள், சிறு கிண்ணம் ஒன்றிலிருந்து இஞ்சித் தொக்கு கொஞ்சத்தை எடுத்து, அவன் தட்டின் ஓரம் வைத்தாள்.

"ஹே... இஞ்சித் தொக்கா? உனக்கும்... லலிக்கும் பிடிக்காதே? அப்புறம்... என்ன?" என்றபடி, முதல் விள்ளல் சப்பாத்தியை அதில் தொட்டு, வாயில் போட்டான் கணவன்.

"உங்களுக்குப் பிடிக்குமே!" என்ற பதிலுடன் சேர்ந்து, தயிர் பச்சடியை ஒரு கிண்ணத்தில் வைத்து, அவன் பக்கம் நகர்த்தினாள் குந்தவை.



"சூப்பரா இருக்கு..." சுள்ளென்று இறங்கிய தொக்கின் ருசியைச் சப்புக் கொட்டிச் சுவைத்தன. பாலாஜியின் சுவை நாளங்கள்.

அடுத்த விள்ளல் சப்பாத்தியை, தயிர் பச்சடியில் தோய்த்தெடுத்தவன், குந்தவையின் வாயருகே இட்டு வந்தான்.

"ம்ம்... எனக்கு வேணாம்..." என அவள் மறுக்க,

"ஒரு வாய் வாங்கிக்கோ..." என்று உந்தியவன், அவளுக்கு ஊட்டி விட்டான்.

ஸ்ரீயின் "சாப்பிம்மா... ஒவ்வு வாய்... ஒவ்வாய் வாங்கிக்கோ" என்ற கொஞ்சல், இருவருக்கும் நினைவில் வர, ஒருவரை ஒருவர் பார்த்தபடி, முகமலரச் சிரித்தனர்.

"இன்னிக்கும் சாப்பிடும் போது... அம்மாவை இப்படித் தான் படுத்திட்டு இருந்தா. ஒவ்வாய்... ஒவ்வாய் சாப்பு பாத்தீன்னு ஒரே கொஞ்சல்... ஒரே அடம்" என்று பெண்ணின் குறும்பைக் கணவனிடம் பகிர்வதில், அலாதி பிரியம் கொண்டது, மங்கையின் உள்ளம்.

"ஹ்ம்ம்... உனக்கு ஊட்டலையா?" என்றவன், இன்னுமொரு விள்ளலை எடுத்து, மனைவிக்கு ஊட்டினான்.

அவன் கைக்குக் கீழே தன் கையைக் காவலாய் கொடுத்து, அவன் கொடுத்த உணவை வாங்கிக் கொண்டவள், அதை மென்றபடியே, கணவனிடம் உரையாடினாள்.

"எனக்கும் தான்!" என்றபோது கண்கள் மின்னின. அதை ஆசையாய் ரசித்த பாலாஜி, சாப்பாத்தியை

மென்றதில்... உதடுகளைத் தாண்டி தாடையில் வழிந்த தயிரைத் துடைக்கப் போன மனைவியை "நீயும் கை போடாதே! நானே எடுக்கிறேன்!" என்றபடியே தடுத்து, துடைத்துவிட்டான்.

"ஹ்ம்ம்... எனக்குப் போதும். நீங்க சாப்பிடுங்க" எனக் குந்தவை சற்றுப் பின்னே நகர,

"இன்னும் ரெண்டு வாய் வாங்கிக்கோ... நைட் முழிச்சு வேலை பார்த்தது, பசிக்கும்" என்றவன், கூடுதலாய் நான்கு வாய் சப்பாத்தியை மனைவிக்குக் கொடுத்தப் பின்னரே விட்டான்.

அவன் பாதிச் சாப்பாட்டைக் கடந்த நிலையில், "நீங்க சாப்பிடுங்க... நா பாத்திரம் கழுவி வச்சுடுறேன்" என எழுந்தாள் குந்தவை.

"ரெண்டு பேருமா கழுவலாம். நீ... உக்காரேன். ப்ளீஸ்!" கைப்பற்றி இழுத்து, நாற்காலியில் அமர வைத்தான் பாலாஜி.

சலிப்பைக் காட்டாமல், சிரிப்பைத் தேக்கியபடி அமர்ந்தவள், "உங்கட்ட சொல்லணும்ன்னே நினைச்சேன்... அந்த விக்ராந்த் இருக்கான்ல்ல" எனத் தொடங்கினாள்.

"ஆமா... ஸ்ரேயா கோஷலுக்கு அண்ணன் மாதிரி கீச்சு கீச்சுன்னு கத்திட்டே இருப்பானே? அவன் தானே?" கண்ணைச் சிமிட்டினான் பாலாஜி.

"ஹஹஹா! அவன் தான்...! எங்க டிபார்ட்மெண்ட்ல மாலதிக்கு... கிரேட் F ப்ரோமோஷன் கிடைச்சிருக்குன்னு சொன்னேன்ல. ப்ரோமோஷன் ரிசல்ட்ஸ் வந்ததில இருந்து... சின்னப்புள்ள மாதிரி மாலதிட்ட சண்டை போட்டுட்டே இருக்கான்பா. சோ சில்லி!



இன்னிக்கு ... அவனோட பென்னை எடுத்து மாலதி யூஸ் பண்ணிட்டாங்க. என்னவோ... அவனோட சொத்தில பாதியை மாலதி அபகரிச்சுட்ட மாதிரி... என்ன ஒரு ஸீன் தெரியுமா? How come you could take my pen without my permission? what else have you taken without my knowledge? i think, you have, stolen all our ppt work and branded yourself for promotion. அப்படி இப்படின்னு கத்துறான்! எனக்கு ஒரே சிரிப்பு! அடக்க முடியாம, அவன் முன்னாடியே சிரிச்சுட்டேனா... அதுக்கு ஒரு மொறை... மொறைச்சான் பாருங்க! சிரிப்பு நிக்கிறதுக்குப் பதிலா... டபுள் ஆகிடுச்சு! அப்புறம்... ஆஷா தான் நடுல வந்து, என்னை வெளிய கூட்டிட்டு வந்தா" என்றவள், இப்போதும் அந்தச் சூழநிலையை எண்ணி, உளமாரச் சிரித்தாள்.

"ஹ்ஹ்ஹா!" மனைவியின் சிரிப்பில் தானும் சேர்ந்து கொண்ட பாலாஜி.

"மத்தவங்க வளர்ச்சியைப் பார்த்துப் பொறாமை படுற நேரத்தில... நம்ம வளர்ச்சிக்கான முயற்சியை எடுத்தோம்னா சீக்கிரம் வளரலாம். ஆனா... இந்த லாஜிக் யாருக்குப் புரியுது... சொல்லு?" என்றான் சிறு வருத்தத்துடன்.

"ப்ச்...யா! அதுவுமில்லாம... நானும் அவனும் ஜாயின் பண்ணி... ஒன்றரை வருஷம் கூட ஆகலை... அதுக்குள்ளே எப்படி அடுத்த ப்ரொமோஷன் வரும்? புரியவே மாட்டேங்குது!"

"அடுத்த ப்ரோமோஷனுக்கு உன்னோட சேர்த்து... அவனையும் நாமினேட் பண்ணியிருக்காங்களா?"

"ஹ்ம்ம்... இல்லைன்னு தான் நினைக்கிறேன். நா... அதைப் பத்திக் கேட்கவே இல்லை. என்னை நாமினேட் பண்ணியிருக்காங்கங்கிறதே... ஜோஸ் சொல்லித் தான் தெரியும்"

"ஹ்ம்ம். உனக்குக் கிடைச்சு... அவனுக்குக் கிடைக்கலைன்னா... என்ன காமெடி பண்ணப் போறானோ?" விக்ராந்தின் குரங்காய் கடுக்கும் முகத்தைக் கற்பனையில் கொண்டு வந்து சிரித்தான் பாலாஜி.

"ஆமா... இப்பவே சிரிப்பா வருது!" என்ற மனையாளும், அவனுடன் சேர்ந்து சந்தோஷமாய் சிரித்தாள்.

"உனக்கு மட்டும் ப்ரோமோஷன் வரட்டும். ஒரு டப்பா ஸ்வீட் வாங்கிட்டுப் போய்... அவனுக்கு மட்டுமே கொடுத்திட்டு வரேன்" கணவனின் கிண்டலில் சிரித்த போது,

"சும்மா இருங்கப்பா... அவனே வெந்துட்டு இருப்பான்... நீங்க கூடக் கொஞ்சம் சுடு தண்ணியை ஊத்தாதீங்க" என்றவள், கணவனின் தோளில் செல்லமாய் தட்டிவிட்டு, சாப்பாட்டுப் பாத்திரங்களைக் கையில் எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள்.

உணவுண்ட தட்டுடன், பாலாஜியும் அவளைத் தொடர்ந்தான்.

கையைக் கழுவிவிட்டு, தட்டைத் தேய்த்தவன்,"நா... தேய்ச்சு வைக்கிறேன். நீ கழுவி எடு" என்றான், சப்பாத்தி மாவு பிசைந்தப் பாத்திரத்தைக் கையில் எடுத்தபடியே.



வேலை, பத்தே நிமிடத்தில் முடிந்தது.

"பாலை... எலெக்ட்ரிக் ஸ்டவ்ல வைக்கிறீங்களா? நா... அடுப்பைத் துடைக்கிறேன்" என்றபடி, அடுத்தக் கட்ட வேலைகளையும் பகிர்ந்து செய்தவர்கள், பாலை அருந்திவிட்டு, அரைமணி நேரத்தில் படுக்கைக்குச் சென்றனர்.

குந்தவை படுக்கையில் தலை சாய்க்க, விளக்கை அணைத்துவிட்டு கட்டிலினருகே வந்தவன், சட்டென நினைவு வந்தவனாய், மீண்டும் விளக்கைப் போட்டான்.

"என்னப்பா?" எனக் கேட்ட மனைவிக்குப் பதிலாய், சாக்ஸை எடுத்து வந்து, அவளிடம் நீட்டினான் பாலாஜி.

"போட்டுக்கோ..."

"ம்ம்ம்... வேணாமே..."

"நகக்கண்ல பரவுற குளிரைத் தடுத்துட்டாலே... உடம்பில ஜில்னஸ் குறைஞ்சிடும். போட்டுக்கோம்மா..."

குந்தவை, குளிர் பரவியிருந்த உள்ளங்கால்களைத் துடைத்துவிட்டு, சாக்ஸைப் போட,

"அம்முவும் லலியும் போட்டிருக்காங்க தானே?" எனக் கேட்டான் பாலாஜி.

"நான் தான் போட்டுவிட்டேன்"

"மத்தவங்களுக்குப் போட்டுவிடுவே! ஆனா... நீ போட்டுக்க மாட்டே!"

"என்னைப் போடச் சொல்லத் தான்... நீங்க இருக்கீங்களே!"

"பி.ஹெட்ச்டி படிச்சிருக்கேன்னு அப்பப்ப நிரூபிக்கிறே!"

"போதுமே! நீங்களும் ... சாக்ஸைப் போட்டுட்டு... படுங்க" என்றவள், படுக்கையில் சாய்ந்தாள்.

விளக்கை அணைத்துவிட்டு, தானும் படுத்தவனின் கரங்கள், குந்தவையின் முன்னுச்சி முடியை வருடிவிட்டன.

"சண்டே அன்னைக்கு... எண்ணெய் தேய்ச்சு விடுறீங்களா?" ஏக்கமாய் வெளிவந்தன குந்தவையின் வார்த்தைகள்.

"விடுறீங்களா? என்ன விடுறீங்களா? விடுங்கன்னு செல்லு!" என்றான் கணவனோ, ஒப்புதலை வேறுவிதத்தில் வெளியிட்டு.

சிறிது நேரம் அமைதியாய் கழிய, "இன்னைக்கு... அண்ணா ஃபோன் பண்ணினான்" என்றாள் குந்தவை, மெதுவாக.

"ம்ம்!" என்றானே ஒழிய,"என்ன விஷயம்?" என்று கேட்கவில்லை பாலாஜி.

"அம்மாக்கும் அப்பாக்கும் நம்ம கல்யாணம் உண்டு பண்ணின சந்தோஷத்தை விட, ஸ்ரீ தத்துப் பிள்ளைங்கிற வருத்தம் தான் இன்னும் பெருசா இருக்குப் போல" என்றாள் குந்தவை, ஆதங்கமும் வருத்தமுமாய்.

"விடுடா... அவங்கெல்லாம் அந்த ஜெனெரேஷன் ஆளுங்க. டக்குன்னு... அக்சப்ட் பண்ணிக்க முடியாது. போகப் போக... சரியாகிடும்."

"அம்மாவும் அந்தக் காலத்து மனுஷி தானே!"



"லலி... அந்தக் காலத்திலேயே கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு புரட்சி பண்ணின புதுமைப் பெண்! அவங்களோட டிசைனே வேற கண்ணா!"என்றான் பாலாஜி, வருடலை நிறுத்தாமல்.

"ஹ்ம்ம்ம்..." குந்தவையிடமிருந்து வெளியான நெடுமூச்சில், புன்னகை சரிபாதியாய் கலந்திருந்தது.

"ஆக்ச்சுவலி ஸ்பீக்கிங்... லலிம்மா தான், இந்தக் கல்யாணத்தோட பேஸ்ஸே இல்லப்பா" என்றாள் குந்தவை, கணவனின் பக்கமாய் ஒருக்களித்துப் படுத்து.

"லெஃப்ட் சைட்ல படுக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல்ல? ஒன்னு... ரைட் சைட்ல ஒருக்களிச்சுப் படு. இல்லைன்னா நேரா படு" என்றான் பாலாஜி, மனைவியின் தோளை அழுத்தி, நேராய் படுக்க வைத்தபடி.

"அப்ப... நீங்க இப்படி வாங்க" என்றாள், அவனைத் தன் வலப்பக்கம் வரச் சொன்னாள். கட்டிலை விட்டிறங்கி, அவளது வலப்பக்கமாய் வந்து படுத்த பாலாஜி, தன்னை நோக்கிப் படுத்திருந்த குந்தவையின் புருவங்களை மெல்ல நீவியபடியே "ம்ம்ம். சொல்லு..." என்றான்.

"என்ன சொல்லிட்டு இருந்தேன்..."

"ஹான்... லலிம்மா தான் இந்தக் கல்யாணத்தோட பேஸ்ஸே இல்லப்பா?" என்றாள் மீண்டும்.

"ம்ம். ஆமா... எங்கேயோ இருந்த ரெண்டு பேரையும்... இல்ல இல்ல மூனு பேரையும் ஒண்ணா சேர்த்துட்டாங்க" என்றான் அவனும் நிறைவான புன்னகையுடன்.

"இன்னைக்கு நானும் அம்மாவும்... நம்மளோட பாஸ்ட் பத்திப் பேசிட்டு இருந்தோம்"

"ம்ம்ம். பாஸ்கரன் பத்தியா?"

"ப்ச்... அவனைப் பத்தி நினைக்க என்ன இருக்கு? அந்த லேடி பத்தி..."

"அவளைப் பத்தியா? என்ன?"

"இல்ல... எந்தவொரு பொண்ணுமே... லீகல் வைஃபா... எல்லாவிதமான உரிமையோட இருக்கத் தானே ஆசைப்படுவாங்க. பட்... அந்த லேடி... இல்லீகல் அஃப்பேர்ல, எப்படி எட்டு வருஷம் வாழ்ந்தான்னே தெரியலை! அதுவும்... ரெண்டு குழந்தைகளுக்கு அம்மா வான பின்னாடியும்... உரிமையில்லாத ரிலேஷன்ஷிப்ல அவளால எப்படி நிலைச்சிருக்க முடிஞ்சதுன்னு எங்க ரெண்டு பேருக்குமே புரியலை"

"ஒரோருத்தங்களுக்கும் ஒரொரு priority. It differs" என ஆரம்பித்தவன்,

"ஒரு சின்ன உதாரணம். அம்மான்னா பாசமா தான் இருப்பாங்கங்கிறது உலக நியதி. ஆனா... அந்த நிய திக்கும் அப்பார்ப்பட்டு எத்தனையோ பேர் இருக்கிறதால தான்... அநாதை ஆசிரமங்கள் நிரம்பி வழியுது. பெத்தவங்களை இழந்து அநாதை ஆக்கப்படுற குழந்தை களை விட.... பெத்தவங்களால அநாதை ஆக்கப்படுற குழந்தைகள் ஜாஸ்தின்னு ஒரு சர்வே சொல்லுது"

"இது மாதிரி தான். லீகல் வைஃபா இருக்கத் தான் எல்லா பொண்ணுங்களும் நினைப்பாங்கங்கறது உலக நியதின்னாலும்... அதுக்கும் சில exceptions இருக்கலாம்" என்றான் விளக்கமாய்.



அவன் சொல்வதை ஒத்துக்கொள்ள வேண்டிய தாய் தான் இருந்தது, குந்தவைக்கு.

"இப்படிப்பட்ட சில பல exceptions ன்னால தான், நம்ம லைஃப்பே அமைஞ்சிருக்கு இல்லையாப்பா?" என்றவளின் குரலில், சிறிதாய் ஒரு கிண்டல் தெரியவும்,

"கிண்டல் பண்ற மாதிரி இருக்கே? என்ன விஷயம்?" என்று சிரிப்பாய் இழுத்தான் பாலாஜி.

"பாஸ்கரனோட இல்லீகல் வைஃப் ஒரு விதம்ன்னா... ஸ்ரீயோட முன்னாள் பேரெண்ட்ஸ் வேற டைப் exception."

"ஓகே... ஆனா... இன்னும் ஏதோ இருக்கே?" என்று குடைந்தான் பாலாஜி.

"இருக்கு... இருக்கு! அது... நீங்க தான்?"

"அடிப்பாவி... நானா? நா... என்ன செஞ்சேன்?"

"உலக நியதிப்படி... இருபத்திநாலு வயசில இருந்தே ... ஒரு பையனுக்குக் கல்யாண ஆசை வந்திடும். ஆனா... உங்களுக்கு முப்பத்தியாறு வய சாகியும் வரலையே! அப்பா இல்லாம அம்மாட்ட வளருற பசங்க எல்லாம்... கல்யாணம் பண்ணிக்காம பிரம்மச் சாரியாவா இருக்காங்க? நீங்க மட்டும் தான் ... தயிர் சாதமா இருந்திருக்கீங்க. சோ... நீங்களும் ஒரு exception தான்!" என்றாள் குந்தவை, கேலியில் உதடுகள் துடிக்க.

"ஆஹா! அவமானம்! அவமானம்!" என்று கை முஷ்டியால், நெற்றியில் குத்திக் கொண்ட பாலாஜி,

"என்னம்மா செய்றது? என்னோட இருபத்தி நாலு வயசில... உன்னை நா பாக்காம விட்டுட்டேனே!" என்றான் சோகமே உருவாய்.

"ஹய்யோ... போதுமே!" என்று வெட்கம் கொண்ட குந்தவை, அவன் தோளில் மெல்லத் தட்டி, "தூங் குங்க..." என்றாள் செல்லமாய்.

"நீங்க தூங்குங்க" என்றபடி, மனைவியை மழலை யாக்கி அவளது உச்சி முகர்ந்தான்.

அவனது அன்பிலும்... அரவணைப்பிலும் குந்தவை யின் கண்கள் சில வினாடிகளிலேயே சொக்கத் தொடங் கின.

ஒரு மணி நேரம் கழித்து.

"ம்மா..."

"ம்மா... உச்..."

"ப்பா..."

முழுதாய் சாற்றப்படாத கதவின் இடுக்கு வழியே, ஸ்ரீதுளசியின் தூக்கக் கலக்கக் குரல் கசிந்து வந்தது.

"ப்பா... அம்மு..." படுக்கையில் புரண்ட குந்த வையைத் தட்டிக் கொடுத்த பாலாஜி, "நீ படு... நா தூக்கிட்டு வரேன்" என்றான்.

வேகமாய் கதவை அடைந்தவன், பிள்ளையைத் தூக்கியபடியே "அம்முக்குட்டி... என்னடா உச்சாவா?" எனக் கேட்டான்.

"ம்மா..." தூக்கத்திலும் தாயைத் தேடினாள் ஸ்ரீதுளசி.

"உச்சா போயிட்டு... அம்மாட்ட படுத்துக்கலாம்" என்றவன், பிள்ளையைத் தங்கள் அறையிலிருந்த குளியலறைக்குள் இட்டுச் சென்றான்.



இரண்டு நிமிடங்களில், பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தவன், ஈரம் போக... அவள் கால்களைத் துடைத்துவிட்டு, ஜட்டி மாட்டி விட்டான்.

"ம்மா..." சிணுங்கிய பிள்ளையை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, படுக்கையில் அவன் விழ,

"அம்முக்குட்டி..." கணவனின் மார்பிலேறி படுத் திருந்த பிள்ளையின் முதுகை வருடியபடி, கணவனின் தோளோடு வந்து சேர்ந்தாள் குந்தவை.

அழகிய பாச்சரம் ஒன்றில், சங்கத்தமிழ் சொற்கள் ஆகினர் மூவரும்!

## அத்தியாயம் – 23

மூன்று வருடங்களுக்குப் பிறகு

"அம்மா... மூவ்மெண்ட்டே தெரிய மாட்டேங்கு தும்மா" நெஞ்சின் பயம் குரலில் பரவ, லலிதாவின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டாள் குந்தவை. அவளுக்கும் மேலாய் உள்ளம் நடுங்கிப் போயிருந்த பெரியவரோ, "பயப்படாத கவி. அவனுக்கு... இன்னொரு வாட்டி ஃபோன போட்டுப் பாரு" என்றார், தன் பதட் டத்தை மறைக்க முற்பட்டுத் தோற்றவராய்.

"ம்மா... அப்பா எடுக்க மாட்டேங்கிறாங்க" என்றாள் ஸ்ரீ, அழுது விடும் தொனியில்.

"அப்பாக்கு இன்னைக்கு ஒரு முக்கியமான ஆபரேஷன் இருக்குன்னு சொன்னாங்க இல்ல. அதில இருப்பாங்க" என்று தன் பயத்தையும் மீறி, அழும் பெண்ணை சமாதானம் செய்த குந்தவை,

"ஜெயஸ்ரீ ஆண்ட்டிக்கு ஃபோன் பண்ணு அம்மு... நாமளே போய்ப் பார்த்துட்டு வந்துடலாம்" என்றாள்.

"j ல தானேம்மா வரும்..." என்று தாயின் கைப் பேசியில் ஸ்ரீதுளசி தேட, "அம்மாட்ட தாடா..." என்று கை நீட்டினாள் குந்தவை.

"இதோ... இந்த நம்பர்..." என்று அவள் பச்சை பட்டனை அழுத்தவும், "பாட்டி பேசுவாங்கம்மா. நீங்க சாஞ்சுக்கோங்க" என்று கைப்பேசியை வாங்கி, லலிதா விடம் கொடுத்தாள் ஸ்ரீதுளசி.

மகப்றேு மருத்துவரான ஜெயஸ்ரீயிடம் பேசிய லலிதா,"ஜெயஸ்ரீ... உடனே ஹாஸ்பிடலுக்கு வரச் சொல்றாடா" என்றார் பரபரப்பாய்.

"சரிம்மா... நா கிளம்புறேன்" என்று குந்தவை எழ,

"நானும் வரேன்..." என்று உடன் எழுந்தார் லலிதா.

தன்னுள்ளிருக்கும் கருவின் நடமாட்டங்களை உணராத அத்தருணத்திலும், முதுகு வலியால் நடப்ப தற்கு சிரமப்படும் மாமியாரைச் சிரமப்படுத்தப் பிடிக்க வில்லை குந்தவைக்கு.

"இல்லம்மா... due date க்குக் தான்... ரெண்டு வாரம் இருக்கே! ஜஸ்ட்... செக் பண்ணிட்டு வந்துடுறோம். அதுவும்... அவர் வொர்க் பண்ற ஹாஸ்பிடலுக்குத் தானே. அங்க எல்லாருக்கும்... எங்களைத் தெரியுமே! பார்த்துப்பாங்கம்மா! நானும்... அம்முவும் போயிட்டு வந்துடுறோம். நீங்க ... அலைய வேணாம்"

"என்ன பெரிய அலைச்சல்! என்னால இங்க தனியா உக்காந்திருக்க முடியாது... நானும் வரேன் கவி! மனசு...



படபடன்னு அடிச்சிட்டே இருக்கும்" என மறுத்த லலிதா வும், பிடிவாதமாய் உடன் கிளம்பினார்.

"அம்மா... டாக்சில போய்டலாம்ம்மா" என்றாள் ஸ்ரீதுளசி, தாயின் சுடிதாரைப் பற்றி இழுத்தபடியே.

"ஏன்டா... ஹாஸ்பிடல் பக்கத்தில தானே இருக்கு... நடந்து போய்டலாம் அம்மு."

"வேணாம்ம்மா. எனக்குப் பயமா இருக்கு... ஹரி ஏன் மூவ் பண்ண மாட்டேங்கிறான்... சீக்கிரமே போய்க் காட்டலாம்" என்று அழுதாள், அவளோ.

"ஹரி... தூங்கிட்டு இருப்பானா இருக்கும்! அதான்... மூவ் பண்ணாம இருக்கான். நீ பயப்படாத... நாம மெதுவா நடந்து போய்டலாம்" எனப் பெண்ணைச் சமாதானம் செய்த கையோடு, வீட்டை விட்டு வெளி யேறினாள் குந்தவை.

லலிதாவும், "இந்த டைம்ல நடக்க வேணாம்... கவி. டாக்சிக்கு ஃபோன் பண்ணிடலாமா?" என்றார் கவலையுடன்.

"இப்ப ஃபோன் பண்ணினா... எப்படியும் அரை மணி நேரமாகும் லலிம்மா, அதுக்கு... நடந்தே போய்ட லாம்" என்றாள் மருமகளோ, நிதர்சனம் உணர்ந்தவ ளாய்.

"நா... ஜோஸ் அங்கிள்கிட்ட கேட்கிறேன்" என்று அவர்களைத் தாண்டிக் கொண்டு, படிகளில் ஓடினாள் ஸ்ரீதுளசி.

"அம்மு... பாத்துடா... மெதுவா..." பதறியது தாயுள்ளம்.

தாயின் பரிவை விட, அவளது வலியில் பதறி யிருந்த ஸ்ரீயின் வேகம் கூடியதே ஒழிய குறையவில்லை.

"அங்கிள்... அங்கிள்..." என்று ஆஷா வீட்டுக் கதவைத் தட்டியவள், ஆஷா வெளியே வந்ததும்,

"ஆன்ட்டி... ஹரி மூவ் பண்ண மாட்டேங்கி றானாம்... அம்மா பயப்படுறாங்க. அப்பாக்கு ஃபோன் பண்ணினா... எடுக்கவே இல்ல ஆன்ட்டி! அங்கிளை... எங்களை ஹாஸ்பிடலுக்குக் கூட்டிப்போகச் சொல் றீங்களா? ப்ளீஸ்... ஆன்ட்டி! ஹரிக்கு என்னாச்சுன்னே தெரியலை! எனக்கு... ஹரி வேணுமே!" என்று பட படவென பொரிந்தாள்.

"அச்சோ... அழாதட குட்டிம்மா, ஹரிக்கு ஒண்ணு மாகாது. ஆன்ட்டியே கூட்டிப் போறேன்" என்றவள், படிகளில் இறங்கி வந்த குந்தவையை நோக்கி ஓடினாள்.

"என்னாச்சு குந்தவை? ஸ்ரீ... என்னென்னவோ சொல்றாளே?" என்று அவளும் தன் பங்கிற்குப் பதற,

"மூவ்மெண்ட்ஸ் கம்மியான மாதிரி இருக்கு... ஆஷா. அதான் ... ஹாஸ்பிடல் போய்ப் பார்த்துட லாம்ன்னு" மீண்டும் மீண்டும் குடையாமல், "நா வண்டி எடுக்கிறேன். நீ ... வா! மெதுவா... ஹ்ம்ம்..." என்று கீழே ஓடினாள் ஆஷா.

"ஆஷா... தியா?" என்றாள் குந்தவை கேள்வியாக.

"அவளையும் கூட்டிட்டுப் போலாம். ஜோஸ்... வீட்டுக்கு வர லேட்டாகும்" என்று தன் ஒரு வயது மகளைக் கையில் ஏந்தியபடியே வெளியே வந்தவள், கதவைப் பூட்டினாள்.

"தியா குட்டியை... நா தூக்கிக்கட்டா?" என்று ஸ்ரீ அச்சிறு மலரை வாங்கிக் கொள்ள, அனைவருமாய் காருக்குச் சென்றனர்.



ஆஷா காரை எடுக்கவும், "அம்மா... அம்மா..." என்று அழ ஆரம்பித்தாள் தியா.

"தியா குட்டி... அழக்கூடாதுடா..." என்று ஸ்ரீதுளசி, பெரிய மனுஷி போல் அவளைச் சமாதானம் செய்த வேளையில்,

"அச்சோ... குழந்தை அழறா பாரு. இதுக்குத் தான்... உன்னைக் கூப்பிட வேண்டாம்ன்னு சொன னேன்" எனக் குந்தவை வருத்தம் கொள்ள.

"அப்புறம்... எப்படிப் போவியாம்? ஃபிரண்டுன்னு ஒருத்தி... நா எதுக்கு இருக்கேன்? தெண்டத்துக்கா?" என்று படபடவெனப் பொரிந்தாள் ஆஷா.

"ஏய் ... அதில்லைடி! குழந்தையைத் தனியா விட்டுட்டு..."

"ஏன்... ஸ்ரீயை விட்டுட்டு எத்தனை வாட்டி என் னோட செக் அப் வந்திருக்கே? நீ மட்டும் வருவே... நா மட்டும் வர முடியாதா?"

"அம்மா... தாயே! விடு..." இருவரது சண்டைக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் வண்ணம், தியாவை லலிதா வாங்கிக் கொள்ள, குழந்தை சற்றே அழுகையை நிறுத்தி னாள்.

"ஆமா... பாலா எங்க? ஃபோனே எடுக்கலை யாமே! இந்த டைம்ல... கூட இருக்க வேணாமா?" என்று ஆஷா கேள்விகளை அடுக்கத் தொடங்கினாள்.

"அவருக்கு... ஒரு முக்கியமான ஆபரேஷன், ஆஷா! ஆறு மாசக் குழந்தை ஒண்ணுக்கு... ஹார்ட் வால்வ்ஸ் சம்மந்தமா ஏதோ ஒரு காம்ப்ளிகேஷன். அதுவும்... அவ்ரோட ஹாஸ்பிடல்ல இல்ல. வேற எங்கே யோ! இவரை request பண்ணிக் கூப்பிட்டு இருக்காங்க.

போகாம... எப்படி இருக்க முடியும் சொல்லு? அதான்... அதில அவர் பிஸி" கணவனுக்கு ஆதரவாய் பேசியது அந்த அன்பு மனைவியின் உள்ளம்.

"ஹோ..."

"நா... நடந்தே போய்டலாம்ன்னு சொன்னேன். அம்மு தான்... உன்னை வந்து கூப்பிட்டுட்டா"

"பாவம்... ரொம்பப் பயந்திருக்கா போல!"

"ம்ம்... எங்களை விட... அவ தானே ஹரி வரப் போறதை ஆவலா எதிர்பார்த்துட்டே இருக்கா..." என்றாள் குந்தவை, தன்னருகே அமர்ந்திருந்த பிள்ளையின் முடியை வருடி.

"அம்மா... ஹரி உதைக்கிறானா?" தாயின் வயிற்றை மெதுவாய் வருடினாள் ஸ்ரீதுளசி.

"லேசா உதைக்கிறான்" பெண் பயப்படக்கூடாதே என்று சும்மாவேனும் சொல்லி வைத்தாள் குந்தவை.

"எங்கம்மா? நா... கை வச்சுப் பாக்கட்டா?" என்று கையை இங்கும் அங்கும் அவள் நகர்த்த,

"இதோ இங்க... " என்று மேல் வயிற்றைக் காட்டினாள் குந்தவை, ஏதோ ஒரு இடத்தைக் காட்ட வேண்டுமே என்பதற்காக.

"கவி... மூவ்மெண்ட் தெரியுதா?" என்று லலிதா படபடக்க, குழந்தைக்காக என்பது போல் மருமகள் தலையசைக்கவும், மீண்டும் பதட்டம் சூழ்ந்தது அவர் முகத்தில்.

முப்பத்தியைந்து வயதில் கர்ப்பிணியான மருமகள், நல்லபடியாகப் பெத்துப் பிழைக்க வேண்டுமே என்று



நெஞ்சம், இறைவனின் பாதங்களைப் பிரார்த்தித்தன.

அவர் தன் வேண்டுதலில் மூழ்கியிருக்க, ஸ்ரீயோ குந்தவை காட்டிய இடத்தில் கை வைத்து "ஹரி... ஹரி குட்டிப்பா... அக்கா பேசுறேன்... கேக்குதா? ரொம்ப நேரம் தூங்காத ஹரி! ப்ளீஸ்டா... முழிச்சிட்டே இரு! அக்கா... பால் போடவா? நீ... டமால்ன்னு உதைக்கிறியா?" என்று கருவிலிருக்கும் குழந்தையுடன் பேசினாள்.

"அம்மாக்கு வலிக்கும்ன்னு உதைக்காம இருக்கியா? அதெல்லாம்... அம்மா பொறுத்துப்பாங்க. நீ... உதைச்சிடு! என்னோட... செல்லக்குட்டிப்பா இல்ல"

"நா... அப்பாட்ட சொல்லி... நீ வெளிய வந்ததும், உனக்கு பெரிய டெட்டி பேர் பொம்மை வாங்கித் தரச் சொல்றேன். சரியா?"

"இன்னும் டூ வீக்ஸ்க்கு சமத்தா இரு... ஹரி! நா... அதுக்குள்ளே உனக்கு பெட்... போர்வை... தலைகாணி எல்லாம் ரெடி பண்ணிடுறேன். நீ ... என்னோடவே படுத்துக்கோ. ஓகே வா?"

"பாய்ஸ்ன்னா... ப்ளு கலர் தான் பிடிக்குமாம். அக்ஷு சொன்னா. நா... உனக்கு எல்லாமே ப்ளுல வாங்கி வைக்கிறேன் சரியா? அக்காக்கு பிங்க்... ஹரிக்கு ப்ளு. ஓகே?"

"நீ... குட் பாயா இருந்தின்னா... அப்பாவும் நானும் ஸ்விம்மிங் பூல் போம்போது... உன்னையும் கூட்டிப் போவோம். இப்படி... நீ உதைக்காம இருந்தா... அக்காக்குக் கோவம் வரும். பேசவே மாட்டேன். எங்கேயும் கூட்டிப் போக மாட்டேன்" என்று முறுக்கிக் கொண்டாள்.

உடனேயே, "அம்மா... அம்மா... ஹரிக்குப் பிடிச்ச ரைம்ஸ் படிக்கட்டாம்மா? ரைம்ஸ் கேட்டா... உதைப் பான் தானே?" என்று கண்ணை விரித்து, ஒரு வழி கண்டுபிடித்தாள்.

"ம்ம்... சொல்லு..." என்றாள் குந்தவை, வாஞ்சை யுடன் மகளின் முடியை வருடியபடி.

உள்ளே இருக்கும் குழந்தை உண்டு பண்ணிய பதட்டத்தை, வெளியே இருக்கும் குழந்தை மட்டுப் படுத்தியது.

கையை உயரப் பிடித்து, விரல்களை அகல விரித் தாள் ஸ்ரீ.

This is a family
Lets count them and see
How many there are
And who they can be

இதற்குப் பின்னர், "1...2...3...4...5" என்று ஓரோர் விரலையும் எண்ணினாள்.

ஆட்காட்டி விரலைக் காட்டி, This is mother who loves every one

நடுவிரலைக் காட்டி, And this is father who is lots of fun

மோதிர விரலைக் காட்டி, This is my sister she helps and she plays.

சுண்டு விரலைக் காட்டி, And this is the baby. He's growing each day but who is this one? எனப் பாடிய பின்னர், கட்டை விரலைக் காட்டி,



"This is our lovely lali who makes us all"எனப் பாடி முடித்தாள் ,ஸ்ரீதுளசி.

"ஹய்யா..." என்று தியா குதூகலிக்க, அனைவரது முகத்திலும் சிறு புன்னகை.

குந்தவையின் முகத்திலிருந்த புன்னகையை மேலும் கூட்டுவது போல், உள்ளிருந்த மகவு, லேசாய் அசைந்தான்.

புது ரத்தம் பாய, உடல் சிலிர்த்தது குந்தவைக்கு!

"அம்மா... பேபி அசையுது" சந்தோஷம் பொங்க அவள் வயிற்றைத் தடவ,

"ஹய்யா... ஹரி மூவ் பண்றானா?" என்று குதூ கலித்தாள் குந்தவை.

"கவி... நிஜமாவா?"

"ஆமாம்மா. இப்போ மூவ் பண்ணினான்..." என்றாள் குந்தவை, கையை இங்குமங்கும் நகற்றி.

"மூவ்மெண்ட் நிறைய தெரியுதா?" என்றாள் ஆஷா.

"ம்ம்ம்... இல்லடி... அப்போ இருந்தது..." என்று குரல் தேய, கையை வயிற்றில் பரவவிட்டாள் குந்தவை.

"அம்மா... அப்போ நா ரைம்ஸ் பாடிட்டே இருக்கவா?" எனக் கேட்டு, தாய் ஆமோதிக்கும் முன்னர், மீண்டும் பாடத் தொடங்கினாள் ஸ்ரீ.

அதற்குள் ஹாஸ்பிடல் வந்திருக்க, அனைவரும் இறங்கி உள்ளே விரைந்தனர்.

"மேடம்... நீங்க வந்ததும் ஸ்கேன் ரூமுக்குக் கூட்டிட்டு வரச் சொன்னாங்க" என்றபடி அவர்களை நோக்கி ஓடிவந்தாள் ஒரு செவிலியப் பெண்.

ஸ்கேன் ரூமுக்குள் குந்தவை நுழையவும், "ஆஷா... தியாவை வச்சிட்டு இங்க இருக்க வேணாம். நீ ... வீட்டுக்குப் போ. நா... பார்த்துக்கிறேன்" என்றார் லலிதா.

"என்னன்னு கேட்டுட்டுப் போறேன்ம்மா" என்றவள், "மதுபாலாக்கு ஃபோன் பண்ணிச் சொல்லிடவாம்மா?" எனக் கேட்டாள்.

"சொல்லிடு கண்ணா! குந்தவையோட அம்மாவும் அப்பாவும்... டெலிவரிக்காக, இன்னைக்கு நைட் கிளம்பி... நாளைக்குக் காலையில இங்க வரதா இருக்கு. அவங்களுக்கும் சொல்லணும்" என்றார் அவர்.

ஆஷா கைப்பேசியோடு சற்றே தள்ளிப்போக,

"பாட்டி... நானும் ஹரி பாக்கப் போறேன்" என்று லலிதாவிடம் வந்து ஒட்டிக்கொண்டாள் ஸ்ரீதுளசி.

"டாக்டர் ஆன்ட்டி ஸ்கேன் பண்ணி முடிக்கட்டும்... ஸ்ரீகுட்டி. அப்புறம் போலாம்..."

"ஹான்... எல்லா வாட்டியும் நானும் அப்பாவும் உள்ள போவோமே! ஹரியைப் பாப்போம். பேசுவோம். தெரியுமா? நா... போறேன் பாட்டி!"

"சொல்றதைக் கேட்கணும்... என்னோட செல்லக் குட்டி இல்ல!" என்று லலிதா சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

"ஆன்ட்டி... பேபிக்கு ஹார்ட் பீட் எல்லாம் நல்லா இருக்கு. Baby is absolutely fine. ஆனால்... மூவ்மெண்ட் கம்மியா இருக்கிறதுனால உடனே ஆப்ரேட் பண்ணிடனும். ரெடி பண்ணவா?" நல்ல செய்தி ஒன்றும் கெட்ட செய்தி ஒன்றுமாய், லலிதாவைத் திணறடித்தாள் ஜெயஸ்ரீ.



"அப்படியாம்மா? குழந்தை நல்லபடியா பிறந்தா சரி... நீ ஏற்பாடு பண்ணும்மா" என்று தாயாய் தவித்தார் லலிதா.

"சரி ஆன்ட்டி..." என்றபடியே, செவிலியர்களைக் கையசைத்துக் கூப்பிட்டாள் ஜெயஸ்ரீ.

"ஹரிக்கு ஒண்ணு இல்லை தானே? ஆன்ட்டி... சொல்லுங்க" என்று ஸ்ரீ தவிக்க,

"ஒண்ணு இல்ல, குட்டி! இன்னும்... கொஞ்ச நேரத்தில... ஹரி குட்டி உன்னோட கையில இருப்பான். ஓகே" என்று சின்னவளின் கன்னம் தட்டிவிட்டு, அறுவை சிகிச்சைக்கான ஏற்பாடுகளைக் கவனிக்க ஓடினாள் ஜெயஸ்ரீ.

"பாட்டி... நா அம்மா பாக்கணும்... " என்ற ஸ்ரீ அழ,

"அம்மாக்கு ஆபரேஷன் பண்ணப் போறாங்கடா"

"ஆபரேஷன் ரத்தம் வரும்! அம்மா... பாவம்!" சிறு குழந்தையின் உள்ளம் படபடத்தது.

"ஹரியும் அம்மாவும் நல்லபடியா... நம்ம வீட்டுக்கு வரணும்ல்ல. அதான்..."

"அம்மாக்கு வலிக்குமா?"

"வலிக்காம இருக்க... ஊசி போட்டுடுவாங்க"

"ஊசி வலிக்கும்! எனக்குத் தெரியும்!" கண்ணை விரித்தாள் ஸ்ரீ.

"லேசா வலிக்கும். அவ்வளவு தான்!"

"பாவம்..." என்ற பரிதாபத்தின் பின்னணியில், "நா ஹரி மேல கோவமா இருக்கேன்" என்று அறிக்கை விடுத்தாள் ஸ்ரீதுளசி.

"ஏன்டா..." வாஞ்சையே உருவாய் லலிதா கன்னம் வருட,

"அவனால தான் அம்மாக்கு ஆபரேஷன் பண்ணப் போறாங்க. அம்மா பாவம்ல்ல... வலிக்கும் தானே! அவன்... உதைச்சிட்டே இருந்தா... ஆபரேஷன் பண்ண வேணாம்ல்ல" என்று கோபத்திலும் அழுகையிலும் உதடு பிதுங்கியது, அந்த ஆறு வயது சிறுமிக்கு.

"அவனும்... எத்தனை நாள் தான் உதைச்சிட்டே இருப்பான். கால் வலிச்சிருச்சா இருக்கும். அதான்... ஸ்டாப் பண்ணிட்டான். அவன்... மேல் கோவப்படாதடா"

"போங்க பாட்டி..." ஓரமாய் ஒரு இருக்கையில் அமர்ந்து கொண்டாள் ஸ்ரீதுளசி.

அந்த நேரம், அறைக்குள்ளிருந்த படுக்கையில் படுத்திருந்த குந்தவையின் கைப்பையிலிருந்த கைப் பேசி ஒலிக்கவும்,

"நந்தினி... மொபைல் எடுத்தாங்களேன்... ப்ளீஸ்" என்று செவிலியப் பெண்ணிடம் கைநீட்டினாள் குந்தவை.

கைப்பையை திறந்து, அவள் கைப்பேசியை எடுத்துக் கொடுக்கும் வரையிலும் பொறுக்க முடியாதவளாய் குந்தவை படுக்கையை விட்டு எழு முற்பட,

"மேடம்... மேடம் படுங்க. நா கொண்டு வரேன்" என்று கைப்பேசியை நீட்டிய செவிலியப்பெண், தோளை அழுத்தி அவளைப் படுக்க வைத்தாள்.

இசைக்கும் பாடலை வைத்தே, அழைப்பது கணவன் தான் என்று அறிந்தகொண்ட குந்தவையின் உள்ளம் படபடத்தது.



"ப்பா..." காதல்... பாசம்... ஏக்கம்... பயம்... வேண்டுதல் என்று அனைத்தையும் அந்த ஒற்றைச் சொல்லில் தேக்கி, தன் அழைப்பைக் காற்றில் கரைய விட்டாள் குந்தவை.

"கவி..." மூச்சிரைக்க வெளிவந்தது அவன் குரல்.

"ப்பா..."

"கவி எங்கடா? எங்க இருக்கீங்க? வீட்டுக்கு ஃபோன் பண்ணினா எடுக்கலையே! என்னவோன்னு பயந்துட்டேன்!"

"ப்பா... ஹரி... ஹரி..."

"என்னடா?" பதறினான் அவன், அங்கே! தந்தையாய்.

"மூவ்மெண்ட் இல்லைப்பா"

"வாட்!" என அதிர்ந்தாலும், "ஹாஸ்பிடல் வந்துட்டீங்களா? ஜெய் என்ன சொல்றா?" என்று விவரம் கேட்டான்.

"ஹார்ட் பீட் இருக்காம். ஆனா... உடனே ஆபரேட் பண்ணனும்ன்னு சொல்றாங்க"

"ஹார்ட் பீட் இருக்கில்ல. அப்போ... பயம் இல்லைடா... நீ மட்டும் பதறாம இரு. நா வந்துடுறேன்"

"ஆபரேஷன் முடிஞ்சிடுச்சா? பேபி இப்போ... எப்படி இருக்கு?"

"நல்லா இருக்கா பேபி! intensive care ல வச்சிருக்கோம். but everything seems fine"

"ஹோ... நல்ல வேளை. அப்போ... நீங்க கிளம்பி வரீங்களா? நீங்க... வந்துட்டா எனக்குத் தெம்பா இருக்கும்!"

"கிளம்பிடடேன். இன்னும் இருபது நிமிஷத்தில இருப்பேன்"

"ம்ம்ம்... ரொம்ப ஃபாஸ்ட்டா டிரைவ் பண்ண வேணாம்" அப்போதும் கணவனின் நலனில் அக்கறை கொண்டது, குந்தவையின் காதல் மனம்.

"ஓகே... ஓகே. நீ ... எதைப் பத்தியும் டென்ஷன் பண்ணிக்காத. ஹரி... நல்லபடியா பிறப்பான்"

"ஹ்ம்ம். அம்மு தான் ரொம்பப் பயந்துட்டா..."

"நினைச்சேன். நா... வந்துப் பார்த்துக்கிறேன். இப்போதைக்கு... லலி இருக்காங்க இல்ல" எனக் கேட்டவன்,

"அம்மாவும் பயந்திருக்காங்க" என அவளது பதிலைப் பெற்றுக்கொண்டு,"you stay strong, kavi!" என்ற ஆறுதலுடன் வண்டியை வேகப்படுத்தினான்.

சொன்ன நேரத்தை விட ஐந்து நிமிடம் முன் பாகவே மருத்துவனையில் அவனிருக்க, வேகமாய் அவனை நோக்கி ஓடி வந்த ஸ்ரீ, அவன் தொடையில் சரமாரியாகக் குத்தினாள்.

"டேய்... அம்மு! வலிக்குதுடா" என்று அவன் தடுக்க,

"எங்க போனீங்க?" என்று அடியின் வேகத்தைக் கூட்டியபடியே, அழுகையின் ஸ்ருதியையும் அவள் கூட்ட, பலத்தைக் கூட்டி, அவளைத் தூக்கிக் கொண் டான் பாலாஜி.

தேம்பி அழுதவளின் முதுகை வருடி, அவள் தலையைத் தோளில் சாய்த்துக் கொண்டவன், "அம்மு... பிக் அக்காவாச்சே! அவ... அழக்கூடாதே!" என்றபடியே, மனைவியை நாடிச் சென்றான்.



தந்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்ட ஸ்ரீயின் முதுகு தேம்பலில் ஏறி இறங்க, அவனது வருடலில் உறக்கம் தழுவத் தொடங்கியது பிள்ளைக்கு.

அவன் மருத்துவமனைக்கு வர எடுத்துக் கொண்ட பதினைந்து நிமிடங்களில், அறுவை சிகிச்சைக்கான ஏற்பாடுகள் மளமளவென நடந்திருக்க, குந்தவையும் நோயாளி உடைக்கு மாற்றப்பட்டிருந்தாள்.

ஸ்ட்ரெச்சரில் படுத்திருந்த மனைவியின் மேனியைக் கண்ணால் அலசியபடி, அடிகளை வேகமாய் வைத்து அவளிடம் விரைந்தான்.

அவளுமே, கண்களை அகல விரித்து, கணவனின் பிம்பத்தை உள்வாங்கிக் கொண்டாள்.

அவனது பிம்பத்தின் ஓரோர் அணுவும், நெஞ்சுக் குள் ஒரு வித தைரியத்தைப் புகட்டுவதாய் இருக்க, மனம் அமைதியடையத் தொடங்கியது.

பிள்ளையை இடது கையில் ஏந்தியபடியே, வலது கையால்... மனைவியின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டான் பாலாஜி.

அந்தக் தொடுகை... அந்த ஸ்பரிசம்... அந்த இதம்...

ஹப்பப்பா! நூறு திடமூட்டும் வார்த்தைகளுக்கு ஈடாய் அமைய, "ப்பா..." குழைந்து வெளிவந்தது குந்தவையின் குரல்.

"Nothing at all! பயப்படாத..." என்றான் அவன், மனைவியின் நெற்றியை வருடியபடியே.

"நீங்களும் உள்ள வரீங்களா?" என அவள் கேட்க,

ஆயிரமாயிரம் பிரசவங்களில் ஒரு முக்கிய அங்க மாய் விளங்கிய பாலாஜி, "ஜெய் இருப்பா... பிரகாஷ் பீடியாக்கா இருப்பான். எல்லாம் நல்லபடியா போகும். நா வந்தா... ம்ம்ம்... என்னால உன்னோட ரத்தத்தைப் பாக்க முடியாது... கவி. ப்ளீஸ்!" என்றான் கெஞ்சுதலாய்.

தன்னைப் பயப்படாதே என்று சொன்ன கணவன், இப்போது சிறு பிள்ளையாய் தெரிந்தான், குந்தவைக்கு!

முகத்தில் புன்னகை பூக்க, அவன் கன்னத்தை வருடிய குந்தவை, "you stay strong, Doctor Balaji" என்று சிரித்துவிட்டு, அறுவை சிகிச்சை அறைக்குள் சென்றாள்.

அறுவை சிகிச்சை நடந்த அரை மணி நேரமும், தாயும்... மகனும் தவித்துத் தான் போயினர்.

"பேசாம... குந்தவையை அவங்க அம்மா வீட்டுக்கே அனுப்பியிருக்கலாம், பாலா"

"என்ன லலி... நீ? அவ தான்... அங்க போக மாட்டேன்னு பிடிவாதமா இருந்தா இல்ல? என்னால அவளையும் அம்முவையும் விட்டுட்டு எப்படி இருக்க முடியும்... சொல்லு?"

"ப்ச்... அதில்லடா... அவங்கம்மான்னா ரெண்டு குழந்தை பெத்தவங்க. கர்ப்பமா இருக்கவங்களுக்கு... எப்ப... என்ன நடக்கும்ன்னு அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கும் இந்தளவுக்கு... complicate ஆகாம அவளைப் பார்த்துட்டு இருந்திருப்பாங்க" என்றார் லலிதா, கவலையுடன்.



"ஹரி... complications இல்லாம பிறக்கணும்ங்கிறதுக்காக, அம்முவோட லைஃப்பை காம்ப்ளிகேட் பண்ண முடியாது லலி! புரியாம பேசாதே!" என்று நறுக்குத் தெரித்தாற் போல், அந்த உரையாடலுக்கு முற்றுப் புள்ளி வைத்தான் பாலாஜி.

குந்தவை (மீண்டும்) தாயாகப் போகிறாள் என்பதைக் கேட்டதும், அவளது பெற்றோரின் மனதிற்கு ஏற்பட்ட நிறைவை விட, "தங்களுக்கென ஒரு குழந்தை வரப் போகையில்... ஸ்ரீ எதற்கு?" என்ற கேள்வி உண்டாக்கிய குடைச்சல், குந்தவையை அவர்களை விட்டு ஒதுக்கி வைத்தது! காலங்கள் உருண்டாலும்... வருடங்கள் நகர்ந்தாலும், சிலரது எண்ணங்களில் மாற்றம் ஏற்படுவதில்லை!

அறுவை சிகிச்சை முடிந்து விட்டிருந்தது.

"அம்மாவும் பிள்ளையும் நலம்" என்ற அறிவிப்புடன், அழகிய பூச்செண்டாய் ஒரு ஆண் குழந்தையைக் கையில் ஏந்தியபடி வந்தாள் ஜெயஸ்ரீ.

ஸ்ரீயை முதன் முதலாய் தூக்கியபோது, உடம்புக்குள் பரவிய அதே சுகம், இப்போது பாலாஜியினுள் பரவியது!

புது சுகம்!

புது இதம்!

புது உறவு!

புது ரத்தம்!

உள்ளம் உவகை கொள்ள, காத்திருக்கும் இருக்கையில் உறங்கிக் கொண்டிருந்த ஸ்ரீயிடம் குழந்தையுடன் நகர்ந்தான் பாலாஜி.

"அம்மு... ஹரி வந்தாச்சுடா..." என்றான் பொக்கி ஷத்தை அறிமுகம் செய்யும் குரலில்.

"ம்ம்..." தூக்கத்தில் புரண்டு படுத்துக் கொண் டாள், ஸ்ரீதுளசி.

"பாலா... குழந்தையைக் கொடு. நார்மல் செக்ஸ் முடிச்சதும்... ரூமுக்குக் கூட்டிட்டு வரோம்" என்றபடி, குழந்தையை வாங்கிக் கொண்டாள் ஜெயஸ்ரீ.

குந்தவை ஐ.சி.யூவிற்கு அழைத்துச் செல்லப் பட, அரை மணி நேரத்தில் , குழந்தையும் அங்கே அழைத்து வரப்பட்டது. பாலாஜியையும் உள்ளே அனு மதித்தனர்.

ஸ்ரீயும் தூக்கம் முழித்திருந்தாள்.

"அச்சோ...ஹரி வரும்போது தூங்கிட்டானா? கோச்சுட்டானாப்பா?"

"அழுதானா?"

"என்னோட பேசுவானா?"

"ஃபர்ஸ்ட்... ஃப்ர்ஸ்ட் என்ன செஞ்சான்?"

"உங்களைப் பாத்து... சிரிச்சானா?"

"பாட்டிட்ட பேனானா?"

"அம்மா எங்க?"

"அம்மா பார்த்தாங்களா?"

ஏகப்பட்ட கேள்விகளுடன் ஐ.சி.யூவிற்குள் நுழைந் தாள் ஸ்ரீதுளசி! பாலாஜியோ... ஒரு புன்னகையுடன் பின்தொடர்ந்தான்!

"அம்முக்குட்டி..."என்று குந்தவை மகிழ்ச்சியுடன் வரவேற்க,



"அம்மா..." என்று தாயிடம் ஓடினாலும், "ஹரி... எங்கம்மா?" என்று ஆசையாய் கண்ணை உருட்டினாள் சின்னவள்.

"இதோ... இங்க இருக்கான்" என்று தன் வலப் பக்கத்தை அவள் காட்ட, வேகமாய் கட்டிலைச் சுற்றிக் கொண்டு ஓடி வந்தாள் மகள்.

மகள் தன் தம்பியைக் காணச் சென்ற இடை வேளையில், கணவனும் மனைவியும் கண்ணால் பேசிக் கொண்டனர்!.

அவளது இடப்பக்கம் அமர்ந்தவன், மெல்ல நெற்றி வருடி, "ரொம்ப வலிக்குதா?" என்றான் மெதுவாய்.

"அப்புறம்? வலிக்காம? பூ... மாதிரி இருக்குமா? டாக்டர் மாதிரி கேள்வி கேளுங்க..." என்று அவன் வயிற்றில் லேசாய் குத்தினாள் குந்தவை.

மனதில் நிரம்பியிருந்த நிம்மதியும் சந்தோஷமும், முகத்தில் சிரிப்பாய் உதயமானது.

லேசாய் சிரித்த பாலாஜி, "நா... இப்போ டாக்டர் இல்லப்பா. ஒரு... சாதாரண ஹஸ்பண்ட். தட்ஸ் இட்" என்று அவளது நெற்றியில் முட்டினான்.

"அதென்ன சாதாரண ஹஸ்பண்ட்? இந்த சாதாரண ஹஸ்பண்ட்...is a perfect son! caring lover! Adorable father! Respectable Doctor and a lovely humanbeing" என்றாள் குந்தவை, அவன் கண்களுக்குள் பார்வையைப் பாய்ச்சி.

"ஆஹா... ஏகப்பட்ட ஐஸை ஒண்ணா தூக்கி வச்சுட்டியேம்மா" என்றவன், அவள் மூக்கைப் பிடித்து ஆட்டினான்.

"அத்தை மாமாக்கு சொல்லியாச்சு.மது... புருஷோத் எல்லாருக்கும் சொல்லியாச்சு. எல்லாருமே... ஃப்ளைட்ல வரதா... பாலா ஃபோன் பண்ணினா..." என்று அவன் கொடுத்த தகவலைப் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டவள், "லலிம்மா?" என்றாள் கேள்வியாக.

"எங்க ரெண்டு பேரையும் பார்த்துட்டு வரச் சொல்லிட்டு... வெளியே உக்காந்திருக்காங்க" என்றான் பாலாஜி, பெருமையாக.

"ரெண்டு பேர்" என்ற சொல்லில், அம்முவிடம் இருவரது பார்வையும் திரும்பியது.

உறங்கும் தம்பியிடம் உரையாடிக் கொண்டிருந்தவள், தந்தையும் தாயும் தங்களைப் பார்க்கவும், "அப்பா... அப்பா... ஹரியையும் என்னோட ஸ்கூல் லேயே... ப்ரீ. கே. ஜி சேர்த்து விடுறீங்களா? நானே கூட்டிட்டுப் போயிட்டு... கூட்டிட்டு வரேன். என்னோட சாப்பாடுலயே கொஞ்சம் கொடுத்துக்கிறேன். ரீசஸ் இன்ட்ரெவல்ல... அவனைப் போய்ப் பார்த்துக்கிறேன். என்னப்பா சரியா?" என்று மண்டையை ஆட்டி... ஆட்டி அவள் கேட்க,

குந்தவையும் பாலாஜியும் மனம் நிறையச் சிரித்தனர்!

பாச்சரம் மேலும் மெருகேறியது! அழகிய கவிதை ஒன்றின் சேர்க்கையால்!

□□□

# சங்கத் தமிழ்ப் பாச்சரமே!



என்.சீதாலெட்சுமி